702

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

தொ: 28 1990 No: 3

D
V211, 31:N90
N90.28.3
141369

வெளியீடு 1-3-1991 Issued 1-3-1991

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 18, 1990 - தொகுதி 28 - எண் 3
Wednesday, the 18th April, 1990-Volume 28-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்

**18–4–1990** **பக்கங்கள்**


1. வினாக்கள்–விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 501–536

2. தகவல் கோரல்—

(அ) பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன் கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடாததால் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து. 536–537

(ஆ) ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே உள்ள பயிர்களைக் காப்பாற்றத் தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து. 537–539

(இ) சென்னை அண்ணாசாலை அஞ்சலகத்திற்குமுன் உண்ணாவிரதம் இருக்கச் சென்ற தொழிற்சங்கத் தலைவர்களை அனுமதிக்காததால் ஏற்பட்டுள்ள நிலை. 539–550, 554–558

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 558–559

3. ஒழுங்குப் பிரச்சினை—

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிக்கைகளை மறுக்கும்போது அதற்கான காரணங்களை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது குறித்த நடைமுறை. 551–554

4. கவன ஈர்ப்பு—

(அ) லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப் போவதால் ஏற்படும் நிலை குறித்து. .. .. 560

(ஆ) குத்தாலம், நரிமணம் பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கனரக வண்டிகளை எண்ணெய், இயற்கை எரிவாயு நிறுவனம் அனுப்புவதால், சாலைகள் பழுதுபடுவது குறித்தும் அந்நிறுவனம் நெடுஞ்சாலைத் துறைக்குத் தொகை கொடுக்காதது குறித்தும். .. .. .. 560–563

5. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு. 563

| | |
|---|---|
| 6. மானியக் கோரிக்கைகள் 1990–91–விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண். 24 —தொழில்கள்—தொடர்ச்சி. (ஆ) கோரிக்கை எண். 51 —தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி. | 563–659 |
| மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. | 628–659 |
| *திரு. பெ.சு. திருவேங்கடம். | 563–568 |
| திரு. எம். அப்துல் லத்தீப். | 568–577 |
| *திரு. சோ. அழகர்சாமி. | 577–584 |
| திரு. பி. எச். பாண்டியன். | 585–592 |
| திரு. கே. ரமணி. | 593–603 |
| திரு. குமரி அனந்தன். | 603–620 |
| *திரு. எஸ். டி. உகம்சந்த். | 620–628 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 660 |



144369

D

V2l1,31'N90

N90.28.3


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, பிரமோதூத, திருவள்ளுவர் ஆண்டு- 2021

1990, ஏப்ரல் 18, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.''

மனம் கலங்காமல் ஆராய்ந்து, துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வுகொள்ளாமல் காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

## 1, வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திறந்தவெளி சிறைச்சாலைகள்.

*3696—திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிறைச்சாலைகள் அனைத்தையும் திறந்தவெளி சிறைச்சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு.எஸ் ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள சிறைச்சாலைகள் அனைத்தையும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அவைகளைத் திறந்தவெளிச் சிறைச்சாலைகளாக மாற்றக் கூடிய சாத்தியக் கூறும் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் நாகரீக உலகில் மனித நாகரீகம் படிப்படியாக வளர்ச்சியுறுகின்ற இந்தக் காலக் கட்டத்தில் கைதிகளும் மனிதர்கள்தான் என்றஉணர்வோடு சிறைச்சாலையை அறச் சாலையாக மாற்றிய மணிமேகலை பிறந்த மண்ணில் அரசு படிப்படியாகவாவது இதை நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணிமேகலை சிறைச்சாலைக்குப் போய்த்தான் சீர்திருத்தம் செய்தார். சட்ட அமைச்சரும் அங்கே அப்படி இருந்துதான் சீர்திருத்தம் செய்ய வேண்டும்

[1990 ஏப்ரல் 18

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாழ்க்கையைப் பலதடவை பெற்று விட்டேன்; இனிமேலாவது பெறாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் கோவை மாவட்டத்தில் சிங்கா நல்லூரில் நூறு சிறைவாசிகளுக்கு உரிய வசதியோடுதான் திறந்த வெளிச் சிறைச்சாலை இயங்கி வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமலைசமுத்திரத்தில் அதுபோன்ற ஒரு சிறை அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை அடிப்படையாகக்கொண்டு அதைப் பரிசிலிக்கலாம்.

**திரு. எஸ்.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்தில் சிறைச்சாலை இல்லாத மாவட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் புதிய சிறைச்சாலைகள் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்கள் பற்றியது என்று கருதுகிறேன். சில மாவட்டங்களில் சென்ட்ரல் ஜெயில் இல்லை என்பது உண்மைதான். அதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனை அடைந்த எல்லாக் கைதிகளையும் அல்லது ரிமாண்டில் இருக்கிற எல்லாக் கைதிகளையும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அனுமதிப்பதில்லை என்பதும், குறிப்பிட்ட ஓரளவு பக்குவப்பட்ட சிலரை மட்டுமே சில விதிமுறைகளுக்கு உட்பட்ட நிலையில் சிறைச்சாலைகளில் அதாவது திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வைத்து இருக்கிறோம் என்பதும், அப்படி வடிகட்டி அனுப்பியும் மேற்கண்ட திறந்தவெளிச் சிறைச்சாலைகளிலிருந்து சிலர் தப்பி ஓடி விட்டனர் என்பதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே.சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் தமக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் இங்கே சொல்லி இருக்கிறார். அது உண்மைதான்.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடைபெறுகின்ற எண்ணற்ற அரசியல் போராட்டங்களில் கலந்து கொள்ளும்படியான தண்டிக்கப்படுகின்ற கைதிகளை அரசியல் கைதிகளாக நடத்துவதற்கு திறந்தவெளிச் சிறைச்சாலையைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 18]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை என்று சொன்னால் அங்கே வசதிகள் குறைவாக இருக்கும். சீர்திருத்தங்கள் செய்ய வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை. அதுபோன்ற கருத்துரு இப்போது இல்லை.

**திரு. எம். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை தஞ்சாவூரிலே இருந்தது. அது மிகச் சிறப்பாக இருந்தது. அங்கே காய்கறித் தோட்டங்கள் போட்டு, மாமரங்கள் வைத்து, தென்னை மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டு, சிறைச்சாலைக்கும், அரசாங்கத்துக்கும் பயன் தரும் வகையில் அது இருந்தது. ஆகவே எல்லா மாவட்டங்களிலும் அந்தமாதிரிச் செயல்படுத்த முன்வந்தால் அதனால் அரசுக்கு மிக்க வருவாய் கூட இருக்கும் என்பதையும் கருத்திலே கொண்டு அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே திறந்தவெளிச் சிறைச்சாலை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வேண்டுமென்று கேட்டு, கொடுத்து விட்டார்கள். இந்த அரசு, 11 லட்சம் ரூபாய் அனுமதித்து, அந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையை நடத்த ஏற்பாடு செய்து, அது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, வருகின்ற வருமானம் பூராவும் அரசாங்கத்திற்கு வருமோ அல்லது வேறு எங்காவது போகுமோ என்பதை என்னால் சொல்ல முடியாது.

**திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண சிறைச்சாலைக்கும், இந்த திறந்தவெளிச் சிறைச்சாலைக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன? திறந்தவெளிச்சிறைச்சாலைக்கு புதிதாகக் கைது செய்யப்படுகின்ற கைதிகள் அனுப்பப்படுகிறார்களா அல்லது இப்போது நடைமுறையிலே இருக்கின்ற சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் தகுதிகளைக் கண்டறிந்து அந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். பக்குவப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சில கைதிகள் தான் அந்த சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். திறந்த வெளிச் சிறைச்சாலை என்று சொன்னால், அங்கே விவசாயம் செய்யலாம். வசதியாகக் காரியம் நடைபெறக்கூடிய இடமாகவும் அது இருக்கிறது. எனவே தான், குறிப்பிட்ட, தகுதியுள்ள நம்பிக்கைக்குரிய கைதிகளை அங்கே அனுப்புகிறோம்.

[1990 ஏப்ரல் 18

தனியார் அடகுக் கடைகளைத் தடை செய்தல்

* 6228 திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நமது மாநிலத்தில் தற்போது செயல்பட்டு வரும் தனியார் அடகுக் கடைகள் (Pawn Broker's Shops) தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது மாநிலத்தில் தற்போது செயல்பட்டுவரும் தனியார் அடகுக்கடைகளைத் தடை செய்யும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் அடகுக் கடைகள் மிக அதிக வட்டிகளை வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. 20 முதல் 30 விழுக்காடுகள் வரை வாங்குகிறார்கள். அவசரத் தேவைக்குப் பணம் வாங்கப்படுகின்ற ஒரே காரணத்திற்கான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, நகைகள், பாத்திரங்கள்–ஏன், துணிமணிகளைக் கூட அடமானங்களாகப் பெற்றுக் கொண்டு, அதிக வட்டிகளை வசூலிக்கும்–சாதாரண மக்களைச் சுரண்டும், அந்த வட்டிக்கடைக் காரர்களைத் தடை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அனுமதி பெற்று 19,147 அடகுக் கடைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. திருச்சி மாவட்டத்தில் 1,219 கடைகள் உள்ளன. இந்தக் கடைகள் எல்லாம் சட்டத்திற்குட்பட்டு நடைபெறுகின்றன. குற்றம், குறை இருக்குமானால், அதுபற்றிப் புகார் செய்தால், அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்விப்பட்ட அளவில், தனியார் அடகுக்கடைக் காரர்கள், வங்கி அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அடமானங்களாக வரக்கூடிய நகைகளை வங்கியில் வைத்து, வங்கி வட்டிக்குப் பணம் பெற்றுக் கொண்டு, அதைவிட அதிகமான வட்டிக்குப் பொதுமக்களிடம் அடமான நகைகளை வாங்கி கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு, அவ்வாறு நடைபெறுவதைத் தடை செய்வதற்கு அல்லது குறைந்தபட்சம் அதன் செயல்பாடு முறைகளையாவது மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற புகார் பரவலாக இருக்கிறது. குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும்.



1990 ஏப்ரல் 18]

ஏனென்று சொன்னால், அடகுக்கடைக்காரர்களும், வங்கி அதிகாரி களும் கூட்டுச்சேர்ந்து, கொள்ளை அடித்தால், அதற்கான தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருப்பதால், இதுபோன்ற குறை களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அடகுக்கடைக்காரர் கள் கூட, பெரும்பாலானவர்கள், திருட்டுப் பொருட்கள் பெறப் பட்டு, அவர்கள் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அளவில் எத்தனை வழக்குகள் பதிவாகியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : வழக்குகள் பதிவான விவரம் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலா மணி அவர்கள் சொல்வதைப்போல, அப்படிப்பட்ட அடகுக்கடைக் காரர்கள், திருட்டுச் சொத்தை வாங்கியிருந்தால், அவர்களின் கடை 'லைசன்ஸை' ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படு மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி மட்டுமல்ல, சாதாரண மாக ஏழை எளிய மக்கள் வங்கிகளிலோ அல்லது வெளியிலோ கடன் வாங்க நேர்ந்தால், வீட்டிலுள்ள பண்ட பாத்திரங்கள் மட்டுமல்லாது கழுத்திலுள்ள தாலியையும் அடகு வைக்கிறார்கள். இதை அதிகமாக வட நாட்டிலேயுள்ள மார்வாடிகள்தான் கடைவைத்து நடத்துகிறார்கள். இது மிகமிகக் கொடுமை யிலும் கொடுமை. அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சட்டப் படி அனுமதி வாங்கிக் கொண்டு முதலிலேயே வட்டியை எடுத்துக் கொண்டு, 100 ரூபாயைக் கொடுத்து, 200 ரூபாய்க்குக் கையெழுத்து வாங்கும் இத்தகைய தவறுகளைத் தடை செய்து, ஏழை எளிய மக்களுக்கு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு வங்கிகள் அல்லது தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக, அவர் களுக்கு பாஸ் புத்தகம் வழங்கி, அதன் மூலமாகக் கடன் பெற, அரசு உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

9–10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து, நல்ல யோசனை. இவ்வளவு வசதி செய்தும் கூட, இன்னும் பலர் அடகுக்கடைக்காரர்களை நாடுகிறார்கள். வேறு வழியில்லாமல், மக்களுடைய வறுமை காரணமாக அது நடைபெறுகிறது. அதைத் தடை செய்ய நடவடிக்கை எடுப்பதற் கான குறிப்பை வேண்டுமானால் பரிசீலிக்கலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்விகளைப் பார்க்கும்பொழுது, மார்வாடிக் கடைக்காரர்கள் பயப்படுவார்கள் என்று நினைக்கிறேன். இனிமேலாவது ஒழுங்காக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு.அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பான் புரோக்கர்ஸ் வட்டிக்கடைகளிலே ஏழை எளிய மக்கள் மட்டுமல்லாமல், வணிகப் பெருமக்கள் கூட சில நேரங்களில் அவர்களிடம் கடன் வாங்க வேண்டிய நிலை உருவாகிறது. அதற்குக் காரணம் ...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு அப்படி அனுபவம் ஏதும் உண்டா? (சிரிப்பு)

திரு.அ. மலர்மன்னன் : அதனால்தான் சொல்கிறேன். எனவே, வங்கிகளினுடைய நேரம் காலை பத்து மணியிலிருந்து ஒன்றரைமணியோடு முடிவடைகிறது. ஆனால், மேலை நாடுகளிலே இருக்கின்ற வங்கிகள் தனியார் எந்த நேரம் வேண்டுமானாலும் அந்தக் கணக்குப் புத்தகங்களை டெஞ்ச் பண்ணி பணத்தை எந்த நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. அதுபோன்ற முறையை நம்முடைய நாட்டிலேயும் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடம் நம்முடைய அரசு வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ் ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தன்னுடைய அனுபவத்தைச் சொல்லி வந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கலாம். எனவே, அவர்களுடைய அனுபவத்தைத் தனியாகச் சொன்னால்கூட அதைப்பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இப்படிப்பட்ட தனியார் வட்டிக் கடைகளை அணுகுகின்றவர்கள் உழைப்பாளி வர்க்கத்தைச் சார்ந்த ஏழை எளியவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் கால்களிலே இருக்கின்ற கொலுசு, கம்மல், மூக்குத்தி, தாலி போன்ற பொருட்களைக் கொண்டு போய் வைத்து அவசரத்திற்குப் பணத்தைப் பெறுகிறார்கள். அவர்களுக்கு உதவுகின்ற வகையில் இந்தத் தனியார்களுடைய கடைகளை ஒழுங்குபடுத்துகின்ற வகையிலே அனைத்து வங்கிகளிலும் ஆயிரம் ரூபாய்க்குக் கீழே கடன் கேட்கின்றவர்களுக்கு, எந்தவிதமான நிபந்தனையுமின்றி கேட்கின்ற உடனே கிடைக்கின்ற வகையிலே ஒரு ஏற்பாட்டை நீங்கள் செய்ய முன் வருவீர்களேயானால் அவர்களுக்கு ஒரு நிவாரணம் கிடைக்கும். இப்படிச் சுரண்டப்படுவதிலிருந்து அவர்கள் தடுக்கவும் படுவார்கள். அதுமட்டும் அல்லாமல், இந்தக் காலக் கெடு முடிவதற்கு முன்னாலேயே அந்தப் பொருள் இல்லாமலேயே போய் விடுகிறது. அப்படிப்பட்ட புகார்கள் நிறைய வருகின்றன. நான் ரூபாயை எடுத்துக்கொண்டு போகின்றபொழுது உங்கள் நகையெல்லாம் மூங்கிப் போய் விட்டது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட புகார்களும் வருவதனாலே அதை ஒழுங்குபடுத்த, வங்கிகளுக்கு ஒரு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்க அரசு முன் வருமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு அம்மையார் அவர்கள் எப்படி ஏமாந்தார்களோ தெரியவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்கள் மாத்திரம் அல்லாமல், பெரிய கிராமங்களிலேயும் இன்றைக்கு இப்படிப்பட்ட இந்த அடகுக் கடைகளைப் போல, பைனான்ஸ் கம்பெனி என்று சொல்லப்படுகின்ற நிதியகங்கள் மிகப் பெரிய அளவிலே உருவாகி வருகின்றன. இந்த நிதியகங்கள் வெற்றுத் தாளிலே ஏழை எளியவர்களிடம் கையெழுத்து வாங்கி, பின்னாலே கடன் தொகைக்கு அதிகமாகப் பூர்த்தி செய்து கொள்வதும், கூடுதலான வட்டியைக் கோருவதும் இன்றைக்கு நடைமுறை வழக்கங்கள் ஆகிவிட்டன. இந்த நிலையில், ஏழை எளியவர்களைப் பாதிக்கின்ற வகையிலே உள்ள இந்த நிதியகங்களைத் தடை செய்ய முடியுமா? அவ்வாறு தடை செய்ய அரசு முன் வருமா? அவ்வாறு தடை செய்ய முன் வர வாய்ப்பு இல்லை என்று சொன்னால் இவைகளை முறைப்படுத்துவதற்காகவாவது நம்முடைய அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா ; தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அடகுக் கடைக்காரர்கள் மாத்திரம் அல்ல, பைனான்ஸ் கம்பெனி என்று வைத்துக் கொண்டு அவர்கள் இதுபோல தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கட்டுப்படுத்த முடியுமா என்று ஆராய்ந்தபொழுது அதிலே சில சிரமங்கள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும், அரசின் மூலமாகக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டங்களை உருவாக்குவதற்கும், தேவைப்பட்டால் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தவும் இந்த அரசாங்கம் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தனியார் நடத்தக்கூடிய அடகுக் கடையைப் பற்றிச் சொன்னார்கள். அதோடு சேர்த்து, கந்து வட்டி என்று ஒரு விவகாரம் நடந்து கொண்டிருக்கிறது. அது இதைவிடக் கொடுமையாக இருக்கிறது. மாதம் ஒரு முறை கட்டவில்லை என்று சொன்னால், வீடு புகுந்து அடிப்பதும், கட்டியிருக்கக்கூடிய துணியைப் பறித்துக்கொண்டு போவதும் அன்றாடம் தெருக்களில் நடந்து கொண்டிருக்கின்றன. இதுபோல் கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கியிருக்கக்கூடிய அப்படிப்பட்ட மக்களுக்கு உதவக் கூடிய முறையில் ஏதாவது நம்முடைய அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, கந்து வட்டி வியாபாரம் சட்ட விரோதமானது. ஆனாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க

வேண்டியது முக்கியமாக இருக்கிறது. குறிப்பிட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கலாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அளவிற்கு எழுப்பிய கேள்விகள் அவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமையும் என நான் கருதுகிறேன்.

9–15 மணி

திரு.கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகிற பொழுது சொன்னார்கள், 19,241 கடைகள் அனுமதியோடு நடைபெறுகிறது என்று. அனுமதி இல்லாமல் இதற்கு மேலும் கடைகள் நடைபெறுவது அரசுக்கு ஏதாவது தெரியுமா? அதைத் தடுப்பதற்கு ஏதாவது முயற்சிகள் செய்யப்பட்டிருக்கிறதா? அனுமதிக்கப்பட்ட இந்தக் கடைகளில் எவ்வளவு வட்டி விகிதம் வாங்கலாம் என்று ஏதாவது தீர்மானிக்கப்பட்டு இருக்கிறதா? அடுத்து, இந்த வட்டிக் கடைகளில் பணம் வாங்கக் கூடிய மக்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் தான். அரசுத் துறையில் கடன் கிடைக்க வாய்ப்பு இல்லாதவர்கள் அங்கே கடன் வாங்குகிறார்கள். எனவே, இது போன்ற மக்களுக்குக் கூட்டுறவு வங்கிகளில் அவர்களுடைய பொருள்களை அடகு வைத்துக் கொண்டு கடன் கொடுக்க ஏற்பாடு செய்தால் அது தானாகக் குறைய வாய்ப்பு ஏற்படும். ஏனென்றால் வட்டிக் கடைகாரர்கள் பூராவும் சொந்த மூலதனம் வைத்துச் செய்வதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியை ஏற்கலவே கேட்டிருக்கிறார்கள். அவையில் கேள்வி கேட்கும் போது ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகளை விட்டு வேறு கேள்விகளைக் கேட்டால் சரியாக இருக்கும்.

திரு. கோ.வீரையன்: தலைவர் அவர்களே, அவர்கள் வங்கிகளில் பணம் வாங்கித் தான் கடைகளை நடத்துகிறார்கள். அந்தமுறையில் அரசாங்கமே ஏற்பாடு செய்து கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடன் கொடுக்க அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே நான் கொடுத்த குறிப்பு அரசு அனுமதிபெற்று நடத்துகிற கடைகள் பற்றியாகும். அனுமதியில்லாமல் நடக்கும் கடைகள் பற்றி விவரம் இல்லை இருந்தாலும், அனுமதி இல்லாமல் கடை நடத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, இப்போது கூட்டுறவு வங்கிகளில் தங்க நகைகள் மீது தான் கடன் கொடுக்கிறார்கள். மற்ற பொருள்கள் மீது கடன் கொடுப்பதாகத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தான் நமக்கு உதவிக்கு வர வேண்டும் வேறு வழியில்லை.





பட்டம் பெற்ற நடத்துநர்களுக்கு பதவி உயர்வு

*2009—திரு. மா. மணிமாறன்,
திரு.மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் நடத்துநர்கள் பட்டம் பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கப்படுவது போல் மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள நடத்துநர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் நடத்துநர்கள் பட்டம் பெற்றவுடன் பதவி உயர்வு அளிக்கப்படுவதில்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, பட்டம் பெற்று நடத்துநர்களாகப் பணிபுரியக்கூடியவர்களை துறையில் ஏற்படுகிற எழுத்தர் போன்ற பணிகளில் அமர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நடத்துநர்களாகப் பணிபுரியக்கூடியவர்களுக்குத் தேர்வுநிலை நடத்துநர், முதுநிலை நடத்துநர் என்ற அடிப்படையில் அவர்களுக்கென்று சில பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. ஆறு வருடங்கள் நடத்துநர்களாகப் பணிபுரிந்து, முதல் ஆய்வு பெற்றும், இரண்டாம் நிலையில் இருக்கும் நடத்துநர்கள் பட்டதாரியாக இருந்தால் அவர்கள் முதல் நிலையில் உள்ள இளநிலை பரிசோதகர், நேரக் காப்பாளர் போன்ற பாற்றுப் பணிகளில் அமர்த்தப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பதவி உயர்வுகள் தான் அவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சில புரோமோஷன்கள் பற்றிச் சொன்னார்கள். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இந்த நிலைமை இருந்தாலும் கூட, நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் 28 ஆண்டுகாலம் பணிபுரிந்து, கண்டக்டர்கள் பட்டதாரியாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, இதுவரையில் அவர்களுக்கு புரோமோஷன் கொடுக்கப்படவில்லை. அது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன காரணம் என்றால் ட்ராபிக் மானேஜர், ட்ராபிக் இன்ஸ்பெக்டர் என்ற பதவிகள் இருந்ததை எல்லாம் எடுத்துவிட்டார்கள் ஆகவே, 28 வருடங்கள் சர்வீஸ் உள்ளவர்களுக்கு அந்தக் கழகத்தில் புரோமோஷன் வாய்ப்பு இல்லையென்றாலும் கூட, விரும்பியவர்களுக்கு திருவள்ளுவர், பட்டுக்கோட்டை அழகிரி

[1990 ஏப்ரல் 18

போன்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு புரோமோஷன் செய்து மாற்றுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இதர கழகங்களுக்கு மாற்றுவது என்பது இயலாத காரியம். ஆனால், அந்தந்தக் கழகங்களில் ஏற்கவே நான் குறிப் பிட்டுள்ள பொறுப்புகளுக்குப் பதவி உயர்வு நிறுத்தி வைக்கப் பட்டிருந்தால் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்பட்டு, அவைகளை அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழிலாளர்கள் நிரந்தரம்.

*3038—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் 240 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப் படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இவர்களை உடனடியாக நிரந்தரமாக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் தொடர்ந்து ஒரு வருடத்தில் 240 நாட்கள் திருப்திகரமாக பணி செய்து முடித்த ஓட்டுநர்கள், நடத்துநர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் உடனடியாகப் பணி நிரந்தரம் செய்யப்படுகிறார்கள்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் 240 நாட்கள் பணி புரிந்தும், அவர்கள் நிரந்தரப்படுத்தப்படாமல் இருப்பதாக பல பேர் என்னிடம் குறையாகச் சொன்னார்கள். ஆகவே, தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் ஒரு வருடத்தில் 240 நாட்கள் வேலை செய்தவர்கள் நிரந்தரப்படுத்தப் படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், பல வருடங்கள் வேலை செய்தும் நிரந்தரப்படுத்தப்படவில்லை என்று சொல்கிறார்களே, அதற்கு அரசு என்ன கூறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1-9-1989-ஆம் ஆண்டு நடந்த ஊதிய ஒப்பந்தத்தில் 240 நாட்களுக்குக் குறைவு இல்லாமல் அவர்கள் பணிசெய்திருப்



1990 ஏப்ரல் 18]

பார்களானால் அவர்கள் மீது எந்தவிதமான குற்றவழக்கும், புகார்களும் இல்லாமல் இருக்குமானால், அவர்களுடைய பணிகள் நிரந்தரம் செய்யப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த அடிப்படையிலேதான் ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலே தற்காலிகமாக வைக்கப்பட்டு இருந்த தொழி லாளர்கள் 10 பேர்களைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் நிரந்தரம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அந்த 10 பேர்களும் பெரிய விபத்துக்களுக்கு ஆளானவர்கள், வண்டியினுடைய பராமரிப்பில் தவறு செய்து இருப்பவர்கள், போக்குவரத்துக் கழகத்தினுடைய பணத்தைக் கையாடல் செய்தவர்கள். இப்படிப்பட்ட குற்றங்களுக்கு ஆளானவர்கள் 10 பேர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களுடைய பணிக்காலம் மேலும் 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து அவர்கள் கண் காணிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய நடைமுறை ஒழுக்கமாக இருக்குமானால், அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 1-9-1989 ஆம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்படி 240 நாட்கள் சர்வீஸ் ஆனவர்களை நிரந்தரம் பண்ணுவது என்பது அமுலில் இருந்து வருகிறது என்ற ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். இந்த அடிப்படையான அந்த உரிமையை ஒத்துக்கொண்டதிலே 'சர்கம்வென்ட்' பண்ணு கிற மாதிரி சுற்றிவளைத்து வேறுவிதமான குற்றம் செய்திருக் கிறார்கள் என்பதைக் காட்டி, இந்த அடிப்படையான, சர்வீசை காயம் பண்ணக்கூடிய அந்த நிலைமையைக் கைவிடுவது என்பதும், அதற்கு வேறு காரணங்கள் சொல்வது என்பதும் சட்டப்படி சரியானதாக இருக்குமா? இருக்காது என்பதுதான் நிலை. ஆகவே இந்தமாதிரி நிலைமை வந்தால், செய்த குற்றத்திற்கு நிச்சயமாகத் தண்டனை இருக்கிறது, அந்தத் தண்டனைகள் தனியாக செயல்படவேண்டுமே தவிர, சர்வீசைத் தள்ளிக் கொண்டே போவது என்ற ஒரு முறையைக் கையாளுவது என்பது சரியல்ல. இதைக் கைவிடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நடந்த, வேஜ் செட்டில் மென்டிலே விவாதிக்கப்பட்டுத்தான் முடிவு எடுக்கப்பட்டது. ஆகவே ஒழுங்கீனமாக நடக்கக்கூடியவர்கள், போக்குவரத்துக் கழகத்தினுடைய பணத்தைக் கையாடல் செய்து உள்ளவர்கள், கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாதவர்கள், தற்காலிகமாக இருக்கும்போதே கடமையைச் செய்ய முடியாதவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட்டு விட்டால் அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு முடிவைத்தான் போக்குவரத்துக் கழகங் களுடைய நன்மை கருதி வேஜ் செட்டில்மென்டிலே நம்முடைய

தொழிலாளர் சங்கத்துடைய தலைவர்களைக் கலந்து முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஆகவே இதை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

### தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்.

* 9306—திரு. செ. நூர்முகமது :

திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பொது மக்களிடமிருந்து வைப்புத்தொகை பெறுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், இந்தக் கழகத்தினுடைய 1988-89 ஆம் ஆண்டு அறிக்கையிலே "Since the off-take of loans by the State Transport undertakings was poor the Directors have decided to suspend acceptance of fresh deposits with effect from 10-8-1988." என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பல கட்டங்களில் பொது மக்கள் இதற்கு நிதி அளிப்பதற்கு, வைப்புத்தொகையைத் தருவதற்கு முன் வந்தாலும்கூட, அடிக்கடி நிறுத்தி வைக்கப்படுவது என்பது தொடர்ந்து நடைபெறுகிறதே, இல்லை என்று பதில் சொல்வது எப்படிப் பொருத்தமாகும்? இதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டது 29-3-90. அந்தத் தேதியிலே வைப்புத் தொகை வாங்குவது நிறுத்தி வைக்கப்படவில்லை என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் வைப்புத் தொகை உபரியாக வந்த காரணத்தால், 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் புதிதாக வைப்புத் தொகை வாங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 1989 ஆம் வருடம் ஜூலை 29 ஆம் தேதியிலிருந்து வைப்புத் தொகை பெறுவது அறிவிக்கப்பட்டு இன்று வைப்புத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. இந்திய நாட்டிலே மட்டுமல்லாமல் அயல் நாட்டில் வசிக்கக்கூடிய இந்தியப் பிரஜைகளிடமிருந்தும் வைப்புத் தொகை பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.



திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களில் பஸ்கள் விடுவது, பேருந்துகள் விடுவது மிகக் குறைவாக இருக்கிறது. ஆனாலும்கூட பல நேரங்களில் அங்கே இதன் மூலம் டெபாசிட் இருந்தும் கூட, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அன்டர்டேக்கிங்ஸ், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அதிலிருந்து நிதியைப் பெறுவது என்பது குறைவாக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள். இந்தக் கழகத்திலிருந்து நிதி வாங்குவதற்கு ஏதேனும் தடை இருக்கிறதா, அதற்கு உலக வங்கியினுடைய நிபந்தனைகள் போன்றவை குறுக்கே நிற்கிறதா என்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த நிதி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்வதற்காகவே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் இப்படிப்பட்ட நிதி நிறுவனம் உருவாக்கப்பட்டிருக்கிறது. 1975-வது ஆண்டு முதல் சுமார் ரூ. 600 கோடி வரை அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகளுக்கு அவற்றை வாங்குவதற்காக நிதியுதவி செய்திருக்கிறது. அப்படிப்பட்ட நிதியுதவியின் மூலம் 11,000 பேருந்துகள் இதுவரை வாங்குவதற்காக நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற நிறுவனங்களிலிருந்து கடன் பெறுவதைப் போல் இதிலே எந்தவிதமான நிபந்தனைகளும், சிக்கல்களும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் இதுவரை வைக்கப்பட்ட வைப்புத் தொகை எவ்வளவு? அதற்குக் கொடுக்கப்படுகின்ற வட்டி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இதுவரை வந்துள்ள வைப்புத் தொகை ரூ. 150 கோடி வரை வைப்புத் தொகை வந்துள்ளது. வட்டியைப் பொறுத்தவரையில், ரிசர்வ் பாங்கால் நிர்ணயம் செய்யப்பட்டு, தமிழக அரசு உத்தரவுப்படி வட்டி சதவீதம் வழங்கப்படுகிறது. 25 மாதம் வைப்புத் தொகை வைத்திருந்தால், சுமார் ரூபாய் 5,000 வைத்திருந்தால், அதற்கு வட்டி விகிதம் 13½ சதவீதம், 36 மாதத்திலிருந்து 60 மாதம் வரை 14 சதவீதம் என்று நாம் வழங்குகிறோம். அதே மாதிரி 'பிக்சட் டெபாசிட்' பொறுத்தவரையில். 25 மாதம் ரூ. 3,000 என்று போட்டால் முதிர்ச்சி அடையக்கூடிய தொகை ரூ.3,966, 36 மாதம் என்று சொன்னால் ரூ. 4,545, 48 மாதம் என்று சொன்னால் ரூ. 5220, 60 மாதம் என்று சொன்னால் ரூ. 6,000. இந்த அடிப்படையிலேதான் 'பிக்சட் டெபாசிட்டிற்கும்' அல்லது முதலீடு செய்கின்றவர்களுக்கும் வட்டி விகிதங்கள் வழங்கப்படுகின்றன.

[1990 ஏப்ரல் 18

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனத்திலே
பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை பெறுவதில் நம்முடைய
அமைச்சரவர்கள் வெளிநாட்டிலே வாழ்கின்ற இந்தியர்களிட
மிருந்தும் நாம் வைப்பு நிதியாகப் பெறுகிறோம் என்று
சொன்னார்கள். அவர்களுக்கும் இதே மாதிரிதான் வட்டித்
தொகை தரப்படுகிறதா ? நம்முடைய இந்தியாவிலே, தமிழ்
நாட்டிலே வாழ்கின்ற பொதுமக்கள் வைப்புநிதிக்குத் தரப்படுகின்ற
அதே வட்டி போல்தான் வெளிநாட்டிலே இருந்து வருகின்ற
என்.ஆர்.ஐ. ஸ்கீமில் வருகின்ற அந்தப் பணத்திற்கும் இந்த
விகிதம்தான் தரப்படுகிறதா அல்லது அதிகமாக அவர்களுக்குத்
தரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவது,
வெளிநாட்டிலே வாழ்கின்ற .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான். இரண்
டாவது, மூன்றாவது எல்லாம் கிடையாது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவர் எப்போதும்
கொஞ்சம் விளக்கமாகச் சொல்வார்கள். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விரிவுரையில்
எப்போதுமே தேர்ந்தவர்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,
வைப்புத்தொகை வாங்குவதில், இந்திய நாட்டு மக்களிடமிருந்து
வாங்குவதாக இருந்தாலும், வெளிநாட்டு இந்திய மக்களிடத்திலே
யிருந்து வாங்குவதாக இருந்தாலும், ஒரே விதமான வட்டி
சதவீதம்தான் வழங்கப்படுகிறது.

## ஆதி திராவிட குடியிருப்புகளில் தொகுப்பு வீடுகள்

*1012—திரு. கே. பிச்சாண்டி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆதி திராவிட குடியிருப்புகளில் தொகுப்பு வீடுகள் கட்டும்
திட்டத்தை அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்த ஏற்பாடு
செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

ஆதி திராவிடர் குடியிருப்புக்களில் தொகுப்பு வீடுகள்
திட்டத்தை அனைத்துக் கிராமங்களுக்கும் படிப்படியாக நிதி
நிலைக்கேற்ப விரிவுபடுத்த ஏற்பாடு செய்யப்படும்.



1990 ஏப்ரல் 18]

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சரவர்கள் படிப்படியாக விஸ்தரிக்கப்படும்
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருவண்ணாமலைத்
தொகுதியில் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்திலுள்ள கீக்களூர்,
சோமாஸ் பாடி ஆகிய கிராமங்களில் ஆதி திராவிடர்கள் அதிக
மான அளவில் வசிக்கிறார்கள். சுமார் 2,000 பேர் வசிக்கிறார்கள்.
ஆனால் அவர்களுக்கு வீடு பட்டா இருந்தும், கடந்த ஆட்சிக்
காலத்தில் அந்த கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படவில்லை. ஆதி திராவிடர்கள் குறைவாக உள்ள
கிராமங்களில கட்டப்படும் நிலையை மாற்றி, ஆதி திராவிடர்கள்
அதிகம் வசிக்கும் பகுதிகளில் தான் முதலில் தொகுப்பு வீடுகள்
கட்டப்படும் என அரசு உத்தரவிடுமா? இக்கிராமங்களுக்கு இவ்
வாண்டு தொகுப்பு வீடுகள் கட்டப்படுமா என அறிய விரும்பு
கிறேன்,

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சென்ற ஆண்டு 42,000 வீடுகள் கட்டுவதாகத் திட்ட
மிடப்பட்டு அந்த வேலைகள் பூர்த்தியாகும் தருவாயில்,
இன்னும் 400 வீடுகள்தான் முடிவு பெறாமல் இருக்கின்றன.
ஆனாலும் பஞ்சாயத்து யூனியன்கள், ஊராட்சி ஒன்றியங்கள்
தான் எந்தெந்த இடங்களில் தேர்வு செய்யும் என்பதை ஊராட்சி
மன்றத் தலைவர்களைக் கலந்து செய்யவேண்டுமென்றிருக்கிறது.
இப்படிப்பட்ட தகராறு சென்ற ஆண்டு வந்திருப்பதையொட்டி
இந்த முறை ஒரு புதிய ஏற்பாடு செய்யலாம் என்று இருக்கிறோம்.
அப்படி ஒன்றியங்களில் தேர்வு செய்தால் ஏதாவது தகராறு ஏற்
படுமானால் ஆங்காங்கே மாவட்ட முகாமை அதை தீர்த்து
வைத்து, இறுதி முடிவுகளை அறிவிப்பார்கள் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

9–30 மணி

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு பேரூராட்சியின் மூலம் வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டு
பேரூராட்சியில் கட்டப்படுகிற வீடுகளாவது அரிசனங்கள் அதிகம்
வசிக்கிற பேட்டவரம் பேரூராட்சிப் பகுதிகளில், அரிசனத் தலை
வர்கள் உள்ள அந்தப் பகுதியில் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க
அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் அதிகமாக இருக்கிற பகுதி
என்று நாம் தேர்வு செய்ய ஆரம்பித்தால் மிகவும் பின் தங்கிய
நிலையில் வீடே இல்லாமல் மனை மட்டும் வைத்துக் கொண்டு
குடிசை இல்லாமல் வாழ்கிற மக்களை கண்காணிக்கிற பணி முடியாது
என்பதைத் தெரிவித்துக் கொண்டு கூடுமானவரையில் எல்லாப்
பகுதிகளிலேயும் இந்த ஆண்டு, ஏற்கனவே கட்டப்பட்டுள்ள
வீடுகளை தவிர்த்து புதிதாகத் தேர்வு செய்து கட்டலாம் என்ற
எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது.

[1990 ஏப்ரல் 18

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஆண்டுக்காண்டு வீடுகளைக் கட்டிக் கொண்ருக்கிறோம். சென்ற ஆண்டு 42 ஆயிரம் வீடுகள் கட்டப் பட்டன. இந்த ஆண்டு கட்ட இருப்பது 47 ஆயிரம் வீடுகள். இந்த 47 ஆயிரம் வீடுகளை எல்லா இடங்களிலும் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே—அதாவது ரூரல் ஹவுசிங் ஸ்கீமையும் சேர்த்து—அவர்களுக்கு கட்டக்கூடாது என்று ஒரு ஜி.ஓ. வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆகை யினால் வீடு இல்லாதவர்களுக்கு இந்த கூட்டுறவு முறையிலே கட்டக் கூடிய அந்த வீடுகளை இதன் மூலம் சேர்த்து சார்புச் செய்துக் கொள்ள முடியும். அத்தோடு பஞ்சாயத்து மூலமாக கட்டப்படக்கூடிய அந்த வீடுகளில் 4 நாட்கள் சேர்ந்தாற்போல் மழை பெய்து விட்டால் அந்த வீடே இல்லாமல் போய் விடு கிறது. ஆகையினால் தாட்கோ மூலமாகவே கட்டுவதற்கு வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: பஞ்சாயத்துக்களின் மூலம் கான்கிரீட் வீடுகள் கட்டுவது பற்றிய கேள்வி இது. அதுபற்றித் தான் நான் பதில் சொல்ல முடியும். வேண்டுமானால் அவர் தனிக்கேள்வி போட்டு அந்த அமைச்சரிடத்தில் விளக்கம் தெரிந்துகொள்ளலாம்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்புகளில் தொகுப்பு வீடுகள் கட்டுகிறபோது, அந்த வீடுகள் பத்தாண்டுகள், 15 ஆண்டுகள் ஆகியும் மின்சார வசதியே இல்லாமல் இருக்கிறது. எதிர்காலத்திலாவது அந்த குடியிருப்புகளைக் கட்டுகிறபோது, உரியவர்களிடத்தில் ஒப்படைக்கின்ற போது அவைகளுக்கு மின்சார வசதியை செய்து அந்த இணைப்பு கொடுக்கப்பட்டு ஒப்படைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டி முடித்த உடனேயே மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்றுதான் அதிகாரிகள் நட வடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள். பல இடங்களில் ஒத்தை லைட்டு என்ற முறையில் ஒரு விளக்கு போடப்பட்டும் இருக்கிறது. ஆனால் சில இடங்களில் நீண்டதூரம் கம்பங்கள் நட்டு லைன் கொண்டு போய் கனெக்ஷன் கொடுக்கின்ற வகையிலே சில காலதாமதம் ஏற்படுகிறது. ஆனாலும் கூடுமானவரையில் கொள்கையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு உடனேயே மின் இணைப்பு கொடுப்பது என்ற முடிவைத்தான் இந்த அரசு எடுத்திருக்கிறது.

திரு. கே.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுப்பு வீடுகள் ஊராட்சிகளிலே கட்டப் படுகின்றன. அந்தத் தொகுப்பு வீடுகளை ஆதிதிராவிடர் மக்கள்



1990 ஏப்ரல் 18]

வசிக்கின்ற பேரூராட்சிகள், நகராட்சிகள் போன்ற பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி.மணி: இந்த ஆண்டைப் பொறுத்த வரையில், பேரூராட்சிகளுக்கு விஸ்தரிக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது.

திரு. து. க. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கடந்த காலத்திலே கட்டப் பட்டவை பல இடங்களிலே இடிந்து, அங்கே அவர்கள் வசிக்க முடியாத நிலைமை இருக்கிறது. மறுபடியும் அதைப் புதுப்பித்துத் தருவதற்கு அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: எந்த ஆண்டு கட்டப்பட்டது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீண்ட காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகளைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று நான் சொல்ல இயலவில்லை. காரணம், ஒதுக்கி இருக்கிற தொகை புதிய வீடுகளைக் கட்டுவதற்கே போதவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் கேள்வி களிலிருந்தே உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டுகிற பெயரால் குடியிருப்பு மனைகள் மாற்றப்படுகின்றன. அப்படி மாற்றப்படாமல் அவரவர்கள் குடியிருக்கிற இடத்திலேயே வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதில் அரசு உறுதியாக இருக்கிறது. யார் பெயரால் மனை இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் நிச்சயமாக வீடு கட்டிக் கொடுக்க முடியும். அதன்படிதான் கட்டிக் கொடுக்கப்படுகிறது. என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்;

திரு. வி. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட வீடுகள் இதுவரை பூர்த்தி ஆகாமலே இருக்கின்றன. திருக்கழுக் குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் வழுவதூர் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டப்பட்ட வீடுகள் இதுவரையில் முழுமை பெறாமல் இருக் கின்றன. ஏற்கெனவே கட்டப்பட்டு முறையாக இருக்கிற வீடுகளும் இடிந்த நிலையிலே இருக்கின்றன. இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டுகிறவர்கள்மீது நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா? அதேபோல . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டப்பட்டு ஆனால் முடிவுறாமல் இருக்கிறது. அது 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு என்பது குறித்து தகவல் என்னிடத்திலே இல்லை. குறிப்பிட்டு அதை எழுதினால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

**மருங்காபுரி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகள்**

*2275 பேராசிரியர் க. பொன்னுசாமி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

9.35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டில் 110 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 15 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள ஒன்றியங்களும் இருக்கின்றன. 50–க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களைப் பெற்ற ஒன்றியங்களும் இருக்கின்றன. ஆனால் தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்படுகின்றபோது எல்லா ஒன்றியங்களுக்கும் ஒரே நிலையிலே, ஒரே எண்ணிக்கையிலே ஒதுக்கபடுகின்றன. மத்திய அரசிடமிருந்து வருகின்ற பணம் மற்ற செயல்களுக்கு தொகை ஒதுக்குகின்ற போது மக்கள் தொகை அடிப்படையிலே ஒதுக்குவது போல இதற்கும் மக்கள்தொகை அடிப்படையிலே, வீடுகளில் எண்ணிக்கை ஒதுக்கப்படுமா, அதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கும் இதில் பங்குண்டு. 20 சதவீத பங்கு மாநில அரசு தருகிறது. கூரைக்கென தனியாக 4 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அளிக்கப்பட்டு வருகிறது. மீண்டும் அப்படிப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை தேவை என்று கருதினால், அப்படிப்பட்ட தேவையான இடங்களுக்கு அரசு முடிவெடுத்து அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிமுடிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு மின்னிணைப்புத் தருவதிலே காலதாமதம் ஏற்படுவதற்கு அமைச்சர் அவர்கள்





சில காரணங்களைச் சொன்னார்கள். ஆனாலும், மிக அருகாமையிலே மின் கம்பங்கள் இருந்தும் இன்னும் மின்னிணைப்பு தரப்படாத குடியிருப்புகள் அங்கே இருக்கின்றன. இவற்றை உடனடியாகப் பரிசீலித்து அரசு அவர்களுக்கு மின்னிணைப்பு தர முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்ட வேலைகள்.**

*4378 திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்ட வேலைகளை தேர்வு செய்ய என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989–90–ம் ஆண்டு முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு "ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்" என்கிற திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. இத் திட்டம் மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளுக்கிணங்க செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், இப்போது ஆட்சி மாற்றத்தின் காரணமாக, வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுமா? எந்தெந்த வகையில் இந்த வேலைகள் தேர்வு செய்யப்படும்? இந்த வேலைகளை செய்து முடிப்பது ஊராட்சி மன்றமா அல்லது அதற்கு டெண்டர் விடுகின்ற முறை பின்பற்றபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு முதல் நடத்தப்படுகின்ற இந்தப் புதிய திட்டம் மைய அரசின் 80 விழுக்காடு நிதியுடனும் மாநில அரசின் 20 விழுக்காடு நிதியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்தோடு 6 விழுக்காடு நிதியை மாவட்ட அளவில் நிறுத்திக் கொண்ட பின், அதாவது குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கென ஒதுக்கப்பட்டதற்குப்பின், 80 விழுக்காடு மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்

[1990 ஏப்ரல் 18

இன் கீழ் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் சம்பந்தமாக ஊராட்சிகளுக்கே வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு ஊராட்சிக்கு வழங்கப்பட்ட நிதியில் குறைந்த பட்சம் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு ஒதுக்கியாகவேண்டும். பாக்கி இருக்கிற 20 விழுக்காடு நிதி ஊரக வளர்ச்சித் திட்ட முகமையின் பொறுப்பில் வைக்கப்பட்டு, மாவட்ட அளவில் வைக்கப்பட்டு, முந்தைய ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்படாமல் இருக்கும் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்த பின் பொருளாதார ரீதியில் பயனளிக்கும் சொத்துக்களை உருவாக்கும் பணிகள் 30 சதவீதமும், சமூகக்காடுகள் சம்பந்தப்பட்ட பணிகள் 25 சதவீதமும், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான திட்டங்கள், அதாவது நேற்றைய இனம் பதிலளித்த அந்த ஜீவன்தாரா கிணறுகளுக்கு 15 சதவீதமும், கட்டிடம் மற்றும் சாலைகள் அமைத்தல் போன்ற இதர பணிகளுக்காக 25சதவீதமும் செலவழிக்கிற அனுமதி இருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலைகளை ஊராட்சி மன்றமே செய்யும் என்கிற நடைமுறை சென்ற ஆண்டு இருந்தது. அதில் எந்த ஊராட்சி மன்றமும் அந்த வேலையைச் செய்து அதன் மூலம் வருகின்ற தொகையில் லாபம் காட்டவில்லை. மாறாக, அந்த பஞ்சாயத்திலே இருக்கிற தலைவர்கள் அந்த வேலையை வேறு ஒரு ரெகுலர் காண்டிராக்ட்காரர்களுக்குக் கொடுத்து இடையில், அதில் வருகின்ற லாபத்தைப் பெற்றுவிடுவதால் மக்களுடைய வரிப்பணம் வீணாக தனி நபருக்குப் போய் சேருகிறது. ஆகையால் இதை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்பு வீடுகள் கட்டுவது மட்டும் தான் ஊராட்சி மன்றத் தலைவர்கள் நேரடியாகச் செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு வருகிறது. சில பெரிய வேலைகளை ஒப்பந்தத்தின் பேராலும் கொடுக்கலாம் என்பதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். அப்படி கொடுக்கப்பட்டு, வேறொருவருக்கு அது தரப்பட்டிருந்தால் அதை உடனடியாக ரத்து செய்கிற அதிகாரம் இந்த அரசு கையில் இருக்கிறது. நிச்சயமாக ரத்து செய்து விட்டு, முறைப்படி அந்தப் பணிகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

*9307 மதுராந்தகம் தாலுகாமார்க்கெட்டிங் சங்கத்தில் கையாடல்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

திரு. க. சுந்தரம் :

திரு. வீ. தமிழ்மணி :

திரு. சி. வேலு :



1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் தாலுகா மார்க்கெட்டிங் சங்கத்தில் நடைபெற்றுள்ள கையாடல் குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) யார், யார் நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மேலாளர் மற்றும் காசாளர் ஆகிய இருவரும் நடவடிக்கைக்கு உட்பட்டு 9-2-1990 முதல் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

9-45 மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுராந்தகம் மார்க்கெட்டிங் சொசைட்டியில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் கையாடல் செய்து நேரடியாகவே மக்கள் பார்க்கின்ற அளவுக்கு பாம் ஆயிலைக்கூட விற்பனை செய்கின்றார்கள் என்று மக்கள் கருதுகின்றார்கள். எனவே அரசு இதிலே இன்னும் தீவிரமாக, விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-ஆவது ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு துணைப் பதிவாளர் விசாரணைக்காக நியமிக்கப்பட்டு, அவர் பூர்வாங்கமான விசாரணையைத் தொடங்கி இருக்கிறார். அதிலே எல்லா விவரங்கள் பற்றியும் நிச்சயமாக விசாரிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் இதுவரையில் களவு போயிருக்கிற பொருட்களுடைய மதிப்பு எவ்வளவு? அவர்கள் இப்போது வேலையில் இருக்கிறார்களா அல்லது தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையாடல் செய்யப்பட்ட தொகையின் மதிப்பு 59 ஆயிரம் ரூபாயாகும். இதையொட்டி சங்கத்தினுடைய மேலாளர் பங்காரு அவர்களும், டி. எஸ். தாகூர், காசாளர் அவர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்,

திரு. இ. வேணு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மார்க்கெட்டிங் சொசைட்டியில் ஒரு டாங்கர் பாம் ஆயில் வந்து, அதைப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யாமல் வெளிச் சந்தையிலே விற்றது அரசுக்குத் தெரியுமா?, ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு தொடர்பில்லாத கேள்வி. அதைப்பற்றி தகவல் இப்போது அரசிடம் இல்லை.

### மலைவாழை இனம் நோயினால் பாதிப்பு

*4544. திரு. மு. இராமநாதன் :
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மலைவாழை இனம் நூதனமாக ஒரு நோயால் தாக்குண்டு அழிந்து வருவது உண்மையா?

(ஆ) இதைத் தடுத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1976 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு முடிய முடிக்கொத்து நோயை அகற்றுவதற்கான "முடிக்கொத்து நோய் ஒழிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், நோய் தாக்கிய வாழைகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பிற்கு ஏற்ப, தேவைப்படும் பூச்சி மருந்துகள் மற்றும் மற்றும் இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் செழித்து வளர்ந்து கனி தந்த மலைவாழை இனம் 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த முடிக்கொத்து நோயாலே பாதிக் கப்பட்டு அடியோடு வாழை மரங்களே சாய்ந்து விழக்கூடிய ஒரு கொடுமை இருக்கிறது. மிகப்பெரிய விஞ்ஞானப் புதுமைகளை கண்டுபிடித்து, உலகத்திலேயே கரும்பு இனத்தைக் காப்பாற்றிய பெருமை நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. ஆகவே, இந்த துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மூலம் இந்த மலைவாழை இனத்தைக் காப்பாற்றுவதற்கு அரசு ஏதேனும் ஆய்வு நடத்தி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருமுன் காக்கும் நடவடிக்கையாக நோய் பரப்பும் அசுவினியை ஒழிக்க தாக்காத வாழைகளுக்கு ஊடுருவிப்பாயும் மருந்துகள் ஊசி மூலம் செலுத்தி அசுவினியை கட்டுப்படுத்தும் பணி நடந்துள்ளது. செயல்முறைகளை விளக்கும் பொருட்டு 1 ஏக்கர் பரப்பில் செயல் விளக்கத் திடல்கள் அமைத்து, தொழில் நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்கச் செய்திட ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ. 340/– மதிப்புள்ள உரங்கள், பூச்சி மருந்துகள் முதலான இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து விவசாயப் பெருமக்கள் பயனடையும் வகையில் தடுப்புமுறைகள் பற்றிய தொழில் நுட்பங்கள் வானொலியில் ஒலிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழை இனம் என்று சொல்லக்கூடிய இந்த இனம் இந்திய நாட்டிலேயே மதுரை, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டங்களிலேதான் ஒரு சிறப்பு வாய்ந்த தனி இனமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களே சொன்ன இந்த தடுப்பு ஏற்பாடுகளெல்லாம் பயன் அளிக்காத நிலையில், இந்த இனம் அழிந்துகொண்டுதான் இருக்கிறது. மேலும் இந்த மலை வாழைப்பழத்திற்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு இருக்கிறது என்பதையும் பழனியம்பதியின் பஞ்சாமிர்தச் சுவையும் இதில் அடங்கி இருக்கிறது.. (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கதை அப்புறம் சொல்லலாம் வினாவைக் கேளுங்கள்.

திரு. மு. இராமநாதன் : பழனியம்பதியின் பஞ்சாமிர்தச் சுவையே இந்த மலைவாழை இனத்தினுடைய எதிர்காலத்திலே தான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு, தேன்சுவை தரும் இந்த மலைவாழைக் கனிகளைக் காப்பாற்றிட வேளாண்மைத் துறையின் மூலம் புதிய ஆய்வுகள் மேற்கொள்ள அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி முடிக்கொத்து ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட்ட பரப்பளவு 14,399.55 ஏக்கர் ஆகும். இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் தற்போது 3,000 ஏக்கர் பரப்பளவில் நோய் தாக்குதல் பெரும் அளவில் கட்டுப்படுத்தப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

## கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

* 3325 திரு. க. சொ. கணேசன் :

மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி, தஞ்சை இரு மாவட்டங்களையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர்மதனத்தூர் இணைப்பு பாலம் கட்டிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. க. சொ. கணேசன்; பேரவைத் தலைவர் அவர்களே. தஞ்சை, திருச்சியை இணைக்கின்ற அந்த நீலத்தநல்லூர் மதனத்தூர் கொள்ளிடத்தின் குறுக்கே கட்ட வேண்டிய பாலம் மிகவும் முக்கியமான பாலம். அணைக்கரையிலே இருக்கின்ற பாலம் ஆங்கிலேயர் ஆட்சியிலே கட்டப்பட்டது. அது சற்றேறத் தாழ நூறு ஆண்டுகளுக்கு மேலாகின்ற காரணத்தினால் பாலம் இப்போது ஆட்டம் காணுகின்ற நிலையில் இருக்கின்ற காரணத்தினால் வெகு சீக்கிரம் போக்குவரத்தை பாதிக்கும் என்று கருதுகிறேன். ஆதலால் இதை அரசு உடனடியாகக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு இணங்க தற்போது கும்பகோணத்திற்கு வடக்கே உள்ள நகரங்களான பெரம்பலூர் அரியலூர், ஜெயங்கொண்டம், விருத்தாசலம் மற்றும் சென்னைக்குச் செல்லும் வாகனங்கள் திருமானூர் அணைக்கரை பாலங்கள் வழியாக செல்லும் நிலைமை உள்ளது. ஆனால் புதியதாகக் கட்ட இருக்கும் பாலம் நீலத்தநல்லூர் வழியாக கும்ப கோணத்தையும், மதனத்தூர் வழியாக ஜெயங்கொண்டத்தையும் நேரடியாக இணைக்கும், ஆகையினால் ஜெயங்கொண்டத்தை நேரடியாக இணைக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப் பினருக்கு அதிலே அதிக அக்கறை இருப்பதிலே மாறுபட்ட கருத்து அல்ல. எனவே இப்படி ஒரு பாலத்தை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டுவதற்கு உயர் மட்ட பாலமாக கட்டினால் 11 கோடி ரூபாய் செலவாகிறது. முழுங்கு பாலமாக கட்டினால் 5 கோடி ரூபாய் செலவாகிறது. எனவே அதற்காகவே போக்கு வரத்து வளர்ச்சி நிதியுதவி கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று அதை கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனிலே டர்ன்-கீ போஸிஸில் ஒப் படைத்து பாலத்தை முடிக்கலாமா என்பதைக் குறித்து 8.3.1989 முதல் 11-3-89 வரை தலைமைச் செயலகத்திலே ஒரு கருத்து பரிமாற்றம் செய்யப்பட்டது. அந்த பாலத்திற்கான செலவை 10 ஆண்டுக்காலம் அந்த பாலத்தின் மீது போகின்ற வண்டி களிலிருந்து வசூல் செய்துக் கொள்ளலாம் என்றும் ஒரு முடிவு எடுத்து அதை இப்போது கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு





நம்முடைய சீ.ஈ. கடிதம் எழுதியிருக்கிறார்கள். எனவே, முடிந்த முடிவு எடுத்த பிறகு இந்த பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. சொ. கணேசன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல அணைக்கரை பாலம் ஆட்டம் காணுகின்ற நிலையில் இருப்பதால் அது இடிந்து விழுவதற் குள்ளாகவே வெகு சீக்கிரம் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து கட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது இடியாது. இருந்தாலும், இந்தப் பாலம் கட்டப்படும்.

## வராக நதியில் பாலம் கட்டுதல்.

*3799 திரு. எல். மூக்கையா:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் ஒன்றியத்தில், வடுகப்பட்டி- எ.காமாட்சி புரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இதற்கான திருத்திய நிர்வாக ஒப்புதல் ஆணை 19.1.89-ல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பாலத்திற்கான அடித்தள வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

திரு. எல். மூக்கையா: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய குளம் வடுகப்பட்டி—எ. காமாட்சிபுரம் சாலையை இணைக்கும் வகையில் வராக நதியில் கட்ட இருக்கும் பாலத்தினுடைய திட்ட மதிப்பு எவ்வளவு? அது எவ்வளவு காலத்தில் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த வடுகபட்டி—எ. காமாட்சிபுரம் வராக நதியின் மீது கட்டப்படுகின்ற பாலத்தினுடைய மொத்த மதிப்பீடு ரூ.35.20 இலட்சம் ஆகும். அதோடு இப்போது ரூ.19.50 இலட்சம் செலவில் ஒரு துணை பாலம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் அதோடு இணைத்து சேர்த்திருக்கிறோம். அது லம்ப்சம் ப்ரொவிஷனுள் அடங்கும்.

திரு. எல். மூக்கையா : தலைவர் அவர்களே, அந்தப் பாலம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என அறிய விரும்பு கிறேன்.

[1990 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த
பாலத்திற்கான ஒப்புதல் போர்டு-ஆஃப் டைரக்டர்ஸுக்கு
வந்திருக்கிறது. அது எவ்வளவு விரைவாக கட்டி முடிக்கப்படுமோ
அவ்வளவு விரைவாகக் கட்டி முடிக்கப்படும்.

சாம்பார் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.

* 4451 திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர்
ஒன்றியத்தில் ஆலமரத்துப்பட்டியில் சாம்பார் பள்ளம் நீர்த்தேக்கத்
திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்,
சாம்பார்பள்ளம் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் குறித்து
தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் ரூ.7.90 இலட்சத்
திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தற்பொழுது மாவட்ட ஆட்சி
யரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

9-50மணி

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் பஞ்சாயத்தில் இருக்கும்
படியான இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டுவதன் மூலம் அப்பகுதியில்
இருக்கும் விவசாயிகளுடைய நிலங்கள் மிகவும் சாகுபடிக்கு அதிக
மாகப் பயன்படுகின்ற நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்தை
விரைவில் நிறைவேற்றிட அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் தெரிவித்ததைப் போல, அந்தப் பகுதியிலே புஞ்சை
நிலம், இந்த நீர்த்தேக்கம் கட்டுவதால் 58.27 ஏக்கர் பயனடை
யக்கூடும் என்பதை இன்வெஸ்டிகேஷன் சீஃப் இன்ஜினியர் அவர்கள்
தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத்
திட்டத்திற்கான மதிப்பீடு ரூ 7.90 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு
இருக்கிறது. அதுகுறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக
ஆணையரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்களு
டைய பரிந்துரை வந்த பிறகு அரசு மேற்கொண்டு நடவடிக்கை
எடுக்கும்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே
மேட்டூர் வட்டத்தில் கொளத்தூர் பகுதியில் இருக்கும்படி
யான அந்த சாம்பார்பள்ளம் மேற்குத் தொடர்ச்சி மலையில்
இரண்டும் இணைக்கப்பட்டு இருக்கும்படியான அந்த மலைப்பகுதி



1990 ஏப்ரல் 18]

குறைந்த மழை பெய்தாலும், அந்தத் தண்ணீர் முழுவதும் அந்தப்
பள்ளத்தின் வழியாக வருவது, அதிகமாக வந்து கொண்டிருக்கிறது.
இப்படித் தேக்குவதன் மூலம் விவசாயிகளுடைய பண்ணைகள்
அபிவிருத்தி செய்வதற்கும், ஊற்றுக்கள் அதிகரிப்பதற்கும் வசதி
ஏற்படும். அத்தகைய திட்டத்திற்கும் அமைச்சர் அவர்கள் நட
வடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்
கிறேன். விரைவில் நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டு
அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : சம்பார் வழிந்தோடாமல்
சிலர் இட்லியால் தேக்குவதைப் போல, அந்தத் தண்ணீர் வழிந்
தோடாமல் அந்த நீர்த்தேக்கம் கட்டப்படும் என்ற உறுதியை
நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல்

* 6743 டாக்டர் எம். மோசஸ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல் தொடர்பாக எல்லா
மாவட்டங்களிலும் வேளாண்மை, குடிநீர், வடிகால், மண்ணியல்,
பொதுப்பணி முதலிய துறைகளில் அலுவலர்களையும், விவசாயிகள்
பிரதிநிதிகளையும் சேர்ந்த குழு அமைத்து சீரான முறைகளைப்
பின்பற்ற திட்டங்கள் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,
இல்லை.

சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள்.

* 2066 திரு. செங்கை சிவம் மற்றும்

திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள் தகுதியின்
அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களா?

(ஆ) இல்லையெனில், தகுதியின் அடிப்படையில் நியமிக்க
அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி செகதீசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரிபவர்கள்
அரசால் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில்தான்
நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த [1990 ஏப்ரல் 18 ஆட்சிக் காலத்தில் தகுதி இல்லாதவர்கள் சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களாக எத்தனை பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்? அவர்களை நமது ஆட்சிக் காலத்திலே பகுதி நேர நிரந்தரப் பணி யாளர்களாக அமர்த்துகிற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது ஆகவே, அந்த அடிப்படையில் இனிமேல் நியமிக்கப்படுகிறவர் களுக்கு அப்படி வழிமுறை பின்பற்றப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் நியமிக் கப்படுகின்ற அமைப்பாளாகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று. இரண்டு வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளைப் பரா மரிக்கின்ற குழந்தைகள் நல அமைப்பாளர்கள். அவர்கள் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி அல்லது புதிய 10- ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். குழந்தைகளுக்கு முன் பருவக் கல்வி கற்றுத் தரக்கூடிய பயிற்சியும் அவாகள் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 25 லிருந்து 35. விதவை களுக்கு 40 வயது வரை சலுகை உண்டு. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளிலே செயல்படுகிற சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுகிற அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய கல்வித் தகுதி, எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மற்றும் தவறியவர்கள்; அல்லது புதிய 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் அல்லது தவறியவர்கள். மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளில் பணியாற்றுகிற சத்துணவு அமைப்பாளாகளுக்கு, கல்வித் தகுதி தளர்த்தப்பட்டு, 8 ஆம் வகுப்பு வரை அவர்கள் படித்திருந்தாலே போதும் என்று இந்த அரசு அறிவித்து இருக்கிறது. அதைப்போல அவர்களுக்கு வயது வரம்பு 25-லிருந்து 40-வரை என்று இருந்ததை, இப்போது 20 வயதிலிருந்து 40 வயது வரை அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களில் இருக் கக்கூடிய சத்துணவுக் கூடங்களுக்கு 18 வயது நிரம்பிய 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்த பெண்களே போதும் என்று தற்போது நாம் வயது வரம்பு நிர்ணயித்திருக்கிறோம். கடந்த ஆட்சியிலும் இந்த முறைதான் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. ஏதாவது சத்துணவுக் கூடங்களில் இந்த வயது மற்றும் கல்வி வரம்பிற்கு உட்படாமல் தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவார்களே யானால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-55 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு பணியாளர்களில் பகுதி நேர ஊழியர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு அவர்களுக்கு ஓரளவு ஊதியம் உயர்த்தித் தந்து கல்விக் கூடங்களில் கல்வி கற்பிக்கின்ற பணியை அவர்களுக்கு நிரந்தரமாகத் தருகின்ற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள்

*2320 திரு.வ. முல்லை வேந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொரப்பூர் தொகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பல இடங்களில் கட்டப்பட்டு இது வரையில் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட சிறு தொழில் கூடங்கள் கட்டப்பட்டு அவை செயல்படாமல் இருப்பது உண்மை தான். தர்மபுரி மாவட்டத்தில் 1980-81 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் மொரப்பூர் தொகுதியில் 125 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டன 118 தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் ரூ. 18.29 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டது. தர்மபுரி மாவட்டம், தீப்பெட்டித் தொழிலுக்கு பாரம்பரியமற்ற பகுதியானதினாலும், கட்டுப்படியாகும் அளவு உற்பத்தியை எட்ட இயலாத காரணத் தாலும் மூலப் பொருட்கள் பற்றாக்குறை இருப்பதன் காரணமா கவும், அந்தத் தொழிற்சாலைகள் செயல்படாமல் மூடப் பட்டுள்ளன.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தொழில் அதிபர்கள் முதலீடு செய்து 15 ஆண்டு காலமாக அந்தக் கட்டிடங்கள் எல்லாம் கட்டப்பட்டு அவர்கள் எல்லாம் கடன்காரர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மூலப்பொருட்கள் இல்லாத அந்தச் சூழ்நிலையில் அந்த இடங் களில் வேறு தொழில் உருவாக்கித் தந்து அவர்களுக்கு நல்ல வாழ்வை அளிக்கின்ற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அந்தப் பகுதி யில் தொடங்கப்பட்ட ஆண்டு 1980-81. அந்தப் பகுதி கடுமை

யான வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற பகுதி என்றாலும்
கூட தீப்பெட்டித் தொழிலை அந்தப் பகுதியில் தொடங்குவதற்கு
ஏன் அன்றைக்கு இருந்த அரசு முன் வந்தது என்று எனக்குப்
புரியவில்லை. அங்கே 3 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வேறு
தொடங்கப்பட்டிருக்கின்றன. தனியார் தீப்பெட்டித் தொழிலாளர்
களுக்கு உதவி செய்யும், மூலப்பொருட்கள் வாங்கி விநியோகம்
செய்யவும் 3 தொழில் கூட்டுறவு சேவை சங்கங்கள் பொம்மடி
மல்லாபுரம் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில்
கூட்டுறவுச் சங்கம், அதியமான் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்
சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், தர்மபுரி சிறு தீப்பெட்டி
உற்பத்தியாளர் (.சவை தொழில் கூட்டுறவுச் சங்கம் என்ற
பெயர்களில் தொடங்கப்பட்டன. தொடங்கப்பட்ட அந்த 3
சங்கங்களும் பெருத்த நஷ்டத்தில் இயங்கி இன்றைக்கு மூடப்பட்
டிருக்கின்றன. அதன் காரணமாக அந்த சங்கத்திலே அங்கத்தினர்
களாக சேர்ந்து இந்தத் தொழிலை மேற்கொண்ட தனியார்கள்
மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு தொழிலை ஒரு
பகுதியில் ஆரம்பிக்கின்ற நேரத்திலேயே அரசு தீவிரமாக அதை
பரிசீலித்து இருக்க வேண்டும். அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்
களுக்கு தீப்பெட்டித் தொழிலில் முன் அனுபவம் கிடையாது.
அவர்களுக்குப் போதுமான பயிற்சியும் அன்றைக்கு வழங்கப்பட
வில்லை. போதுமான அளவுக்கு மூலப்பொருட்கள் விநியோகம்
கிடையாது. அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையிலிருந்து
மார்க்கெட் செய்வதற்கு தேவையான வழிமுறைகள் அவர்களுக்கு
தெருத்துத் தரப்படவில்லை. எனவே ஏதோ யாரோ ஒரு சிலரை
வளம் ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கே கூட்டுறவுச்
சங்கங்கள் உருவாக்கப்பட்டு அரசினுடைய பணம் கோடிக்
கணக்கில் பாழடிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் கூட இந்த
அரசு அந்தத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களைக் காப்பாற்று
கின்ற வகையில், இன்றைக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்
கழகம், தர்மபுரி மாவட்ட மைய தொழில் கழகம் ஆகியவைகள்
அரசுடன் இணைந்து அந்தப் பகுதியில் அந்தத் தொழிலை மீண்டும்
புதுப்பிக்க முடியுமா அல்லது வேறு தொழிலில் அவர்களை
ஈடுபடுத்த முடியுமா என்பதைப் பற்றி இன்றைக்கு ஆய்ந்து
கொண்டிருக்கின்றன.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படிப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் கடந்த
காலத்தில் சமூகவிரோத செயலில் ஈடுபடு இன்றவர்களுக்கு இருப்
பிடமாக இருந்து கொண்டிருக்கின்றன. அந்த இடங்களில் கடன்
பெற்றவர்கள் கடனைக் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கி
றார்கள் அசலை மட்டும் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை அவர்
களுக்கே உரிமையாக்கித் தருகின்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த
அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன். அவர்கள் பெற்ற
கடன் தொகை எவ்வளவு என்பதையும் இப்படிப்பட்ட இடங்களிலே
சிலபேர் இன்றைக்கு குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவை
களை அவர்களுக்கே குடியிருப்புகளாக மாற்றித் தருகின்ற....



மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் 18.29 லட்சம் ரூபாய். இந்த ஆண்டு வரை கணக்கிடப்பட்ட வட்டி 16.73 லட்சம் ரூபாய். ஆக மொத்தம் 35.02 லட்சம். நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த ஆலோசனையின் அடிப்படையில் தான் அரசு இன்றைக்கு இதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*864 திரு. வி.கே. சின்னசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்கு உட்பட்ட காசிப்பாளையம் பேரூராட்சி மற்றும் அக்கறைக்கொடிவேரி ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இத்திட்டப்பணிகள் துவங்கப்பட்டு விட்டன.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் ''வினா நேரம்'' சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்விக் கேட்டு ரொம்ப நாளாகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஈரோட்டுக்கு வந்த நேரத்தில் தான் இந்தத் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டுவிழா செய்தார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இந்த திட்டத்தால் பயன் பெறுகின்ற மக்கள் தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது முழுமை பெறும்? அப்படி நிறைவேற்றப்பட்டால் எப்போது அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறுவார்கள்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டு குடிநீர்த் திட்டத்தினால், காசிப்பாளையம் பேரூராட்சி, அக்கறைக்குடிலேறு மற்றும் மச்சினங்கோம்பை போன்ற ஊராட்சிகள் பயன்பெறும். இந்தத் திட்டம் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் துவக்கப்பட்டது. இத்திட்டம் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடியும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

[1990 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இது கூட்டுக் குடிநீர்த் திட்டம். கூட்டுக் கேள்வித் திட்டம் அல்ல. (சிரிப்பு)

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறை வேற்றும் போது அவைகள் முழுமையாக நிறைவேற்றப்படும்போது ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களில் அதை ஒப்ப டைக்கிறார்கள். இரண்டு மூன்று ஊராட்சிகளை அதில் இணைத் தால், பராமரிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே முறை யான தண்ணீர் சப்ளை கொடுக்கமுடியவில்லை, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது அதை ஆய்வு நடத்திக்கொண் டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே முதல்வர் அவர்களோடு கலந்து, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றும்போது, அதைப் பராமரிக்கிற பொறுப்புகளை குடிநீர் வடிகால் வாரியமே ஆற்றவேண்டும். அப்படி பராமரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதோடு மேலும் என்னுடைய தொகுதியில் இப்படி குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிற வாய்ப்புகள் உள்ளனவா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடன் சேர்ந்துபேசி இதுபற்றி முடி வெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயற்கை மழை

*3683 டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை மழை பெய்விக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ராமநாத புரம் மாவட்டம் மிகவும் வறட்சி மாவட்டம். நிரந்தரமாக வறட்சி மாவட்டமாகத்தான் எப்போதும் காட்சியளிக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் அல்லலயும் சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். மற்ற



1990 ஏப்ரல் 18]

மாவட்டங்களில் வெள்ளம் வந்தால்தான், மற்ற பகுதிகளில் சேதம் ஏற்பட்டால்தான் ராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிப்பதற்கு நீர் கிடைக்கிறது. அந்த சூழ்நிலையை அறிந்து வைகை ஆற்றில் அணை கட்டிய பின்பு நிரந்தரமாக குடிப்பதற்கு source of water மற்ற இடங்களில் இல்லாமல் இருக்கிறது. வாட்டர் போர்டு........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள் ?

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: வாட்டர் போர்டு தலைவர் கூட source of water இல்லை என்று சொல்வதால் அந்தக் குறையைப் போக்க கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையாவது, செயற்கை மழை பொழிய வைக்கும் திட்டத்தையாவது செயல்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்விக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதை முதலிலேயே அறிவித்திருக்கிறேன். மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் உப்புநீரை நல்ல நீராக மாற்றும் சில அமைப்பு களும் உருவாக்கப்பட்டு அங்கே செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. 1989-90ல் மட்டும் 340 குடிநீர் வசதி இல்லாத குடியிருப்பு களுக்கும் 60 ஓரளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிநீர் வாரியத்திலே நடை பெற்ற கூட்டத்திலே கலந்துகொண்டு இதைப்பற்றி விவாதித்து இருக்கிறார்கள். வைகை ஆற்றினுடைய நீர் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ராமநாதபுரம்-மாவட்ட தலைநகராக இருக்கின்ற காரணத்தால், பரமக்குடி போன்ற நகராட்சிகளுக்கும் சிறப்பு குடிநீர் வழங்குவது எப்படி என்பதை இந்த ஆண்டு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத் திற்கு குடிநீர் வழங்குவதற்கு வைகை ஆற்றில் 3 மாதத்திற்கு ஒருமுறை தண்ணீர் விட அரசு ஸ்பெஷல் ஜி.ஓ. போட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது பொதுப்பணித்துறை அமைச்சரைக் கேட்கவேண்டிய கேள்வி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தாய் சேய் நல விடுதி

*4827 திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியம் அரசம்பட்டியில் தாய் சேய் நல விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லவே இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "இல்லை" என்றுதான் சொன்னார். அடுத்து கேட்டவுடன் இல்லவே இல்லை என்று உறுதியாகச் சொல்வார். (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் வேறு தாய் சேய் நலவிடுதி கிடையாது. ஏழைத்தாய்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். தாய்களைக் காப்பாற்றுகின்ற இந்த அரசு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன தாயுள்ளம் உங்களுக்கு! (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: தாய் சேய் நலவிடுதி அமைக்க மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இலங்காபுரியில் இயங்கும் துணை சுகாதார நிலையம், அவர் குறிப்பிடுகின்ற தாய்களையும் கவனித்துக்கொள்ளும் நிலையில் இருக்கிறது. மேலும் தமிழகத்தில் உள்ள தாய்களை எல்லாம் கவனிக்க வேண்டிய பொறுப்பு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இருக்கிற இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால்; அனைத்தையும்- மக்கள் தொகை, தூரம் போன்றவைகளைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப்படும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

10-05 மணி

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள தாய்களை எல்லாம் இந்த அரசு கவனிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள தாய்-சேய் நலவிடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் அங்கே



இருக்கிற தாய்களும், சேய்களும் பல்வேறான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற புகார் வந்திருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே வருகின்ற புகார்கள் எல்லாமே உங்களுக்குத்தான் வரும்போல் தெரிகிறது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் அரசுக்கு எதுவும் வரவில்லை. அது என்னமோ தெரியவில்லை. பெரும்பாலான புகார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மட்டுமே வருகின்றன. (சிரிப்பு) ஒருவேளை புகார்களுக்குக் காரணமாக அவரே இருப்பாரோ என்ற சந்தேகம் கூட ஏற்படுகிறது. (சிரிப்பு) சுட்டிக்காட்டினால் எந்த இடத்திலே புகார் இருந்தாலும் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கால்நடை மருத்துவக் கல்லூரி

*3391 திரு. ஜி.ஜி. குருமூர்த்தி:

மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், காங்கேயம், மொடக்குறிச்சி கொடுமுடி, பவானி ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கால்நடைக் மருத்துவக்கல்லூரி அமைத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே காங்கேயம் என்று சொன்னாலே, கால்நடைகளில் சிறந்த ஒரு இனம் உற்பத்தியாகின்ற இடம் அது என்பது தெரியும். அதேபோல் பெரியார் மாவட்டம், பர்கூர் இனம் என்று சொல்லப்படுகின்ற ஒரு சிறந்த கால்நடை இனமும் இருக்கக்கூடிய மாவட்டமாகும். எனவே, அங்கே, அந்த மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கான முயற்சிகளை மீண்டும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் இனத்தை அழியாமல் காப்பாற்றுவதற்கு அரசின் மூலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்காக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 18

திரு. ஜி.ஜி. குருமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் காங்கேயம் இனத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதுபோன்று பர்கூர் காளைகள் என்ற ஒரு சிறந்த இனம் இருக்கிறது. அது கொஞ்சம், கொஞ்சமாக அழிந்துகொண்டு இருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் இனத்தையும் அழியாமல் காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: —ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்காலில் தண்ணீர் திறந்து விடாததால் பயிர்கள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து ஏப்ரல் 15-ஆம் தேதி தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க் காலில் தண்ணீர் எப்போதும் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டு தண்ணீர் திறந்துவிடாத காரணத்தால் பருவக் காலத்தில் பயிர் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. விவசாயிகள் சுமார் 24,504 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருந்து அமைச்சருக்கும் தகவல் வந்திருக்கலாம். தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கலாம். இருந்தாலும் கூட காளிங்கராயன் பாசனப் பகுதியில் மூன்றாவது போகத்திற்கு பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். எனவே தண்ணீர் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லாமல் 15-ஆம் தேதியன்றே திறந்து விடவேண்டிய தண்ணீரை அந்த வாய்க்காலில் மிக விரைவாகத் திறந்து விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கன்கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் 15-4-1990-இல் தண்ணீர் திறந்துவிட்டிருக்கவேண்டும். அப்படி திறந்து விடாததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று கீழ் பவானிக்குத் தண்ணீர் வருகிற பில்லூர் அணைக்கட்டில் இப்போது ஜெனரேட்டர் ரிப்பேர் ஆகி இருக்கிறது. 'மெய்ன்டெனன்ஸ்' வேலையும் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. எனவே 15 நாட்களுக்குள்ளாக தண்ணீர் விடுவதற்கு சாத்தியம் இல்லை என்று மின்வாரியத்துறை தெரிவித்திருக் கிறது. ஆக 1-5-1990 வரை பில்லூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இப்போது காளிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. எனவே 1-5-1990 முதல் அரக்கன் கோட்டை தடப்பள்ளி வாய்க்காலில் தண்ணீர் விட வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும். பில்லூர் அணைக் கட்டைப் பொறுத்தவரையில் மின் வாரியம் கேட்டுக்கொண்ட தற்கிணங்கத்தான் பதினைந்து நாட்களுக்குத் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளி வைக்க நடவடிக்கைகள் எடுத்திருக் கிறோம். அதிலே கூட 10 நாட்கள்தான் பாக்கி இருக்கின்றன. எனவே 1-5-1990-ல் தண்ணீர் திறந்துவிடப்படும்.

### (ஆ) ஸ்ரீவைகுண்டம் பகுதியிலே உள்ள பயிர்களைக் காப்பாற்ற தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து

திரு. எஸ். டேனியேல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் சென்ற ஆண்டு தொடர்ந்து பெய்த பலத்த மழை காரணமாக ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் சிவகளை, பெருங்குளம் ஆகிய பாசனப் பகுதி களில் நெற்பயிர் சுமார் 5000 ஏக்கர் அழிந்து நாசமாகி உள்ளது. அதேபோல் ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர் ஆகிய குளத்துப் பாசனப் பகுதிகளில் கிட்டத்தட்ட 2000 ஏக்கர் நெற்பயிர் பூச்சியினால் தாக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பழங்குடியினர் விவசாயத்திற்காக அட்வான்ஸ் கார் விவசாயத் திற்காக ஸ்ரீவைகுண்டம் வடக்கால் பகுதியில் ஆறுமுகமங்கலத் திற்கும் தென்கால் பகுதியில் கடப்பா ஆத்தூர் குளத்திற்கு மட்டும் தான் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

10-10 மணி

கடந்த 1988-ஆம் ஆண்டு ஆளுநர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 50 அடி தண்ணீர் பாபநாசம் அணையில் நீர்மட்டம் இருந்தபோது கூட மருதூர் கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் கஸ்பா, பேரூர், சிவகளை, பெருங்குளம் ஆகிய குளங்களுக்கும், மருதூர் மேலக்கால், வெள்ளூர் குளங்களுக்கும் அட்வான்ஸ் கார் விவசாயம் செய்வதற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்போது பாபநாசம் அணையில் 70 அடி நீர் மட்டமும் மணிமுத்தாறு

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1990 ஏப்ரல் 18

அணையில் 80 அடி நீர் மட்டமும் இருந்துகொண்டிருக்கிற நிலையில் விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று மருதூர் கீழக்கால், ஸ்ரீவைகுண்டம், பேரூர், சிவகளை, பெருங்குளம் ஆகிய குளங்களுக்கும், மருதூர்மேலக்கால், வெள்ளூர் ஆகிய குளங்களுக்கும் அதுபோல ஸ்ரீவைகுண்டம் வடக்காலில் இருக்கின்ற கொற்கை, பேய்குளம் ஆகிய குளத்துப் பகுதி விவசாயிகள் வாழை, கொடிக்கால் ஆகிய பயிர்களை விளைச்சல் செய்திருக்கிறபடியால் அவர்களுடைய பயிர்களையும் காப்பாற்ற தண்ணீர் வழங்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி பாசனத்தின் அட்வான்ஸ் கார் பயிர் என்பது ஒருவகை. இதில் பெரும்பாலும் ஸ்ரீவைகுண்டம் தண்ணீருடன் இரண்டு கால்வாய் பகுதிகளில்தான் அட்வான்ஸ் காருக்கு தண்ணீர் விடுவது வழக்கம். இந்த அட்வான்ஸ் காருக்கு தண்ணீர்விட வேண்டுமானால் 1-4-1990 முதல் தண்ணீர் விட்டிருக்கவேண்டும். ஆனால் இதற்கு என்று சில விதிமுறைகள் உண்டு. பாசனத்தில் இருக்கிற தண்ணீர், காருக்கு இருக்கிற தண்ணீருடைய நிலைமைக்கு ஏற்ப, அடுத்துவருகிற கார் பயிருக்கு நாற்று நடுவதற்காக 500 மில்லியன் கன அடியை நிறுத்தி வைத்துவிட்டு, அதை அடுத்து சிதம்பரனார் மாவட்டத்தில் இருக்கிற சில தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் விடுவதற்காக ரெசர்வ் ஆக 300 மில்லியன் கன அடி தண்ணீரை நிறுத்தி விட்டு, ஆக, 800 மில்லியன் கன அடி தண்ணீரை நிறுத்திவிட்டு, மீதி பாபநாசம் அணைக்கட்டில் இருக்கிற தண்ணீரைத்தான், நிலைமைக்கு ஏற்ப அட்வான்ஸ் காருக்கு விடுவது வழக்கம். அப்படி விடுகிறபோது கூட, எல்லா தண்ணீரையும் நம் இஷ்டப்படி விட முடியாது. அதற்கு என்று சில விதிகளை வகுத்து வைத்திருக்கிறோம். அதாவது இருக்கிற தண்ணீரை எப்படி கொடுக்க வேண்டுமென்றால், பர்ஸ்ட் பிரையாரிட்டி 8,124 ஏக்கர். அவர்களுக்குக் கொடுத்தது போக செக்கண்ட் பிரையாரிட்டி 962 ஏக்கர். அவர்களுக்குக் கொடுத்தது போக மிச்சம் தண்ணீர் இருந்தால் தேர்ட் பிரையாரிட்டி 12,027 ஏக்கர். அதற்கும் கொடுத்துவிட்டு தண்ணீர் மிச்சம் இருந்தால் போர்த் பிரையாரிட்டி, மாண்புமிகு உறுப்பினர் சொன்னாரே மருதூர் கீழக்கால், மருதூர் மேலக்கால் அதிலே ஓர் 16,475 ஏக்கர். ஆக, பர்ஸ்ட் பிரையாரிட்டி கொடுத்து மிச்சம் இருந் தால் செக்கண்ட் பிரையாரிட்டி கொடுத்து, அதிலும் தண்ணீர் மிச்சம் இருந்தால் தர்ட் பிரையாரிட்டி கொடுத்து பிறகுதான் நான்காவது பிரையாரிட்டிக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் பர்ஸ்ட் பிரையாரிட்டி, செக்கண்ட் பிரையாரிட்டி, தேர்ட் பிரையாரிட்டி இவ்வளவையும் தாண்டி, கடந்து நான்காவது இடத்தில் இருப்பவர்களுக்கு தண்ணீர் கொடுங்கள். பிரையாரிட்டி கொடுத்து தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று சொன்னால் இந்த மூன்று பிரையாரிட்டி களிலும் நிலங்களை வைத்திருப்பவர்கள் என்ன ஆவார்கள்



1990 ஏப்ரல் 18] [திரு. துரைமுருகன்]

என்பதைப் பார்க்க வேண்டும். இது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்துவிடும். அவர் இங்கே சொன்னார், கவர்னர் ஆட்சியிலே கொடுத்தார்கள் என்று. ஒன்றைத் தெளிவாக சொல்கிறேன். சில விதிமுறைகளை மாற்றிய தால்தான் சில பிரச்சினைகள் அப்போதைக்கப்போது ஏற்படுகின்றன. இந்த அரசைப் பொறுத்தவரையில், பாசன முறையில் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையோடு நீர் வழங்கப் படும். இதில் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு, வேறுபாடு எதையும் இந்த அரசு காட்டாது. இந்த அரசைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் சமமாக நீதியை வழங்கும் என்பதை மட்டும் தெரிவித்து, இந்த அரசு முறைப்படி நடக்கும், முறை தவறி நடக்க அனுமதி வழங்காது என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

(இ) சென்னை அண்ணா சாலை அஞ்சலகத்திற்கு முன் உண்ணா விரதம் இருக்கச்சென்ற தொழிற்சங்கத் தலைவர்களை அனுமதிக்காததால் ஏற்பட்டுள்ள நிலை.

10-15 மணி

திரு. எஸ்.ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் தொழிற்சங்கத் தலைவர் கள் அண்ணா சாலையில் அஞ்சல் அலுவலகத்தின் முன்னால், இன்றைக்கு உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து, உண்ணா விரதம் இருக்க சென்றவர்களை, அவர்களோடு சென்ற தொழி லாளர்களைத் தடுக்க, தொழிற்சங்கத் தலைவர்களான மரியாதைக்குரிய திரு. கே. அந்தோணிப்பிள்ளை அவர்களையும், திரு. உமாநாத் அவர்களையும், திரு. வேல்முருகன் அவர் களையும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களையும் மற்றும் தொழிற்சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களையும், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற முயற்சியையும் தடுக்கின்ற வகை யில், காவல் துறையைச் சார்ந்தவர்கள் அந்த மக்களை அங்கே செல்ல அனுமதிக்காமல் 5 நிமிடங்களுக்கு முன்னால் பொது மக்களைக் கலைப்பதற்காக லேசாக தடியடிப்பிரயோகம் செய் யும் அளவுக்கு இந்த நேரத்தில் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த வர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பல்வேறு அரசியல் ஊழியர்கள் போராட்டம் நடத்துகிற நேரத்தில் உண்ணாவிரதம் இருக்கிற நேரத்தில், ஆர்பாட்டம் செய்கிற நேரத்தில் காவல் துறையினுடைய அனுமதி பெற்றுத்தான் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு விதி, 41-ஏ என்று ஒரு செக்ஷன் போட்டு, தொடர்ந்து பல ஆண்டுகளாக 15 நாட்களுக்கு அந்த விதியின்படி அறிவிக்கப்பட்டு தொடர்ந்து அனுமதி மறுக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது என்று சொல்லி, நெருக்கடி காலத்தில் இல்லாவிட்டாலும்கூட ஆளுநர் ஆட்சிக்

காலத்தில் ஒரு நெருக்கடியை உண்டாக்கி எந்த உண்ணாவிரதத்
தையும், ஆர்பாட்டத்தையும் எங்கேயும் நடத்தக்கூடாது என்ற
நிலையை உண்டாக்கி, இன்றைக்கும் அதே நிலை
தொடர்ந்து வருகிற ஒரு நிலை என்று ஆக்கப்பட்டு இருக்கிறது.

இன்றைக்கு தமிழக அரசினுடைய கவனத்தைக் கவர
வேண்டும் என்று சொன்னால் உண்ணாவிரதம் இருக்கிறவர்கள்,
ஆர்ப்பாட்டம் செய்கிறவர்கள் மிகத் தூரத்திலே இருக்கிற
நம்முடைய சேப்பாக்கம் பகுதியிலே தடுத்து நிறுத்தப்பட்டு
அங்கேதான் உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று
இன்றைக்கு உண்ணாவிரதத்திற்கு இடம் அறிவிக்கப்பட்டு
இருக்கிறது. ஆனால் இன்றைக்குக் காவல் துறையிலே இருக்கிற
தலைவர்கள் ஒரு அரசு அறிவிப்பு என்ற அறிவிப்பிலே ஏதோ
16 இடங்கள் அறிவித்ததாகவும், அதைத் தொழிற்சங்கத்
தலைவர்கள் ஏற்றுக்கொள்வதாகச் சொன்னதாகவும் அந்த அரசு
அறிக்கையில் இருக்கிறது. ஆனால் தொழிற்சங்கத் தலைவர்
களிடத்தில் பேசிய அளவுக்கு காவல் துறை ஆணையர் அவர்
களிடத்திலே பல முறை பேசியும் கூட அதை அவர் ஏற்றுக்
கொள்ளாத நிலையில் கவர்னர் ஆட்சிக்காலத்திலே மறுக்கப்
பட்டதையே தொடர்ந்து மறுத்துக்கொண்டு, எங்கேயும்
உண்ணாவிரதம் இருக்கக்கூடாது, ஊர்வலம் நடத்தக்
கூடாது ஊர்வலம் நடத்தினால் ஒலி பெருக்கி
வைக்கக் கூடாது, ஒலி பெருக்கி வைத்தால் சத்தம்
கேட்கக் கூடாது என்ற நிலையை உண்டாக்கி, இன்னும்
சொல்லப்போனால் தொழிற்சாலைகளின் வாசல்களில் தொழி
லாளர்கள் செய்கிற ஆர்ப்பாட்டத்தைக் கூட தடை செய்து
அங்கேயும் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்ற நிலைமைகள்
எல்லாம் இன்றைக்கு ஒரு மிகப் பெரிய நெருக்கடியை
உண்டாக்குகிற அளவுக்கு ஜனநாயகத்தினுடைய குரல்வளையைத்
நெரிக்கின்ற அளவுக்கு இருக்கின்றது என்பதை நான் இங்கே
எடுத்துக்காட்டி ஆகவேண்டும். ஆனால் இந்த அரசு ஏற்படு
வதற்கு முன்னால் ஆளுநர் ஆட்சிக் காலத்திலே இதே அரசில்
இருப்பவர்கள், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
கூட அதைப் பல நேரங்களில் கண்டித்தார்கள். ஜனநாயகத்
திலே தொழிற்சங்கவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒரு
அனுமதி இருக்கவேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்றெல்
லாம் அன்றைக்கு அவர்கள் வாதாடினார்கள். ஆனால் ஒரு
ஆண்டுக்கு மேலாகியும் கூட அது தவிர்க்கப்பட்டு இருக்க
வேண்டும்; தடுக்கப்பட்டு இருக்கவேண்டும்; ஜனநாயகம்
விரிவுபடுத்தப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் என்ன காரணத்
தாலோ ஆளுநர் ஆட்சியிலே செய்தார்கள்; அதைத் தான்
இப்பொழுதும் அதே காவல் துறை அப்படியே செய்து கொண்டு
இருக்கிறது என்ற நிலைமைகள் இருக்கிறதே. அது ஒரு சரியான
போக்கல்ல. இன்றைக்கு நீங்கள் மாற்றுவதாக இருந்தால்
அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே சேப்பாக்கம் வரையிலே அனுமதி
என்று சொன்னால், இந்த ஆட்சியிலே ஒரு மாற்றம் வரும்



என்று சொன்னால்—நீங்கள் அதைக் கோட்டை வரையிலே
கொண்டு வந்து நிறுத்துகின்ற அளவுக்கு இங்கேயே உண்ணா
விரதம் இருப்பதற்கு வசதி செய்து கொடுத்தால், சரி ஒரு
ஆட்சி மாற்றம் வந்ததனாலே ஒரு பெரிய மாற்றம் வந்தது
என்று சொல்லலாம்.

இன்றைக்கு டில்லியிலே கூட பார்த்தால் உண்ணாவிரதம்
இருப்பதற்கு ஒரு இடம் வைத்து இருக்கிறார்கள்; வசதி செய்து
கொடுக்கிறார்கள். எங்கள் ஆட்சி வரும்பொழுது கோட்டைக்
குள்ளேயே கூட உட்காருவதற்கு ஒரு இடம் கொடுத்து
அங்கேயே உண்ணாவிரதம் இருப்பதற்கு அல்லது
வசதி செய்வதற்கு அல்லது ஆர்ப்பாட்டம் செய்வதற்கு
ஜனநாயகத்திலே இப்படி ஒரு வளர்ச்சி இருந்தால்தான்
மக்களிடத்திலே இந்தப் போராட்டம் நடத்துகிறவர்களுக்குக்
கூட அவர்கள் செய்கின்ற முறையில் அரசினுடைய கவனத்தைக்
கவர வேண்டும் என்பதற்காகச் செய்கின்ற இந்த நிலைகளை,
அரசு உடனே கவனிக்கிறது என்ற நிலையை நாம் உருவாக்கு
வதற்கு அது வழியாக இருக்கும்.. எனவே காவல் துறையினுடைய
இந்தப் போக்கைத் தடுத்து, அது மாற்றப்பட்டு, ஜனநாயகக்
குரல்வளைகள் நெரிக்கப்படாத நிலை ஏற்பட்டு எல்லா
வகையிலும் அனுமதி வழங்குகிற ஒரு நிலையை உருவாக்கு
வதற்கு அரசியல் கட்சித் தலைவர்களையும், தொழிற்சங்கத்
தலைவர்களையும் அணுகிப் பேசி உடனடியாக அவர்கள்
விரும்புகிற இடத்தில் உண்ணாவிரதம் இருப்பதற்கும், ஆர்ப்
பாட்டம் செய்வதற்கும் அல்லது வேறு வகையான போராட்டம்
என்று வருகிற நேரத்தில் காவல் துறை அனுமதி தருகிற
அளவுக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

* திரு உ.ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிரச்சினை பல முறை இந்த மன்றத்திலே
எழுப்பப்பட்டது. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர்
முடிகிற நாள் அன்றைக்கு எங்கள் கட்சியினுடைய உறுப்பினர்
திருமதி பாப்பா உமாநாத் எழுப்பியபோது. பட்ஜெட் கூட்டத்
தொடர் முடிந்த பிறகு அதிகாரிகளைக் கலந்து பேசி அந்த
உரிமைகளை எல்லாம் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும்
என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உறுதி அளித்து
இருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகும் அனுமதி மறுப்பது
என்பதுதான் பொதுவான நிலையாகத் தொடர்கிறது. சென்னை
நகரத்திலே 16 இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே தான் ஆர்ப்
பாட்டம் அல்லது உண்ணாவிரதம் எல்லாம் நடத்த வேண்டும்
என்று போலீஸ் கமிஷனர் உத்திரவு போடுகிறார். தொழிற்
சங்கத் தலைவர்கள் அதை ஏற்றுக்கொண்டதாகச் சொல்கி
றார்கள். நிச்சயமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது
இருக்கக்கூடிய மாநகரக்காவல் துறை ஆணையர் கூட்டிய
கூட்டத்திலே கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த

மரியாதைக்குரிய எம்.பி., டி.ஆர். பாலு உட்பட உரிமை வழங்கு
வது என்பது விதியாக இருக்க வேண்டும். மறுப்பு என்பது வி
விலக்காக இருக்க வேண்டுமே தவிர இந்த இடங்கள்தான்
என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று எல்லாக்
கட்சிகளும், எல்லாத் தொழிற்சங்கங்களும் திட்டவட்டமாக
அறிவித்து இருக்கின்றன.

10—20 மணி

உதாரணமாக, ஒரு மசூதியின் முன்னாலே இந்து முன்னணிக்
காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றால் அசம்பாவிதம்
திகழும் என்று தடை செய்யலாம். ஆனால், செக்ஷன் 41 என்று
போட்டுவிட்டு, அதற்கு கிட்டத்தட்ட ஒரு வெள்ளி விழாக்
காலமே ஆகியிருக்கும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தொடங்
கியது. 14 தினங்களுக்குத்தான் அந்தத் தடை உத்தரவு என்று
விதியிருக்கிறது. அது ஒரு ரெஸ்ட்ரிக்டிவ் கிளாஸ். ஆனால்
அதற்குப் பதிலாக ஒவ்வொரு 14 தினங்கள் முடிந்த பிறகும்
அடுத்த தினத்திலிருந்து தொடர்ச்சியாக என்று போடுவது
என்பது முறை அல்ல. அவசரக் காலத்திலேயும் இப்படி நடந்தது
அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட
சூழ்நிலைமையிலே: தெருவிலே கட்சிக் கொடிகளுடைய தோரணம்
கூட கட்டக்கூடாது என்கிற நிலைமையெல்லாம் வந்தபொழுது
மாண்புமிகு முதலமைச்சரவர்களே வீதியிலே இறங்கி தோரணம்
கட்டிய நிகழ்ச்சியெல்லாம் நடந்திருக்கிறது. கவர்னர் ஆட்சிக்
காலத்திலே, தேசிய முன்னணியினுடைய ஊர்வலம் போவதற்கு
எவ்வளவு கடுமையான நிபந்தனைகளையெல்லாம் அன்றைக்குக்
காவல்துறை விதித்து, அதை எதிர்த்து திராவிட முன்னேற்றக்
கழகம் குரல் கொடுத்தது என்பதையெல்லாம் நாம் நன்றாக
அறிவோம்.

தொழிற்சங்கங்கள் அவர்களுடைய ஆலை வாயில்களிலே
கேட் கூட்டம் நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள்.
முதலாளிகள் கோரிக்கைகளை மறுக்கின்றபொழுது,
முதலாளிக்கு எதிராக நடக்கக்கூடிய சண்டையில் அங்கே ஆலை
வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்தினால், உண்ணாவிரதம் நடத்
தினால் காவல்துறைக்கு ஏன் வலிக்கிறது என்று நமக்குப் புரிய
வில்லை.

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, கடற்கரையிலே என்று
சொன்னார்கள். இப்பொழுது கடற்கரைகூட அல்ல, வாலாஜா
சாலையிலே என்று, அங்கே அந்த அரசினர் விருந்தினர் மாளிகைக்
குப் பக்கத்திலே என்று சொல்கிறார்கள். இப்பொழுது, இது
சென்னை மாநகரத்தோடு மட்டும் நில்லாமல், கோவைக்கும் பரவு
கிறது, மதுரைக்கும் பரவுகிறது. அங்கேயிருக்கின்ற காவல்
துறையில் ஆணையரகம் அமைக்கப்பட வேண்டுமென்று, Commis-
sionarate அமைய வேண்டுமென்று நாங்கள் கேட்டதனுடைய



விளைவு இப்படி ஆகக்கூட முடிந்திருக்கிறது. மாநிலம் முழுமையுமே அந்தத் தடை என்பது தொடர்ந்து வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்பதுதான் நாங்கள் வலியுறுத்தக் கூடியது.

உதாரணமாக, போஸ்டாபீசுக்கு முன்னால் நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும், மத்திய அரசுக்கு எதிராக எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து என்று நாங்கள் போகிறோம். காவல்துறை எங்களைத் தடுத்து ஒரு லான்டரி கடைக்கு முன்னாலே நிறுத்தி விடுகிறார்கள். அங்கே நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகிறபோது, பொதுமக்கள் எல்லாம் கேட்கிறார்கள் பாவம், இந்த லான்டரிக்காரன் என்ன செய்தான், இங்கே போய் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்களே என்று, அப்படியொரு கேலிக்கூத்தாகக் கூடிய முறையிலே இந்த உரிமைகளைப் பறிக்கக் கூடிய நிலைமை நடந்து வந்து கொண்டிருக்கிறது.

இது நீக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து. இந்த முறையிலே, காவல் துறை செயல்படுவதுதான் உசிதமாக இருக்கும். இதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஜனநாயக உரிமைகளை மதிக்கக்கூடிய முறையிலே அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். காவல் துறை இப்படிப்பட்ட, கடிவாளம் இல்லாத குதிரையாகப் பாய்ந்து கொண்டிருக்கிறார்கள் அப்பாவி மக்கள் மீது, ஆனால் ஜனநாயக உரிமைகளுக்குக் கடிவாளம் போடுவது மட்டுமல்ல, குரல் வளையை நெரிக்கக் கூடிய முறையிலே இது நடந்திருக்கிறது.

ஏழு முறை காவல் துணை ஆணையாளரைச் சந்தித்துப் பேசியதற்குப் பின்னாலும், முடிவு ஏற்படவில்லை என்கிற காரணத்தினாலேதான் இன்றையதினம் மரியாதைக்குரிய எஸ்.சி.சி. அந்தோணிப்பிள்ளை அவர்கள், கே.டி.கே. தங்கமணி அவர்கள், வேல்முருகன் அவர்கள், உமாநாத் அவர்கள் தலைமையிலே இன்றைக்குத் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்காக, தடையை மீறி மவுண்ட் ரோட்டில்—அண்ணா சாலையிலே இருக்கக்கூடிய தபால் நிலையம் முன்பாக உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலைமையும், அதைக் கட்டுப்படுத்துவதற்குக் காலையிலேயிருந்து, எட்டு மணியிலேயிருந்து, போலீஸ் அங்கே குவிக்கப்பட்டு பஸ்ஸ்டாண்டிலே பேருந்துப் பயணம் செய்வதற்காக இருக்கக் கூடியவர்களைக் கூட அனுமதிக்காத அளவிற்கெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிலைமைகளைத் தொழிற்சங்கங்களோடு, அரசியல் கட்சிகளோடு சேர்ந்து பேசித்தான் அனுமதிக்க வேண்டும். மற்ற மாநிலங்களிலேயெல்லாம், உதாரணமாகக் கேரளாவிலே எடுத்துக்கொண்டால், கர்நாடகாவிலே எடுத்துக்கொண்டால், சட்டமன்றம். .. .. ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு "Mention" தானே ? இதுவே ஒரு சொற்பொழிவா ?

திரு.உ.ரா. வரதராசன் : நான் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்ற நிலைமை இல்லை. இது முக்கியமான பிரச்சனை என்கிற காரணத்தினாலே ஓரிரு மணித் துளிகள் அனுமதிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கெல்லாம் சட்டமன்றத்திற்கு முன்னாலேயே நடத்துவதற்கு அரசே ஏற்பாடு செய்து அனுமதி வழங்கக்கூடிய நிலைமையெல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, தலைமைசெயலகத்தினுடைய புனிதமான வாயிற்படிகளையெல்லாம் அப்பாவித் தொழிலாளர்கள் தங்களுடைய தூசு படிந்த கால்களாலே மிதித்து விடக் கூடாது என்பதற்காகப் போடப்பட்ட தடை இன்றும் நீடிக்கிறது.

மதிப்புமிகு இராதா அவர்கள் சொன்னதைப்போல, அந்தப் பக்கம் எழிலகத்திற்குப் பக்கத்திலே, இந்தப் பக்கம் ரிசர்வ் வங்கி சப் வே அருகிலே நிறுத்தப்படுவதோடு மட்டுமல்லாமல், ஊர்வலங்கள் தடை என்றால், ரேஷன் கடைகளிலே முறைகேடு என்றால் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றால் அங்கே முடியாது மாநகராட்சியினுடைய சீர்கேடுகளைப் பற்றி ஆர்ப்பாட்டம் என்று சர்க்கிள் ஆபீஸ் முன்னாலே உண்ணாவிரதம் இருப்பது என்றால் முடியாது என்று வருகிறது.

எல்லாப் பிரச்சினைகளையும் அரசுக்கு எதிராக என்று திருப்பக் கூடிய வேலையைத்தான் காவல் துறை செய்து கொண்டிருக்கிறது இந்த அனுமதிகளை மறுப்பதன் மூலமாக. இந்தக் கொள்கையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். அதற்கான வழிவகைகளை அரசு வகுக்க வேண்டும் என்று இன்றையதினத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ஒரு குறிப்பு. நீங்கள் பேசுவதைப்பற்றியல்ல. திரு. கே. ரமணி முதலாக திரு.வரதராசன் முதலியவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார்கள் .. .. .. .. ..

திரு.சோ. அழகர்சாமி : நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்பொழுது கொடுத்திருக்கிறீர்கள்?

திரு.சோ. அழகர்சாமி : கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை மணிக்குக் கொடுத்தீர்கள்? எத்தனை மணிக்குக் கொடுத்தீர்கள் என்று சொல்லுங்கள் (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தது, விதிமுறைகளை மீறி 9.04 க்கு.





திரு.சோ. அழகர்சாமி : பத்து மணிக்குக் கொடுத்ததையெல்லாம்கூட அனுமதித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படித்தான். நீங்கள் விதிமுறை என்று சொன்னால் நானும் விதிமுறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சட்டம் பேசத் தொடங்கும்பொழுதுதான் நான் சட்டத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் கொடுத்திருப்பேன். இதிலே நீண்ட விவாதத்திற்கு இடமில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்தார்கள். திரு.கே. ரமணி போன்றவர்கள் கொடுத்தார்கள். காலை 8.30 மணிக்கு எனக்கு வந்ததை நான் எடுக்கச்சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) யாரை வேண்டுமானாலும் அனுமதிப்பேன். சட்டம் பேசுவது என்றால் நானும் சட்டம் பேச வேண்டியிருக்கும். அவ்வளவுதான்.

திரு.கே. ரமணி : தலைவர் அவர்களே, அவரும் கொடுத்து இருக்கிறார். நேரம் தவறிப்போய் விட்டது. அது ஒரு பிரச்சினை தான். நேரத்திற்கு அவர் கொடுத்திருக்க வேண்டும் என்பது உண்மை. இன்றைக்கு இந்த விஷயம் முக்கியமானதாக இருக்கிறது. அவர்களும் இதிலே பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையிலே ஒரு நிமிடம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

• திரு.சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே. உரிமைகள் வெளியே மறுக்கப்படுகிறது என்பதற்காகத்தான் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே இதுசம்பந்தமாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் வரதராசன் அவர்களும் கருத்துக்களை சொல்லி இருக்கிறார்கள். எனக்கு 1967-ம் ஆண்டு என்று நினைவு. இந்த கோட்டைக்கு முன் பாகவே பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைத் திரட்டிக் கொண்டு வந்து, இங்கே ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி, மகஜரைக் கொடுத்திருக்கிறோம். அப்போது முதலமைச்சர் இல்லை. நம்முடைய நாவலர் அவர்களிடத்தில் அதைக் கொடுத்திருக்கிறோம். இப்போது ஏதாவது ஒரு தொழிலாளர் பிரச்சினை என்றால் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை முன்போ, அலுவலகம் முன்போ உண்ணாவிரதம், தர்ணா நடத்தினால் தான், அவர்களுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும், அந்தப் பிரச்சினையும் தீரும். இதற்கு எங்கேயோ ஒரு இடத்தை ஒதுக்கி, அங்கே தான் இருக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் அறிவித்து விட்டு வீட்டிலேயே இருந்து கொள்ளலாம். இது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்களுக்கு வெளியேயிருந்து பல கோரிக்கைகள் வருகின்றன. தொழிற்சங்கங்கள் அத்தனையும் இன்றைக்கு உரிமைகள் அளிக்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கின்றன. இன்றைக்கு 18 இடங்களில் மட்டும் உண்ணாவிரதம் இருக்க வேண்டும். தர்ணா நடத்த வேண்டும் என்று இடங்களை ஒப்புக்

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 18

கொண்டோம் என்று சொல்லக்கூடியது சரி இல்லையென்று தலை
வர்கள் சொல்கிறார்கள். அப்படி ஒப்புக்கொள்ளவில்லை என்று
திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத் தலைவர்களும்
சொல்கிறார்கள். ஆகவே, நான் சொல்வது இன்றைக்கு பல்வேறு
கோரிக்கைகள், பல்வேறு கஷ்டங்கள் உழைக்கும் மக்களுக்கு
வருகிறது. அதை பொது மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்
வதற்கும், அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு
மான ஒரு ஜனநாயக உரிமையை, இப்போதாவது முதலமைச்சர்
அவர்கள், முன்பு இருந்ததைப் போல, எங்கெங்கே தர்ணாவோ
உண்ணாவிரதமோ —போக்குவரத்திற்கு இடைஞ்சல் என்றால்
நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். அந்த இடத்தில் அனுமதிக்க
வேண்டாம் —அப்படி இல்லாத இடங்களில் அனுமதிப்பது தான்
சரியாக இருக்கும்,— இப்போதாவது மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் இதற்கான சரியான உரிமைகள் வழங்குவதற்கு
வேண்டிய ஒரு ஏற்பாட்டை அறிவிப்பார்களா? அறிவிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே
இன்று அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எல்லா
விவரங்களும் தெளிவாக இருக்கின்றன. இதுபோன்ற ஒரு
பிரச்சினை இந்த அவையில் எழுப்பப்பட்டு, நான் உடனடியாக
அந்தப் பிரச்சினை குறித்து ஆராய காவல் துறை அதிகாரிகளுக்கு
தாக்கீது அனுப்பி, அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களின்
பிரதிநிதிகளையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் இரண்டு
அல்லது மூன்று தடவை அழைத்துப் பேசி, அந்த முடிவுகளும்
தெரிவிக்கப்பட்டன. இதற்கிடையில், நான் மதுரைக்கு நான்கு
மாதங்களுக்கு முன்பு சென்றிருந்தபோது அங்கே நிருபர்கள்
என்னைக் கேட்டார்கள். சென்னையில் தர்ணா, ஆர்ப்பாட்டம்
கேட் மீட்டிங் இவைகளுக்கு எல்லாம் சில குறிப்பிட்ட இடங்கள்
என்று வரையறுக்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறார்களே
அந்த நிலை மாற்றப்பட்டு விட்டதா என்று கேட்டபோது, நான்
சொன்னேன்-இன்னமும் அதுகுறித்து தொழிற்சங்கத் தலைவர்கள்
சிலருக்கு அதிருப்தி இருக்கிறது. நான் அவர்களோடு கலந்து
பேசி, அவர்கள் குறிப்பிடுகிற இடங்களைப் பற்றி யோசிப்பதாக
இருக்கிறேன்—என்று சொன்னேன்.

10-30 மணி

இதிலே என்ன குற்றம் இருக்கிறது என்று தெரியவில்லை-
மறு நாளே நண்பர் உமாநாத் அவர்கள் மறுப்பு அறிக்கை-
முதலமைச்சர் சர்வாதிகாரி போல செயல்படுகிறார் என்று.
தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, குறை இருந்
தால் அவர்களோடு பேசி, அதுபற்றி, அவர்கள் குறிப்பிடுகின்ற
இடங்களைப்பற்றி சிந்திக்கலாம் என்று சொன்னதில் என்ன
சர்வாதிகாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. அவர் அப்படி
ஒரு கடுமையான அறிக்கையை வெளியிட்டார். நான் அதுபற்றி
என்னைச் சந்தித்த கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களிடத்தில் சொல்லி



1990 ஏப்ரல் 18]

இருக்கிறேன். இதுவரையில், இந்த அவை பல நாட்களாக
இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ பிரச்சி
னைகள் இங்கே எழுப்பப்பட்டு, அரசின் கவனத்திற்குக் கொண்டு
வரப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினை இந்த அவையில்
எழுப்பப்படாமலேயே, திடீரென்று, இன்றைக்கு அண்ணா
சாலையில் அஞ்சல் அலுவலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதம்
என்று அறிவித்து, காலையில் உண்ணாவிரதத்தை அவர்கள்
தொடங்கி இருக்கிறார்கள். 9—00 மணிக்கு மேல் தொடங்கி
இருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் குறிப்பிட்டார்கள், ஏதோ தடியடி நடைபெற்றதாக.
இதுவரையில் அப்படி எந்தச் சம்பவமும் நடைபெறவில்லை
என்று எனக்குச் செய்தி தரப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித்
தலைவர் குறிப்பிட்டார், ஜனநாயகத்திடைய வளர்ச்சியில்
உண்ணாவிரதம் இருக்கின்ற இடங்களும் ஆர்ப்பாட்டம் செய்கின்ற
இடங்களும், கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி கோட்டைக்குள்
வரையிலும் என்று வந்துவிடவேண்டும் என்று சொன்னார்.
சட்டம்—ஒழுங்கு அமைதியிலே நாட்டமுடைய ஜனநாயகவாதிகள்
இதை ஏற்றுக்கொள்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது·
அவைகளை நான் வளர்ச்சி என்று சொல்லமாட்டேன். இன்றைக்கு
வந்துள்ள அறிக்கையிலே கூட 16 இடங்கள் குறிப்பிடப்பட்டு
இருக்கின்றன. கேட் மீட்டிங், மதிய உணவு நேரத்திலே நடை
பெறுகிற மீட்டிங்குகள், இவைகளுக்கு எல்லாம் தடையில்லை
என்றும், ஏதாவது ஆட்சேபனை வருமானால், அதுகுறித்து
போலீசார் தலையிடவேண்டியதிருக்கும் என்று தான் முடிவு
எடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலேகூட குறை இருந்தால்
என்னிடத்திலே நீங்கள் தெரிவித்திருக்கலாம், அப்படித் தெரிவிக்
காமல் இன்றைக்கு அவர்கள் ஒரு புதிய அணியை உருவாக்கிக்
கொண்டு உண்ணாநோன்பிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். நான்
போலீசாருக்குத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டேன். அவர்
களை, இன்று, யாரையும் கைது செய்ய வேண்டாம் என்று
சொல்லிவிட்டேன். அங்கு இருக்கின்ற போக்குவரத்துக்கள்
எல்லாம் கூட டைவர்ட் செய்து விடப்படவேண்டும் என்று
சொல்லியிருக்கிறேன். அவர்கள் கைது செய்யப்படமாட்டார்கள்
என்ற உறுதியை நான் அளிக்கிறேன்,

திரு.எஸ்.ஆர்.இராதா : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்
சினையை மறுபரிசீலனை செய்து, மறுபடியும் பேசி, தொழிற்
சங்கத் தலைவர்களையும், அரசியல்வாதிகளையும் அழைத்துப்
பேசி காவல்துறைக்கு சில வழிமுறைகளை வகுக்கவேண்டியது
நம்முடைய கடமை. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள்
சொன்னார்கள், இது புதிய அணி என்று. அதிலே ஒன்றும்
அணியும் கிடையாது, பிணியும் கிடையாது. இது ஒரு தொழிற்
சங்கப் பிரச்சினை என்று வந்த காரணத்தாலே தொழிற்சங்கத்
திலே இருப்பவர்கள் ஒன்று சேருகிறார்கள். தொழிற்சங்கத்
திலே இருப்பவர்கள் ஒன்று சேருகிறபோது, தொழிற்சங்கத்தைச்
சேர்ந்த அரசியல்கட்சிகளும் ஒன்று சேரவேண்டிய நிலைதான்

வருகிறது. அதனாலே நீங்கள் இதை வேறு நோக்கத்தோடு பார்க்க வேண்டியதில்லை. தொழிலாளர்களுக்கும், அரசியல் ஊர்வலங்களுக்கும் தரவேண்டிய ஜனநாயக உரிமைகளைத் தருகிற வகையில் நீங்கள் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்று இந்தப் பேரவையில் சந்தன மரம் கடத்தல் பற்றிக் கொடுத்திருந்த ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு மறுப்பு தெரிவித்த நீங்கள் விளக்கம் தரவில்லையே என்று கேட்டபோது, விளக்கம் தரப்படும் என்று சொன்னீர்கள். அந்த விளக்கம் தராதது மட்டுமல்ல, இன்று..........

திரு. எஸ். ஆர். இராதா, தலைவரவர்களே .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சொல்லட்டும். அவரைச் சொல்லவிடுங்கள். அதற்கு நான் விடை சொன்ன பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்). அந்த பிரச்சி னைதான் முடிந்துவிட்டதே. பிறகு என்ன? முதல்வர் அவர்கள் பதில் சொல்லவிட்டார்களே, (குறுக்கீடுகள்). "Mention" என்ற முறையில் நீங்கள் சொன்னீர்கள். முதல்வர் அவர்களும் விடை சொல்லிவிட்டார்கள். பிறகு நீங்கள், உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதோடு முடிந்துவிட்டது. இதிலே மறுபடியும் விவாதம் என்றால்தான், பிறகு வாதத்திற்கு வாதம் என்று ஆகிவிடும் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுடைய கருத்துக்கு முழு வாய்ப்பு அளித்துவிட்டேன். முதல்வர் அவர்கள் விடை சொல்லிவிட்டார்கள். பிறகு அடுத்த பிரச்சினைக்குப் போகவேண்டியதுதானே. (குறுக்கீடுகள்), இல்லை. இந்தப் பிரச்சினையைப்பற்றிப்பேசி முடிவு செய்தபிறகுதான் வேறு பிரச்சினைக்குப் போக முடியுமா? (குறுக்கீடு) அதுதான், முதல்வர் அவர்கள் விடை சொல்லியாகிவிட்டதே. உங்கள் கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள். இப்போது அடுத்த பிரச்சினைக்கு வந்தாகி விட்டது. (குறுக்கீடுகள்) இதிலே மேலும் விவாதங்கள் இடையாது. நான் ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கிறேன் Mention என்று வருகிறபோது உங்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுக் கிறவகையில் நீங்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்புத் தரப்படு கிறது. அதற்குப் பிறகு முதல்வர் அவர்கள் பதில் சொன்ன பிறகும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தனக்கு இருக்கிற ஒரு தனி உரிமை காரணமாக மீண்டும் ஒரு தடவை கருத்தைச் சொல்லிவிட்டார்கள். பிறகு மீண்டும் இதை ஒரு தொடர் விவாதமாக ஆக்கவேண்டுமா என்பதுதான் கேள்வி. ஏற்கனவே இதுபற்றிப் பேசி, இந்தமாதிரி நிலைமை வந்து. ..தையுமே கொடுக்காத ஒரு நிலைமை வந்துவிடவில்லையா? நீங்கள் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும். (குறுக்கீடுகள்.)



திரு. எஸ். ஆர். ராதா : தலைவர் அவர்களே, நீங்கள் மறுபரி சீலனை என்று சொன்னதால் நான் சொல்கிறேன். மறுபரி சீலனைக்கு முதல்வர் அவர்கள் உட்பட்டு, அனைவரையும் அழைத்துப் பேசி ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதினேன், ஆனால் அவர்கள், அவர்களுடைய நிலையிலிருந்து மாறாத ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே, இந்த நிலையிலேயிருந்து அவர்கள் மாறவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகை யிலே, இந்தப் பிரச்சினையை உங்கடைய கவனத்திற்குக் கொண்டு வருகிற வகையில், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு அணி அமைத்து இந்தக் காரியம் நடக்கிறது என்று சொன்னார்கள்: அப்படி இல்லை, தொழிற்சங்கங்கள் ........(குறுக்கீடுகள்)......தயவு செய்து உங்களுடைய .. .. ..

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அப்படி இருந்தால்தான் என்ன? ஏன் பயப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய விளக்கம். "அணி" என்பதற்கு 'அழகு' என்றும் பொருள். அதனாலே பரவாயில்லை.

திரு மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே,....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். அவர்கள் சொல்லட்டும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி யாரும் இல்லாத நேரத்தில் சங்கடங்கள் ஏற்படு ஊழியர்களுக்கு வதை நாங்கள் உணர்கிறோம். அவர்களுக்கு அணி தேவையில்லை என்று சொன்னால், அவர்கள் அணிக்குப் போகவேண்டாம். அவர்கள் சும்மா இருக்க வேண்டியதுதானே அதைப்பற்றி. அதை அமைத்தால் என்ன தப்பு என்று எங்களுக்கு அவர்கள் முன் யோசனை சொல்லக்கூடிய நிலை இல்லை. ஆகவே அது பிரச்சினை அல்ல, நான் இங்கே சொன்னதற்காக......(குறுக் கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே மற்றவர்கள் தலை யிட வேண்டாம். அவர்கள் சொல்லட்டும். (குறுக்கீடுகள்).

திரு கே. ரமணி : அதற்கு அரசாங்கத்தைக் கேளுங்கள். நீங்கள் அரசாங்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவரவர்களே.....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் சொல்கிற கருத்திலே நீங்கள் குறுக்கிடுகிறீர்கள். (குறுக்கீடுகள்). இதிலே உங்களுக்கு என்ன இருக்கிறது. (குறுக்கீடுகள்). ஒருவர் பேசுங்கள், மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். அவர்கள் சொல்கிற கருத்திலே உங்களுக்கு என்ன பிரச்சினை? உங்களுக்குப் பிரச்சினை இல்லாதபோது, எதற்கு எழுந்து குறுக்கிடுகிறீர்கள்? அவர் அணி என்கிறார் அழகு என்கிறார், அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? உங்களை ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

10—35 மணி

திரு. கே. ரமணி: முதலில் இதில் நாங்கள் தலையிடவே இல்லை. அவர்கள் தனியாக ஒதுங்கி இருந்தார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி அவர் விமர்சனம் பண்ணுகிறார்கள். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் சொல்ல வேண்டிய தெளிவைச் சொல்லிக் கொண்டு போகிறோம்.

தொழிலாளி வர்க்கம் பாதிக்கப்படும்போது தொழிற்சங்கங்கள் முழுவதும் கட்சி என்றும், மற்ற வித்தியாசங்களைப் பாராட்டாமல் அவர்கள் ஜனநாயக உரிமைகளுக்காக கேட்கக் கூடிய கேள்வி, அதுதான் பிரச்சினை, நமது முதலமைச்சர் அவர்கள் அவ்வளவும் சொல்லிக் கடைசியில் இப்படி நிலைமை வந்துவிட்டது என்று அதோடு விட்டுவிட்டார்கள். ஏற்கெனவே இந்த அவையிலே நாம் ஒரு பெரிய போராட்டத்தையே முடித்து வைப்பதற்கு எவ்வளவோ பேசி, அவர்கள் இந்த முடிவிற்கு வந்து சேர்ந்தது நமக்கு அனுபவம் இருக்கிறது. அதேமாதிரி இந்த பிரஜா உரிமையை காப்பாற்றக் கூடிய ஒரு நடவடிக்கையாக சென்னை நகரிலும், அதேமாதிரி கோவை நகருக்கும், மதுரை நகருக்கும் இது பரவிக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படைக் கூட்டம் கூடும் உரிமை' தர்ணா நடத்தும் உரிமை, உண்ணாவிரதம் இருக்கும் உரிமை என்பது இப்படி போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதை போலீஸ் அதிகாரிகள் சொல்லட்டும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு' அப்படிப்பட்டதை குறிப்பிட்ட இடங்களில் இது சரியல்ல என்று சொன்னால் அதை நாம் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்வதா, அல்லது நிராகரிப்பதா என்று முடிவு செய்யலாம். ஆனால் பொதுவான தடை உத்தரவு விதிக்கக் கூடாது. எனவே தான் அவர்கள் தனித்தனியாக அனுமதி என்ற முறையை கைவிடுவதற்கு ஜனநாயக முறையை பாதுகாப்பதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களைக் கூட்டி வைத்துப் பேசி, அவரே இதில் தலையிட்டு ஒரு ஒழுங்குபடுத்தி விட்டால், பிரச்சினை இப்படிப் போகாது என்ற ஒரு விண்ணப்பத்தை நான் முன்வைக்கிறேன்.



3. ஒழுங்குப் பிரச்சினை

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிக்கைகளை மறுக்கும்போது அதற்கான காரணங்களை உறுப்பினர்களுக்குத் தெரிக்க வேண்டியது குறித்த நடைமுறை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அன்றைக்கு "Point of order" என்று சொல்லும்போதே உங்களுக்கு நான் சொல்லி இருக்கிறேன். "Point of order" என்று கேட்டுத் தவறாகப் பயன்படுத்தினால் ஜென்மத்திற்கு "Point of order" இருக்காது என்று சொல்லியிருக்கிறேன். இப்போது சொல்கிறேன் உங்களுக்கு, நீங்கள் தவறாக "Point of order" ஐப் பயன்படுத்தினால் பிறகு நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். கண்டிப்பாக இதில் ஏதாவது "Point of order" நிச்சயம் இருக்கவேண்டும். எனவே கவனமாக இதைக் கேளுங்கள் (குறுக்கீடு) "Point of Clarification"-க்கு இதில் இடமில்லை. நீங்கள் உட்காருங்கள் "Point of order" என்றால்தான் அனுமதி.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு முறை.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Point of order" என்று சொல்லிவிட்டு, இப்போது "Clarification" என்றால், இதிலே "Point of Clarification"-க்கு இடமில்லை. நீங்கள் உட்காருங்கள் ஏற்கெனவே விடை சொல்லியாகி விட்டது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் நேற்று ஒத்திவைப்புத் தீர்மானம் என்று எங்களுடைய வேண்டுகோளை, சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பனைப் பற்றி நாங்கள் எழுப்பியதற்கு.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே ஒரு பட்டம் வேறு வழங்கவேண்டுமா, "மன்னன்" என்று.

திரு. குமரி அனந்தன்: கடத்தல் கயவன் என்று அதைத் திருத்திக் கொள்வது நல்லது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

திரு. கே. ரமணி: இந்த வேண்டுகோளை நான் முதலமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்பது "Point of order" அவர் முடிக்கட்டும். பிறகு பேசுவோம்.

[1990 ஏப்ரல் 18

திரு. குமரி அனந்தன்; எனவே அதனால் நமது அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பும், பல உயிர்களுடைய சேதமும் பற்றி இங்கே விவாதிப்பதற்கு நான் கேட்டபோது நீங்கள் அனுமதி மறுத்து, அதற்கு காரணம் சொல்லாமல் இருந்ததை இங்கே சுட்டிக்காட்டியபோது, இன்று அவைகளுக்கெல்லாம் விளக்கம் உங்களுக்கு சொல்லப்படும் என்று சொன்னீர்கள். அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், இராமேஸ்வரத்திலே விசைப் படகுகளில் வந்து பயங்கர ஆயுதங்களோடு இறங்கி, மிக சர்வசாதாரணமாக பெட்ரோலைப் பிடித்து, சிற்றுண்டி எல்லாம் எடுத்துக் கொண்டு, அங்கிருக்கின்ற மீனவர்கள் அச்சப்படுகின்ற வகையிலே சென்றுவிட்ட அந்த விடுதலைப் புலிகளை,.....(குறுக்கீடு)

10-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும், இதிலும் தங்களுக்கு மறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று, நீங்கள் நேற்று கேட்டதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றபோது தக்க காரணம் காட்டவேண்டுமென்று கேட்டீர்கள், விதிமுறைகளின் படி அது சரிதான் என்று ஏற்றுக்கொண்டேன். எனவே இனித் தரப்படுகின்ற மறுப்புகளில் தக்க காரணம் காட்டி அந்த மறுப்புத் தரப்படும் என்பது ஒன்று. தங்களுக்கு மறுப்பு அளிக்கப்பட்ட அந்த இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கும் காரணம் வேண்டுமென்று நீங்கள் கேட்டால், ஒரு மணி நேரத்தில் அந்த மறுப்பிற்குத் தக்க காரணம் உங்களுக்குத் தரப்படும். எனவே ஒரு முறை மறுப்பு அளிக்கப்பட்ட ஒரு செய்தியை மீண்டும் அவையில் எழுப்பக் கூடாது என்பது விதி என்பதை நீங்கள் உணரவேண்டும். (குறுக்கீடுகள்) எத்தனை பேருக்கு ''Point of Order'' ஒருவருக்கா, இரண்டு பேருக்கா? திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கா, அல்லது திரு. பீட்டர்ஆல்போன்ஸ் அவர்களுக்கா? யாராவது ஒருவர் பேசுங்கள். திரு. பீட்டர் ஆல்போன்ஸ்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த (குறுக்கீடுகள்) Are you going tc allow me to speak or not?

திரு. கே. ரமணி: தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அவர் ''Point of O der'' கேட்கிறார். கேட்டு முடிக்கட்டும். ''Point of Order'' கேட்டால் விட வேண்டும் என்று நீங்கள் தானே சொன்னீர்கள். நீங்கள் தானே அன்றைக்கு வாதாடினீர்கள், ''Point of Order'' கொடுக்கவில்லை என்று. இப்போது திரு பீட்டர் ஆல்போன்ஸ்க்கு ''Point of Order'' கொடுக்கப்பட்டிருக்கிறது.



1990 ஏப்ரல் 18]

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சொன்ன விதிகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த விதிகளைத் திரும்பவும் நோக்க வேண்டும் என்று நான் உங்களைப் பணிவொடு கேட்டுக்கொள்கிறேன். ''That motion may be refused toge.her wi h reasons என்று இருக்கிறது. அந்த ரீசன் கொடுக்காமல் நீங்கள் ஒரு ஆர்டரைக் கொடுத்தீர்கள் என்று சொனனால். How it will be an operational o..er will it deba. f.om .aising the question again? அந்த மாதிரிப்பிரச்சினை வருகிறது. அதனாலே ஒரு எர்ரோனியஸ் ஆர்டரை அடுத்து இன்னொரு எர்ரானியஸ் ஆர்டர், அதனாலே நீங்கள் ஒரு ஆர்டரைப் போட்டிருக்கிறீர்கள் An e..on.ous order canno. .ec.ily .n.a lie o.de. again அந்த ஆர்டரிலே விதி It has not given a discretiona y power to the Speake.. It shall accompany together with rea sons என்று சொல்லப்படுகிறது. அந்த புரொவிஷனில் Not 'may' அதனாலே அது ஒரு இன்வேலிட் ஆர்டர் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய முழு அதிகாரமும் பெற்றவர் தாங்கள். எதுவாக இருந்தாலும்....(குறுக்கீடுகள்) நான் விதிகளைச் சொல்லி விடுகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் இந்த சபையில் முழு அதிகாரம் பெற்றவர் தாங்கள் என்று சொன்னதில் ஏதாவது மறுப்பு இருக்கிறதா உங்களுக்கு. (குறுக்கீடு) அப்புறம் எதற்கு உடனே அதை மறுக்கிறீர்கள். கொஞ்ச நேரம் உட்காருங்கள், அவர் சொல்லட்டும்.

திரு. அ. இரகுமான்கான்: முழு அதிகாரம் பெற்றவர் தாங்கள் சபையினுடைய விதிகளுக்கு உட்பட்டு, இந்த சபையினுடைய விதி முறைகளில் ஏதாவது புறம்பாக இருந்தால் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் பிரச்சினையே வரும். குறிப்பாக இந்த சபையினுடைய விதிகளை முழுமையாக முதலிலிருந்து கடைசி வரை பார்ப்பீர்கள் என்று சொன்னால் அதிலே ஒரு புராவிஷன் கடைசியாக ஒரு பகுதி இருக்கும், இறுதி முடிவு சபாநாயகருடையது என்று இருக்கும் ஆகையினாலே காரணம் சொல்வதும் சொல்லாமல் இருப்பதும் The ball is in your court. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லி விடுகிறேன் அப்புறம் பேசுங்கள். உங்களுக்கு அனுமதி தருகிறேன். நம்முடைய விதிமுறைகளில் காரணம் சொல்ல வேண்டும் என்று

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1990 ஏப்ரல் 18

இருக்கிறது. நான் அதைஏற்றுக் கொண்டேன். அதில் திரு குமரி அனந்தன் அவர்கள் நேற்று கேட்டபோது உங்களுக்கு காரணத்தோடு கூடிய மறுப்பு கண்டிப்பாகத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அவர் தனக்குத் தரப்பட்ட அந்த மறுப்புக்கு உடனடியாகக் காரணம் தரப்படவேண்டும் என்று சொன்னால், நான் ஏற்கெனவே இன்றைக்குத் தருவதாகச் சொல்லி இருக்கிறேன், இன்றைக்கு முறைப்படி எழுதித்தருகிறேன் இது ஒன்று. இனிமேல் தரப்படுகிற எந்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும் மறுப்பு வருமேயானால், கண்டிப்பாகக் காரணத்தோடு தரப்படும் என்பது இரண்டாவது. ஆனாலும் இன்னொரு மேற்கோளும் காட்ட விரும்புகிறேன். 'Kaul and "Shakdher Refusal to give consent is in the absolute discretion of the speaker and he is not bound to give any reason" என்பது அந்த மேற்கோள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மறுப்பு அளிப்பது என்பது முழுக்க முழுக்கப் பேரவைத் தலைவருடைய முழுப்பொறுப்புக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டது. அவர் காரணம் சொல்ல வேண்டும் என்பது இல்லை. (குறுக்கீடு) பிறகு நீங்கள் பேசலாம்.

2. தகவல் கோரல் —தொடர்சி.

(இ) சென்னை அண்ணா சாலை அஞ்சலகத்திற்கு முன் உண்ணாவிரதம் இருக்கச்சென்ற தொழிற்சங்கத் தலைவர்களை அனுமதிக்காத தால் ஏற்பட்டுள்ள நிலை—தொடர்ச்சி

திரு. கே. ரமணி: அவர் முடிவை சொல்லியாகிவிட்டது. அந்தப் பிரச்சினையை நான் கேட்கவில்லை. எங்கள் பிரச்சினையோடு சம்மந்தப்பட்டதற்குப் பதில் வேண்டும்.

திரு. உ. ரா. வரதராசன்: நாங்கள் விதிமுறைகளைப் பற்றி கேட்கவில்லை. நான் ஏற்கெனவே சொன்னதற்கு முதலமைச்சர் அவர் பதில் சொல்லவில்லை. வேறு சப்ஜெட்டுக்கு போவதற்கு முன்னாலே அதை முடித்து விடுங்கள், முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடட்டும் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசி விடட்டுமே. நீங்கள் சொன்ன பிரச்சினைதான் முடிந்து விட்டதே. திரு. குமரி அனந்தன் நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) அவர் பேசட்டும் அனைவரும் உட்காருங்கள். வேறு "Subject-க்குப் போய் ரொம்ப நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) குமரி அனந்தன் ஒரு மணித்துளி நேரம் பொறுங்கள் திரு. கே ரமணி.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் முன் வைத்திருக்கும்படியான அந்த வேண்டுகோளை அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை தெரிவித்தால் எங்களுக்கு நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் சொன்ன விளக்கத்திற்கு மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் இன்னும் பதில் அளிக்கவில்லை நான் மதுரையிலே நிருபர்களிடத்திலே சொன்னதில் என்ன தவறு? தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்து அவர்கள் குறிப்பிடுகிற இடங்களைப்பற்றி விவாதித்து நல்ல முடிவு எடுக்கட்டும் என்று நான் மதுரையிலே சொன்னதில் என்ன தவறு? இன்றைக்கு உண்ணாவிரதத்திற்கு தலைமை வகிக்கின்ற நமது நண்பர்களில் ஒருவரான திரு. உமாநாத், சர்வாதிகாரம் என்று பத்திரிகையிலே அறிக்கை விடுத்தது ஏன்? நான் உங்களிடம் எல்லாம் பலமுறை சொல்லியிருக்கிறேன். சொன்ன பிறகும் கூட ஒரு தோழமைக் கட்சியாக இருக்கின்ற நீங்களே கூட எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் இப்படி உண்ணாவிரதம் நடத்தப் போகிறோம் என்று நேற்றைக்குக் கூடச் சொல்லாமல்-எத்தனையோ முறை தனியாகக்கூட சொல்லியிருக்கிறீர்கள். அந்த நேரத்திலே கூட சொல்லாமல் அல்லது இந்த அவையிலே பொதுவாக எழுப்ப வேண்டும் என்றால் இந்த அவையிலே கூட எழுப்பாமல் திடீரென்று இன்றைக்கு உண்ணா நோன்பை மேற்கொண்டதற்கு என்ன காரணம் என்பதைத் தாங்கள் சொல்வீர்களானால் நான் பதிலளிக்க இயலும்.

10-45 மணி

*திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, இதைப்பற்றி எழுப்பவில்லை என்று முதல்வர் முதலிலே பேசுகின்ற போது கூட குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே கூட இதைப்பற்றி விரிவாக நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். ஏற்கவேவே மதுரையில் நடந்த பேட்டி என்பதல்ல. தோழர் உமாநாத் அளித்த அறிக்கையிலே அ. தி. மு. க. ஆட்சிக் காலத்திலேயும், ஆளுநர் ஆட்சிக் காலத்திலேயும் மேற்கொள்ளப்பட்ட காவல்துறை கொள்கையினுடைய விளைவுகளை இந்த அரசு அறுவடை செய்ய விரும்புகிறதா என்ற அடிப்படையிலே கேள்வி தொடுத்திருந்தார்கள். தோழமை கட்சி என்கிற முறையிலே நியாயமான, நேசபூர்வமான விமர்சனங்களை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இதிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல் ஒரு கூட்டம் இங்கே ராஜசேகரன்நாயர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய தொழிற் சங்கமும், அதனுடைய அரசியல் தலைவர்களும் சேர்ந்து கொடுக்கப்பட்ட கோரிக்கையை இன்றளவும் ஏற்றுக்கொள்ள வில்லை என்ற காரணத்தினால் இன்றைக்கு அடையாளபூர்வமாக அனுமதி வாங்கி பல இடங்களிலே செய்கிறோம்—அறிவித்தது நாங்கள்—தடையை மீறி இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கிறோம் என்பதை கடந்த சில தினங்களுக்கு முன்னாலே தொழிற் சங்கத் தலைவர்கள் கூட்டுப் பத்திரிகை அறிக்கையிலே

வெளியிட்டிருக்கிறோம். காவல்துறைக்கும் அதனுடைய தகவல்
தெரியும். நேற்று முன் தினம் கூட இது சம்பந்தமாக விளக்
மான பத்திரிகை அறிக்கைகள் வந்திருக்கின்றன. தகவல் தராமல்
இல்லை. நாங்கள் வேண்டுவதெல்லாம் அரசியல் கட்சித் தலைவ
களுடைய, தொழிற்சங்கத் தலைவருடைய கூட்டத்தை மாண்
மிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி இதுபோன்ற ஜனநாயக உ
மைகளை வழங்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும
இது கட்சி, ஆளும் கட்சி, எதிர்க்கட்சியான பிரச்சனை அல்ல
ஜனநாயக உரிமை என்பது அத்தனைக் கட்சிகளுக்கும் சேர்ந்து
இருக்கக்கூடிய பிரச்சனைகளின் அடிப்படையிலே அதற்கு ஒரு
நியாயமான தீர்வை முதலமைச்சர் அவர்கள் காண வேண்டும்
என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான்
பத்திரிகையைப் பார்த்துத்தான் மற்ற கட்சிகளுடைய நடவடிக்கை
களை எல்லாம் தெரிந்துக்கொள்ள வேண்டும் என்று கூறுவது
அவ்வளவு சரியாக எனக்குத் தெரியவில்லை. பொறுப்பான
உறுப்பினர்கள் இங்கே அமர்ந்திருக்கும் போது இங்கேயே
அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம் பலமுறை
சொல்லியிருக்கிறேன். தொழிற் சங்கத் தலைவர்களோடு கலந்து
பேசி உரிய முடிவு எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன்.
அதற்கேற்ப போலீஸ் அதிகாரிகளையும் மற்றும் அதிகாரிகளையும்
அழைத்து அவர்களோடு பேசச் சொல்லியிருக்கிறேன். அப்படிப்
பேசியதை நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். டி.ஆர். பாலு
உள்பட மற்ற தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் கலந்து
பேசியதை நீங்கள் இப்பொழுது ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள்.
அந்தப் பேச்சு முடிவு உங்களுக்கு உகந்ததாக இல்லை என்று என்
னிடத்திலே ஒரு மேல் முறையீடு இதுவரையிலே செய்துகொள்ளப்
பட்டதுண்டா? நான் அதை மறுத்தது உண்டா?

திரு. உ.ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, மேல் முறை
யீடாகத்தான் அங்கே தடையை மீறி உண்ணாவிரதம் என்பதும்
இங்கே அவையிலே எழுப்பி முதல்வர் அவர்கள் தலையிட்டு
அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்பதை நாங்கள் இங்கே
வலியுறுத்துகிறோம். அதற்கான தீர்வை தருவதிலே என்ன
தயக்கம் இருக்கிறது என்று தான் எங்களுக்குப் புரியவில்லை.
காவல் துறை ஆணையாளர் பேசுகின்றபோது கூட அன்றைக்குச்
சொன்னது கேட் மீட்டிங் அதை மட்டும் பரிசீலிப்போம் என்று
சொன்னாரே தவிர அது கூட இன்றைக்கு மறுக்கப்படுகிறது.
நான் கேட்பதெல்லாம் ஒரு முதலாளிக்கெதிராக, நிர்வாகத்திற்கு
எதிராக அந்த ஆலை வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்துவது,
தர்ணா நடத்துவது என்று சொன்னால் ஏன் காவல்துறை அதற்குக்
குறுக்கே நிற்க வேண்டும்? காவல்துறைக்கு ஏன் அதிலே வலிக்க



வேண்டும்? இதை மேல்முறையீடாக எடுத்துக்கொண்டு மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அரசியல் கட்சிகளுடைய தொழிற் சங்கத்
தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, இந்த ஜனநாயக
உரிமைகளை வழங்கக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும்
என்பது தான் மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்தக் கூடியது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,
இன்றைக்கு உண்ணாவிரதம் மாலையிலே முடியட்டும். அதற்குப்
பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, நாங்கள் எங்களுடைய
இந்த வேண்டுகோளை முன் வைப்பது என்பது முதலமைச்சர்
அவர்களுக்கு அவர்கள் சொல்லக்கூடிய முறையில் வந்திருக்கக்
கூடிய விமர்சனங்களை அரசியல் கட்சிகளோடு கலந்து பேசுவ
தற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்
களிலே இந்த விமர்சனங்கள் வருவதை பேசவும் செய்கிறோம்.
அப்படித்தான் ஆளும் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் ஒன்றோ
டொன்று இணைந்தாலும், இணையாவிட்டாலும் நடத்திக்
கொண்டு வரக்கூடிய ஒரு பார்லிமெண்டேரியன் முறை. இதில்
போலீஸ் அதிகாரிகள். அவர்களுக்கு நாங்கள் சொல்லியிருக்
கிறோம். அவர்கள் இதை ஒழுங்குபடுத்துவார்கள் என்று
முதலமைச்சர் அவர்களே சொன்னதன் பேரில் தான் அவர்
களோடு பேச்சு நடத்தினோம். அந்தப் பேச்சிலே அவர்கள்
குறிப்பிட்ட சில இடங்களிலே கேட் மீட்டிங் நடத்தலாம்
என்று சொல்லி அவர்கள் முடித்திருக்கிறார்களே தவிர உண்ணா
விரதத்திற்கும் தர்ணா போன்ற எந்த காரியத்திற்கும் அவர்கள்
இது வரையிலும் எந்தவிதமான முடிவும் செய்யவில்லை. இந்த
நிலைமை நீடிக்கிறது. வேறு பக்கத்திற்கும் பரவுகிறது
அதனால்தான் இந்த மாதிரி ஒரு முடிவிற்கு வரவேண்டிய
நிர்பந்தம் ஏற்பட்டு இது செய்யப்படுகிறது. அதனால்தான் தடை
இருந்தாலும் அதை மீறிப் போவதைத் தவிர வேறு வழியில்லை
என்ற நிலைமைக்கு வந்தது. அது இஷ்டப்பட்டு தடை இருந்
தாலும் மீற வேண்டும் என்பது அல்ல. அந்த நிலைமை என்பது
உருவாகியது. ஆகவே, அந்த அணுகுமுறையை, போலீஸ் துறை
யினுடைய அந்தப் போக்கைத் தடுத்து ஒரு ஜனநாயக முறைக்கு
ஊக்கம் கொடுக்கக் கூடிய---எதிர்ப்பக்கத்திலே தப்பு இருந்
தாலும் அவர்கள் விமர்சித்துச் சொல்லலாம்--- அப்படிப்பட்ட
ஒரு முறையைக் கையாள வேண்டும் என்பதுதான் எங்களுடைய
வேண்டுகோள். அதை முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு
உண்ணாவிரதம் முடியட்டும், அதற்குப் பிறகு பார்க்கலாம்
என்று சொல்வது சரியல்ல என்பது எங்களுடைய கருத்து.
அதை நாங்கள் ஆட்சேபித்து, வெளிநடப்புச் செய்கிறோம்
என்று சொல்லிக் கொள்கிறேன்.

(மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளி) நடப்புச் செய்தனர்)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கக்கூடிய இந்தப் போக்கைக் கண்டித்து நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் ஜனநாயக பூர்வமாகப் போராடுவதற்குக் கூட உரிமை மறுக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர் திரு.ந. நஞ்சப்பன் வெளிநடப்புச் செய்தார்.)

(ச) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே கடற்கரையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து நீங்கள் கொடுத்த அந்தத் தீர்மானம் பற்றிய விளக்கம் உங்களுக்கு அஞ்சலில் அனுப்பப்பட்டிருக்கிறது. அஞ்சல் பகுதிக்குப் போய் இருக்கிறது. அதற்குள் ஏதும் எழுப்ப வேண்டாம். அப்படி அதற்கு விடை பெற்ற பிறகு தேவைப்பட்டால் அதை எழுப்புவதற்கு நான் உங்களுக்கு வாய்ப்பளிப்பேன். (குறுக்கீடு) இல்லை அவ்வளவுதான். நீங்கள் ஒன்று கொடுத்து அதை நான் மறுத்தாகி விட்டதென்றால் . . . .(குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: நேற்றைக்கு you have agreed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நான் திருப்பி விட சொல்லிவிடலாம். ஆய்வில் உள்ளது என்று சொல்லி விடலாம். அது ரொம்ப எளிது. இருந்தாலும் நிலைமையை விளக்குகிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. குமரி அனந்தன்: தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவர்களும், மற்றவர்களும் அச்சப்படுகின்ற வகையிலும். தமிழ்நாட்டு எல்லை எல்லாம் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதனுடைய காரணத்தினாலே மிகுந்த அவசர உணர்வோடு நாங்கள் இதனைக் கொடுத்தோம். நேற்று நீங்கள் மறுப்புத் தெரிவித்ததற்குப் பிறகு, அதற்கு விளக்கம் வேண்டும் என்று



நான் கேட்டதற்குப் பிறகு, மீண்டும் எனக்கு அனுமதி இல்லை என்று சொல்லி இருக்கிறீர்கள் இந்த விதியிலே, 58–லே '(shali') என்று போட்டிருப்பது மிக உறுதியாக நீங்கள் விளக்கம் அதிலே சேர்த்திருக்கவேண்டும் என்பதுதான். நான் ஒவ்வொரு முறையும் நீங்கள் சொல்கிறபோதெல்லாம் உட்கார்ந்து எழுவதைப் பார்த்தால் ஒரு நல்ல எக்சர்சைஸ் பண்ணுகிற அளவிற்குக் கூட நான் ஒத்துழைத்துக்கொண்டு போகிறேன். ஆனால் நான் சொல்கிற ஒரு செய்தியைக் கூட நீங்கள் சொல்லவிட மறுக்கிறீர்கள். இங்கே வேண்டுமென்றே நான் எழாமல் சில நேரங்களிலே இருந்தேன். எனது அன்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், காங்கிரஸ்காரர்களைப் போல தொழிலாளியினுடைய கால் தூசு படிக்கட்டுகளிலே பட்டுவிடும் என்று நீங்கள் இருக்காதவர்கள் என்று சொன்னார். எனக்கு அப்போதே எழவேண்டும் என்று தோன்றிற்று. காந்தி மகான் தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். திரு.வி.க. தொழிற்சங்கத்தை ஆரம்பித்தார். வெள்ளைக்காரர்கள்தான் காந்தியைப் பற்றி அப்படி சொன்னார்களே தவிர காங்கிரஸ்காரர்கள் தொழிலாளர்களைப் பற்றி சொல்லவில்லை என்று சொல்லவேண்டுமென்று தோன்றிற்று. திடீர், திடீரென்று எழுகிறாயே என்று நீங்கள் சொல்வீர்களே என்பதற்காக நான் அமைதியாக இருந்தேன். இப்போது மீண்டும் சொல்கிறேன். எங்களுக்கு அந்த உரிமை நீங்கள் முதல் தடவை மறுத்ததற்குப் பிறகு நான் காரணம் கேட்டு நீங்கள் தருகிறேன் என்றுசொன்னதற்குப் பிறகு ஒரு மறுப்பு வந்திருக்கிறதே, அது ஏன் என்பதுதான். பிறகு அந்த மறுப்பிலாவது நீங்கள் விளக்கத்தைத் தந்திருக்கவேண்டாமா என்பதுதான். அதனாலேதான் அந்த உரிமையோடு நான் இதனைக் கேட்கிறேன். ஏனென்று சொன்னால் இங்கே புலிகள் மட்டுமல்ல புலிகளுக்கு ஆதரவாக இயங்கிக் கொண்டிருக்கிறவர்கள் கூட தேர்தல் வந்தால், முதலமைச்சர் கருணாநிதி என்னிடம்தானே வந்தாகவேண்டும் என்னை நெருங்கமுடியுமா பார்ப்போம் என்று ஒரு சவால் விட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் தேச பக்தர்களாகிய நாங்கள் இந்தத் தேசத்தைப் பற்றி அக்கறைப்படாமல் இருக்கவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் நாங்கள் அதனை எப்படி ஒப்புக் கொள்வது? எப்படி உடன்படுவது என்பதைத்தான் தயவுசெய்து கேட்கிறேன். எனவே, பணிவோடு கேட்பது, விதிமுறையின்படி கூட எங்களுக்கு நீங்கள் தரவேண்டும். இப்போது அவர்கள் சொல்கிறார்கள். ஜனநாயக முறைப்படி எங்களுக்கு நீங்கள் தர்ணா நடத்துவதற்கு, போராட்டம் நடத்துவதற்கு உரிமை தரவில்லை என்று சொல்லி வெளிநடப்புச் செய்கிறார்கள் என்று சொன்னால், அதோடு இந்த அவையிலேயும் கூட எங்களுக்கு நீங்கள் உரிமை தரவில்லை என்பதைச் சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

[1990 ஏப்ரல் 18

## 4. கவன ஈர்ப்பு.

(அ) லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதால் ஏற்படும் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. முதலில், திருவாளர்கள் கே. அர்சுனன், எஸ்.டி. உகம் சந்த், குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அந்த உறுப்பினர்கள் யாரும் இல்லாததால், அமைச்சர் அவர்கள் அறிக்கையை அவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

அறிக்கை

டீசல் பெட்ரோல் மற்றும் டயர் போன்றவைகளின் விலையை நிர்ணயம் செய்வது மைய அரசு சம்பந்தப்பட்ட தாகும். சமீபத்தில் மைய அரசின் வரவு செலவு திட்ட அறிக்கையில், மேற்காணும் பொருட்களுக்கு மைய அரசு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது; எல்.பி.ஜி. கேஸ் பாரத்தை ஏற்றிச் சென்று விநியோகிக்கும் லாரிகளுக்கு கூடுதல் வாடகைக்கான கோரிக்கை. பரிசீலிக்க வேண்டியது மைய அரசின் கீழ் இயங்கும் எண்ணெய்க்கழகங்களைச் சார்ந்ததாகும். இது சம்பந்தமாக மைய அரசும் மற்றும் அதன் எண்ணெய் கழகங்களும் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (Oil Corporations)

10-55 மணி

(ஆ) குத்தாலம், நரிமணம் பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கனரக வண்டிகளை எண்ணெய், இயற்கை எரிவாயு நிறுவனம் அனுப்புவதால் சாலைகள் பழுதுபடுவது குறித்தும் அந்நிறுவனம் நெடுஞ்சாலைத் துறைக்குத் தொகை கொடுக்காதது குறித்தும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கீழ்த் தஞ்சை மாவட்டம் குத்தாலம் நரிமணம் பகுதிகளில் இருந்து எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் சென்னைக்கு கனரக வண்டிகளை அனுப்புவதால் சாலைகள் பழுதுபட்டு வருவதால் அந்நிறுவனத்திடமிருந்து



1990 ஏப்ரல் 18]

நெடுஞ்சாலைத் துறையினர் கேட்ட தொகை பெறப்படாமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்,

அறிக்கை

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் எண்ணெய் எரிவாயு நிறுவனம் அமைந்துள்ளது.

(1) நாகூர்-வெட்டாறு சாலையில் (நரிமணம் கிராமத்தில்)

(2) கலப்பை கிராமம் திருத்துறைப்பூண்டி பரவத் கோட்டை சாலையில்.

(3) கமலாபுரம் கிராமம் மன்னார்குடி துறையூர் சாலையில்.

(4) வேதாரண்யத்தில், மேற்கண்ட இடங்களில் எண்ணெய் எடுக்கப்பட்டு சென்னைக்கு கனரக வாகனங்களும் எண்ணற்ற டாங்கர்களும் செல்வதால் கீழ்க்கண்ட சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவைகள் சீர்செய்து மேம்பாடு செய்வதற்கு தேவையான தொகையும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| | | மதிப்பீட்டு தொகை. | |
|---|---|---|---|
| | | கி.மீ. | (ரூ.லட்சத்தில்). |
| 1. | திருத்துறைபூண்டி–பரவக்கோட்டை சாலை கி.மீ.2/4–13/4 | 11.00 | 220.00 |
| 2. | மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி சாலை கி.மீ. 28/0–29/0 | 1.00 | 20.00 |
| 3. | மயிலாடுதுறை–முத்துப்பேட்டை சாலை கி.மீ.0/4–68/0 | 67.60 | 1,400.00 |
| 4. | கும்பகோணம்–சீர்காழி சாலை கி.மீ. 30/6–68/4 | 3[illegible].80 | 700.00 |
| 5. | நாகூர்–வெட்டாறு சாலை கி.மீ. 0/0–22/6 | 22.60 | 450.00 |
| 6. | நாகூர்–நன்னிலம் நாச்சியார் கோவில் சாலை கி.மீ. 0/0–24/0 | 24.00 | 480.00 |

| கி.மீ | | மதிப்பீட்டுத் தொகை. (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 7. நாகூர்–காரைக்கால் சாலை கி.மீ. 7/2–8/2 | 1.00 | 20.00 |
| 8. தரங்கம்பாடி–காரைக்கால் சாலை கி.மீ. 0/0–3/4 | 3.40 | 70.00 |
| 9. துரங்கம்பாடி–மயிலாடுதுறை சாலை கி.மீ. 0/0–29/6 | 29.60 | 600,00 |
| 10. ஆக்கூர்–சீர்காழி சாலை கி.மீ. 11/0–28/0 | 17.00 | 340.00 |
| 11. மன்னார்குடி–திருவாரூர் சாலை கி.மீ. 1/6–26/2 | 24.60 | 500.00 |
| 12. நாகப்பட்டினம்–கூடலூர் மைசூர் சாலை கி.மீ. 0/0–60/0 | 60.00 | 1,200.00 |
| | 295.60 (அல்லது) 300 கி.மீ. | 6,000.00 (அல்லது) 60 கோடி |

மேற்கண்ட சாலைகளை சீர் செய்து மேம்பாடு செய்வதற்கு ரூ.60.00 கோடி செலவை நில எரிவாயு நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. இது பற்றி அந்நிறுவனத்திடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சாலைகள் விடப்பட்டு இருக்கின்றன. அதற்கு காரணம் அடிக்கடி எரிவாயுவைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கிணறுகள் கண்டுபிடித்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தால் சில பகுதிகள் விடப்பட்டு இருக்கின்றன. விடுப்பட்ட சாலைகளில் கூட திருவாரூர் குடந்தை சாலை கூட அந்தப் பகுதியில் விடப்பட்டு இருக்கிறது. அந்த சாலையையும் இதிலே சேர்த்து இந்த 60 கோடி ரூபாயைக் கேட்டு இருப்பதை உடனடியாக பெற்று அந்த சாலையை சீர் செய்யாவிட்டால் வரும் மழைக்காலத்தில் எந்த வண்டியும் அந்த சாலையில் செல்ல முடியாத அளவுக்கு சாலைகள் சீர்கெட்டுள்ளன. எனவே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை கொண்டு அந்தப் பணத்தை உடனடியாக ஓ.என்.ஜி.சி. மூலம் பெற்று இந்த சாலைகளை சீர் செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 12 சாலைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வண்ணம் பாழடைந்து இருக்கிறது. அவைகளை சீர் செய்வதற்கு 60 கோடி ரூபாயை நாம் அந்த நிறுவனத்திடமிருந்து கேட்டு இருக்கிறோம். அதேநேரத்தில் தென் ஆற்காடு மாவட்டத்திலும் 13 சாலைகள் பாழடைந்து இருக்கிறது. அதற்கும் 18 கோடி ரூபாய் நாம் கேட்டு இருக்கிறோம். ஆக மொத்தம் 78 கோடி ரூபாயை நாம் அந்த நில எரிவாயு நிறுவனத்திடமிருந்து கேட்டு இருக்கிறோம். சாலைகளை செப்பனிடுவதற்காக. அது குறித்து 7–3–1990-ல் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். இன்னும் அவர்களிடமிருந்து பதில் வரவில்லை.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்ற பதிலில் கூட நான் சொன்ன திருவாரூர்–குடவாசல்–கும்பகோணம் சாலை இல்லை. அந்த சாலையில் இப்போது தான் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எனவே அந்த சாலையையும் இதிலே சேர்த்து பல மாதமாக ஆகியும் எந்த விதமான பதிலும் அந்தத் துறையிலிருந்து வரவில்லை என்ற காரணத்தால் வேகமாக விரைந்து நாம் பணம் பெறுகின்ற வழியில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு விரைவில் பணத்தைப் பெற்று அந்த சாலைகளை சீர் செய்ய முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்வருவோம்.

## 5. அறிக்கை அளித்தல்

## பொதுக் கணக்குக் குழு

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒன்பதாவது சட்டமன்றப் பேரவையின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள் 1990–91— விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 24 தொழில்கள்—(தொடர்ச்சி)

(ஆ) கோரிக்கை எண் 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—(தொடர்ச்சி)

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்டு இருக்கின்ற இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1990 ஏப்ரல் 18

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார் பாரதியார் அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டும்; தமிழகத்தில் இருக்கின்ற இளைஞர்கள் படித்தவர்கள் வேலைவாய்ப்புப் பெறவேண்டும்; இந்தியாவிலே இருக்கின்ற மற்ற மாநிலங்களோடு, இந்த மாநிலம் தொழில் துறையிலே சரிசமமாக வளரவேண்டுமென்ற பெரு நோக்கோடு, பல்வேறு முயற்சிகளை எடுத்து, பலதரப்பட்ட தொழில்துறைகளை நமது தமிழக அரசுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும். இருந்தாலும் நான் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் கூறி, இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்பு ஆட்சி பொறுப்பிலே இருந்த காலத்திலேதான், சேலம் உருக்காலை திட்டம் பெற்று தரப்பட்டது என்பதை நாடு அறியும். அதே போன்று நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம், மேட்டூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள், கல்பாக்கம் அனல் மின் நிலையம் ஆகியவற்றை பெறுவதற்காக மத்திய அரசை வற்புறுத்திய தன்மை, ''ஸ்பிக்'' உரத் தொழிற்சாலை 1969-லிருந்து 1976 வரையில், பொதுத் துறை, கூட்டுறவுத்துறை மூலமாக 20-க்கு மேற்பட்ட தொழிற் சாலைகள், அதே போன்று, இந்தியாவிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருந்த நேரத்திலேதான் இந்த கூட்டுத்துறை பொதுத்துறை தத்துவத்தை முதன்முறையாக தமிழகத்திலே அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். அதேபோன்று 1971-லேதான் ''சிப்காட்''டும் நம்முடைய தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்டு, தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இடையிலே, அன்றைய தினம் மத்தியிலே இருந்த காங்கிரஸ் அரசு—நம்முடைய மாநிலம் தொழில் வளம் பெருகுவதிலே அவர்கள், இந்த மாநிலத்தை உதாசீனப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே இந்த அவைக்கு நினைவுபடுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு, தொழில் முதலீடு, மற்ற மாநிலங்களுக்கு செய்திருப்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, நம்முடைய தமிழ் மாநிலம் மிகவும் பின்தங்கியிருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஏன், ஒரு பத்து ஆண்டு காலத்தை நாம் எடுத்துப் பார்ப்போமேயானால், ஆந்திராவுக்கு



1990 ஏப்ரல் 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை இன்றையதினம் 99 மடங்கு அளவுக்கு, மத்திய அரசு—ஏற்கனவே இருந்த அரசு, தொழில் முதலீடு செய்திருக்கிறது. அதே போன்று மராட்டியத் திலே 90 மடங்கு அளவிற்கு செய்திருக்கிறது. குஜராத்திலே 33 மடங்கு அளவிற்கு தொழில் முதலீடாக முதலீடு செய்திருக் கிறது. பஞ்சாபிலே 19 மடங்காக அது வளர்ந்திருக்கிறது. இதே போன்று ராஜஸ்தானிலே 23 மடங்காக வளர்ந்திருக்கிறது. உ.பி.யிலே 25 மடங்காக வளர்ந்திருக்கிறது. இன்னும் பல்வேறு வட மாநிலங்களுக்கு உதவி செய்த மத்திய அரசு, தமிழகத்தை, ஏற்கனவே இருந்த அந்த 10 மடங்காகவே விட்டு விட்டது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், இடையிலே இருந்த நம்முடைய மாநில அரசு, உறவுக்கு கைகொடுப்போம்; உரிமைக்கு குரல் கொடுப்போம் என்று பல நேரங்களிலே அந்த மத்திய அரசோடு உறவாக இருந்தாலும்கூட தொழில்துறையிலே அது எந்தக் கோரிக்கையையும் சரியான முறையிலே நிறைவேற்றாத காரணத்தினால், நம்முடைய மாநிலம் பின்தங்கி விட்டது தொழிற்துறையிலே என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த அவையிலேகூட எத்தனையோ நாட்கள் விவாதிக்கப்பட்டன. இந்த மாநிலத்திற்கு வரவேண்டிய பெரிய தொழில்கள், அன்றைய தினம் இருந்த முதலமைச்சரானாலும் சரி, தொழில்துறை அமைச்சரானாலும் சரி, அதில் சரியான அக்கறை எடுக்காத காரணத்தினால், பல தொழில்கள் நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய தொழில்கள், வேறு மாநிலங்களுக்கு சென்றுவிட்டன என்பதை நான் மெத்த வருத்தத்தோடு இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் இந்த நேரத்திலே ஒரு விஷயத்தை இந்த அவையிலே நினைவுபடுத்த விரும்புகிறேன். போளூர் பகுதியில், கூட்டுறவு சர்க்கரை ஆலை வேண்டுமென்று, கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நானும், போளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த, இன்றைய வந்தவாசி பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு பலராமன் அவர்களும், இன்றைய தினம் போளூர் சட்டமன்ற உறுப்பினரான திரு. இராசேந்திரன் அவர்களும் மற்ற கட்சி களெல்லாம் சேர்ந்து, முறைப்படி கடிதம் எழுதினோம். அன்றையதினம் முதலமைச்சராக இருந்த அவர்களையும், அன்றையதினம் தொழிற்துறை அமைச்சராகவும், இன்றைய எதிர்கட்சித் துணைத்தலைவராகவும் இருந்துவரும் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களையும் சந்திப்பதற்காக சென்னைக்கு வந்தோம். ஆனால், முதலமைச்சரை எங்களால் சந்திக்க இயலவில்லை. பிறகு, தொழிற்துறை அமைச்சரையாவது சந்தித்து, அந்தப் பகுதிக்கு ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்பதற்காக எங்கள் சர்வகட்சிக்குழு, கோட்டைக்கு வந்தால், அமைச்சர் கோட்டையிலே இல்லை. வீட்டுக்கு தொலைபேசி

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1990 ஏப்ரல் 1

மூலம் தொடர்பு கொண்டு அவர் வீட்டிலே இருப்பதாக அறிந்
அங்கே சென்றோம். அவரது உதவியாளர் நாங்கள் வந்திருப்பதை
அமைச்சருக்குத் தெரிவித்தார். சரி, இருங்கள் என்றார்கள்.
பல மணி நேரம் காத்திருந்தோம். பிறகு மாலையிலே பாருங்கள்

11-05 மணி

என்றார்கள். பிறகு மாலை சென்றோம். பிறகு மாலையும்
பல மணி நேரம் காத்திருந்தோம். எங்களால் தொழில்துறை
அமைச்சரவர்களைப் பார்க்க முடியவில்லை. 2 சட்டமன்ற
உறுப்பினர்கள், சர்வ கட்சி உறுப்பினர்கள்கூட அன்றையதினம்
தொழில்துறை அமைச்சரவர்களை சந்தித்து நிலைமையை
விளக்க முடியாத அளவுக்கு அரசாங்கம் ஓரளவுக்கு மெத்தனமாக
இருந்த காரணத்தாலே பல தொழில்கள் நம்முடைய
மாநிலத்தை விட்டுச் சென்றன. பிறகு அவருடைய உதவியாள
ரிடம் விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டுச் சென்ற துர்பாக்கிய
மான நிலைமை நிலவியது என்பதை உங்கள் மூலமாக அவைக்கும்
நாட்டுக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய
தினம் நம்முடைய முதலமைச்சரவர்கள், தொழில் துறையை
ஏற்றிருக்கிற இந்தக் காலகட்டத்தில் பல முயற்சிகள் எடுத்து,
தொழிலதிபர்களை அழைத்துப் பேசி, தொழில் துவங்குபவர்
களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்து, அதற்காக அமைக்கப்
பட்டிருந்த குழுவைச் சீர்படுத்தி பல்வேறு முயற்சிகளை எடுத்துக்
கொண்டதால், தமிழகத்தில் ஓராண்டுக் காலத்தில் தொழில்
துறை சீராக செயல்படுகிறது, சீரான முறையில் பல தொழில்கள்
வருவதற்கு வாய்ப்புகள் எற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஏற்கனவே இருந்த அரசால் பெறப்பட்ட பல
தொழில்கள்கூட, அந்த அரசு மெத்தனமாக இருந்தகாரணத்தால்,
காலத்தில் வர வேண்டிய அந்தத் தொழில்கள் வராமல்,
இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட
பிறகு மிக அக்கறையாக, மிக வேகமாக செயல்படுத்தி
இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இன்றைக்கு பல்வேறு சலுகைகள் தொழிலதிபர்களுக்கு வழங்கப்
பட்டிருக்கின்றன. தொழிலதிபர்கள் அவற்றைப் பயன்படுத்திக்
கொள்கிற நிலையிலே கடன் வழங்குகிற ஸ்தாபனங்களிலே அதிக
மான விண்ணப்பங்கள் கடன் கேட்டும் அனுமதி கோரியும் வந்து
கொண்டிருக்கின்ற நிலையில் தொழில் துறையிலே முதல்வர
வர்கள் அக்கறை எடுத்துக் கொண்டு எந்த அளவுக்குச் செயல்
படுகிறார்கள் என்பதைப் பார்த்து நாட்டு மக்கள் அனைவரும்
பாராட்டுகிறார்கள். இந்த அவையும் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1990 ஏப்ரல் 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

நேற்றையதினம்கூட இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள், தொழிற் துறையிலே இளைஞர்களுக்கு வழி
கொடுங்கள் என்று பேசினார்கள். இன்றையதினம் தமிழகத்தில்
தொழில் துறையில் பட்டம் பெற்றவர்கள், டிப்ளமோ பெற்ற
வர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு
அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, வேலையை எதிர்நோக்கி
யுள்ள துர்பாக்யமான நிலைமை இருக்கிறது. அந்த நிலையைப்
போக்க வேண்டுமென்பதில் அரசுக்கு இருக்கும் அக்கறை காரண
மாகத்தான் மத்தியில் அமைந்துள்ள தேசிய முன்னணி அரசாங்
கத்தை அணுகி பல்வேறு தொழில்கள் (மணி அடிக்கப்பெற்றது)
எதிர்காலத்தில் தமிழகத்தில் வர வாய்ப்புகளைச் செய்து
கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டத்திலே பல தொழில்கள் வர
வேண்டும். அதைச் சொல்லி முடிப்பதற்கு துணைத் தலைவர்
அவர்கள் அனுமதி அளிக்கவேண்டும். இன்றைக்கு திருவண்ணா
மலை-சம்புவராயர் மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்ட
மாவட்டம். வட ஆற்காடு மாவட்டத்தில் பல தொழில்கள் இருந்
தாலும் அவைகள் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திற்கு
பிரிவினையின்போது சென்றுவிட்டன என்பதை முதலமைச்சர
வர்கள் அறிவார்கள். எனவே திருவண்ணாமலை—சம்புவராயர்
மாவட்டத்திற்கு ஒரு தொழில் வளர்ச்சி மையம் அமைக்க
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

11-10 மணி

திருவண்ணாமலையில் கவுந்தி மலையில் இரும்பு 38 விழுக்காடு
இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்
திருக்கிறார்கள். எதிர்காலத்திலே அதை எடுப்பதற்குண்டான
பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலை என்று இருக்கிறது.
அதைப்போல எங்களுடைய மாவட்டத்திற்கும் ஒரு நூற்பாலை
அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து ஜல்லி உடைக்கும் தொழிற்சாலைக்கு அரசு மானியம்
வழங்கி வந்தது. சமீபத்திலே அது நிறுத்தப்பட்டு இருக்கிறது.
அதற்கு மானியம் வழங்கப்படவேண்டும்.

வட ஆற்காடு மாவட்டம்—சம்புவராயர் மாவட்ட
சட்டமன்ற உறுப்பினர்களும். திரு. லத்தீப் அவர்களும்
எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களும் முதல்வர்
அவர்களை அணுகி, கேட்டதற்கிணங்க மாண்புமிகு முதல்வர்
அவர்கள் கோரிக்கையை ஏற்று ஒரு சர்க்கரை ஆலையை எங்கள்

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1990 ஏப்ரல் 18

பகுதிக்குத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியிலே அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகள் குறித்து ஒரு பிரச்சினை. அரியானாவில் இருப்பது போன்ற விலையை அவர்கள் கரும்பிற்குக் கேட்கிறார்கள். இங்கே இருக்கிற ஆலைகள் அதிக மான அளவிற்கு விவசாயிகளுக்குத் தரலாம். அப்படித் தராத காரணத்தால் அதிக வரியை மத்திய அரசுக்கு கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசும் முதல்வர் அவர்களும் ஆய்வு செய்து அரியானாவிலே துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் தந்தது போல தமிழக விவசாயிகளுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் பேசும்போது கேட்டுக்கொண்டிருந்தேன். முதல்வரவர்களையும், திரு. திருநாவுக்கரசு அவர்களையும் நான் பார்க்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களை இப்பொழுது தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர், திரு. திருவேங்கடம் பல தடவை பார்த்திருக்கிறார்கள். பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார். அவைகளையும் செய்து கொடுத்திருப்பதாக என்னிடத்திலே சொன்னார். எனவே, என்றைக்கு அவரைப் பார்க்க வந்து, பார்க்க முடியவில்லை என்பதைச் சொன்னால் விவரமாகப் பதில் சொல்வதற்கு வசதி யாக இருக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உண்மைக்கு மாறான கருத்தை நான் என்றுமே கூறுவது இல்லை. அது மறைந்த முதல்வரவர் களுக்கும் தெரியும்; இன்றிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நான் பலமுறை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களை வேறு காரியங்களுக்காக இந்த அவையிலே சந்தித்துப் பேசியிருக்கலாம். ஆனால் சர்வ கட்சி சார்ந்த ஒரு குழுவாக வந்தது உண்மை; அவரைச் சந்திக்க முடியாததும் உண்மை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு 'உங்கள் மூலமாக' நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

11—15 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். பொதுவாக இன்றைக்குத் தமிழகம் தொழில் துறையிலே தாழ்ந்து இருக்கிறது.



1990 ஏப்ரல் 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

ஏற்கனவே இருந்த நிலையிலே இருந்து தமிழகம் 13-ம் இடத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறது என்ற குற்றச் சாட்டுகள் எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் சொல்லப்பட்டன. இதற்கு யார் காரணம் என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். கடந்த முறை இதே டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடந்துகொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் நடந்துகொண்டிருந்தபோது தொழில் துறையிலே தமிழகம் 3-வது இடத்தைப் பெற்று இருந்ததும் உண்மை. ஆனால் இப்போது மீண்டும் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று தொழில் வளர்ச்சி யிலே ஒரு முற்றான கவனத்தைச் செலுத்தி, தொழிற்துறைக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை உருவாகி இருக்கும்போது, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் கேட்டிருப்பதைப் போல, தமிழகம் முழுவதும் தொழில் தாழ்ந்த நிலைக்கு வந்திருக்கிறது. மூன்றாவது இடத்திலிருந்து 13—வது இடத்திற்கு வந்து, கீழே இறக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதங்கத்தோடு வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில், அதற்கு என்ன காரணம் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த 13 ஆண்டுக்காலமாக நடந்துகொண்டிருந்த ஆட்சி, தொழில் துறையைப்பற்றி அக்கறை கொள்ளாமல் அடுத்த தேர்தலை மனதில் வைத்து, அதில் எப்படி வெற்றி பெறுவது என்பதில்தான் அதிகமான கவனத்தைச் செலுத்தி, அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்காத போக்கு அவர் களிடம் இருந்த காரணத்தால் எப்படி ஜனரஞ்சகமான சில அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் வாயிலாக நாட்டு நடப்புகளைப் பற்றியும், பொருளாதார நுணுக்கங்களைப் பற்றியும் அறியாத மக்கள் அன்று கிடைக்கிற சிறு லாபத்தைக் கருத்தில் கொண்டு, வாக்குகளை தங்களுக்கு அளிக்கவேண்டு மென்ற நோக்கத்தோடுதான், அந்தத் தொழில் முன்னேற்றத்தை யெல்லாம் அதனுடைய முக்கியத்துவத்தையெல்லாம் உணர்ந்து, அவர்கள் செய்யாமல், வேறுவகைகளில் பொதுப் பணம் செலவழிக்கப்பட்டது என்று சொல்வதை அவர்கள் உண்மையா இல்லையா என்பதை இங்கே தெளிவாக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று ஒரு காலத்தில் முழங்கப்பட்ட அந்த முழக்கம், எடுத்துக் சொல்லப்பட்ட உண்மை ஏதோ அரசியல் காரணத்திற்காக சொல்லப்பட்டதா என்றால் அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், இன்றைக்கு குடியரசுத் தலைவராக இருக்கின்ற மேதகு வெங்கட்ராமன் அவர்கள் இங்கே தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழகம் தொழில் துறையில் தலைநிமிர்ந்து நின்றது என்று

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 18

சொன்னார்கள். சுதந்திரம் கிடைத்த அந்த ஆரம்பக் காலத்திலே
அப்படி ஒரு நிலை இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு திட்டமிட்டு
வடக்கில் இருந்தவர்கள் தமிழகத்தினுடைய தெற்கு மாநிலங்
களுடைய வளர்ச்சியில் அக்கறை கொள்ளாமலும், நம்முடைய
மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்திலே அவர்கள் அக்கறை
கொள்ளாதது மட்டுமல்ல, தொடர்ந்து அனுமதி மறுத்ததும்
வடக்கே தொழில்கள் உருவாகிக் கொண்டிருந்த அதே நேரத்தில்
தெற்கே தேக்கம் ஏற்பட்டது. வளர்ச்சி தடைப்பட்டது
என்பதையும் நாம் நிச்சயமாக ஒப்புக்கொண்டாக வேண்டும்.

பொதுவாக இன்றைக்கு உற்பத்தியைப் பெருக்குவதோடு,
வேலைவாய்ப்புகளையும் உயர்த்தும் நோக்கத்தை அடிப்படையாகக்
கொண்டு இருக்கவேண்டும். நம்முடைய தொழில் வளர்ச்சிக்
கொள்கைகளால், இன்றைக்கு நாம் பார்க்கும்போது, சில
திட்டங்களை மக்கள் வரவேற்கிறார்கள், அந்தத் திட்டங்களை
மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்கின்ற ஒரே காரணத்திற்காக
நம்முடைய மூலதனங்களை எல்லாம் நாம் அந்த திட்டங்களுக்காக
செலவிடுவோமானால், அது இன்றைக்கு ஒரு வேளை சாப்பிட்டு
பசியாறுவதற்கு வசதியாக இருக்குமே தவிர, வருங்காலத்தில்
வேலைவாய்ப்பை அதிகமாக்குவதற்கான நிரந்தரமான முதலீடாக
இருக்குமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.
இன்றைக்கு பல திட்டங்களுக்கு ஆக 200 கோடி ரூபாய்,
150 கோடி ரூபாய், 100 கோடி ரூபாய் என்று செலவழிக்
கிறோம். அது எல்லாம் க்ஷேமநல திட்டங்கள் என்று வருகின்றன.
ஆனால் இவைகளால் தொடக்கத்திலே மக்களுக்கு சிரமங்கள்
ஏற்பட்டாலும், இந்தப் பணத்தையெல்லாம் மாவட்ட வாரியாகப்
பகிர்ந்தளித்து ஒரு மாவட்டத்திலே குறிப்பிட்ட குறியீட்டை
நிர்ணயித்து, இன்னென்ன மாவட்டத்தில் வருடத்திற்கு இத்தனை
தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லி திட்ட
மிட்டு நாம் செயல்படுவோமேயானால், உற்பத்தி பெருகுவது
மட்டுமல்ல, வேலைவாய்ப்புகளையும் அதிகமான அளவில்
உருவாக்கவும் முடியும். வேலை வாய்ப்பு அதிகமானால்தான்
இன்றைக்கு இருக்கிற நாட்டின் பிரச்சினைகள் தீருமே தவிர,
ஏதோ அன்றாடம் இருக்கின்ற சில குறைபாடுகளை தீர்க்க
குறுகிய கால திட்டங்களை மட்டும் நாம் கவனித்து,
அதிலே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால், வேலை
வாய்ப்பை அதிகமாக ஆக்காமல், உற்பத்தியைப் பெருக்காமல்
இருப்போமானால் இன்றைக்கு இருக்கிற பொருளாதார சிக்கல்கள்
மேலும் தீவிரமடைந்து, வேலை செய்பவர்களுக்கும்
வேலை செய்யாமல் இருப்பவர்களுக்கும் உள்ள எண்ணிக்கைக்கும்
இடையில் இருக்கிற இடைவெளி மிக அதிகமாகப்
பெருகி பாதகமான நிலை ஏற்பட்டு, பொருளாதார சிக்கல்கள்
ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மெத்தப்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஏப்ரல் 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

இன்றைக்கு தொழில்கள் ஒருசில இடங்களில்தான் இடம்
பெறுகின்றன. அதற்கான வாய்ப்புகள் சில இடங்களில் தொழில்
ஏற்படுத்துவதற்கான தொழிற்சாலைகள் அமைவதற்கான
சௌகரியங்கள், தொழிலுக்கு அடிப்படையான தேவையான
மூலப் பொருட்கள், அதுமட்டுமல்லாமல் வேலை செய்யக்கூடிய
வேலையாட்கள் கிடைக்கிறார்கள் என்பதற்காக, ஒருசில
இடங்களில் மட்டும் concentration of Industries ஏதோ Industrial
Estates என்று சொல்லக்கூடிய அளவுக்கு Concentration நடந்து
கொண்டிருந்தால், அது அந்தப் பகுதியில் மட்டும் ஏற்றம்
ஏற்பட்டு மற்றப் பகுதிகளில் எல்லாம் பலவீனமான சூழ்நிலையை
உருவாக்கும் என்பதைத் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.
ஓசூர் பகுதியில் ஒரு சூழ்நிலை இருக்கலாம். ராணிப்பேட்டையில்
அதற்கான ஏற்புடைய சாதகங்கள் அதிகமாக இருக்கலாம்,
ஆனால் நம்முடைய நோக்கம் தொழில்களை பரவலாக்க
வேண்டும். Decentralisation of Industries என்று வரும்போது
கோடிக்கணக்கான ரூபாய், 100 கோடி, 60 கோடி, 70 கோடி
ரூபாய் என்று போட்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தவேண்டு
மென்று சொன்னால் அது ஓசூரில்தான் ஏற்படுத்தவேண்டும் ராணிப்
பேட்டையில் ஏற்படுத்தவேண்டும், கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்த
வேண்டும் என்று இப்படி சில இடங்களில் தொடர்ந்து தொழிற்
சாலைகளை ஏற்படுத்தவேண்டும் என்றால், மற்ற மாவட்டங்
களில் அந்த வாய்ப்புகள் கிடைக்காமல் போவதால், தொழில்
பரவலாக்கப்படவேண்டும், Decentralisation of Industries என்று
சொல்லக்கூடிய வகையில் அந்த ஏற்புடைய கொள்கைகள் மாறு
பாடாகத்தான் உருவாகும் என்பதை நான் மிகுந்த—வருங்
காலத்தைப் பற்றி கவலை கொண்டவனாக தங்களுக்குத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பெரும் வாய்ப்புகள் சில
பெரும் தொழில் முனைவோருக்கு அளிப்பதாகச் சொல்லப்
படுகிறது. அவர்களுக்கு எல்லாம் கடன்கள், மானியங்கள்,
வழங்குவதற்கான, ஏ பிரிவு வட்டங்கள் பி பிரிவு வட்டங்கள்
என்றெல்லாம் வட்டங்களை பிரித்து ஒரு சிலருக்கு அண்மைக்
காலம் வரையிலே "பி" பிரிவு வட்டங்களிலே உருவாக்கப்
படுகிற தொழிற்சாலைகளுக்கு 15 இலட்சம் ரூபாய் வரையிலே
மானியமும் சி பிரிவு வட்டங்களிலே உருவாக்கப்படுகிற
தொழிற்சாலைகளுக்கு 10 இலட்சம் ரூபாய் வரையிலே
மானியமும் என்று அதற்கென்று ஒரு சீலிங் வைத்திருக்கிறார்
கள். இதுவரையிலே அந்த மானியமும் வழங்கப்பட்டு வந்தது.
ஆனால் திடீரென்று அது இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது
ஏன் என்பதைப்பற்றி இங்கே குறிப்பிட்டு எதுவும் சொல்ல
வில்லை. மத்திய அரசாங்கம் அதற்கான மானியம் கொடுத்து
வந்தது. அதற்கான வசதிகளைக் கொடுத்து வந்தது. ஆனால்
இன்றைக்கு இல்லையென்று சொல்கிறார்கள். தயவுசெய்து
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 18

மீண்டும் இந்த முறையைக் கொண்டுவரவேண்டும். அதுமட்டுமல்லாமல், தொழில் துறையிலே எந்தெந்த வட்டங்கள் பின் தங்கி இருக்கின்றனவோ அந்த மாவட்டங்களிலே, அந்த வட்டங்களில் ஒரு சில சிரமங்கள் ஏற்பட்டாலும் பேக்டர்ஸ் ஆப் புரடக்ஷன் என்று சொல்லக் கூடிய அந்தத் தொழிலுக்கான அடிப்படை சாதனங்கள் அங்கே இல்லாவிட்டாலும், அரசு முனைப்போடு செயல்பட்டு அதிலே விசேஷ கவனம் செலுத்தி அந்த இடங்களிலே நாம் தொழில்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை செய்யவேண்டுமென்று நான் தங்கள் மூலமாக அரசை வேண்டிக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் கணிசமான அளவுக்கு இன்றைக்கு தொழில்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. கடன்களும் வழங்கப்படுகின்றன. இன்றைக்கு இருக்கிற திட்டத்தின் அடிப்படையில், எனக்குத் தெரியும், பல தொழிற்சாலைகளுக்கு டி.ஐ.ஐ.சி. அல்லது சிப்காட் மூலமாக நாம் கடன்களை வழங்குகிறோம். 60 இலட்சம், 1 கோடி என்றெல்லாம்கூட கொடுத்திருக்கிறோம். கடனாக கொடுத்திருக்கிறோம். சில இடங்களிலே மானியமாகவும் கொடுத்திருக்கிறோம். அப்படி கொடுத்த பிறகு அந்தத் தொழிற்சாலைகள் முனைப்போடு தன்னுடைய வேலையை தொடங்கி இருக்கின்றனவா, உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றனவா என்றால் இல்லை. எத்தனை காலத்திற்குள், ஒரு வரையறைக்குள் அவர்கள் உற்பத்தியைத் தொடங்கவேண்டுமென்ற நிர்ணயம் வேண்டும். ஒரு இடத்திற்கு 100 இலட்சம் ரூபாய் அதாவது ஒரு கோடி ரூபாயை கடனாக வழங்குகிறீர்கள். கடனாக வழங்கிய பிறகு 10 ஆண்டுக்காலமாகியும் 5 ஆண்டுக்காலமாகியும் உற்பத்தி தொடங்கப்படவில்லை என்ற நிலை நீடிக்குமேயானால், தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதிலே ஏதோ ஒரு ஊனம் இருக்கிறது. எங்கோ ஒரு ஓட்டை இருக்கிறது. ஒரு கோடி ரூபாயை வாங்கி வைத்துக்கொண்டிருப்பவர்கள் உற்பத்தியையே பெருக்காமல், தொழிற்சாலையைக்கூட கட்டாமல் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு ஒரு காலவரையறையை நிர்ணயிக்க வேண்டும். ஒரு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டால் ஓராண்டுக்குள்ளாகவோ அல்லது 1 1/2 ஆண்டுக்குள்ளாகவோ உற்பத்தி அங்கே தொடங்கப்படவேண்டும். உற்பத்தி தொடங்கப்படுவது மட்டுமல்லாமல் சரியான முறையிலே அது நிர்வாகம் செய்யப்பட்டு லாபம் ஈட்டுகின்ற தன்மையை அங்கே உருவாக்கவேண்டும் என்ற அளவிற்கு அவர்களைக் கட்டாயப்படுத்தவேண்டும் இல்லாவிட்டால் அந்தத் தொழிற்சாலைகளை அரசே உடனடியாக மேற்கொள்ளவேண்டும். அது மட்டுமல்லாமல், அப்படி கடன் கொடுக்கப்படுகின்ற தொழிற்சாலைகளிலே அவர்களையே விட்டுவிடாமல் அரசு, ஆட்சியாளர்களுடைய ஒரு பிரதிநிதியும் அங்கே இடம் பெறவேண்டும்.



1990 ஏப்ரல் 18] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அந்தக் கடன் திருப்பிக் கொடுக்கப்படுகின்ற வரையிலே அந்தத் தொழிற்சாலையை நிர்வாகம் செய்கின்ற, அந்த நிர்வாக அமைப்பிலே அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகளும் இடம் பெறவேண்டும். ஏனென்றால், அதிலே பெருத்த ஊழல்களெல்லாம் இருப்பதாக இன்றைக்குச் சொல்லப்படுகிறது. அந்தமாதிரியான தொழிற்சாலைகளுடைய மேனேஜ்மெண்டிலே அரசு பார்ட்டிசிபேட் பண்ணவேண்டுமென்ற முறையிலே இங்கே கொண்டுவரவேண்டும்.

அடுத்து, வட்டியில்லா விற்பனை வரிக் கடன் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்த வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வருஷத்திற்கு 30 இலட்சம், 60 இலட்சம் என்று அதற்கு ஒரு தொகையை ஒதுக்குகிறார்கள். ஆனால், என்ன நடக்கிறது நடைமுறையிலே என்றால், 60 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தொழில்முனைவோர்களுக்கு அல்லது தொழிற்சாலை நடத்துபவர்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று சொன்னால், 60 இலட்சம் ரூபாயை ஒரு ஆளுக்கே கொடுத்து விடுகிறார்கள். அல்லது இரண்டு ஆட்களுக்கு கொடுத்து விடுகிறார்கள். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே எப்படி, இந்த வட்டியில்லா கடன் கொடுக்கப்பட்டது என்கின்ற புள்ளிவிவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்தால், ஒரே ஆளுக்கு 60 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கெல்லாம் இல்லை. 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தால் 2 ஆட்களுக்கே அது கொடுக்கப்பட்டிருக்கும். இன்னும் அதிலே என்ன வேடிக்கை என்று சொன்னால் ஒருசிலரே அதை திருப்பி திருப்பி, அந்த வட்டியில்லா கடனைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏன், அவர்களுக்கே திருப்பி திருப்பிக் கொடுக்கிறார்கள்? ஏன் அவர்களுக்கே ஒட்டுமொத்தமான பணத்தையும் கொடுக்கிறார்கள் என்பதையும் ஆய்வு செய்து பார்க்கவேண்டும். அப்படியில்லாமல், நலிந்த, மெலிந்தவர்களுக்கு, உற்பத்தித் திறனை அதிகமாக்குவதற்கும் உற்பத்திக் காரணங்களைப் பெறுவதற்கும் பணம் தேவைப்படுகின்றவர்களுடைய தேவைகளைக் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு இந்த இண்ட்ரஸ்ட் ஃபிரி லோனை கொடுக்கவேண்டுமே தவிர ஒரே ஆளுக்கு 30 இலட்சம் ரூபாய்க்கு கொடுத்துவிட்டு மற்றவர்களெல்லாம் பட்டினி கிடக்கிற திட்டம் இதுவரையிலே, நடந்து வந்திருக்கிறது. எனவே அதிலே மாறுதல் தேவை என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

11.25 மணி

இப்போது சென்னை நகரத்திலே இருக்கிற மிகப்பெரிய பிரச்சனை சென்னை நகரத்திலே, ஆங்காங்கு குடிசைகள் உருவாகி இருக்கின்றன. குடிசைகள் எல்லாம் சென்னை

நகரத்தினுடைய முகத்தில் ஏற்பட்டிருக்கிற புண்களைப்போல், காயங்களைப் போல் காட்சியளிக்கின்றன. அந்தக் குடிசைகளையெல்லாம் நாம் அகற்றி, அவர்களுக்கு வேறு இடத்திலே வீடு கட்டிக் கொடுத்தாலும், எங்கே வேலை இருக்கிறதோ அங்கேதான் அவர்கள் திரும்பி வருகிறார்கள். குடிசை கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறார்கள்; ஆனால், அவர்கள் போவது இல்லை, ஆற்றங்கரையிலே, கூவம் ஆற்றங்கரையிலே ஆங்காங்கு வந்து குடிசைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது). எனவே, சென்னை நகரத்திலே உள்ள குடிசைகளின் திட்டத்தை மட்டும் தீர்ப்பதில், அரசாங்கம் பெரிஃபெரல் ஏரியா என்று சொல்லக்கூடிய சென்னை நகரத்தினுடைய வெளிப்புறத்திலே இருக்கிற இடங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அந்தத் தொழிற்சாலைகளில் எல்லாம் வேலை செய்வதற்கு குறிப்பாக சென்னையிலே வாழ்கிற குடிசைவாழ் மக்களுக்கு வாய்ப்புகளை வழங்கி, அவர்கள் அங்கேயே குடியிருக்கின்ற வகையிலே நம்முடைய கொள்கையை நாம் வகுப்போமேயானால், சென்னை நகரத்திலே குடிசைகளால் ஏற்படுகிற பிரச்சினைகளில் ஓரளவுக்கு நாம் வெற்றியடைவோம் என்று நான் அரசுக்கு தெரிவிப்பதோடு, 'பெரிஃபெரல் ஏரியாவிலே, சில திட்டங்கள் எல்லாம் வெளி மாவட்டங்களுக்கும் சென்று கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை; சென்னை நகரத்திலே ஏற்கனவே தொழிற்சாலைகள் இருக்கின்றன என்று நினைப்பதும் சரியல்ல; சென்னை நகரத்தினுடைய சுற்றுப்புற சூழல்களிலே, புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, சென்னை நகரத்திற்கு மேலும் மக்கள் வேலைதேடி, வராதபடி அதே நேரத்தில் அங்கே இருப்பவர்கள் திரும்பி சென்று வேலைவாய்ப்புகளை பெறக்கூடிய வகையில் தொழிற்சாலைகளினுடைய அமைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தோல் தொழில். இது நாட்டுக்கு மிக அதிகமான அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிற ஒரு தொழில். தோல் தொழில் நாட்டுக்கு பல்வேறு வகையிலே ஒரே ஒரு ................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே ஒரு பணித்துளி மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப்: கொஞ்சம் அதிகமாக 'டைம்' கொடுங்கள் சார், நாங்கள் எதிலேயும் கலந்து கொள்வதில்லை. பேசாமலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம், பொம்மை மாதிரி; எதிலேயும் அண்மைகாலமாக கலந்து கொள்வதில்லை. ஏனென்றால், நாங்கள் கலந்துகொள்வதால் இன்னும்



சிக்கலாகும் என்பதற்காக. எல்லா நேரங்களையும் யாரோ எடுத்துக் கொள்கிறார்கள். எங்களுடைய உரிமைகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன. இவ்வாறு செய்தால், நாங்களும் கலந்துகொள்ள ஆரம்பிப்போம். அப்படி ஆரம்பித்தால் ஒன்றும் நடக்காது. அதைமட்டும் நான் எச்சரிக்கையாக சொல்ல விரும்புகிறேன்.

ஆகையினால்தான். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது தோல் தொழிலை மட்டும் இன்றைக்கு பார்க்கிறார்கள். முஸ்லீம்கள், பீடித் தொழிலாளர்களாக பட்டினி பட்டாளிகளாக, ஏழைகளாக' பாழைகளாக, படிப்பற்றவர்களாக இருக்கிறார்கள். தோல் இல்லாமல் இருக்கும் ஒரு தொழில், அதுடற்றி தொழில். அதற்குக்கூட எந்தெந்த அளவுக்கு முடமாக்க வேண்டுமென்பதிலே, அக்கறை கொண்டவர்களாக இன்றைக்கு. அதிகாரவர்க்கம் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களை ஆதரிக்க வேண்டும், எல்லாருக்கும் ஒருமுனை வரி போட்டிருக்கிறார்; தோல் தொழில் மட்டும் என்ன பாவம் செய்தது? ரா-ஹைடுக்கும் வரி போடப்பட்டிருக்கிறது; 'கிரேஸ், என்ற இனத்திற்கும் வரி போடப்பட்டிருக்கிறது. ஆக உள்ளேயும் வரி, வெளியே வரும்போதும் வரி. வரி வரியாக அவர்களுக்கு மட்டும் போடுவது ஏன்? எனவே, அவர்களுக்கு ஏதாவது ஒரு பாயிண்ட்டிலே வரி போடவேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்நிய செலாவணியை ஈட்டுவது மட்டுமல்ல. சிறுபான்மை மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், அதிகமாக ஈடுபட்டிருப்ப தோடு, இன்றைக்கு ஒருசில நகரங்களிலும், ஆம்பூர், வாணியம்பாடி போன்ற நகரங்களிலும், பெரிய தொழிற்சாலை இல்லாத நகரங்களாக இருக்கின்றன-குடிசைத் தொழில் போன்றுதான் அந்தத் தொழில் நடந்து கொண்டிருக்கிறது. எனவே மற்றவர்களுக்கு கொடுத்த வரிச்சலுகைகளை அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்வதோடு, ஐவ்வாது மலை 70 மைல் வரை பரவி இருக்கின்ற நிலப்பரப்பு— அதிலே ஒரு தொழிற்சாலை வேண்டாமா? எல்லா வசதிகளும் கீழ் நாடுகளுக்குத்தான் கிடைக்க வேண்டுமா? எனவே, ஐவ்வாது மலையில் கிடைக்கிற மூலப் பொருட்களை— இன்றைக்குக்கூட சந்தன மரம் திருட்டு , திருட்டு என்று எந்த இடத்திலேயும் பேசக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அந்த ஐவ்வாது மலையிலே கிடைக்கக்கூடிய சாதனங்களையெல்லாம் வைத்து, அவற்றை அடிப்படையாகக் கொண்டு, சோப் தொழிற்சாலை, தைலம், சந்தனத் தைலம், சந்தனச் சோப்பு இப்படிப்பட்ட பொருட்களையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, அங்குள்ள

11-30 மணி

மலைவாசி மக்கள் வேலைசெய்யக்கூடிய அளவுக்கு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியது மிக மிக முக்கியம். நான் கேட்டேன்; ஒரு வருடத்திற்கு 7, 8 கோடி சும்மா வருகிற அரசாங்கத்திற்கு எங்களுக்கு ஒரு இரண்டு கோடி ரூபாய் கொடுங்கள். நாங்கள் கொடுக்கக்கூடிய பணத்திலிருந்து ஒரு 2 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கி அங்கே தொழிற் சாலை ஏற்படுத்துங்கள் என்று கேட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 74, 75-லே அங்கே தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கு அனுமதி வழங்கி அதற்குப்பிறகு மாண்புமிகு திரு. எட்மன்ட் அவர்கள் அந்தத் துறையினை ஏற்றுக் கொண்டிருந்த போது கூட அந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி அவர்களும் வழங்கினார்கள்- ஆனால் ஏனோ தெரியவில்லை, அதற்குப் பிறகு பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த அமைச்சர் அவர்கள், நான் பெயரைச் சொல்ல விரும்பவில்ல, அந்தத் திட்டத்தைச் சின்னா பின்னமாக்கி தெற்குப்பட்டியிலே ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்தினார்கள். அது இப்போது மூடப்படும் தருவாயில் இருக்கிறது; அதைக் காப்பாற்றுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மக்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.

தீப்பெட்டித் தொழில் நசியும் தொழில் என்ற அளவுக்கு இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஒரு விம்கோ. தொழிற்சாலைக்கு மட்டும் உற்சாகம் கொடுத்துக்கொண்டிருந் தால் போதாது. அங்கே 3000 பேர்தான் வேலை செய் கிறார்கள். ஆனால் கையினால் தீப்பெட்டி செய்கின்ற தொழிலைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழில்கள் நசிந்து விட்டால் தமிழகத்தில் பொருளாதாரத்தில் மிகப்பெரிய சிக்கல் ஏற்படுவது மட்டுமல்ல; ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை உருவாகும். அதைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பொதுத்துறை பற்றிச் சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். பொதுத்துறைக்கு நாங்கள் விரோதமானவர்கள் அல்ல. ஆனால் பொதுத்துறை ஒரு அதிகாரத்தனமான துறை. பொதுத்துறை ஊழல் நிறைந்த ஒரு துறை, பொதுத்துறையிலே வேலை செய்கிறோம் என்கின்ற வகையில் ஒரு பொறுப்பற்ற துறை. எனவே அதிகம், அதிகம் என்று நேஷனலைஸ் செய்துகொண்டு போனால் நான் இன்றைக்குச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ; மற்றவர்கள் என்ன நினைக்கிறார்களோ; பொதுத்துறையினுடைய பேலன்ஸ்ஷீட்-ஐ வைத்துப் பாருங்கள், எல்லாம் அதிகாரித்தனம்; எல்லாம்



ஊழல் நிறைந்து இருக்கிறது. எனவே அதிகம், அதிகம் என்று நீங்கள் பொதுத்துறைக்குப் போவீர்கள் என்று சொன்னால் மிகப்பெரிய ஒரு சிக்கல் எற்படும். ப்ரா பிட் இன்டரஸ்ட் இருக்கவேண்டும், ப்ரா பிட் மோட்டிவ்: இருக்க வேண்டும், அதற்குத் தனியார் துறைதான் உகந்தது என்பதை வற்புறுத்திச் சொல்லி அந்த அளவுக்கு நம்முடை திட்டங்களை வகுத்து, தொழில் கொள்கையையும் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே முன்வைக்கப்பட்டுள்ள இந்தத் தொழில் மானியக் கோரிக்கை யின் மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வருகிறேன். தமிழ்நாட்டைத் தொழிற்மய மாக வேண்டும் என்று மேற்கொண்டு இருக்கிற முயற்சியை நான் வரவேற்கிறேன். இதைச் செயல்படுத்து வதற்கான பல உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒன்பது ஆலோசனைக் குழுக்களை அமைக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் பாராட்டப்படக்கூடிய நல்ல அம்சங்கள். இவைகளை நான் வரவேற்கிறேன்.

கருங்கல் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரு புதிய கொள்கையைச் செயல்படுத்தப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருங்கல் தொழிற்சாலை களைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் பல்வேறு கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு சிலபேர் ஆதாயம் பெறக்கூடிய தொழிலாக அது இருந்துகொண்டு வந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த ஆதாயம் எல்லாம் அரசுக்கு வரக்கூடிய முறையில் ஒரு சீரான முறையில் அந்தத் தொழிலை நடத்த வேண்டும். அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறபோது முழுக்கற்களாக கன மீட்டர் அளவிலே ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக இங்கேயே சரியாக பாலீஷ் செய்தோ அல்லது பொருளாகவோ அனுப்பக் கூடிய முறையில் அதற்கான பல தொழிற்சாலைகளை இங்கே உருவாக்கி பல்வேறு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக். கொடுக்கக்கூடிய முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக நிலக்கோட்டையில் விவசாயம் சார்ந்த ஒரு தொழில் ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லியிருக் கிறார்கள். அது என்ன விவசாயத்தொழில் என்று சொல்லப் படவில்லை. அதேமாதிரியாக விவசாயம் சார்ந்த தொழில்களைப்

பல இடங்களிலும் ஆரம்பிக்கவேண்டும். குறிப்பாகத் தஞ்சை
மாவட்டத்தில் வைக்கோல், உப்பு போன்ற பொருள்கள்
அதிகமாகக் கிடைக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில்
அட்டைத் தொழிலையோ அல்லது அதற்கு வேண்டிய
மற்ற தொழிலையோ ஆரம்பித்து அங்கேயுள்ள ஏழை
மக்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க
வேண்டும். இப்படி ஒரு தொழில் வளம் ஏற்படுவதற்கான
வாய்ப்பினை உருவாக்கவேண்டும் என்று மாண்புமிகு
முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்தில் மத்திய அரசினுடைய பொது
நிறுவன முதலீட்டை அதிகரிக்க இந்த அரசு மத்திய
அரசுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கிறது
என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது. பெரிய தொழில்களை,
பொதுத் துறையிலே துவங்க தீவிரமான முயற்சிகளை மேற்
கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப்
அவர்கள் பேசும்போது பொதுத்துறை பற்றி மிக ஆவேச
மாக, அங்கே ஊழல்கள் எல்லாம் நிறைந்திருப்பதாகச்
சொன்னார்கள். தனியார் துறையிலே ஊழலே இல்லையா,
அங்கே மருந்துக்குக் கூட ஊழலே கிடையாதா என்பதை
அவர்கள்தான் தெரிந்து சொல்லவேண்டும். பொதுத்துறை
தான் சிறந்ததாக இருக்கும். தொழில் மயமாவதற்கு
வேண்டிய முன்னுதாரணமாக விளங்குவதற்கு அவை
உதவிகரமாக இருக்கும். அந்த மாதிரி முக்கியத் தொழில்களை
பொதுத் துறையில் தொடங்கவேண்டும்.

ஆரம்ப காலத்தில் ஆவடி, ஐ.சி.எப்., நெய்வேலி,
பெல், சேலம் உருக்காலை போன்ற தொழிற்சாலைகள்
எல்லாம் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அவை பல்லாயிரக்
கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துக்
கொண்டிருக்கின்றன. ஆகவே தொழில் வளம் பெருகவேண்டு
மென்றால் இப்படி மிகப் பெரிய அளவில் மூலதனம் போடக்
கூடிய தொழில்களை எல்லாம் மத்திய அரசு இங்கே
துவங்க இந்த மாநில அரசுக்கு இன்றைக்குள்ள விசேஷ
சூழ்நிலையைப் பயன்படுத்த வேண்டும். இங்கே சாதகமான
ஒரு மத்திய அரசு அமைந்திருக்கின்ற காரணத்தால்
இவ்வாறு தொழில்களைத் தொடங்க வேண்டும். மாற்றுக்
கட்சிகள் மாநிலத்திலும், மத்தியிலும் இருந்ததன் காரணமாக
20, 30 ஆண்டுகளாக நம்முடைய மாநிலத்தில் பெரிய
தொழில்கள் தொடங்கப்படவே இல்லை. ஆகவே ஆரம்பக்
காலத்தில் தொடங்கப்பட்ட 4, 5 தொழிற்சாலைகளோடு
அந்தத் தொழில் வளர்ச்சி நின்றுவிட்டது. எனவே அப்படிப்
பட்ட மிகப் பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு
வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.



11-35 மணி

அடுத்தபடியாக, சர்க்கரை ஆலைகள் அதிகமாக வந்து
கொண்டு இருப்பது குறித்து மகிழ்ச்சி. இதை மேலும் அதிகப்
படுத்த வேண்டும். சர்க்கரை மிக மிக அத்தியாவசியமான
ஒன்று. இன்றைக்கும் சர்க்கரையை வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்கிற நிலை இருக்கிறது. ஆகவே, இதன்
உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலைகளையும், வாய்ப்பு
களையும் ஏற்படுத்த வேண்டும். கரும்பு உற்பத்தியை இன்னும்
அதிகமாக செய்கிற அளவில் வசதிகளை, அதற்கான வாய்ப்புகள்
தமிழகத்தில் அதிகமாக இருப்பதால் செய்துகொடுப்பதுடன்,
புதிய சர்க்கரை ஆலைகளையும் துவங்க வேண்டும். அப்படிச்
செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தபடியாக, பொறியியல் மற்றும் உந்தூர்தி உதிரிப்
பாகங்கள் தயாரிக்க புதிய தொழிற்சாலை தொடங்குவதுபற்றி
சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும்கூட அரசு நிறுவனங்கள்
உதிரி பாகங்களுக்காக அசோக் லேலண்ட் போன்ற நிறுவனங்
களை நம்பிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக நாமோ அல்லது
ஜாயின்ட் செக்டார் மூலமாகவோ உதிரிப் பாகங்களை உற்பத்திப்
பண்ணுகிற தொழிற்சாலையை உடனடியாகத் தொடங்கு
வதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டிட்கோ நிறுவனத்தை இன்னும் விரிவுபடுத்த
வேண்டும். இப்போது இருப்பது பற்றாது. இன்றைக்கு
அரக்கோணத்தில் இருக்கிற ஸ்டீல் உருக்குத் தொழிற்சாலை
டிட்கோ மூலம் நடைபெறுகிறது. இதையும் விரிவுபடுத்த
வேண்டும். அந்தவகையில் இன்னும் அதிகமான தொழிலாளர்
களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும்.

அடுத்து, சிமெண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்த
வரையில், அரசு சார்பில் சில தொழிற்சாலைகள் இருக்கின்றன.
ஆனால் இப்போது இருப்பதுபோல லாபம் இல்லாத நிலையை
மாற்றி அவற்றைத் திறமையாக செம்மையாக, லாபகரமாக
ஆக்குவதுடன் மேலும் பல சிமெண்ட் தொழிற்சாலைகளையும்
புதிதாகத் தோற்றுவிக்க வேண்டும்.

அடுத்து, முந்தைய ஆட்சிக் காலத்தில் விருத்தாசலத்தில்
கட்டப்பட்டிருந்த கல்குழாய் பிரிவு தொழிற்சாலை மேலும்
செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால்
அதில் ஒரு பகுதிதான் செயல்படுத்தப்பட்டிருப்பதால் முழுமை
யாக அதைச் செயல்படுத்த இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 18

அடுத்தபடியாக, கார்மன்ட் தொழிற்சாலைகள். இன்றைக்கு கார்மன்ட்ஸ் என்று சொல்லப்படுகிற தொழில் சென்னை நகரத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்படுகிறது. படித்து வேலையில்லாத பல்லாயிரக்கணக்கான பெண்கள் இந்த கார்மன்ட்ஸ்களில் ரெடிமேட் துணிகளை தைக்கின்ற வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். குஜராத் முதலாளிகள் இங்கே வந்து இங்குள்ள பெண்களை அடிமைகளை மாதிரி நடத்தி பெரு மளவில் இந்தத் தொழிலை நடத்தி வருகிறார்கள். அரசோ அல்லது டிட்கோ மூலமோ இந்தத் தொழிலை தொடங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

அடுத்து, முதலீட்டு மானியத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசு அதனை நிறுத்திவிட்டது. மாநில அரசு தான் இந்த உதவியை இப்போது செய்து வருகிறது. மாநில அரசு 123 வட்டங்களில் 105 இடங்களை பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்து 15 பர்சென்ட் உதவி அதாவது உயர்ந்தபட்ச மாக 15 அல்லது 20 லட்சம் ரூபாய் மானியமாக அளிக்கப் படுகிறது. இன்றைக்கு கோவில்பட்டியில் மில் இருப்பதால் அதை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கவில்லை. அந்தப் பகுதியில் கிராமப்புறங்களில் வாழ்கிற விவசாயிகள் எல்லாம் கஷ்டப்பட்டு வேலைவாய்ப்புக்காக நகரங்களை நோக்கிப் போகிற சூழ்நிலையில் ஏதாவது தொழில்களைத் தொடங்குவதாக இருந்தால்கூட சாத்தூருக்குத்தான் போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கோவில்பட்டி தாலுகா போன்ற இடங்களை எல்லாம் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிப்பதுடன் வசதி வாய்ப்புகளையும், மானியத்தையும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, பஞ்சாலைகளைப் பொறுத்தமட்டிலும், சமீபகால மாக முதலாளிகள் அதிகமாக லாபம் பெற்று வருகிறார்கள். அப்படி இருக்கும்போது மூடிய பஞ்சாலைகளில் 6 ஆலைகளைத் திறப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அவைகள் இன்னும் திறக்கப்படவில்லையாதலால் உடனடியாக திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கவலையளிக்கும் ஒரு விஷயம் என்ன வென்றால், மத்திய அரசின் தற்போதைய கொள்கை என்ன வென்றால், பழைய, நலிந்த ஆலைகளை எடுப்பதில்லையென்று அறிவித்திருக்கிறார்கள். இது மத்தியில் உள்ளவர்களின் கொள்கை. ஆனால் மேற்கு வங்க அரசு பதினொன்றில் நலிந்த 10 ஆலைகளை எடுத்திருக்கிறது. மேலும் 4 ஆலைகளை கூட்டுறவு முறையில் தொழிலாளர்களை வைத்து நடத்த உதவுவதாக, ஏற்பாடு செய்வ தாக அறிவித்திருக்கிறார்கள். இம்மாதிரி நலிந்த ஆலைகளை மத்திய சர்க்கார் எடுப்பதில்லை. ஆனால் மாநில சர்க்கார் முன்



1990 ஏப்ரல் 18] [திரு. சோ. அழகர்சாமி]

வந்து செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தமாதிரி ஆலைகளை மத்திய அரசை வற்புறுத்தி மத்திய அரசு எடுக்கச் செய்ய வேண்டும். அப்படி அவர்கள் முன்வரவில்லையென்றால் மாநில அரசு மூடிய, நலிந்த அனைத்து ஆலைகளையும் ஏற்று தொழிலாளர்கள் தவிக்காமல் இருக்கும் வகையில் அவர் களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டிலே எந்தப் பகுதியிலும் ரூபாய் 25 கோடி மூலதனத்துடன் புதிய தொழில்கள் துவங்கினால் அல்லது ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகள் ரூபாய் 25 கோடி மூல தனத்துக்கு மேற்பட்டு விரிவாக்கப்பட்டால் மானியமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 25 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ள மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு மேலும் ஒரு 25 இலட்சம் ரூபாய் மானிய மாகக் கொடுப்பது நியாயம் இல்லை; அதைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றுகூட சின்னச் சின்னத் தொழில்கள் பற்றி மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 125 சிறு தொழிற்சாலைகள் நடத்தப்பட முடியாமல் மூடப்பட்டு இருக்கின்றன என்று. ஆகவே அவர்களுக்கு—பல்வேறு இடங் களில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு மேலும் மூலதனம் இல்லாமல் அவைகளைச் செம்மையாக நடத்த முடியாமல், அதே நேரத்தில் அவர்கள் உற்பத்தி பண்ணிய பொருள்களை விற்பதற்கு வசதி இல்லாமல், உற்பத்தி பண்ணிய பொருட்களை வாங்குவதற்கு வேண்டிய மார்க்கெட் இல்லாமல் அந்தத் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன— அவைகளைத் திறப் பதற்கும், அந்தப் பொருள்களை வாங்கி விற்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டுமே தவிர அதிக மூலதனம் உள்ள 25 கோடி ரூபாய்க்கு மேலும் உள்ள மிகப் பெரிய வசதி உள்ளவர்களுக்கு மேலும் 25 இலட்சம் ரூபாய் கொடுப்பது நியாயம்தானா என்று கேட்டு அது சரியல்ல என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஏறக்குறைய 20 பஞ்சாலைகள் மூடிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளை உடனடியாகத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று ஜெனரேட்டர் மானியம் என்று இருக்கிறது. ஒரு ஜெனரேட்டர் வாங்குவதற்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கு கிறார்கள். சென்ற ஆண்டு 1989-90-ல் 1½ கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே தொழிற்

சாலை வைத்து இருக்கக்கூடியவர்கள் ஜெனரேட்டர் வாங்கு
வதற்கு அவர்களுக்கு 5 இலட்ச ரூபாய் கடனாகக் கொடுங்கள்;
இல்லையென்றால் வங்கிகளிலே அவர்களாகவே வாங்கிக்
கொள்வார்கள். அவர்களுக்கு மானியமாக 5 இலட்ச ரூபாய்
ஜெனரேட்டருக்குக் கொடுக்க வேண்டுமா என்பதையும்
ஆலோசிக்க வேண்டும். சிறு தொழில்கள், நலிந்த தொழில்கள்
மூடிக்கிடக்கிற தொழில்கள், பல்வேறு புதிய தொழில்கள்
தொடங்க வேண்டும் என்று விரும்பக்கூடிய முனைவர்களுக்கு
அந்தப் பணத்தை நீங்கள் செலவழிக்க வேண்டுமே தவிர அதிக
மான தொழிற்சாலைகளை ஏற்கெனவே நடத்திக்கொண்டு இருப்
பவர்களுக்கு மேலும் 5 இலட்சம் ரூபாய் மானியமாகக்
கொடுப்பது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

அடுத்து நலிந்த தொழில்களுக்குப் புத்துயிர் ஊட்டக்கூடிய
தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லப்
பட்டு இருக்கிறது. இன்றைக்கு பஞ்சாலைகளைத் திறப்பதோடு
மட்டுமல்லாமல் நலிந்த தொழில்களை எல்லாம்
அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் அல்லது நடத்துவதற்கு
வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து வேதாரண்யம் பகுதியில் கிடைக்கக்கூடிய உப்பை
மூலப் பொருளாகக்கொண்டு தினமும் நூறு டன் உற்பத்தித்
திறன் கொண்ட காஸ்டிக் சோடா தொழிற்சாலை 60 கோடி
ரூபாயில் நிறைவேற்றுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதை
ரொம்ப மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். அதேமாதிரி அந்தப்
பகுதியில் இருக்கிற மணல் வேறு பகுதிகளுக்கு, பீங்கான் தொழிற்
சாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதாகச் சொல்கிறார்கள்.
எனவே அங்கு இன்னொரு பீங்கான் தொழிற்சாலை கூட
துவங்கலாம். அந்தமாதிரி தொழிற்சாலைகள் துவங்குவதற்கு
வேண்டிய ஏற்பாட்டைச் செய்தால் தஞ்சை மாவட்டத்தில்
இருக்கிற மக்களுக்கு வேலைவாய்ப்பும் அதேநேரத்தில்
வளர்ச்சியும் அந்த மாவட்டத்தில் ஏற்படுவதற்கு உதவியாக
இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய எரிவாயுவைப்பற்றி
பத்திரிகைகளில் செய்தி வந்து இருக்கின்றது. அந்த எரி
வாயுவைப் பயன்படுத்தி மின்சார உற்பத்திக்கு வேண்டிய ஏற்
பாட்டைச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். துரப்
பணக் கிணறுகளில் இருந்து கிடைக்கக்கூடிய எரிவாயுவின்
மூலமாக மின்சார உற்பத்திக்கு வேண்டிய திட்டம் தீட்டப்பட
முடியுமா, மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா என்று பார்த்தால்,
அது முடியும் என்றால் அங்கு பல தொழில்கள் பெருவதற்கு ஏது
வாக இருக்கும். அதையும் செய்ய முடியுமா என்பதையும் அரசு
பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை துவங்கப்பட்டு அது
அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு உதவ ஏற்பாடு செய்யப்பட்டு
இருக்கிறது. அந்த ஏற்பாட்டை சீக்கிரம் செய்ய வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு சுரங்கப் பணிகள்
மட்டும்தான் அங்கு நடைபெற்று இருக்கிறது. அது ஒரு பின்
தங்கிய மாவட்டம். அந்த சுரங்கத்திலிருந்து எடுக்கும் பொருள்
களை வைத்து அது சம்பந்தப்பட்ட தொழில்களைத் தொடங்கு
வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றும்
கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல இடங்களில் தேங்காய், வேர்க்கடலை அதிக
மாகக் கிடைக்கிறது. இந்த மூலப்பொருள்களை வைத்து
ஏதாவது தொழில் தொடங்க முடியுமா என்பதுபற்றி ஆலோசிக்க
வேண்டும்.

இப்போது நாம் மானியம் வழங்கும் காலத்தில் தொழில்கள்
அதிகமாக இருக்கிற இடங்களில் தான் மேலும் மேலும் தொழில்
களைத் தொடங்குகிறார்கள். பின்தங்கிய இடங்களில் தொழில்
தொடங்க அவர்கள் செல்வது இல்லை. (மணி அடிக்கப்
பெற்றது). உதாரணமாக இன்றைக்கு மானாமதுரையில்
இருக்கிற தொழில்கள் வளாகத்தில் பல்வேறு கூடங்களில்
தொழில்கள் தொடங்கப்படாமல் இருக்கின்றது. காரணம்
அரக்கோணம், சென்னை போன்ற பக்கத்தில் இருக்கிற இடங்களில்
எல்லாம் தொழில்கள் தொடங்குகிறார்கள். அதனால் நகரம்
அதிகமான நெருக்கடிக்கு உள்ளாகிறது. புதிதாகத் தொடங்கும்
தொழில்களை கிராமப்புறங்களில் பின்தங்கிய பகுதிகளில்
தொடங்குவதன் மூலம் ஜன நெருக்கடியைப் போக்கலாம்;
அந்தப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஒரு வாழ்வும் அளிக்கலாம்
என்ற முறையிலே திட்டம் தீட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு வாய்ப்பு
என்னவென்று சொன்னால் இங்கு கடற்கரை வளம் இருக்கிறது.
வேறு எந்த மாநிலத்திலும் அந்தமாதிரி வளம் கிடையாது.
ஆகவே கடற்கரைப் பக்கத்தில் கடலிலே கிடைக்கிற மூலப்
பொருள்களை வைத்து பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்க
லாம். அதற்கு மத்திய அரசையும் நம்முடைய மாநில அரசு
அணுகி அதற்கு வேண்டிய ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டு
மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

11-45 மணி

பின் தங்கிய பகுதிகளாக இருக்கக்கூடிய பகுதிகளிலே
இன்றைக்கு சிப்காட்டினுடைய தொழில் வளாகங்களை அமைக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விளாத்திகுளம்,
கோவில்பட்டி, ஒட்டப்பிடாரம் வட்டாரங்களெல்லாம் மிகவும்

பின்தங்கிய வட்டாரங்கள். அங்கே ஒரு தொழில் வளாகம் சிப்காட்டினுடைய தொழில் வளாகம் ஒன்று தூத்துக்குடியிலே இருக்கிறது, இந்த விளாத்திகுளம் பகுதியிலேயோ அல்லது மற்ற பகுதிகளிலேயோ ஒன்றை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சர்க்கரைத் தொழில். இது சம்பந்தமாக, விவசாயிகளுக்கு, கரும்புக்கு ரொம்பக் குறைந்த விலை இங்கே தான் கொடுக்கிறார்கள். அதிகமான இலாபம் இன்றைக்கு கரும்பு ஆலை முதலாளிகளுக்கு கிடைத்துக்கொண்டு வருகிறது. வேறு பல மாநிலங்களிலே 400 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கப் பட்டு வருகிறது. இங்கே மட்டும்தான், சராசரி 311 ரூபாய் கிடைக்கிறது. இன்றைக்கு 250 ரூபாய் என்று அறிவிக்கப் பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு மேலே மத்திய அரசு 20 ரூபாயை அறிவித்தார்கள். அந்த 20 ரூபாயையாவது இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுப்பதாக அறிவிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்குக் கூடுதல் கரும்பு விலை என்று சொல்லி, அதிகமான இலாபம் இருக்கிற கூட்டுறவு ஆலைகளெல்லாம் கொடுத்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தனியார் ஆலை யாரும் கொடுக்கவில்லை. ஒவ்வொரு கூட்டுறவு ஆலையும் ஒரு டன்னுக்கு 55 ரூபாய், 40 ரூபாய், 30 ரூபாய் என்று கொடுத்திருக்கிறது. தனியார் ஆலையில் யாரும் கொடுக்கவில்லை.

அதே மாதிரியான ரோடு செஸ் தனியார் ஆலைகள் கொடுப்பது கிடையாது. கூட்டுறவு ஆலை தான் கொடுக்கிறது. அதனாலே ரோடே போடாமல் இருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே இந்த கரும்பு சம்பந்தப்பட்ட மட்டிலும் கரும்பு உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிகளுக்கு, அதிலே சரியானபடி உதவிகள் இல்லையென்று சொன்னால், அந்தத் தொழில் சீராக நடக்காது. அந்த முறையிலே இன்றைக்குக் கரும்பு விவசாயி களினுடைய நியாயமான கோரிக்கைகளான, நியாயமான 400 ரூபாய் விலையும், தனிப்பட்ட முதலாளிகள் கொடுக்க வேண்டிய இலாபத்திலே கொடுக்க வேண்டிய பங்கையும் கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில்துறை மானியக் கோரிக்கையின் கீழ் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படு கிறேன். ஒரு நாடு வளரவேண்டுமேயானால் அந்த நாடு





தொழில் மயமாக்கப்பட்டு தொழில் வளர்ச்சியை எட்டினால்தான் வளர்ந்ததாகக் கருத முடியும். ஆனால், நம்முடைய இந்தியத் திருநாட்டில், நம்முடைய அமைப்பின்படி, அரசியல் அமைப்பின்பால் தொழில்களை அதிகமாகத் தொடங்க வேண்டுமேயானால், மத்திய அரசின் அதிகாரத்தை எதிர்நோக்கி இருக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருந்து கொண்டிருக் கின்றோம். மாநில அரசைப் பொறுத்தவரையில், பெரிய தொழிலைத் தொடங்குவதற்கு அதிகாரமும் கிடையாது. There is no power. There is no money power. மின்சாரத்தை அடிப்படை யாகக் கொண்டு உருவாக்கக்கூடிய தொழிலையும் நம்மால் உருவாக்க முடியாது. There is no thermal power or hydro power. ஆகவே, இரண்டு விதத்திலும் மாநிலம் இன்றைக்குப் பாதிக்கப் பட்டுக் கொண்டு இருக்கிறது.

1947-லிருந்து 1967 வரை தொழில் வளர்ச்சி அதிகமாக இருந்தது என்பதையெல்லாம் இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் கோடிட்டுக்காட்டினார்கள். 1947-லிருந்து 1967 வரை அன்றைக்கு இருந்தவர்களெல்லாம் அவர்களுடைய கொள்கைக்கு உட்பட்டவர்கள், கொள்கையைப் பின்பற்றி யவர்கள் எல்லாம் பெரிய பெரிய தொழில் அதிபர்களாக இருக் கிறார்கள். தொழிலமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கடராமன் இருந்த காலத்திலேதான் இந்தியா சிமெண்ட் நெல்லைக்கு வந்தது என்றால், இதெல்லாம் ஒரு தொடர்பு. ஒரு அரசாங்கத் தோடு தொடர்பு இல்லை என்றால் ஒரு தொழிலை உருவாக்க முடியாது.

இன்னும் சொல்லப்போனால் பாராளுமன்றத்தில் லாபி இல்லை என்றால், தொழிலதிபர்கள் புதிய புதிய தொழில்களை உருவாக்க முடியாது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் 1967 வரை தொழில் ரீதியில் உயர்ந்ததற்குக் காரணம், ஒரு நெருங்கிய தொடர்பு தொழிலை உருவாக்கக் கூடியவர்களுக்கு அரசாங்கத்தோடு அன்றைக்கு இருந்தது என்பதை நான் உணர்கிறேன்.

ஆனால், 1967-இலிருந்து இன்று வரை நாமெல்லாம் ஆட்சியில் இருக்கும்பொழுது, நான் வெளிப்படையாகவே கேட் கின்றேன், திராவிடக் கட்சிகளில் எத்தனை தொழிலதிபர்களை நாம் உருவாக்கியிருக்கிறோம்? காரணம், நாம் தொழில் தொடங்கினால் இவர்கள் தொழில் நடத்துவதற்காக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள் என்பார்கள். நாம் எந்தத் தொழில் அதிபர்களையும் உருவாக்கியதே கிடையாது. இரண்டு கட்சிகளும். ஆனால், எல்லாத் தொழிலதிபர்களும் நம்முடைய அதிகாரத்தை வைத்து, அவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். நாம்

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 18

முன்னேறுவதற்குத் தடைக்கல்லாக இருந்த காரணம் மாநிலக்கட்சி களாக திராவிடக் கட்சிகளாக, இன்னும் சொல்லப்போனால் டெல்லியிலே நம்மால் லாபி செய்யமுடியாத ஒரு கட்டாயம், ஒரு சூழ்நிலை உருவானது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

11-50 மணி

இன்றைக்கு தொழில் துறையில் நாம் பின்தங்கி இருக்கிறோம். திராவிடர்கள் பின்தங்கியிருக்கிறோம். ஷெட்யூல்ட் வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் பின்தங்கி இருக்கிறோம். எந்த ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவராவது இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் ஒரு மாபெரும் தொழிலதிபராக இருக்கிறாரா, கிடையாது. காரணம் லாபி கிடையாது. வரவேற்பு கிடையாது. உயர அழைத்துச் செல்வதற்கு, தூக்கி விடுவதற்கு அரசியல் லாபி கிடையாது. ஒரு லாபி வேண்டும். சட்டமன்றம் ஆனாலும், பாராளுமன்றம் ஆனாலும், தொழில் துறையில் இருக்கக் கூடியவர்களுக்கு லாபி வேண்டும். அந்த லாபி இருக்கிற காரணத்தால்தான் தேர்தல் காலத்தில் எல்லா கட்சிகளும் இப்படி லாபியால் பெற்ற தொழிலதிபர்களிடமிருந்து ஏதோ கொஞ்சம் கொஞ்சமாக டொனேஷன் என்று பெறக்கூடிய அளவிற்கு நாடு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

ஆகவே, தொழிலை வளர்க்க வேண்டுமானால் ஒரு மறு மலர்ச்சியான கொள்கையை தமிழக அரசு உருவாக்க வேண்டும். உருவாக்குவதற்கு 'லெட்டர் ஆப் இன்டெண்ட்' கொடுப்பதற்கு மாநில அரசிற்கே அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இன்றைக்கு அதிக அதிகாரம் கேட்கிறோம். சிறிய சிறிய தொழிலை உருவாக்குவதற்கு நம்மால் அனுமதி கொடுக்க முடிகிறது. ஆனால், நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய கச்சா பொருளை வைத்து தொழிற்சாலை உருவாக்க வேண்டுமானால், மத்திய அரசை எதிர்நோக்கியிருக்க வேண்டிய கட்டாயம் நமக்கு இன்றைக்கு உருவாகி இருக்கிறது.

இங்கேயிருந்து வெளிநாட்டிற்கு எரால் மீன்களை ஏற்றி விடு கிறோம். இங்கே நாம் சாப்பிடுவது சிறிய சிறிய எரால்கள். இங்கேயிருந்து பெரிய பெரிய கருங்கற்களை ஏற்றி வெளி நாட்டிற்கு அனுப்புகிறோம். ஜப்பானில் வானளாவிய கட்டடங் களை கட்டி இருக்கிறார்கள். இன்னும் ஆசிய நாடுகள் மற்ற நாடுகளில் உயரமான கட்டடங்களை கருங்கற்களால் கட்டி இருக் கிறார்கள். ஆனால், இங்கே நம்முடைய நாட்டில், தமிழ்நாட்டில், நாம் செங்கல்லை வைத்து தான் இன்னமும் கட்டிக்கொண்டிருக் கிறோம். இங்கே இருக்கக்கூடிய கருங்கல்லை நம்முடைய அரசு கட்டடங்களில் கூட நாம் வைத்து கட்டுவதில்லை. எத்தனையோ நீதிமன்றக் கட்டடங்களைக் கட்டி இருக்கிறோம். எத்தனையோ



1990 ஏப்ரல் 18] [திரு. பி. எச். பாண்டியன்]

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களை உருவாக்கி இருக் கிறோம், கட்டியிருக்கிறோம். இந்த கருங்கற்களைப் பயன் படுத்தினோமா? நமக்கு போகத்தானே வெளிநாட்டிற்கு என்ற நிலை ஏன் வரவில்லை 'எக்ஸ்போர்ட்' அதிகமாக நாம் செய்ய வேண்டும். அன்னியச்செலாவணியை ஈட்டித்தரவேண்டும். அந்த அன்னியச் செலாவணி மூலமாக தமிழகத்திற்கு என்ன நன்மை கிடைக்கிறது என்பதை இந்த நிலையில் உணர வேண்டும். காரணம் இங்கே இருக்கிற பொருள்களை வைத்து, இங்கே இருக்கிற கல்லை வைத்து நம்மால் பெரிய பெரிய அழகான கட்டடங்களை உருவாக்க முடியவில்லை. ஒரு காலத்தில் நாம் விஞ்ஞானத்தில் வளர்ந்தாலும் தொழில் ரீதியில் உயர்ந்தாலும், மற்ற நாடுகள் இப்படி பெரிய பெரிய கட்டடங்களை உருவாக்கி உலக மக்களை ஈர்க்கும்போது, நாம் கீழேதான் இருந்து கொண்டிருப்போம் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஆகவே, முதலமைச்சர் அவர்கள் மத்தியிலே ஆட்சியில் இருக்கக்கூடியவர்களிடத்தில் சொல்லி தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு, பெரிய தொழில் துறையை உருவாக்குவதற்கு அதிகாரம் நமக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள். அதற்கு சட்டத் திருத்தம் தேவை கிடையாது. நேரடியாக அவர்கள் இந்த அனுமதியை தரலாம். இந்த ஆட்சியில் நம்மால் வாங்க முடியவில்லை என்றால், வேறு எந்த ஆட்சியிலும் வாங்கமுடியாது. காரணம், இன்றைக்கு இங்கே இருக்கிற நிலையை மறந்துவிட முடியாது. எத்தனையோ அச்சுறுத்தல்கள், வெளிநாட்டு அச்சுறுத்தல்கள் நாள்தோறும் பத்திரிகையில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு இங்கே தொழில் அனுமதியை வாங்குவதற்கு கோரி தமிழக அரசிற்கு அனுமதியை பெற வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்துக்கொள்கிறேன்.

11-55 மணி

அடுத்து, இன்றைக்கு 40 ஆண்டுகள், 43 ஆண்டுகள் கடந்தும், நாம் இருந்த நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறோம், என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு, எத்தனையோ நாடுகளை நாம் இந்திய நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் இருந்த நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறோம். ஜப்பான் நாடு என்றால் அங்கே வாழ்கிற மக்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் வீட்டில் தொலை பேசி வைத்திருக்கிறார்கள். நாம் இன்றைக்கு ஒரு சதவீதத்திற்கு கீழே இருக்கிறோம் இந்திய நாட்டில். நாம் என்றைக்கு அப்படி வளரப் போகிறோம். அந்த நாட்டில் நட்டை செய்வதற்கு கூட இரும்பு கிடையாது. அங்கே தேடிப் பார்த்தால் கூட கல் கிடையாது. ஆனால் அந்த நாடு வளர்ந்து இருக்கிறது. காரணம் அங்கேயிருக்கிற பொருளாதார கொள்கை,

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 18

அங்கே வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற
உறுப்பினர்கள் கொள்கை. அவர்களே அங்கே தொழிலில் நாட்டம்
காட்டி தொழிலை வளர்க்கிறார்கள். ஆனால் இங்கே பாராளு
மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொழிலதிபர்
களாக ஆகமுடியாது. நம்முடைய நிலை அப்படி. ஒரு தொழிலபர்
ரைஸ்மில்லை, ஒரு எம்.எல்.ஏ. ரைஸ்மில்லை ஆரம்பித்தால்கூட,
அது இன்றைக்குப் பிரச்சினையாகிவிடுகிறது. இன்றைக்கு இருக்கக்
கூடிய நம்முடைய பார்வை கிட்டப்பார்வை. தொலைப்பார்வை
கிடையாது. அங்கே அவர்கள், அந்த நாட்டை பாராளுமன்றத்
தோடு சேர்த்து வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம்
ஒன்றாவது பாராளுமன்றத்தைப் பார்த்துவிட்டோம். இதைத்
தவறாக எண்ணக்கூடாது. வேண்டுமானால் சில பேர்களை
பெட்ரோல் பங்குகளைப் பெற்றிருப்பார்கள். அவ்வளவுதான்
நம்முடைய நிலை அப்படி. ஆகவே இந்த நிலையை எல்லாம்
மாற்றுவதற்கு இனிமேலாவது மறுமலர்ச்சியான கொள்கையை
உருவாக்கிக் காட்டுங்கள்.

இன்றைக்கு ஆட்டோமொபைல்ஸ் உதிரிப் பாகங்களை
உருவாக்குவதற்கு உதவித் தொகை வழங்குவதாக இங்கே
கொள்கைக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய
தமிழகத்தில் கோவையில் ஆட்டோமொபைல்ஸ் உதிரிப்
பாகங்களை அதிகமாக தயாரிக்கிறார்கள். இன்னும் சொல்லப்
போனால், உடைந்த காரைக் கொடுத்தால், அந்தப் புதிய
காரைவிட நல்ல மாடலாக ஆக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள்
நம்முடைய தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்
அவர்களுக்கு இங்கே அனுமதி கிடையாது. அந்த அனுமதியைப்
பெறுவதற்கு இன்றைக்கு இருக்கக்கூடிய தொழில் மறுமலர்ச்சிக்
காலத்தில், அந்த ஆட்டோமொபைல்ஸ் இண்டஸ்ட்ரி வளர்ந்தால்
தான் நாம் வளர்ந்ததாகக் கருதமுடியும் என்பதற்காக இதை
நான் இங்கே சொன்னேன்.

அடுத்து இங்கே டாமின் நிறுவனம் லாபத்தை ஈட்டுவதாகச்
சொல்லியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு பேசியதையே நான்
மீண்டும் இங்கே சொல்லியாகவேண்டும். டாமின் நிறுவனத்தில்
ஓர் அதிகாரி, எவ்வளவோ அதிகமாக தவறு செய்து அரசாங்கத்
திற்கு நஷ்டத்தை ஈட்டினார் என்பதை சென்ற ஆண்டு
சொன்னீர்கள். நானும் சொன்னேன். அன்றைக்கே முதலமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். பாண்டியன் வேகமாக கைது செய்,
கைது செய் என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஓர்
ஆண்டுகாலம் ஆனது அந்த நஷ்டம் என்ன ஆனது அந்த நஷ்டத்தை
நாம் எப்படி ஈடுகட்டுவது? இப்படியே ஒவ்வொருவரும் ஆளுக்குக்
கொஞ்சம் பொதுப்பணத்திலிருந்து எடுத்துக்கொண்டு இருந்தால்
நம்முடைய தமிழகத்தின் கஜானா காலியாகிவிடும். கஜானா
என்பது இரண்டு வகை. முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைச்



1990 ஏப்ரல் 18] [திரு. பி. எச். பாண்டியன்]

சமர்ப்பிக்கிற நேரத்தில் கஜானா காலி என்று சொன்னார்கள்.
அன்றைக்கே சொல்லலாம் என்று இருந்தேன். அது வேறு கஜானா.
காரணம் வரவு, செலவு இரண்டையும், பேலன்ஸ் ஷீட்டைப் பார்த்து
உருவாக்குவதுதான் பட்ஜெட்டாகும். அந்த கஜானா வேறு. எந்த
அரசாங்கமும் வங்கியில் 100 கோடி ரூபாயை வைத்துவிட்டுச்
செல்லமாட்டார்கள். அந்தந்த ஆண்டுத் திட்டம், அந்தந்த
ஆண்டு வருமானம், அந்தந்த ஆண்டு செலவு, அந்தந்த ஆண்டு
நிலுவை, அந்தந்த ஆண்டு வரியை எப்படி விதிப்பது என்பதை
வைத்துத்தான் அந்த கஜானாவை, அந்த ஆண்டு நிதிநிலை
அறிக்கையைத் தயாரிப்பார்கள். ஆனால் இந்தக் கஜானா, இது
உண்மையிலே, பொதுமக்கள் கஜானா. பப்ளிக் டிரெஷரி. இந்த
டிரெஷரியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட, ஏமாற்றப்பட்ட
அந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள்
கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நேற்றையதினம் பத்திரிகையில் பார்த்தேன். ஒரு மின்சார
என்ஜினியர் ஒரு மின் இணைப்பை கொடுப்பதற்கு 100 ரூபாய்
பெற்றதற்கு, இரண்டு ஆயிரம் ரூபாய் அபராதம், ஓர் ஆண்டுக்
காலம் கடுங்காவல். எதற்கு 100 ரூபாய்க்கு, ஆனால் இங்கே
கொள்கைக் குறிப்பிலே சொல்லிவிட்டு, இவர்கள் எல்லாம்
தப்பித்துச் செல்வார்களானால், நம்முடைய நாட்டில் சாதாரண
சாமானிய, சிறிய அதிகாரம் படைத்தவர்கள் சிறையிலே வாடிக்
கொண்டு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இதை இங்கே
நான் எடுத்து வைத்தேன்.

அடுத்து கூடங்குளம், அந்த அணு மின்நிலையத்தை நிறுவு
வதற்கு முன்பு பல்வேறு பிரிவினர்கள் பல்வேறு கொள்கையைக்
கொண்டு இருந்தார்கள். சில பேர்கள் அந்தக் கூடங்குளம் வேண்
டும், சில பேர்கள் வேண்டாம் என்று வேண்டுகோள் இருந்தது.
ஆனால் இன்றைக்கு அதற்காக ஒரு கருத்தாய்வு முழுமையாக
எடுக்கப்படவில்லை என்பதுதான் எனக்கு உள்ள ஆதங்கம்
எல்லாம். கூடங்குளம் என்றைக்காவது ஒருநாள், காரணம்,
ஆலோட்டங்கள் என்றைக்காவது ஒருநாள் வெடித்துத்தான் ஆக
வேண்டும். அதை நிறுவினால்கூட, 50 ஆண்டுக்காலம் கழித்தோ
100 ஆண்டுக் காலம் கழித்தோ, ஒருநாள் நிச்சயமாக
அது வெடிக்கத்தான் போகிறது. இதை யாரும் மறுக்க
முடியாது. ரஷ்ய நாட்டிலும் அப்படித்தான். ஆகவே அந்தப்
பகுதியிலிருந்து, கூடங்குளத்திலிருந்து சேரன்மாதேவி வரை
ஒரு வேகத்தில், ஒருவேளை வெடித்துவிட்டால் அந்த
மக்களைப் பாதுகாக்கவேண்டும். அதற்காக நான் சொல்கிறேன்,
அதற்கு எந்த அளவிற்கு விஞ்ஞானிகளோடு தொடர்பு கொண்டு
மறு ஆய்வு செய்து, ஆபத்து நேராத அளவிற்கு ஒரு
முடிவை எடுக்கவேண்டும் இந்த அரசாங்கம் என்பதையும்,
அரசாங்கத்தின் கொள்கை இதன் மீது என்ன என்பதையும்
முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்

[திரு. பி. எச் பாண்டியன்] [1990 ஏப்ரல் 18

கிறேன். காரணம்,' அணு மின் நிலையம். அணு என்றைக்காவது ஒரு
நாள் வெடித்துத்தான் ஆகும். வெடிக்காமல் இருக்கவே இருக்காது.
தீப்பற்றி எரிந்துதான் ஆகும். அதுவும் இன்றைக்கு அண்டை
மாநிலங்கள், அண்டை நாடுகள் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.
உள்ளே நுழையும்போது முதலிலே அணு மின் நிலையம், இது
தான் இன்றைக்கு காணப்படும் என்ற காரணத்தினால் எனக்கு
உள்ள அச்சத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

12-00 மணி

நெல்லை மாவட்டத்து மக்களை முழுமையாக பாதுகாப்பதற்கு
இந்தத் திட்டத்தை மறு ஆய்வு செய்து இது தேவையா? என்ற
அளவில் பரிசீலிக்க வேண்டும். மக்களுக்கு எதுவும் கொடுக்கா
விட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவர்களைச் சாகடித்துவிடக்
கூடாது. அதுவும் அந்த மாவட்டத்து மக்கள் சுதந்திரம் அடைந்
ததிலிருந்து இன்னமும் வளரவில்லை. பொருளாதாரத்தில் வளர
வில்லை. பொருளாதாரத்தில் வளர வைக்கின்றோம் என்று
சொல்லிக் கொண்டு, அவர்களைக் கொன்று விடக் கூடாது.
பாமர மக்களுக்கு இது தெரியாது. ஆகவே முதலமைச்சர் அவர்
களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டத்தைப்
பொறுத்தவரை எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்,
ஆய்வு செய்யவேண்டுமென்பதைப் பற்றி இங்கே நான் தெரிவித்
துக் கொள்கிறேன், பாதுகாப்பு காரணம் கருதி.

இங்கே பொதுத் துறை நிறுவனத்தைப் பற்றி நம்முடைய
திரு. லத்தீப் அவர்கள் தெரிவித்தார்கள். எல்லா துறைகளிலும் தவறு
நடக்கிறது. தனியார்த் துறையிலும் தவறு நடக்கிறது. தனிப்பட்ட
வாழ்வில் ஒழுக்கம் இல்லையென்றால், பொது வாழ்வில் ஒழுக்கம்
கிடையாது என்ற நிலைபாட்டில் மாறுபாடு கிடையாது. காரணம்,
Public life is he continuation of the private life.
எனவே தனியார்த் துறையிலும் தவறு நடக்கிறது. காரணம்,
தனியார் அந்த நஷ்டத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால்
பொதுத் துறையில் முன்பு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்
கள் வாரியங்களுக்கு தலைவர்களை போடும்பொழுது எல்லோரும்
சொன்னீர்கள், இது எல்லாம் தேவையா என்று. லத்தீப் அவர்கள்
சொன்னார்கள், தவறு நடக்கிறது என்று. ஆகவே என்னைப்
பொறுத்தவரையில் மனிதன் எங்கே இருந்தாலும் நேர்மையாக
செயல்பட்டால், அதில் யார் வேண்டுமானாலும் இருக்கலாம்.
ஒன்றை மட்டும் சொல்கிறேன். அன்றைக்கே சொல்லவேண்டு
மென்று எண்ணினேன். புரட்சித் தலைவர் அவர்கள் மீது நீங்கள்
அன்றைக்கு இப்படி வாரியங்களுக்கு கட்சிக்காரர்களை போட்டு
விட்டீர்கள் என்று சொல்லும்போது ஒன்றைச் சொல்ல எண்ணி
னேன். பார்ட்டி டெமாக்ரசி என்றால் என்ன? பார்ட்டி இல்லாமல்
ஒரு ஆட்சியை நடத்தமுடியாது, பார்ட்டி இல்லாமல் தேர்தலை
சந்திக்க முடியாது. பார்ட்டியிலே இருக்கக் கூடியவர்கள் பார்ட்டி
யில் சில பேர் ஆட்சியில் இருப்பதை விரும்பவே மாட்டார்கள்.



1990 ஏப்ரல் 18] [திரு. பி. எச். பாண்டியன்]

எல்லோரும் அதிகாரத்தைப் பகிர்ந்து, அதிகாரத்தைச் செலுத்த
வேண்டுமென்று எண்ணுவார்கள். ஆனால் கட்டுப்பாடு வேண்டும்
Managerial accountability இன்றைக்கு பொதுத் துறையில் account-
ability இருக்கிறது. ஆனால் தனியார்த் துறையில் அவர்கள்
எப்படியோ அதைச் சரிக்கட்டிச் செல்கின்றார்கள். தனியார்
துறையில் Managing Di.ector-க்கு எவ்வளவு சம்பளம்? இங்கே
தொழிலாளிகளுக்காக பேசினீர்களே, எத்தனை லட்சம்? எம். டி.
என்றால் தனியார் துறையில் எத்தனை லட்சம்? இங்கே செல்ல
லாம், அங்கே செல்லலாம். அதையெல்லாம் கேட்டதற்கு யாரும்
கிடையாது. காரணம் தனியார். ஆனால் யார் பணம்? இன்றைக்கு
26 சதவீதம் அரசாங்கம் ஒரு பங்கைப் போட்டு, பொதுமக்களும்
பங்கைப் போடுவார்களேயானால், யார்தான் தொழிற்சாலை
உருவாக்கமுடியாது? நீங்களும் உருவாக்கலாம், நானும் உருவாக்
கலாம். அதில் அரசாங்கத்தின் பங்கு இருக்கும்பொழுது மக்களிடம்
கணக்கைச் சொல்லியே ஆகவேண்டும். Public accountability
should be there (குறுக்கீடு).

ஒன்றேயொன்று. அடுத்து வெளிநாட்டைப் பற்றிச் சொல்ல
வேண்டாமா? காரணம் நேற்றையதினம் ஒரு சட்டமன்ற உறுப்
பினர் இங்கே சொல்லும்போது வெளிநாட்டு இந்தியர்கள் இங்கே
வருவதற்குப் பயப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். வெளி
நாட்டு இந்தியர்களுக்கு எல்லாம் 'Cons itu ion:l st::us' அதிகம்
கிடையாது. அவர்கள் அங்கே சம்பாதிக்கிறார்கள், கொண்டு
வரட்டும், ஆனால் அவர்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு
மட்டும் இலவசமாக நிலம், அரசாங்கம் உதவி செய்வோம் என்ற
நிலை வருமேயானால், இங்கே இந்த நாட்டில் இந்த நாட்டு
மக்களுக்காக இந்த நாட்டு அரசியல் சட்டத்தின் மீது பிரமாணம்
எடுத்து இந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு உத்தரவாதம்
வேண்டாமா? ஏதோ அங்கே போகின்றார்கள். பணத்தைக்
கொண்டு வருகின்றார்கள் என்றால் அவர்களுக்கு ங்கே விசேஷ
அனுமதி கூடாது. இங்கே இருப்பவர்களுக்குப் போய், வேண்டு
மானாலும் மீதம் கொடுங்கள் ஒரு பெரிய செய்தித்தாளில்
விளம்பரத்தைக் கொடுங்கள். இந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்
டும், யார் வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். அரசாங்கம்
இவ்வளவு போடுகிறது, பொறுப்புள்ளவர்கள் வரவேண்டும் என்ற
விளம்பரத்தைப் போடுங்கள். எல்லோரும் வருவார்கள். ஏதோ
வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் டாலர்களைக் கொண்டு வரு
கிறார்கள் என்றால் அதை எண்ணி ஏமாந்துவிடக் கூடாது.

12-05 மணி

காரணம் இன்றைக்கு வெளிநாட்டின் நிலை வேறு. இன்று காலை
யிலே கூட பத்திரிகையிலே பார்த்தேன். சுவிஸ் வங்கியில் பணங்
களை முடக்கி வைத்திருக்கிறார்கள் என்ற செய்தியை எல்லாம்
பார்த்தேன். முதலமைச்சர் அவர்கள் கூட பிரதம அமைச்சரோடு

[திரு. பி. எச். பாண்டியன்] [1990 ஏப்ரல் 18

தொடர்பு கொண்டு யார் யாருடைய பணம் அங்கே முடக் கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இந்த நாட்டுக்கு தெரிவிக்க வேண்டாமா? காரணம் அந்தப் பணத்தின் சக்தி இங்கேயும் சில நேரங்களில் பாய்கிறது. அதனால் இங்கேயும் பண வீக்கம் அதிக மாகிறது. இந்தச் செய்தியை கருத்தில் கொண்டு அதற்கு நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது தொழில் துறை மானியம்... (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். 40 கோடி ரூபாய்க்கு மேல் புதிய தொழிற்சாலை களை உருவாக்குவதற்கும் மற்றும் மானியங்களை வழங்குவதற் கும் இங்கே விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால் சொற்ப நேரத்தில் கருத்துக்களை தெரிவிப்பது கடினம். ஆர அமர்ந்து சிந்தித்து பேசுவோமேயானால் நல்லது. இந்தத் தொழில் துறை மானியத்தில் எல்லாம் 2 நாட்கள் 3 நாட்கள் என்று அமர்ந்து பேசுவோமேயானால் இவைகளை எல்லாம் கண்டு பிடிக்கலாம். காரணம் இன்றைக்கு 68 கோடிக்கு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியம் இரண் டாவது நாளாகத்தான் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : நாள் வேறு, நேரம்—மணி வேறு நீதிமன்றத்திலே ஒரு சின்ன வழக்குக்கு 3 மணி நேரம் நடக்கும் விசாரணை. அதனால் தான் அங்கே தேக்கம். இப்படி வேகமாகப் போனால் அங்கேயெல்லாம் தேக்கமே இருக்காது. அது ஒரு சாதா ரண மனிதனுடைய வழக்கு. இது தமிழ்நாட்டிலுள்ள பணம் வெளியே போகிற பிரச்சினை. இன்னொன்று, மானியத்திற்காக 68 கோடி ரூபாய் வழங்குவதாகவும் 25 கோடி ரூபாய் டிட்கோ மூலமாகவும் சிப்காட் மூலமாகவும் வழங்குவதாக சொல்லியிருக் கிறீர்கள். யார் யாருக்கு வழங்குகிறீர்கள் என்று தெரிய வேண்டாமா? இந்த அவையின் மூலமாக பணம் வெளியே போகிற போது யாருடைய கைக்குப் போகிறது என்பது எங்களுக்குத் தெரிய வேண்டாமா? இதற்கு முன்னால் 1988, 1989 ஆகிய காலங்களில் இருந்த நிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அதைப் பயன்படுத்தியவர்கள் பெயரை சொல்ல வேண்டாம். அதன் மூலம் தொழிலை வளர்ந்தவர்கள் பெயரை சொல்ல வேண்டாம். தொழிலை வளர்க்கிறோம் என்று சொல்லி ஏமாற்றி பணத்தை பெற்றவர்கள் பெயர்களையெல்லாம் சொல்ல வேண்டா மா? இதில் முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டு மானியத்தை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் அவைக்கு ஒரு தவறான தகவலைக் கொடுத்து விடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அடாமிக் பவர் ஸ்டேஷன், அணுமின் நிலையங்கள் வெடிக்காது. வெடிக்கவே முடியாது. இரண்டாவதாக வெளிநாட்டு படையெடுப்பின்



1990 ஏப்ரல் 18] [திரு. ரா. சொக்கர்]

போது அது தாக்கப்பட்டாலும் கூட அவர் கூறுவது போல் அது வெடிக்காது. ஆனால் ரேடியோ ஆக்டிவ் ரேஸ்-அதிலிருந்து கசியக் கூடிய அபாயம் இருக்கிறது. அது கூட அந்நிய படையெடுப்பின் போது பாதுகாப்பாக இருக்கும் படியாகத்தான் அது அமைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே அதை விஞ்ஞானிகள் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : அதைத்தான் சொன்னேன். அது லோடட் கன் என்று சொன்னேன், எந்த நேரம் வெடிக்கும் யாரால் வெடிக்கும்—அது தெரியாது. யாருடைய கெட்ட நேரத்தில் வெடிக்கும் என்பதும் தெரியாது. ஆகவே தான் அப்படிப்பட்ட லோடட் கன் அந்த இடத்திற்கு வேண்டுமா என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதனாலேதான், இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்துக் கொண்டு, அந்த நிலையம் தமிழ்நாட்டிலே அமைவதற்கு இந்த அரசு சம்மதம் கொடுத்தாலும் கூட, நாங்கள் மத்திய அரசை வலியு றுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொண்டு இது அமைகிற காரணத்தால் அதிலே உற்பத்தியாகிற மின்சாரம் 75 சதவீதமாவது நம்முடைய மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று அவர்களிடத்திலே கூறி இருக்கிறோம்.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தத் தொழில் பற்றிய மானியத்தின் மீது ஏற்கெனவே எங்களுடைய கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் வெள்ளிங்கிரி அவர்கள் பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் எங்களுடைய கட்சி யினுடைய கருத்துக்கு இணங்க சில விவரங்களைச் சொல்ல முற்படுகிறேன்.

முதலாவதாக பொதுத் துறையின் மீது தாக்குதல் நடத்துவது என்பது ஒரு மோஸ்தராக இப்போது வேகமாக வந்துக் கொண்டி ருக்கிறது என்பது எங்களுக்குத் தெரிகிறது. ஆரம்பத்திலே பொதுத் துறையை இந்திய நாட்டிலே ஏற்படுத்திய காலத்திலே பண்டிட் ஜவஹர்லால் நேரு ஐந்தாண்டு திட்டத்தை அமைத்து இந்திய நாடும் திட்டம் போட்டு பொருளாதாரத்தை வளர்க்க முடியும் என்ற நிலையில் கொண்டு வந்தபோதே இந்த நாட்டில் இருந்த ஏகபோக பணக்காரர்களும் பெரு முதலாளிகளும் அதை தாக்கி னார்கள். ஆனால் சாதாரண அரசியல் கட்சியைச் சார்ந்தவர் களோ, மற்றவர்களோ அதை தாக்கியதை நாம் அப்போது அவ்வள வாக பார்க்கவில்லை.. இப்போதுள்ள நிலைமையிலே பொதுத் துறையிலே ஊழல் மலிந்திருக்கிறது. தனியார் துறையிலே இருக்கிற உயர்ந்தபட்ச ஊழல் இப்போது பொதுத் துறையின்

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 18

உள்ளே புகுந்து அந்தப் பொதுத் துறையை கலைக்கவோ அல்லது
பல தந்திரங்களைப் பயன்படுத்தி பொதுத் துறையை அரசிடத்
திலிருந்து எடுத்து அதை தனியாருக்கு பயன்படுத்துவதற்கு தரக்
கூடிய முறையிலே தான் அது இருக்கிறது என்பதை திட்டவட்ட
மாக நான் சொல்ல விரும்புகிறேன்.

12-10 மணி

அந்தப் பொதுத் துறையின் மீது இருக்கிற தாக்குதலை இந்திய
மக்கள் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அந்தத் தாக்குதலை
எதிர்த்து முறியடித்தாக வேண்டும். அரசாங்கமும் அதிலே உறுதி
யாக நிற்க வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த
மாநிலத்தினுடைய பொதுத்துறை இருக்கிறது, அதிலே பல
தொழிற்சாலைகள் இருக்கின்றன. பல நிதி ஸ்தாபனங்கள் இருக்
கின்றன. ஆகவே இது நமது கடமையாக ஆகிறது என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக நம்
தமிழ்நாட்டில் ஏற்பட வேண்டிய தொழில் வளர்ச்சி வேகமாக
ஏற்பட வேண்டிய தொழில் வளர்ச்சி அதற்காகப் பல கடமைகளை
ஆற்ற வேண்டியிருக்கிறது. நமது முதல்வர் அவர்கள் முன் வைத்து
இருக்கும்படியான மானிய கோரிக்கைகளில் சொல்லப்பட்டிருக்கக்
கூடிய நல்ல அம்சங்களை எல்லாம் நாம் ஆதரிக்கிறோம். அவற்றை
வளர்த்து முன்னுக்கு கொண்டு செல்வதற்காக தமிழக மக்களு
டைய ஒத்துழைப்பு மட்டுமல்ல இந்திய அரசாங்கத்தினுடைய
பரிபூரணமான ஒத்துழைப்பும் அதற்குத் தேவையாக இருக்கிறது.
மத்திய அரசினுடைய ஒத்துழைப்பை பெறாமல், பெரும் தொழில்
களை, கனரக தொழில்களை அல்லது அடிப்படைத் தொழில்களை
இப்படிப்பட்ட தொழில்களை நம்மாலே தனியாக உருவாக்க
முடியாது. ஆகவே மத்திய சர்க்கார் அப்படிப்பட்ட விஷயத்தில்,
அதுவும் இன்றைக்கு புதிதாக வந்திருக்கக்கூடிய தேசிய முன்னணி
அரசாங்கம் அப்படிப்பட்ட கொள்கைக்கு இசைவாக அவர்
களுடைய கொள்கைகளை பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள்.
அந்த ஆதரவை நாம் தேடிப் பெறவேண்டி இருக்கிறது இந்தச்
சந்தர்ப்பத்தில். அப்போதுதான் தமிழகம் அதிகமாக முன்னேறு
வதற்கான சூழ்நிலையும் நமக்கு ஏற்படும். அதைச் செய்ய
வேண்டும். மத்திய அரசினுடைய முதலீட்டைப் பெற வேண்டும்.
ஏற்கனவே முன்பு இருந்த மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு
முதலீட்டை செய்யாமல் ஓரவஞ்சனையாக நடந்திருப்பதைகுறித்து
ஏராளமான விவரங்களை இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லி
யிருக்கிறோம். ஆகவே இனிமேல் அப்படிப்பட்ட நிலைமை
வராமல் மத்திய சர்க்காருடைய முதலீட்டை நாம் அதிகமாக
கோரிப் பெற வேண்டும். கரூர் திண்டுக்கல் அகல இரயில் பாதை
அமைக்கப்பட்டிருக்கிறது. என்னைக் கேட்டால் எங்களுடைய
கருத்து கன்னியாகுமரி வரைக்கும் இந்த சிறிய இரயில் என்று
இருக்கிறதே மீட்டர்கேஜ் இதை முழுவதும் அகல இரயில் பாதை
யாக ஆக்க வேண்டும். நேரடியாக டெல்லியிலிருந்து



1990 ஏப்ரல் 18] [திரு. கே. ரமணி]

கன்னியாகுமரி வருகிற வரைக்கும் திருவனந்தபுரம் வழியாக
திருச்சி மற்ற பகுதிகளுக்குப் போகாமல் திருவனந்தபுரம் வழியாக
போகும்படியான அகல இரயில் பாதையை பார்க்க வேண்டும்,
அதே மாதிரி இந்தப் பகுதி முழுவதும் அகல இரயில் பாதையாக
மாற்ற வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் வெகு வேகமாக
இதை மின் மயமாக்க வேண்டியிருக்கிறது. அப்பொழுது மின்சார
உற்பத்தி ஒரு மிக முக்கிய அம்சம். அப்பொழுது தான் கூடங்குளம்
எல்லாம் வேண்டாமா என்ற பிரச்சினை எல்லாம் அதிலே ஏற்படும்.
ஆகவே மின் மயம் ஆக்குவதும் மிக முக்கியமான ஒரு அம்சம்
ஆகும். அப்பொழுது வர்த்தகம் பெருகுவதற்கும் போக்குவரத்து
முதலிய நல்ல வசதிகள் ஏற்படுவதற்கும் தொழில் வளர்வதற்கும்
அது மிகப் பெரிய சந்தர்ப்பத்தை உருவாக்கும். அதே மாதிரி,
இதே அவையில் நாம் விரிவான விவாதத்தை, இந்த அரசுக்கு
முன்பு இருந்த அரசு இருக்கும்போது நடத்தியிருக்கிறோம். அது
சேது சமுத்திர திட்டம். அது கடல்களை இணைத்து பல ஆயிரக்
கணக்கான கிலோ மீட்டர் தூரம் சுற்றி வளைத்து கப்பல்களும்
பொருள்களும் வருவதை சுலபப்படுத்துவதற்கான விவாதத்தை
நாம் நடத்தியிருக்கிறோம். அந்த சேது சமுத்திர திட்டத்தை
மேலும் எடுத்து தொடர்ந்து மத்திய அரசினுடைய பரிபூர்ணமான
ஒத்துழைப்போடும் மூலதன உதவியுடனும் அந்தத் திட்டத்தையும்
நாம் கொண்டு வருவதற்கான வற்புறுத்தல் தொடர்ந்து நடக்க
வேண்டும். அப்படி அகல இரயில் பாதையையும் மின்மயமாக்கு
வதும் கப்பல் போக்குவரத்துடைய நல்ல அமைப்பும் உருவாக்
கப்பட்டால், அது தமிழகத்தில் தொழில் வளர்வதற்கு இன்னும்
நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கும்.

அதே மாதிரி நாகப்பட்டிணம் இன்றைக்கு ஒரு எண்ணெய் வளம்
நிறைந்திருக்கும்படியான ஒரு தாலுகாவாக கடற்கரை ஓரம்
இருக்கிறது. அங்கே ஒரு அனல் மின் நிலையம் உருவாக்க வேண்டு
மென்று இதே மன்றத்தில் நமது மாண்புமிகு வீரையன் பலமுறை
சொன்னதை உங்கள் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.
அந்த வேலை ஆரம்பித்து, இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது
என்ற செய்தி இருக்கிறது. மின் நிலையத்தை பொறுத்தவரையில்
நாகப்பட்டிணத்திலே இருக்கும்படியான மிக முக்கிய அம்சம் அந்த
எண்ணெய் வளத்தை முழுவதும் நாம் பயன்படுத்துவது என்பது.
மத்திய சர்க்கார் தான் பயன்படுத்துவதற்கு வேண்டிய சகல
காரியங்களையும் செய்கிறது. இப்போது எண்ணெய் ஏராளமாக
எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இன்னும் ஏராளமாக எண்ணெய்
இருக்கிறது. கடலுக்கு உள்ளே இருந்து கூட எண்ணெய்
நமக்கு கிடைக்கக்கூடிய டெவலப்மென்ட் கூட
யும், கேஸ்ும் நமக்கு ஒரு மிகப் பெரிய எண்ணெய் சுத்தி
அங்கே வரலாம். அப்போது முதல் ஸ்டேஜிலே கொஞ்சம்
கரிப்பு ஆலை வரலாம், இப்போது முதல் ஸ்டேஜிலே கொஞ்சம்
சுத்திகரிப்பு நடத்தக் கூடிய ஒரு திட்டம் வந்திருக்கிறது.

[திரு. கே. ரமணி]

12–15 மணி [1990 ஏப்ரல் 18

அது அல்லாமல், அது விரிவான முழுமையான ஒரு ஃபுல் ரிபைனரி—ஆக ஆக்கப்பட்டு அதிலே பெட்ரோ—கெமிக்கல் என்ற மாதிரி, பெட்ரோலும், டீசலும், ஹைஸ்பீட் டீசலும், நாப்தாவும் வேறு பல உப பொருட்களும் உற்பத்தி பண்ணக் கூடிய ஒரு முழு நிறைவு கொண்ட ஒரு சுத்திகரிப்பு ஆலையாக மாற்றிக் கொண்டு வந்தால் பல உப தொழில்கள் அங்கே வளர் வதற்கு சந்தர்ப்பம் இருக்கும். அந்த நிலைமை ஏற்பட்டால் தஞ்சாவூர், தமிழ்நாட்டினுடைய நெற்களஞ்சியமாக இருப்பதோடு இப்படிப்பட்ட ஒரு பெரிய தொழில் வளமும் அங்கே வருவதற்கு முடியும் என்பது மிக, மிக நல்ல அம்சம். அதற்கு வேண்டிய நிலைமைகளை நாம் ஏற்படுத்த வேண்டும்.

அதேமாதிரி, நீலகிரி மலையிலே இருக்கின்ற 'இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனி'. இதே அவையிலே நாம் பல தடவை விவாதித்து இருக்கிறோம். கலர் பிலிம் வந்ததை. இங்கே எந்ததை தடுத்து, அங்கே இருக்கிற தொழிலாளிகளும் ஜனங்களும் அந்தக் கலர் பிலிம் அங்கே உருவாக்கப்பட வேண்டும் என்று போராடியும் அது மாற்றப்பட்டு. வேறு உ.பி. பக்கத்திற்கு எங்கோ போய்விட்டது என்று அப்போது சொன்னார்கள். ஆனால் இந்திய நாடு முழுவதற்கும் எக்ஸ்ரே பிலிம் இன்றைக்கு விநியோகிக்கப்படுவது அங்கே இருந்துதான். அந்த ஒரே ஒரு ஸ்தாபனம் தான். இப்போது அந்த ஸ்தாபனத்தினுடைய உற்பத்தி எவ்வளவு குறைந்திருக் கிறது என்ற ஓர் அபாயம் இருந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி குறைந்து கொண்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இருக்கும்படியான ஜம்போ பிலிம் எடுத்து, கட் பண்ணி, சைஸ் பண்ணி அனுப்பக்கூடிய வேலைதான் நடக்கிறது. அதிகமாக, பிலிம் உற்பத்தி குறைகிறது. அப்போது இந்த எக்ஸ்ரே பிலிம் முழுவதும் உற்பத்தி பண்ணுவது. கலர் பிலிம் உற்பத்தி பண்ணுவது இப்படி அந்தத் தொழில் இன்னும் 1,500 2,000 பேருக்கு அதிகப்படியான வேலை கொடுக்கக்கூடிய வசதி இருக்கக்கூடிய இடம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே வற்புறுத்தி இருக்கிற விஷயம் தான். அதை தொடர்ந்து வற்புறுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்தது, மின்சார உற்பத்திப் பெருக்கம். நம்முடைய அறிக்கையிலே சில அம்சங்கள் எல்லாம் இருக்கின்றன. கூடங் குளம் மின்சார நிலையம், அதை உண்டாக்குவது எவ்வளவு பெரிய அபாயம் என்பது—நான் நினைக்கிறேன். போபாலிலே நடந்ததே, 'மேகன் டிராஜடி' விஷ வாயு உற்பத்தி பண்ணி அன்னிய நாட்டு வெள்ளைக்கார கம்பெனி இந்த நாட்டிலே 2,000 தொழிலாளிகள் உயிரிழந்தார்கள்,



1990 ஏப்ரல் 18] [திரு. கே. ரமணி]

சில ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கஹீனமானார்கள். ஆனால் இனிமேற்கொண்டு விஷவாயு எந்த உலகத்திலும் மனிதனைக் கொல்வதற்கு விஷ வாயு தேவையில்லை என்பது உண்மை. யுத்தத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய அப்படிப் பட்ட உற்பத்தி நமக்குத் தேவையில்லை என்பதும் உண்மை. ஆனால் விஷவாயு உற்பத்தி பூராவும் நின்று போய்விட்டதா? இப்போது நாட்டிலே அப்படிப்பட்ட ஒரு தன்மை இல்லை. இந்த அணுவினைப் பயன்படுத்துவது என்பது, பல்வேறு தொழில்களில் அணுவைப் பயன்படுத்துகிறோம். அணுவின் மூல மாக மின்சாரத்தை, மற்ற அனல் மின்சாரம், புனல் மின்சாரம் ஆகியவற்றை உண்டாக்குவதை ஏராளமாக, அதிகப்படியான மின்சாரத்தை உண்டு பண்ணக்கூடிய ஒரு தொழில். அதில் கெடுதல் ஏற்படாமல், சகலவிதமான பாதுகாப்புகளோடும் கெடுதல் ஏற்படுமானால் அதை முன்னின்று தவிர்க்கக்கூடிய முறையிலும் பாதுகாப்போடும் அது உருவாக்கப்படவேண்டுமே தவிர, அந்தத் தொழிலே கூடாது என்று சொல்வது சரியானது அல்ல. அந்த நிலையில் அந்த கூடங்குளம் மின்சாரத் திட்டம் வளரவேண்டும். அது நமக்கு ஏராளமான மின்சாரம்——நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, 75 சதவிகிதம் அந்த மின்சாரம் நமக்குக் கிடைக்கட்டும். அதில் இருந்து இன்னும் அது தமிழ்நாட்டினுடைய தொழில் பெருக்கத் திற்கு ரொம்ப உதவியாக இருக்கும்.

அதேமாதிரி ஏற்கெனவே இந்த அவையிலே நான் எடுத்துச் சொன்ன ஒரு விஷயம். நீலகிரி மலையிலே பாண்டியாறு–புன்னம்புழா பிரதேசத்தில் நமக்குக் கிடைக்கவேண்டிய 100 மெகாவாட் மின்சாரம். அது தண்ணீர்ப் பிரச்சினையினால் நின்றிருக்கிறது. தண்ணீர் நமக்கு அவர்களிடமிருந்து எவ்வளவு கேட்டு, கொடுப்பதற்கு கேரள அரசாங்கத்தோடு பேசி ஒப்பந்தம் செய்ய முடியுமோ அந்த வகையில் அதைச் செய்து கொண்டு, அந்தத் தண்ணீரைப் பெறலாம். ஆனால் இந்த மின் உற்பத்தி தடைப்படக்கூடாது. 100 மெகாவாட் மின் உற்பத்தி, அது திட்டக்கமிஷன் '1965-லே ஒத்துக் கொண்டதிலிருந்து இன்றைய வரைக்கும் அது செய்யப்படாமல் இருக்கிறது. அந்த 100 மெகாவாட் உற்பத்தியும் நமக்குத் தான் கிடைக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தது, ஒரு விஷயம். நான் இப்போது கேள்விப் பட்டது, பைகாராவிலே இருக்கும்படியான ஒரு விரிவாக்கத் திட்டம். சிங்காராவிலே அந்த 100 மெகாவாட் மின் உற்பத்திக் கான ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்காக, 'ஜங்கிள் கிளியரன்ஸ்' — அந்தப் பிரதேசத்தை சுத்தப்படுத்தி, குடியிருப்பு வீடுகளை உருவாக்கி, ரோடுகள் போட்டு, அல்லது ஆரம்ப இன்ஃப்ராஸ்ட்ரக்சர் வேலைகளுக்கு எல்லாம், அந்த வேலைகளில் ஒரு ஆயிரம் பேருக்கு மேற்கொண்டு தொழிலா ளர்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தது, இப்போது நிறுத்தப்

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 18

பட்டு, 50 பேர்தான் அங்கே வேலை செய்து கொண்டிருக்
கிறார்கள். அந்தத் திட்டம் வேலை செய்யப்படாமல்
அப்படியே ஒய்ந்து நிற்கிறது என்று கேள்விப்பட்டது உண்மை
யானால் அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க
வேண்டும். ரூ. 350 கோடியிலே வரக்கூடிய அந்தத் திட்டம்
வேகமாக செயல்படுத்தப்படவேண்டும். இந்திய அரசு
முன்னே, இதற்கு முன்னால் இருந்த அரசு இருந்தபோது,
இதே அவையில் 13 திட்டங்கள் என்று எனக்கு ஞாபகம்.

12-20 மணி

நீர் மின் திட்டங்கள். அவற்றுக்கு எல்லாம் ஒப்புதல் தராமல்
அத்தனையும் மூலையில் போட்டு வைத்து இருந்தார்கள்.
ஒகனேக்கல் திட்டம் அப்போது பேசப்பட்டது. அந்த 13
திட்டங்களில் எது எது நிறைவேற்றப்பட்டதோ அது போக
பாக்கி இருக்கிற திட்டங்கள் அத்தனையையும் நிறைவேற்று
வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். மத்திய
அரசு ஒப்புதல் மட்டும் அல்ல, மத்திய அரசு இந்த
அளவுக்கு வளர்ச்சி ஏற்படும்போது அந்த அளவுக்கு
பொருளாதார துறையில் இந்த தொழில்கள் வளர்ந்து கொண்டு
போக இந்த அரசு தமிழக மக்களுக்கு அவர்கள் உதவி
வேண்டாமா? அதையும் செய்ய அவர்களை கேட்டுக்கொள்ள
வேண்டியிருக்கிறது.

அடுத்து சிமெண்ட் உற்பத்தி. இன்றைக்கு தமிழ்நாட்டில்
நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அரசாங்கத் துறையில்
சில சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன, இன்னும்
நான் குறிப்பிட்டுச் சொன்னால் கோவை மாவட்டத்திலும்,
சேலம் மாவட்டத்திலும் புதிய சிமெண்ட் தொழிற்சாலை
உண்டாக்குவதற்கான நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதற்கு
வேண்டிய பிரதான மூலப்பொருள் சுண்ணாம்புக் கல், அது
ஏராளமாக இருக்கிறது. நூற்றுக்கணக்கான வருடங்கள்
எடுக்கும்படியான சுண்ணாம்புக் கல் இருக்கிறது. அடுத்து,
ஜிப்சம், அந்த ஜிப்சம் கல்லை நாம் இன்றைக்கு வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கல்
இந்த சிமென்டுக்குத் தேவை. அதற்கு மேல் களிமண், அது
நமக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். அடுத்து கரி. கரி
ஒன்று தான் நாம் பீகார், உத்திர பிரதேசம், ஆந்திரா போன்ற
இடங்களிலிருந்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. இந்த
நான்கும் சேர்ந்தது தான் சிமென்ட். இன்றைக்கு இந்திய
நாட்டில் பெரும்பாலான சிமெண்ட் தொழிற்சாலைப் பணி
யாளர்கள் பெரு முதலாளிகள் கையில் இருப்பதால் அவர்கள்
இப்படிப்பட்ட அதிகாரத்தினால் மனித உழைப்பின் அடிப்
படையில் வரவேண்டிய தொழிலை அவர்கள் மனித உழைப்பை
குறைத்து ஆட்குறைப்பு செய்து ஒருசில பேர்களை வைத்து



1990 ஏப்ரல் 18] [திரு. கே. ரமணி]

சிலாப் சிமெண்ட் உண்டாக்கி அதன் மூலம் லாபம் பெறுகின்ற
ஒரு குறிக்கோளைப் பெறுகிறார்களே தவிர, நாடு முழுவதும்
இப்படிப்பட்ட மினி சிமென்ட் தொழிற்சாலைகள் உண்டாக்க
முடியும். அந்த சிமெண்ட் தொழில்களை வளர்ப்பதற்கு நமது
அரசு இன்னும் மத்திய அரசோடு கலந்து பேசி அதிகப்படியான
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்ஜினியரிங் தொழில். தமிழ்நாட்டில் இது
வளர்ந்து வரக்கூடிய தொழில். சென்னைக்கு அடுத்தபடியாக
கோவை நகரத்தில் இன்ஜினியரிங் தொழில் வளர்கிறது.
ஆகவே அங்கே நூற்றுக்கணக்கான இன்ஜினியரிங் சிறு சிறு
மிஷின்கள் உற்பத்தி செய்யும், ஒர்க்ஷாப்புகள் மட்டும் அல்ல,
600, 700க்கு மேற்பட்ட பவுண்டரிகள் வார்ப்பட தொழிற்
சாலைகள் இருக்கின்றன. இந்த தொழிற்சாலைகளுக்கு
எல்லாம் மிக முக்கியமான தேவையான மூலப்
பொருள்—இந்த மன்றத்திலே நான் முன்பு எடுத்துச் சொல்லி
அதற்கு நெருக்கடி வந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் கூட உடனடியாக நடவடிக்கை எடுத்து கோக், பிக்
அயர்ன் போன்ற மூலப்பொருட்களை நமக்கு கிடைக்கச் செய்
தார்கள். ஆனால் இன்றைக்கும் அந்த நெருக்கடி அதிகமாக
இருக்கிறது. அங்கிருந்து அவர்கள் சொல்கிறார்கள், ஒரு மினி
ஸ்டீல் பிளாண்டை கோவையில் உண்டாக்கி அதில் பிரத்தியேக
மாக பிக் ஐயர்ன் அதிகமாக உற்பத்தி செய்து எடுப்பதற்காக,
ஒவ்வொரு உருக்குத் தொழிற்சாலையிலும் 15 சதவீத பிக்
அயர்ன் உற்பத்தி செய்து அதை தேவையான இடங்களில்
எல்லாம் விநியோகம் செய்யவேண்டும் என்று மத்திய அரசு
அதற்கு நார்ம்ஸ் நிர்ணயம் செய்தாலும் அனேக உருக்குத்
தொழிற்சாலைகளில அதை சரியாக உற்பத்தி செய்வது இல்லை.
உருக்குக்கு விலை அதிகமாக கிடைக்கவில்லை. அரசாங்கத்
தொழிற்சாலைகளிலிருந்து கூட அந்த நார்ம்ஸ் படி உற்பத்தி
செய்வது இல்லை. கோவையில் தேவையான இந்த உற்பத்தி
வேண்டும் என்று கோவையில் இருக்கக்கூடிய சிறிய, நடுத்தர
முதலாளிகள் அனைவரும் டெல்லிக்குப் போய் இதைப்பற்றி
ரெப்ரசன்டேஷன் பண்ணி இந்த தமிழக அரசுக்கும் அவர்கள்
ரெப்ரசன்டேஷன் அனுப்பியிருக்கிறாகள், இந்த மினி ஸ்டீல்
பிளாண்ட் உண்டாக்குவதற்கு ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
மத்திய அரசு ஒப்புதல் தர தயார் என்ற நிலை இருக்கிறது.
ஆனால் தமிழக அரசினுடைய ஒப்புதல் கிடைக்கவேண்டும்,
தமிழக அரசு இதிலே இன்னும் முன்னுக்கு வந்துவிஷயங்களை
சொல்லவில்லை என்ற ஒரு விஷயம் பத்திரிக்கையில் வெளி
வந்தும், அவர்கள் எழுதிய கடிதம் எனக்கு அனுப்பி வைத்து
இருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி அரசு கவனத்தில் எடுக்க
வேண்டும். 30-3-90ஆம் தேதி அந்த கடிதம் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள்
என்று எனக்கு தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி வந்து

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 18

விட்டால் நமக்கு ஏராளமாக இன்ஜினியரிங் தொழிற்சாலைகள்
இன்னும் வளர்ச்சி அடையும். இப்போது ஒருசில முதலாளிகள்
தான் 30 கோடி, 40 கோடி ரூபாய் போட்டு இன்ஜினியரிங்
தொழிலை நடத்துகிறார்கள். ஆனால் பரவலாக ஆயிரக்
கணக்கான இன்ஜினியரிங் தொழிற்சாலைகள் வரும். இதை
கூட்டுத் துறையிலும் அவர்கள் ஏற்படுத்த தயார். சிறு
பவுண்டரி ஓனர்ஸ்–அவர்கள் அனைவரும் சேர்ந்து வைத்து
இருக்கிற ஸ்தாபனமே கூட்டுத் துறையிலும், அரசாங்கத்துடன்
சேர்ந்தும் அவர்கள் செய்ய தயார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல் சேலம் ஸ்டீல் பிளான்ட். அது முழுமையாக
வளர்ச்சி அடைந்து அங்கேயே இரும்பு மூலத்தை மலைகளி
லிருந்து தோண்டி எடுத்து அதை உருக்கி தேனிரும்பு ஆக்கி அதை
ஸ்டீல் ஆக, பலவிதமான ஸ்டீல் ஆக கொண்டு வரக்கூடிய ஒரு
ஃபுல் பிளட்ஜ்டு ஸ்டீல் பேக்டரியாக அது ஆகவேண்டும்.
அதற்காகத்தான் இங்கே போராடினார்கள். தமிழகம்
முழுவதும் போராடி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்
கழகம் நடத்தி இருக்கக்கூடிய ஒரு பெரியக்கப் நடத்தியிருக்
கிறது. அதுபற்றி நாடு முழுவதும் மக்கள் அன்றைக்கு ஆதரித்து
இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் திட்டத்தை கொண்டு
வரவேண்டும். இப்போது அதனுடைய விஸ்தரிப்புக்காக ஒரு 69,
70 கோடி ரூபாய் 70 ஆயிரம் டன் வரை உற்பத்தி செய்வது
என்று சொல்லி, என்னைக் கேட்டால் இந்த பாத்திரம் செய்யக்
கூடிய எவர்சில்வர் ஸ்டீல் இருக்கிறதே, அது முழுவதையும் தகடு
வெட்டி சைஸ் ஆக்கி அனுப்புகிற கம்பெனியாக அது செயல்
பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமை மாறவேண்டும். அந்த
மலைகளில் இருக்கிற இரும்பு மூலத்தைத் தோண்டி எடுத்து
உருக்கி, உருக்குத் தொழிற்சாலையாகச் செயல்படவேண்டும்.

12-25 மணி

அப்படி உருக்குத் தொழிற்சாலையாக அந்த சேலம் ஸ்டீல்
தொழிற்சாலையை செயல்படச் செய்ய வற்புறுத்த வேண்டும்.
அப்புறம் 400 கோடிக்கு அபிவிருத்திக்கான 8வது திட்டத்
தில் மத்திய அரசு அதைச் சேர்ப்பதாகவும் செய்திகள்
இருக்கின்றன. அதை வற்புறுத்தி 8வது திட்டத்தில் சேர்த்து
சேலம் ஸ்டீல் தொழிற்சாலை வளர்க்கப்படவேண்டும். அதில்
இருந்து நமக்குத் தேவையான 'பிக் அயர்ன்' கிடைக்கும்,
கோவையில் இருக்கிற சிறு இன்ஜினியரிங் தொழில், சிறிய—
நடுத்தர தொழிற்சாலை, கிட்டத்தட்ட 2,000 அளவில்
இருக்கின்றன, 600—700 வார்ப்பட தொழிற்சாலைகள்
(பவுண்டரீஸ்) இருக்கின்றன. அதற்கு, தேனிரும்பு தேவை.
அதற்கு நெருக்கடி இருக்கிறது. அடுத்தது கோக் தேவை.
அங்கே சப்–டிப்போவை ஏற்படுத்தினால் கூட பெரும் பணக்
காரர்களுக்குக் கிடைக்கும்படியான அந்த மூலப் பொருட்களை
இவர்களுக்குக் கிடைக்காமல் செய்ய பலவிதமான தந்திரங்களை



[திரு. கே. ரமணி]
1990 ஏப்ரல் 18]

அங்கே செய்து அதை குறைக்கிறார்கள். அந்தக் கஷ்டங்களை
போக்குவதற்காக அவர்கள் எல்லாம் உண்ணாவிரதம் கூட
இருந்தார்கள். அந்த சமயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்
கோவைக்கு வந்தபோது, உண்ணாவிரதம் இருந்தவர்களைக்கூட
பார்த்துப் பேசினார்கள். அவர்களுக்கு அது சரியாக கிடைக்கும்
படியாக (மணியடிக்கப் பெற்றது) அதற்குத் தகுந்த சில
நடவடிக்கைகளை எடுத்தார்கள். இது தொடர்ந்து வருகிறது.
அது தொடராமல் இருப்பதற்கு, பவுண்டரீஸ் நிற்காமல் இருப்
பதற்கு, 'கோக்' கும், 'பிக் அயர்னும்' தொடர்ந்து சப்ளை
கிடைக்கிற அளவுக்கு பேசிக் டிப்போவை அமைத்து அவர்களுக்கு
தேவைப்படுகிற அளவுக்கு கிடைக்க நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

அடுத்தது சிலிக்கான் சாண்ட், அவர்களுக்கு தேவை இருக்
கிறது. அது கேரளாவில்தான் அதிகமாகக் கிடைக்கிறது.
அவர்கள் முடிந்த அளவுக்கு அங்கே இருக்கிற பெஸ்ட் குவாலிட்டி,
வார்ப்பட தொழிற்சாலைகளுக்குத் தேவையானது. நமது தமிழ்
நாட்டில் அந்த சிலிக்கான் சாண்ட் கிடைப்பதற்கு வழி இருக்
கிறதா என்பதை பரிசீலிக்கவேண்டும். அது விஞ்ஞானிகள்
பார்த்துச் செய்யவேண்டிய வேலை. செய்தால் அது
பிரயோசனப்படும். அந்த நிலைமையை கவனிக்க வேண்டி
யிருக்கிறது.

அதேமாதிரி, மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை உடனடி
யாகத் திறந்து நடத்துவதற்கு வேண்டிய—பிரத்தியேகமான
முறையில் சொல்லவேண்டுமென்றால் பஞ்சாலைகள் மூடிக்கிடக்
கின்றன என்று சொல்லலாம்—அப்படி 8—9 தொழிற்சாலைகளை
திறந்து இப்போது அவை நடக்கின்றன. அதைப் பார்த்துக்
கொண்டிருக்கிறோம். இன்னும் திறக்கவேண்டிய முக்கியமான
பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேட்டூர் தொழிற்
சாலை, வசந்தா மில், ஜனார்த்தனா மில் என்று பல பெரிய
தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளை நடத்துவதற்கு
வேண்டிய சில விஷயங்களை டிபார்ட்மெண்ட் அதிகாரிகள்
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் அரசாங்கத்தின்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்றால்
அந்தத் தொழிலாளிகள் எல்லாம் வருஷக்கணக்காக பட்டினி
கிடக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கும்போது,
நிர்ப்பந்தம் போடுகிறார்கள். உயிர் வாழவேண்டிய நிர்ப்பந்தத்
தால், அவர்களை வேலைக்கு எடுக்கும்போது, சென்ற
காலத்தில் அவர்கள் போராடிப் பெற்றிருக்கும்படியான
நியாயப்படிப் பெற்றிருக்கும்படியான அவர்களுடைய குறைந்த
பட்ச ஊதியமும், மற்றவிதமான சலுகைகளையும் குறைத்த
தோடு அவற்றையெல்லாம் விட மனதிற்கு ஒரு கஷ்டத்தைக்
கொடுக்கக்கூடிய முறையில் இப்போது புதிய நிர்ப்பந்தங்களை
திணித்து ஒப்பந்தங்களை உருவாக்குவது நல்லதல்ல, அவர்கள்

144369
V 21 3 '№70
N 90 28.3

[திரு. கே. ரமணி] [1990 ஏப்ரல் 18

எந்த விஷயத்திலும் உரிமைகளை இழக்காமல், அந்த
தொழிலும் நடக்கவேண்டும்—அந்த தொழிலாளர்களும் வாழ
வேண்டும்—நாட்டுக்கு வேண்டிய உற்பத்தியும் கிடைக்கும்
படியான வகையில் அந்த அதிகாரிகள் காரியங்களைச்
செய்ய வேண்டுமென்று அரசு பணிக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இந்த நிலைமையில் நமது தொழில் நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு, நமது தொழில்கள் முயற்சி முன்னேற
வேண்டும். தமிழ்நாட்டில் பேசும்போது, நாம் தொழிலில்
ஏதோ ஒன்றும் இல்லாதவர்களாகப் போய்விட்டோம் என்று
சித்திரம் தீட்டுவது சரியாக இருக்காது. நமக்கு தொழில்
வளர்ச்சி போதவில்லை, லட்சம் லட்சமான கிராம மக்களுக்கு
அத்தியாவசியமான நிலச்சீர்திருத்தம் சரியான முறையில் நடத்
தாமல் இருப்பதால். அதிலேயும், ஏகாதிபத்தியம் நாட்டை
விட்டு வெளியிலே போனதற்குப் பிறகு, வரவேண்டிய முதல்
சீர்திருத்தம் நிலச் சீர்திருத்தம். நிலத்தை உடைத்து மக்கள்
மத்தியில் விநியோகிக்கப்படவேண்டும். அது வந்தால் கிராம
மக்கள் மத்தியில் இந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம்
என்பது இருக்காது. கிராம விவசாயிகள், நிலமற்ற ஏழை
எளிய விவசாயிகள் 'பாப்பர்'களாகி, இன்றைக்கு நகரத்தைப்
பார்த்து படையெடுக்கிற நிலைமை வந்திருக்காது. அப்படிப்
பட்ட நிலச் சீர்திருத்தம் வரவில்லை. நாம் முயற்சிகள் எடுக்
கிறோம். அது ஒன்றும் நடக்கவில்லை. நிலச் சீர்திருத்தம்
செய்யவேண்டிய முயற்சிகளை நாம் செய்யவேண்டியிருக்கிறது.
அதைப்பற்றி எங்களுடைய ஆலோசனைகளையெல்லாம் இந்த
மன்றத்தில் வைப்போம்.

12.30 மணி

அந்தமாதிரி கிராமத்து மக்களுக்கு, லட்சக்கணக்கான
மக்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். அப்படியானால்,
தொழில் வளர்ச்சி என்பது ஏற்பட வேண்டும். சென்னை
நகரம், ஓரளவுக்கு தொழில் வளர்ந்து வருகிற நகரம்தான்.
அடுத்து, கோவை நகரம் வளர்ச்சி அடைகிறது. திருச்சி ஜில்லா
விலே, பல தொழில்கள் வளர்கின்றன. அதேமாதிரி, தூத்துக்குடி,
திருநெல்வேலியிலே பல தொழில்கள் வளர்கின்றன. இந்த
தொழில் வளர்ச்சியெல்லாம் நமக்கு போதாது. அதனால்தான்,
100–க்கு மேற்பட்ட வட்டங்களை, பின்தங்கிய வட்டங்களென
குறிப்பிட்டு, அதற்கு நாம் பணத்தை, சலுகைகளை கொடுத்து,
தொழில்களை வளர்த்து வருகிறோம். பண சலுகைகளை
மட்டும் வைத்து, நம்நாடு தொழில் முழுமையையும் வளர்த்துவிட
முடியாது. அது தூண்டுவதற்காக செய்ய வேண்டிய காரியம்.
அது வர வேண்டும். ஆனால் மத்திய சர்க்காருக்கு—அந்த
மாதிரி சாத்தியப்பாடுகள் ஏற்படுவதற்கு—சிமெண்ட் தொழில்



1990 ஏப்ரல் 18] [திரு. கே. ரமணி]

உண்டாக்க முடியும்; காகித தொழிலை வளர்க்கமுடியும்; என்ஜினி
யரிங் தொழிலை வளர்க்க முடியும்; மோட்டார் கார்—அருமை
யான மோட்டார் கார் என்னென்ன ரகம் தேவையோ, அவற்றை
கோவையிலே உண்டாக்க முடியும்; அதை உண்டாக்க முடியாத
படிக்கு தடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வளர்ச்சியை
உருவாக்குவதற்கு, நமது அரசு, இந்த தேசிய முன்னணி மத்திய
அரசோடு சரியான முறையிலே விஷயத்தை எடுத்துப் பேசி,
ஆதரவும் பணமும் முக்கியமாக அதனுடைய அடிப்படை தேவை
யான மின் உற்பத்திக்கு வேண்டிய சகலவிதமான உதவிகளையும்
பெற்று, தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தால் நாமும்
முன்னேற முடியும். நாம் பின்தங்கி நிற்கிறோம் என்பதை,
வளர்ந்த இடத்தைப் பார்த்து, கம்பேரடிவ் ஆக சொல்லலாம்.
ஆனால், ரொம்ப தூரத்திற்கு பின்தங்கி விட்டோம் என்பதைச்
சொல்லிவிட்டு, இவற்றையெல்லாம் தடுக்க வேண்டிய கஷ்டத்தி
னாலேயும், நிலச்சீர்திருத்தம் பண்ணவேண்டிய கஷ்டத்தி
னாலேயும், லட்சோப லட்ச மக்கள் வேலை கொடுங்கள் என்று
கதவைத் தட்டும்போது ஏற்படக்கூடிய தேவையினாலும், நமக்கு
இன்றைக்கு தொழில் வளர்ச்சி முக்கியம் என்பதை உணர்ந்து,
அதைப் பெறவேண்டியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறோம். அந்த முறையிலே இந்த அரசு செயல்பட
என்பதுதான் எங்களுடைய கருத்து.
வேண்டும்

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
நாட்டிலே தொழில் வளர்ந்தால், வீட்டிலே வளம் பெருகும்
என்ற அடிப்படையில், இங்கு அமர்ந்திருக்கின்ற அனைவருமே
இதில் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில்
தொழில் சிறப்பாக வளரவேண்டுமென்று சொன்னால், நமக்கு
வேண்டிய அனுமதிகளைப் பெற்றுத் தருகின்ற ஒரு சிறந்த
அதிகாரி—ஒரு 'லையசன் ஆபீஸர்' போல் பணியாற்றுகின்ற
அதிகாரி—டெல்லியிலே இருக்க வேண்டும் என்பது என்னுடைய
தாழ்மையான எண்ணம்.

நான் இந்த செய்திகளுக்குப் போவதற்கு முன்னால்,
என்னுடைய சாத்தான்குளம் தொகுதி போன்ற பகுதிகள், மிகப்
பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள், அதனை, தொழில் துறையிலே பின்
தங்கிய பகுதி என்று அறிவித்து, அங்கே பல தொழில்கள்
வருவதற்கான வாய்ப்புகளை, அரசாங்கமே, சிறு தொழில்களை
தொழிற்பேட்டைகளை ஏற்படுத்துகின்ற ஒரு முனைப்பினை
மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன்.

அங்கு இருக்கின்ற மக்களுக்கு எந்தத் தொழிலும் இல்லாத
காரணத்தினாலே, விவசாயத்திற்கும் போதுமான தண்ணீர்
இல்லாத காரணத்தினாலே முதலமைச்சர் அவர்கள், அதனை

ஷ. 2 53-107—14

சற்று கனிவோடு பார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஊரிலே—அந்தத் தொகுதியிலே, பள்ளம் பாளை என்ற இடத்திலும், வள்ளியூருக்கு அருகில் இருக்கின்ற ஊரிலும், ராதாபுரம் தொகுதியில் இருக்கின்ற அந்த ஊரிலும், நிறைய மூலப் பொருட்கள், கற்கள், சுண்ணாம்புக் கற்கள் போன்றவைகள் எல்லாம் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் யாரோ வெட்டியெடுத்துக் கொண்டு போவதுபோல இருக்கிறதே தவிர, அங்கே ஒரு தொழிற்சாலை வருவதற்கான வாய்ப்புகள் இல்லாததால், அந்த வாய்ப்புகளை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளம் பெருகுவதற்கு, மூலதனம் மட்டுமல்ல; தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பு, அரசாங்கத்தினுடைய அக்கறை, இங்கே வந்திருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய கரிசனம், இத்தனையும் இருந்தால்தான், முன்னேறும் என்பது, நாம் அனைவரும் அறிந்த ஒன்று. ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தொழிலாளர்கள் நலமோடு வாழ வேண்டும்; உரிமையோடு வாழ வேண்டும். அதற்கு நாம் நமது ஆதரவை தெரிவிக்கின்றோம். அதே நேரத்தில், அந்தத் தொழிலாளர்களும் தொழிலை நடத்து கின்றவர்களும் இணைந்து செயல்படுகின்ற போதுதான், நல்ல உற்பத்தி வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அது சிறப்பான முறையில் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புவது போல் நடந்து கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்திலே, ஒசூரில், டி.வி.எஸ். குருப்பிலே, 'சுஸுகி' கம்பெனியிலே நடைபெற்ற அந்த ஒன்று, ஒரு கரும்புள்ளி போல மற்றவர்கள் நினைத்துப் பார்க்கிற நேரத்தில், நமக்கு ஒரு அச்சத்தை ஏற்படுத்துவதைப் போல, அது நிகழ்ந்திருக்கிறது என்பதையும், இன்று காலையில் நாம் பேசுகிற நேரத்தில் கூட, தொழிலாளர்களுக்கு உரிமை வேண்டும் என்பதிலே அனைவரும் அக்கறை காட்டினோம் என்பது, இங்கே நான் எடுத்துச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். "தொழிலே கொள்கை" என்பது விவேகானந்த ருடைய தத்துவம்; "முன் நிற்கின்ற தொழிலே தெய்வம்" என்றான் பாரதி. அந்த வகையிலே, ஒரு தொழிற்சாலை வருகிற போது, எவ்வளவு தூரத்திற்கு வளம் பெருகுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்லவேண்டுமென்றால், வெறும் முந்திரித் தோப்பாக இருந்து கொண்டிருந்த நெய்வேலி, இன்று 23 ஆயிரம் குடும்பங்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறது,

12–35 மணி

நேரடி நிலையிலே, இன்னும் அதற்குத் துணையாக இருக்கின்ற தொழில்களை வைத்துப் பார்த்தால் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு மேலே அங்கே வாழ்கிற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. பெரம் பூரிலே இன்டெக்ரல் கோச் பேக்டரி வந்தது என்று சொல்வதற்குப்





பதிலாக இப்போது இன்டெக்ரல் கோச் பேக்டரி இருக்கின்ற இடத் திலே பெரம்பூர் இருக்கிறது என்று சொல்கிற அளவுக்குத் தொழில் பெருகி இருக்கிறது.

ஆசியாவிலேயே மிகச் சிறந்ததும், முதன்மையானதும், முதன் முதலாகத் தொடங்கப்பட்டதுமான கிண்டி தொழில்பேட்டை பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில் இங்கே கொண்டு வரப்பட்டது. அதற்கு அவர் செலுத்திய அக்கறை பற்றி இங்கே இருக்கின்ற அனைவருக்கும் தெரியும்.

நெய்வேலி சுரங்கத்தைத் தோண்டவேண்டும் என்று சொல் கிறபோது வெளிநாட்டு 'நோஹவ்'–உடன் இந்தக் காரியத்தைச் செய்கிறபோது இங்கே இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம் அவர் கூப்பிட்டு 'கப்பலிலே எவ்வளவு பெரிய இயந்திரங்கள் வருகின்றன, அவைகளை எல்லாம் நாம் ஏற்றிக் கொண்டு சாலை வழியாகச் செல்லவேண்டும்' என்று காமராஜர் சொன்னார். அப்படிச் சொன்னபோது 'இந்த இடத்திலே பாலம் சிறிது, இந்த இடத்திலே பாதை குறுகியது' என்று அதிகாரிகள் சொன்னார்கள். 'இந்த இடத்திலே பாதை சிறியது என்றும், இந்த இடத்திலே பாதை குறுகியது என்றும் 40, 50 ஆண்டுகளாகத் தமிழகத்தின் சிற்றூர் களில் எல்லாம் பேரூர்களிலே எல்லாம் சுற்றி வருகிற எனக்குத் தெரியாதது அல்ல; அந்தப் பாலத்திலே இது போக வேண்டும் என்றால் அந்தப் பாலத்தை என்ன செய்யவேண்டும் என்று கேட்பதற்காகத்தான் நான் உங்களைக் கூப்பிட்டேன்' என்று சொல்லி அந்தத் தொழிலைக் கொண்டு வந்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

அருமைக்குரிய சபாநாயகர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன். கொஞ்சம் நேரத்தை நான் எடுத்துக் கொண்டாலும் முதலமைச்சரின் பதிலுரைக்குத் தகுந்தவாறு என்னுடைய கருத்துரைகளை நான் முடித்துக்கொள்வேன்.

இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அப்படிச் சொல்கிற போது நம்முடைய அருமைக்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சென்ற தடவை இருந்த மைய அரசு ஊரவஞ்சனையாக நடந்து கொண்டது என்ற கருத்துக்கள் வருகிற வகையில் சொன்னார்கள். ஆனால் இப்போது ஆளுகிற கட்சியும் மத்தியில் இருக்கிற கட்சியும் ஒன்றாக இருக்கிற காரணத்தால் அந்த இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் உள்ள கலர் பிலிம் தொழிற்சாலை வேறு எங்கேயும் போய் விடாமல் தடுத்து, இங்கே கொண்டுவர வேண்டிய பணியினை நமது அரசாங்கம் நிச்சயமாக நிறை வேற்றும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 18

அடுத்து பொதுத்துறையிலே இருக்கின்ற நிறுவனங்கள் மட்டு மல்லாமல் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் தனியாரும் கூட வருகிறார்கள். அப்படி தனியார்கள் வேலை கொடுக்கிறார்கள் என்று சொன்னால், அப்படி தனியார்கள் வேலை கொடுப்பதினாலே தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், அதாவது அரசாங்கம் செய்கிற ஒரு காரியத்தைத் தொழில் அதிபர்கள் செய்து கொண்டிருக் கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கும் அங்கே ஊக்கம் கொடுக்க வேண்டியதுதான். தொழிலாளர்களைச் சுரண்டு வதற்கு நாம் அனுமதிக்கக்கூடாதே தவிர, அந்தத் தொழிலாளர் களை வாழவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே ஒரு முதலாளி தொழிற்சாலையைப் பெருக்கிக் கொண்டு போவார் என்று சொன்னால் அது நம்மால் வரவேற்கத்தக்கதுதான்.

ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்த முடியுமா, புதிய தொழிற்சாலைகளைக் கொண்டு வர முடியுமா என்று இரண்டையும் நாம் பார்த்துக்கொண்டு போக வேண்டும். இருக்கிற தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதற்கு யார் வந் தாலும் அவர்களுக்கும் உதவி கொடுக்கின்ற மனப்பான்மை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நமது சில கொள்கைகளின் காரணத்தால் இங்கே இருப்பவர்கள் வெளியே போகிறார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. இப்போது டி.வி.எஸ். சம்பெனியினுடைய கிளை திருபுவனம் என்று சொல்கிற அந்த பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் போகிறது. இன்னும் ஒரிஸாவிலே சென்று நாங்கள் கரும்பாலை வைக்கப் போகிறோம் என்று சில தனியார்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும் ஒரேயடியாக கூட்டுத்துறைதான் என்று பொதுத்துறையினை நாங்கள் வரவேற் கிறோம். ஆனால் 'மிக்ஸட் எக்கானமி' என்று சொல்கிற கலப்புப் பொருளாதாரம் இருக்கின்றது என்பதை மனதில் கொண்டு பார்த்தால் இங்கே இருக்கின்ற அந்தத் தொழில் முனை வர்கள் அதாவது 'ஆன்ட்ரிபிரினர்ஸ்' இங்கேயிருந்து அடுத்த மாநிலத்திற்குப் போகவேண்டுமென்று எண்ணம் வரக்கூடாது.

வெளி மாநிலத்திலே இருந்து ஆட்கள் உள்ளே வரவேண்டும் என்பது நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும். இப்போது வெளி மாநிலத்தில் இருந்து இங்கே வருகிறார்கள். குஜராத் காரர்கள் வருகிறார்கள். ராஜஸ்தான்காரர்கள் வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் எல்லாம் வட்டிக்கடை வைப்பதற்காக வருகிறார்கள்/அடகுக்கடை வைப்பதற்கு வருகிறார்கள் என்ற நிலை இல்லாமல் பெரும் முதலாளிகள் பெரும் முதலைப் போட்டு தொழில்களைத் தொடங்குவதற்கு வருகிறார்கள் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அப்படி என்றால் ரெட் டேப்பிஸம் என்பது இருக்கவே கூடாது. நான் இதற்காக



1990 ஏப்ரல் 18] [திரு. குமரி அனந்தன்]

அலைகிறேன்; நான் அதற்காக அலைகிறேன். என்று சொன்னால் யாருக்கும் இங்கே வந்து தொழில் தொடங்குவதற்கு ஒரு முனைப்பு ஏற்படாது. எனவே சிங்கிள் விண்டோ சிஸ்டம் என்று சொல்கிற ஒரே இடத்திலேயே எல்லா அனுமதிகளையும் பெறுகிற அளவுக்கு, அது பணமாக இருக்கட்டும்; அல்லது மின்சார மாக இருக்கட்டும் அல்லது வேறு எதுவாகவும் இருக்கட்டும்; அவை களுக்குள்ள அனுமதிகளை எல்லாம் ஒரே இடத்திலே பெறுகிற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அப்படி அந்த 'சிங்கிள் விண்டோ சிஸ்டம்' என்பதை உருவாக்கினால் வெளியே இருப் பவர்கள் இங்கே வந்து தொழில்களைத் தொடங்குவதற்குரிய வாய்ப்பு நமக்கு ஏற்படும்.

12-40 மணி

பொதுத் துறையிலேயே எல்லாம் செய்துவிட வேண்டும் என் பதல்ல. பொதுத் துறையை விட்டுவிடக் கூடாது. பொதுத் துறைக்கு 'கமாண்டிங் பொசிஷன்' இருக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும் கூட பொதுத் துறையே எல்லாம் செய்து விடுகிறதா என்றால் சில நேரத்தில் அவர்களால் செய்ய முடியவில்லை. அது ஏன் என்று நாம் ஆலோசிக்க வேண்டும். தமிழ்நாடு மொப்பெட் என்ற ஒரு சக்கர வண்டி தயாரிக்கிற ஒரு தொழிற்சாலை நமது அரசாங்கத் தினுடைய சார்பில் உள்ள ஒரு தொழிற்சாலை. அது எந்த ஆண்டு தொடங்கப்பட்டது, எந்த ஆண்டு எப்படி நடந்தது என்பது பிரச்சினை அல்ல. அதனை நடத்த முடியாமல் விற்பது என்று சொல்கின்ற சூழ்நிலை உருவாகிறது என்று சொன்னால் அதேநேரத்தில் கணக்குச் சொல்கிறார்கள், பத்திரிகைகளில் மிக அழகாகக் கொடுக்கிறார்கள். பஜாஜ் கம்பெனியில் இரு சக்கர வண்டியை விற்பதற்கு டெபாசிட் கேட் கிறார்கள். பஜாஜ் கம்பெனி கேட்டபோது அவர்களுக்கு 500, 500 ரூபாய் வீதம் கேட்கிறது. அப்படி அது கேட்டபோது தொகை 200 கோடி ரூபாய். இப்படி 200 வசூலாகி இருக்கிற தொகை 200 வசூலாகி இருக்கிறது என்றால், அந்த 200 கோடி ரூபாய் வரை வசூலாகி இருக்கிறது என்றால். அது அந்த கோடி ரூபாயும் டெபாசிட் என்ற பெயரிலே வருகிறது. பாராளுமன்றத்திலே பஜாஜ் கம்பெனியிடம் போய்ச் சேருகிறது. பதில் சொல்கிறார்கள். இவ்வளவு கேள்வி வருகிறது. அதற்குப் பதில் சொல்கிறார்கள். கம்பெனி யார் யார் எல்லாம் டெபாசிட் வாங்கிய அந்த கம்பெனி யார் யார் கொடுத்தார்களோ அவர்களுக்கு மொப் டெபாசிட் பணத்தைக் கொடுத்தார்களோ 21 வருடங்கள் ஆகும் என்று சொல் பெட்டைக் கொடுப்பதற்கு அவர்களுக்கு டெபாசிட் வருகிறது. கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு வண்டி வேண்டும் என்று எனக்கு வண்டி வேண்டும், எனக்கு வண்டி வேண்டும் என்று சொல்லி பணம் வருகிறது. ஆனால் தமிழ்நாடு மொபெட் ஒன்றும் செய்ய முடியாத நிலையிலே ஒரு பப்படம் போலே அது காட்சி அளிக்கும் நிலையில் இருந்ததா? அது உறுதி அற்று இருந்ததா? அதனை நடத்துகின்றவர்கள் செம்மையாக நடத்தவில்லையா? எனவே செயல் முறையிலே நாம் பார்க்க வேண்டியது அது தான்.

what is the outcome, என்ன விளைவுகள் ஏற்பட்டு இருக்கிறது
என்று பார்க்கின்றபோது பொதுத் துறை, கூட்டுத் துறை,
தனியார் துறை எல்லாம் ஒரு ஹார்மோனியஸ் பிளண்டிங். ஒரு
அழகான, எளிதான ஒருங்கிணைப்பான ஒரு தன்மை வருவதற்கு
உரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான்
சொல்கிறேன். அதுதான் மிக்ஸட் எக்கானமி. (குறுக்கீடு) அது
தான் மிக்ஸட் எக்கானமி என்று ரமணி அவர்கள் சொல்கிறார்கள்.
அதுதான் மிக்ஸட் எக்கானமி என்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.

திரு.கே. ரமணி : மிக்ஸட் எக்கானமி என்பதற்கு எனக்கு
அர்த்தம் வேறு இருக்கிறது. இது அதனுடைய அர்த்தம் அல்ல.

திரு. குமரி அனந்தன் : ஏனென்று சொன்னால் மிக்ஸட் எக்
கானமி—நாம் கலப்புப் பொருளாதாரம் என்று சொல்வது,
எல்லோருடைய திறமையும் கலந்து செய்ய வேண்டும் என்று
சொல்கிறதையும் சேர்த்துச் சொல்வதிலே தப்பு இல்லை என்றே
நான் கருதுகிறேன். அதை ஒரு 'டாக்மா' ஆக வைத்துக்
கொண்டு இது தான் என்று சொல்வதற்குப் பதிலாக—உதாரணத்
திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்; இங்கே ஐ.ஐ.டி. இருக்
கிறது, ரீஜெனல் என்ஜினியரிங் காலேஜ் இருக்கிறது. அங்குள்ள
வர்கள் எல்லாம் எப்படிப்பட்ட தொழில் நுட்ப வல்லுநர்களாக
இங்கே இருக்கிறார்கள்? அவர்கள் எத்தனையோ மாணவர்களை
அங்கிருந்து திறமையானவர்களாக வெளியே அனுப்புகிறார்கள்.
சில மாணவர்களைப் பார்க்கும்போது வெளிநாட்டுக்காரர்கள்
அந்த மாணவர்கள் தேர்வு முடிந்து வெளியே வருகிற நேரத்தி
லேயே அவர்களைக் காரிலே ஏற்றிக்கொண்டு தங்களுடைய
நாட்டுக்குப் போய்விடுகிறார்கள். அங்கே எவ்வளவு திறமையான
வர்களை உருவாக்கி வெளியே விடுகிறார்கள்? ஆனால் அந்த
வெளிநாட்டுக்காரர்கள் அவர்களை அழைத்துச் சென்று
அவர்களுடைய மேற்பார்வையில் பெரிய பெரிய நாசங்களை
ஏற்படுத்துகிறார்கள். ஐ.ஐ.டி., கிண்டி என்ஜினியரிங் காலேஜ்
போன்றவைகளில் கல்வி கற்றுக் கொடுக்கின்றவர்கள், ஆராய்ச்சி
மையத்தில் இருப்பவர்கள் கூட தங்களுடைய அறிவை மூலதனத்
தோடு கலக்க வேண்டும்; மூலதனம் வைத்து இருக்கிறவர்கள்
அதை அந்த அறிவோடு சேர்த்துக் கலக்க வேண்டும் அது கூட
கலப்புப் பொருளாதாரம் என்றுதான் நான் சொல்வேன்.
எனவே ஒரு தொழிலைத் தொடங்குகிறவர்கள், அரசாங்கம்,
அறிஞர்கள்—இவர்கள் எல்லாம் ஒன்று சேருவது கூட கலப்புப்
பொருளாதாரம்தான். அவர்கள் எல்லாம் சேர்ந்து கலந்து
செய்கின்ற ஒரு பொருளாதாரம் என்று சொல்வதிலே—அதை
நான் ஒரு புதிய பார்வையிலே பார்த்தால் தவறு இல்லை என்று
நான் கருதுகிறேன். இன்னும் ஒன்றைச் சொல்வேன் இங்கே
இருக்கின்ற எந்தத் தொழிலாக இருந்தாலும்—இங்கே மின்சாரத்
துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தடவையும் எழுந்து சொல்
வார்கள், மின்சாரத்திலே எந்தவிதமான குறையும் இப்போது





இல்லை என்று சொல்வார்கள். ஆனால் எனக்கு இருக்கின்ற
கவலை எல்லாம் இந்த மின்சாரத்தை இன்னும் அதிகமாக
உற்பத்தி செய்ய வேண்டும் என்பதுதான்.

கூடங்குளம் பற்றிச் சொன்னதை எல்லாம் எங்கள் கட்சி
ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால் மிகப் பத்திரமாக, --நான்
நேரடியாகவே அப்போது பொறுப்பில் இருந்த திரு. கே.ஆர்.
நாராயணன் அவர்களைச் சென்று பார்த்து உரையாடி விட்டு
வந்தேன் --மிகப் பத்திரமாக எந்தவிதமான ஆபத்தும் இல்லாத
அளவுக்கு அந்தக் கூடங்குளம் நமக்கு மின்சாரத்தை உற்பத்தி
செய்து தரும்; இன்னும் சொல்லப்போனால் இந்த மின்சாரம்
உற்பத்தி செய்வது என்பது ஒன்று; உற்பத்தி செய்கின்ற மின்
சாரத்தை எல்லாம் நாம் எந்த அளவுக்குச் சேமிக்கிறோம் என்பது
ஒன்று. இன்னும் சொல்லப்போனால் கொசுவை விரட்டி விட்டால்
கூட ஏராளமான மின்சாரம். மிச்சம் வரும். இரவு எல்லாம்
பாருங்கள். நீங்கள் கொசுவுக்காக மட்டுமே மின் விசிறிகளைப்
போட்டுக்கொண்டு அத்தனை பேரும் படுத்துக்கொண்டு இருக்கி
றீர்கள். எதற்கு வேண்டிய மின்சாரம் எதற்குப் போகிறது
பாருங்கள். இதை நாம் நினைத்துப் பார்ப்போம். கொசுவை
விரட்டிவிட்டால் அதற்காகச் செலவு செய்கிற மின்சாரம்
மிச்சமாகும். அந்த சின்னஞ்சிறிய கொசுவை விரட்டுவதற்காகத்
தான் இரவெல்லாம் மின்சாரம் செலவழிந்து கொண்டிருக்
கிறது. இந்த நாட்டில் இருக்கிற மக்களுடைய வளத்தைப்
பெருக்குவதற்கு வேண்டிய மின்சக்தி. . . . . . . . . .

திரு.எம் முகமது சித்திக் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
கொசுவை விரட்டுவதற்காக கரன்ட் செலவழிக்கிறார்கள் என்று
சொல்கிறார்கள். ஆனால் வியர்வையை விரட்டுவதற்கு ஏதாவது
யோசனை இருக்கிறதா?

திரு. குமரி அனந்தன் : வெளியிலே படுத்தால் வியர்வை
வராது; மின்சாரத்தை மிச்சம் பிடிக்கலாம்.

12.45 மணி

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்
அவர்களே, இந்த அவையை கூட வெளியே நடத்தினால்
மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம் என்பதை மாண்புமிகு உறுப்
பினர் ஏற்றுக்கொள்வாரா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, வெளியே படுக்கலாம் என்று சொல்கிறார்
மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன். எந்த வயதி
லிருந்து வெளியே படுக்கலாம்? அதிலே விதிவிலக்கு உண்டா?
(சிரிப்பு)

[1990 ஏப்ரல் 18

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, என்னைப் பார்த்தால், என்னைப் படுக்கச் துணைத்
சொல்ல மாட்டார்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.
எனவே, சில நேரங்களிலே நாம் வெளியே கூட சுவையான
செய்தி அவையிலே நடந்தது என்றால் இந்த அவை வெளியே
எடுத்துச் செல்லப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.
எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள்
சொன்னதற்காக நான் அப்படிச் சொன்னேன். வருகிற மின்
சாரத்தை மிச்சப்படுத்துவதற்கான ஒரு செய்தியாக இதைச்
சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. டிரான்ஸ்மிஷன்
டிஸ்ட்ரிபியூஷன்லாஸ் மட்டும் நமக்கு 21 சதவிதம் இது ஜப்பானில்
5.7 சதவிகிதம், ஆக, 5.7 சதவிகிதம் என்று அங்கே ருக்கிற
காரணத்தால் நாம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
தமிழ்நாட்டில் இருக்கிற மின்சார மோட்டார் பம்ப்செட்ஸ்,
தண்ணீர் றைப்பான்கள் ருக்கின்றனவே, அக்ரிகல்சரிஸ்டுக்கு
11 லட்சத்திற்கு மேல் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லு
கிறோமே, இவைகளை எல்லாம் கொஞ்சம் சீர்படுத்தினால்,
செம்மைப்படுத்தினால் 300 கோடி கிலோ வாட்ஸ் மின்சாரம்
மிச்சமாகும் என்று ஆய்வாளர்கள் நமக்கு முடிவு எடுத்து தந்திருக்
கிறார்கள். இவைகளை எல்லாம் நான் குறிப்பிடக் காரணம், ஒரு
பக்கத்திலே கூடங்குளமும் வேண்டும், கூடியமட்டிலும் நமது
மின்சாரத்தை சரியான வகையிலே நாம் செலவழிக்க வேண்டும்
என்பதற்காகத்தான் நான் தைச் சொல்கிறேன். இங்கே,
பொதுத்துறை, கூட்டுத் துறை என்ற செய்தி வந்த காரணத்தால்
சொல்கிறேன். எதுவாக இருந்தாலும் நம்முடைய முயற்சியை
மேலும் மேலும் கூட்டி மின் உற்பத்தியைப் பெருக்கவில்லை
யென்றால் சிறப்பாக வராது. இங்கே சொன்னார்கள்.
இங்கேயே, கோயம்புத்தூரிலேயெ கார்களை செய்ய முடியும்
என்று சொன்னார்கள். உண்மை. கோயம்புத்தூருக்குதான்
பென்ஸ் கார் கம்பெனி வருவதாக ருந்தது. முதலில்
ஜெர்மனியிலிருந்து கொடுக்க ருந்தது யாருக்கு என்றால்
ஜி.டி. நாயுடு அவர்களுக்குத்தான் என்னகாரணத்தாலோ அவர்
களுக்கு ருந்த சூழ்நிலையாலோ என்னவோ - அவரும் எப்படி
எப்படி எல்லாம் தொழிலை நடத்தினார் என்று உங்களுக்கு எல்லாம்
தெரியும்-அது ங்கிருந்து பிறகு டாட்டாவுக்கு போயிற்று.
அது அன்றையதினம் கோயம்புத்தூருக்கு வர வேண்டிய ஒன்று.
அதுதான் பிறகு டாட்டாவுக்குப் போயிற்று. இன்று உலகம்
பூராவுக்கும் அங்கிருந்து அது ஏற்றுமதியாகிறது. நமக்குப்
பெருமையாக இருந்தாலும் கூட அது தமிழ்நாட்டிலேயிருந்து
போய்க்கொண்டிருக்குமானால் அது ன்னும் நமக்கு மகிழ்ச்சி
யாக இருந்திருக்கும் என்கிற காரணத்தாலேதான் அதை
சொல்கிறேன்.

அடுத்து, டி.ஐ. சைக்கிள் உற்பத்திதான் சைக்கிள்
உற்பத்தியிலே, இந்தியாவிலே முதல் முதலாக தொடங்கியது.



1990 ஏப்ரல் 18] [திரு. குமரி அனந்தன்]

ஆனால் இந்தியாவிலே அது நம்பர் 1 இடத்தைப் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை. மூன்றாவது டத்திலோ, நான்காவது இடத்திலோ இருக்கிறது. ஆக, பஞ்சாப் நம்பர் 1 பெருமையை பெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் முதலாக நாம் இதனைத் தொடங்கினாலும்கூட நம்பர் 1 ஆக தொடர்ந்து இருக்க முடியவில்லை. என்ன காரணம்? அவர்களுடைய விரிவாக்கத்திற்கு நாம் துணை போகவில்லையா? அல்லது அவர்களே விரிவாக்கத்தை விரும்பவில்லையா? இதைப் பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும் என்பதற்காகதான் சொல்கிறேன். டி.ஐ. சைக்கிள்ஸ் ஓர் உதாரணத்திற்காக இங்கே சொல்லப்பட்டதே தவிர வேறு எதற்காகவும் அல்ல.

அடுத்து இங்கு மூலப்பொருள் இருந்துதான் எல்லாம் ஆக வேண்டுமென்றால், தொழில் நடக்கும் என்று சொன்னால், சூரத்திலே—நான் இதற்கு ஜப்பானை உதாரணம் காட்ட விரும்பவில்லை—சூரத்திலே வைரமா கிடைக்கிறது? எங்கிருந்தோ வைரத்தைக் கொண்டு வருகிறார்கள். அவைகளை பட்டை தீட்டுகிறார்கள். அதை பிறகு எல்லா இடங்களுக்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, நமது ஸ்கில்ட் லேபர், மிகப் பெருமையான தொழில் நம்மிடம் இருப்பதால், ஓர்க் போர்ஸ் நம்மிடம் இருப்பதால், இன்னும் சொல்லப் போனால், ஏராளமான பேர் நம்மிடம் திறமை படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நுணுக்கமான வேலைகளைக் கொடுக்கலாம். நுணுக்கமான வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். அந்த அளவில் ஹை டெக்னாலஜி வந்துவிட்டது. இப்போது ஹை ஸ்ட்ரெங்க்த் பிளாஸ்டிக் என்று கொண்டு வந்து விட்டார்கள். ஹை ஸ்ட்ரெங்க்த் பிளாஸ்டிக் என்பது இரும்பு என்ன பணியை செய்து கொண்டிருக்கிறதோ அந்தப் பணியை செய்யும் ஆற்றல் பெற்றது. கார்களில் இருக்கிற ஸ்பிரிங் என்று சொல்லப்படுகிற பட்டைகளை இப்போது பிளாஸ்டிக்கில் செய்துவிட்டார்கள். இந்த ஹை ஸ்ட்ரெங்த் பிளாஸ்டிக்கிலே அதனை செய்து விட்டார்கள். அப்படி செய்வதற்கு என்ன காரணம் என்றால், இந்த காரில் இருக்கிற மிகக் கனமான, கடினமான பாகங்களை எல்லாம் பிளாஸ்டிக்கில் செய்கிற காரணத்தால் இரும்பைவிட உறுதியாக லேசாக இருப்பதோடு மாத்திரமல்லாமல், இது துரும்பைப் போல, காற்றைப் போல இருக்கிறது. எனவே, டீசல், பெட்ரோல் இவற்றை ஊற்றிய உடனே அந்தக் கார் ஸ்போர்ட்ஸ் கார் போல ஓடுகிற வாய்ப்பு கனம் இல்லாத காரணத்தாலே இதிலே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இப்போது அது எவ்வளவு நமக்குத் தேவை என்று எண்ணிப் பாருங்கள். டீசல் கிடைக்கவில்லை, பெட்ரோல் கிடைக்கவில்லை. ஆண்டு ஒன்றுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய செலாவணியை, வெளிநாட்டிலிருந்து இவற்றுக்காக நாம் செலவிட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படி 7 ஆயிரம் கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு செலவிட்டுக்

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 18

கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஹை டெக் என்பது எவ்வளவு
நமக்கு அவசியமானது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, தையும்
நாம் ஒரு பக்கம் பார்க்க வேண்டும், இராட்டினத்திலே நூல்
12-50 மணி

நூற்று அதிலே சட்டை தைத்திருப்பவன் தான் நான்,
ஆனாலும் அதிலே நான் சொல்வதற்குரிய காரணம், இந்தியப்
பெரு நாட்டில் 84 கோடி மக்களுக்கு ஒரு புறம் குடிசைத்
தொழிலும், மறுபுறம் பெரும் தொழிலுமாக இருக்க வேண்டும்
என்பதற்காகத்தான் நான் இதை சொல்கிறேன். இந்த
பிளாஸ்டிக்கை எல்லாம் இப்போது முக்கிய மூலப்பொருளாக
எடுத்து தொழில்களில் பயன்படுத்துகின்ற காரணத்தால் நம்
முடைய பார்வைகள் வேறு விதமாக வரவே, புதிய சிந்தனை
யாளர்கள் புறப்பட்டு வருவதற்கு உரிய ஆக்கப்பூர்வமான
உற்சாகத்தை நாம் கொடுத்தாக வேண்டும். இந்த
ஊரிலேயே அது இருக்கிறதா என்றால், இருக்கிறது.
உதாரணத்திற்குச் சொல்லப் போனால், நம்முடைய நாட்டிலே
கூட, அதாவது, மெட்ராசிலே Central Institute for Plastic
Engineering and Tools (CIPET) என்று இருக்கிறது மகாராஷ்
டிராவிலிருந்து இங்கே வந்து படிக்கிறார்கள். ஏனென்றால்,
அங்கே கல்லூரி இல்லை. நம்முடைய கிண்டியிலே இருக்கிறது.
இங்கே வந்து படித்து, அங்கே போய் தொழிலை ஆரம்பிக்
கிறார்கள். பிளாஸ்டிக் பொருள்கள் எல்லாம் பெரும்பாலும்
மகாராஷ்டிராவிலிருந்து வருகிறது. இங்கே படிக்கின்ற ஒரு
தோழனுக்கு வேலை இங்கே கிடைக்காது. ஏனென்றால்,
பெரும் தொழில் பிளாஸ்டிக்கிலே இங்கே இல்லை. எனவே,
ஒரு புதிய ஏரியா—ட் இஸ் ய நியூ ஏரியா—அந்தப் புதிய
இடத்தை எப்படி பிடிப்பது? இன்னும் சொல்லப்போனால்,
தமிழ்நாட்டுக்கு வேண்டியதை இப்பொழுது வெளியேயிருந்து
வாங்கிக் கொண்டிருப்பது போக தமிழ்நாட்டிலிருக்கிற மக்களுக்குத்
தேவையான பொருட்கள் அத்தனையும் உற்பத்தி செய்து
வெளி மாநிலங்களுக்கும் அனுப்புகின்ற ஒரு நிலைக்கு
நாம் உயர வேண்டுமென்ற ஆசையிலே சொல்கிறேன்.
இதற்கு மோல்டு வேண்டும்: மோல்டு வேண்டுமென்றால்
மெட்டல் மோல்டு, உலோக மோல்டு செய்துதான் அந்தப்
பிளாஸ்டிக்கைச் செய்ய வேண்டும். அது பக்கெட்டாக இருந்
தாலும் சரி, சின்டெக்ஸ் போன்ற, பெரிய தண்ணீர் தொட்டி
களாக இருந்தாலும் சரி, அதற்கான மோல்டைச் செய்ய
வேண்டுமென்றால், இப்பொழுது தென் கொரியாவுக்கு அனுப்பு
கிறார்கள், தைவானுக்கு அனுப்புகிறார்கள். டிசைனை அனுப்பி
விட்டால், 4 மாதங்களிலே இங்கே அனுப்பிவிடுகிறார்கள்.

வேலூரில் இதற்கு ஒரு பயிற்சிக் கூடம் இருக்கிறது.
நெட்டூர் டெக்னிக்கல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்—இந்த நெட்டூர்
டெக்னிக்கல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்டிலே மோல்ட் செய்வது



1990 ஏப்ரல் 18] [திரு. குமரி அனந்தன்]

எப்படி என்று கற்றுக் கொடுக்கிறார்கள். ஆக, இந்தக் கல்வி
அறிவும், இந்தப் பணமும், இந்தப் புதிய மூலதனமும் எல்லாம்
சேர்கின்ற நேரத்திலே கூட, அது ஒரு கலப்புப் பொருளாதாரம்
தானோ என்று சொல்ல எனக்குத் தோன்றுகிற காரணத்தாலே
சொல்கிறேன், ஏனென்றால், நம் நாட்டிலே மிகத் திறமையான
இளைஞர்கள் இருக்கிறார்கள். மேட்டூரிலேயிருக்கிற சில
இளைஞர்கள் சேர்ந்து அருமையான சிலிக்கான் செய்து விட்டார்
கள். ஏனென்றால், மணலிலிருந்து 99.99 என்ற அந்த அளவுக்கு
பியூரிட்டி கொண்டு வரவேண்டும். அந்த பியூரிட்டியைக் கொண்டு
வந்து விட்டார்கள். ஆனால், சிப்ஸ் இன்னும் செய்ய முடிய
வில்லை. சரியான சிப்ஸ் இன்னும் செய்ய முடியவில்லை.
சிப்ஸ் செய்ய முடியாத காரணத்தாலே, நாம் கம்ப்யூட்டர்
போன்ற காரியங்களுக்கு இங்கேயிருந்து சிப்ஸ் கொடுக்க
முடியவில்லை. வெளியேயிருந்து எடுத்துக் கொடுக்க வேண்டி
யிருக்கிறது. சுற்றிலும் இருக்கின்றவர்களுக்கு நாமே கொடுக்
கின்ற அளவுக்கு உயர வேண்டுமென்ற ஆசையிலே இப்படிப்பட்ட
மின்னனு நுண்ணிய தொழில் நுட்பங்கள் எல்லாம் வந்து
கொண்டிருப்பதை மனதிலே வைத்துக்கொண்டு நாம் செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே நம் முதல்வர் அவர்கள் ஒரு பழப் பதனிடும்
தொழிற்சாலையைத் துவக்கி வைத்தார்கள். அது ஒரு நல்ல
பணி. தமிழகம் எங்கும் சில இடங்களிலே கிடைக்கின்ற பழங்கள்
வீணாகி, அழுகிப் போவதை நாம் பார்க்கின்றோம். சில
நேரங்களிலே, நேற்று கூட லாரி ஓடவில்லையென்றால், எங்கோ
ஓரிடத்திலே தக்காளி விளைந்து கிடக்கிறது என்று சொன்னால்
அவையெல்லாம் இன்று வீணாகிப் போகுமேயானால், பயனற்றுப்
போகின்றன. அதைப் போல, என்ன, என்ன, எங்கு, எங்கு
கனி வர்க்கங்கள் கிடைக்கின்றனவோ, அவற்றையெல்லாம்
இங்கேயே பதப்படுத்த ஆரம்பிக்கவேண்டும். அதனை பதப்
படுத்துவோருக்கு இது ஒரு ஸ்டெப்பிங் ஸ்டோனாக இருத்தல்
வேண்டும். ஒரு படிக்கல்லாக இருத்தல் வேண்டும். எதற்கு
இதனைச் சொல்கிறேன் என்றால், கர்நாடகத்திலிருந்து வேகன்
வேகனாக, இளநீரைக் கொண்டு போய் டெல்லியில் விற்கிறார்கள்
அதிலிருக்கின்ற நீர் எவ்வளவு—அதனைச் சுற்றிலும் எவ்வளவு
பொருட்கள்; அதற்குப் பதிலாக, தமிழ்நாட்டிலேயிருக்கிற இளநீர்
இன்னும் சில இடங்களிலே தேங்காய் உடைக்கிறோமே,
கோயில்களிலே சில ஆயிரக்கணக்கான தேங்காய் உடைக்கிறோம்.
அந்த நீரை எடுத்து பதப்படுத்திப் பாதுகாக்க முடியுமா?
இளநீரைப் பதப்படுத்தி பாதுகாக்க முடியுமா, பனையிலிருந்து
இறக்குகின்ற பதநீரைப் பதப்படுத்தி பாதுகாக்க முடியுமா—
இவற்றையெல்லாம் ஏற்றுமதிசெய்ய முடியுமா? இவையெல்லாம்
நியூ ஏரியாஸ்— அங்கங்கே தொழில்கள் உற்பத்தியாவதற்கு
வாய்ப்பிருக்கும்.

இன்னும் சொல்லப் போனால், சென்னையிலே இந்த முதலாளிகளோடு கலந்து பேசுவதற்கு ஒரு அமைப்பு ஐ.ஐ.டி. யிலே இருக்கிறது. அதைப் போலவே, திருச்சியிலே ஏற்படுத்தலாம்; கோயம்புத்தூரிலே ஏற்படுத்தலாம்; மதுரையிலே ஏற்படுத்தலாம். எந்த, எந்தப் புதிய பொருள்களை வைத்து, என்ன, என்ன தொழில்களைக் கொண்டு வரலாம் என்று சொல்கின்ற சிந்தனை நமக்குத் தேவை என்பதற்காக நான் இதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்த செய்தியாக ஒரே ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், அந்தப் பெருமக்கள் எல்லாம் சொன்னார்கள், நரிமணம், தஞ்சை மாவட்டத்திலே பல இடங்களிலே கிடைக்கின்ற கேஸ் அங்கே கிடைக்கின்ற ஆயில் இவற்றை வைத்து நாம் நிறைய சாதனைகளைச் செய்ய முடியும் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன். பம்பாயிலே எரிந்து கொண்டிப்பதைப் போல், நாம் அந்த இயற்கை வாயு எரிவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று முடிவு செய்தாக வேண்டும்; ஒரு தீக்குச்சி அளவு கூட வீணாக போகாமல். இந்தத் தமிழ்நாடு அரசு பயன்படுத்தும் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, சண்டையிட்டு போர் செய்து போர் செய்து என்றால், வாதம் செய்துதான் வேறு போர் அல்ல; செய்தாவது நாம் எல்லா உதவிகளையும் பெற்று, அங்கே பல தொழில்களைக் கொண்டு வந்து. அந்த நாச்சுரல் காஸ் வீணாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நேச்சுரல் காஸிலிருந்து முதலில், சின்ன, சின்ன அளவிலே அங்கே மின் சாரம் உற்பத்தி செய்யலாம்.

12-55 மணி

நாம் முதலிலே சின்ன சின்ன இடங்களிலே அங்கே மின்சார உற்பத்தி செய்யலாம். எப்படி கரியை எரித்து நாம் மின்சாரம் உற்பத்தி செய்கிறோமோ, எப்படி எண்ணெயை எரித்து செய்கி றோமோ அதைப்போலே இந்த 'காஸை' எரித்து செய்யலாம். அந்தக் 'காஸை' எரித்து செய்வது மட்டுமல்ல இன்னொன்று அங்கே எல்.ஜி.பி. ஏராளமாக தயார் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏன் நகரங்களிலே செய்திருப்பது எல்லாம் ஓரளவுக்கு இருந்துக்கொண்டிருக்கிற கிராமங்களுக்கு அந்த எல்.ஜி.பி.யை பரப்பவேண்டியதுதானே? அடுப்பு வாங்குவதற்கு எங்கே போவது என்று சொன்னால், அந்த எல் ஜி.பி-க்கு டெபாசிட் கட்டுவதற்கு எங்கே போவது என்று சொன்னால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கலாமே! அந்தப் பொருள்களையே ஈடாக வைத்துக்கொண்டு அவர்கள் கொடுக்கட்டுமே!



இப்போது விறகுக்காக அலைந்துக்கொண்டிருக்கிறார்கள் பெண்மணிகள். விறகுக்காக இருக்கிற காடுகளை எல்லாம் அழித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறோமே. ஏன் காடுகளை அழிக்க வேண்டும்? நம்முடைய முதலமைச்சர் அவர் கள் அழகாகச் சொன்னார்கள். ஒரு குழாய் போட்டு கொண்டு வா அந்த வாயுவை என்று சொன்னார்கள். ஒரு நாளைக்கு அங்கே எரிந்துகொண்டிருக்கிற அந்த வாயுவினுடைய மதிப்பு 18 கோடி ரூபாய். 18 கோடி ரூபாய்க்கு எரிந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அதை எல்லாம் ஒருவன் சொன்னான். ''சூரிய மையத்திலிருந்து வெப்பம் எடுக்க வேண்டும்; அதே நேரத்தில் அந்த வெப்பம் என் மனைவியின் அமுத விரல்களிலே அடங்கவும் வேண்டும்'' என்று சொன்னான். அதைப்போல அந்த சமைய லடியைப் போய்ச் சேரவேண்டும். அந்த வாயு அந்தச் சூழ் நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விரைவில் முடிக்க வேண்டும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, துணைச் சபாநாயகரிடம் ஐந்து நிமிடங்கள் அனுமதி கேட்டிருந் தேன். அதற்குள் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடித்து கொள்ளுங்கள்

திரு. குமரி அனந்தன்: அதற்குள் முடித்துவிடுகிறேன். எனவே சின்ன சின்ன இடங்களிலே கூட நாம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு இந்த 'காஸை' பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதைப்போலவே 'ரீஃபைனரீஸ்' இருக்கின்றன. மிகப் பெரிதாக ரீஃபைனரீஸ் போடுவதைவிட நீங்கள் 110 கோடி ரூபாய், 120 கோடி ரூபாய் அளவுக்குப் போடுகிறீர்கள் — வேண்டாம் என்று சொல்லவில்லை, வரட்டும்-25 கோடி, 30 கோடி ரூபாய் என்று சொல்லுகின்ற அளவுக்கு ரீஃபைனரீஸ் போடுவதன் மூலம் அந்தத் திட்டங்களை அங்கேயிருந்து எடுத்துச் செல் வதற்குப் பதிலாக இதையே அங்கே கொண்டு போய், எப்படி பெருந்தலைவர் காமராஜர் பள்ளிக்கூடம் இருக்கிற இடங் களுக்கு கிராமத்து மக்கள் எல்லாம் வாருங்கள் என்று சொல்வ தற்குப் பதிலாக கிராமங்களுக்குப் பள்ளிக்கூடங்களைக் கொண்டு போனாரோ—உதாரணத்திற்குச் சொன்னேன்—அதைப்போலவே இவைகளைச் செய்கிறபோது அந்த தஞ்சாவூர் பகுதியிலே பூமியில் இருந்து வெளியே வருகிற தென்றல் போலே அந்த வாயுவை நாம் கருத வேண்டுமே தவிர நம்மை மூழ்கடிக்கிற ஒரு புயலாக கருதவேண்டியதில்லை என்பதற்காக இதை நான் சுட்டிக் காட்டினேன்.

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 18

இன்னொரு முக்கியமான தகவல். எனவே மாண்புமிகு சபா நாயகர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஏனென்றால் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கரை காட்டு கின்ற ஒன்று புவியியல் சுரங்கத் துறை. இந்த 'டாமின்' என்பதை பொறுத்த வரையில் அதற்கு அதிக அக்கரை காட்டு கிற காரணத்தாலே ஒன்றை மட்டும் நான் சொல்வதற்கு தாங் கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1968- லேயிருந்து 1974 வரையில் ஐக்கிய நாடுகள் சபையினுடைய டெவலப்மென்ட் 'பிராஜெக்ட்' என்று சொல்லுகின்ற அடிப்படை யிலே கனிம வளங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்று ஏறத்தாழ 13 இலட்சம் ஏக்கரிலே கல்லும், 4,000 இலட்சம் ஏக்கரிலே கரும்புக் என்று சொல்லுகின்ற சாம்பல் வண்ண கற்களும் 'பாரடைட்' கின்றன என்று சொல்கிறார்கள். இவை எல்லாம் இடைக் கொடுகின்ற புள்ளி விவரங்கள்தான். அதிகாரிகள்

இந்த புவியியல் சுரங்கத் துறை ஜியாலஜி அண்ட் மைனிங் என்பது 1983-லே தொடங்கப்பட்டது. இந்த 7 ஆண்டு காலத் தில் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியிருக் கிறது. ஆனால் 1983-லேயிருந்து 1988 வரையிலே உள்ள இடைப்பட்ட காலத்தில் அதற்கு 72 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 7 ஆண்டு காலத்திலே அதற்கு 40 கோடி ரூபாய் இலாபம், 5 ஆண்டு காலத்திலே அதற்கு 72 கோடி ரூபாய் இழப்பு. இந்த 72 கோடி ரூபாய் இழப்பு என்று சொல் வது யார் என்றால் மாநிலக் கணக்காய்வுத் தலைவர் Accountant- General of our State. அவர்களுடைய இந்த அறிக்கையிலே என்ன கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் கல்லை அளவு எடுப்பதிலே ஏற்பட்ட தவறோ அல்லது கணக்குப் பார்த்ததிலே ஏற்பட்ட தவறோ வந்திருக்கிறது. இத்தனை மீட்டர் கல்-10 மீட்டர் என்பதை 5 மீட்டர் என்று அளவு எடுத்த முறையிலோ அல்லது 5 மீட்டர் என்று கணக்கிட்டதற்குப் பிறகு பணம் வாங்குகிறபோது 2 மீட்டர் என்று கணக்கிட்டதாலோ ஏற்பட்ட இழப்பு என்று அவர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் இதை பக்கம் உள்ளிட்டு குறிப்பெடுத்து வைத்திருக்கிறேன். இப்படி இந்தவகையில் 18 கோடி ரூபாய்க்கு கல் இழப்பு ஏற் பட்டிருக்கிறது. இந்தக் கல்லுக்குப் போடுகிற லோக்கல் டாக்ஸ் இருக்கிறது. அந்த லோக்கல் டாக்ஸ் என்று சொல் லுகின்ற உள்ளூர் வரியிலே போடுகின்ற உபரி வரியும் சேர்ந்து எவ்வளவு வரும் என்றால் 54 கோடி ரூபாய் வரும். ஆக, உள்ளூர் வரி, உள்ளூர் வரியிலே போடுகிற உபரி வரி—இந்த இரண்டும் சேர்ந்து 54 கோடி ரூபாய். எதற்கு? இந்த 18 கோடி ரூபாய் கல்லுக்கு. ஆகவே கல்லிலே 18 கோடி ரூபாய் இழப்பு.



1990 ஏப்ரல் 18]

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இலக்கியச் செல்வர் அவர்கள் ஓர் அழகான வாக்கியத்தோடு முடிக்கவேண்டுகிறேன்.

திரு. குமரி அனந்தன்: அந்தக் கல் சரியாகக் கணக் கிடப்பட்டு இருக்குமானால், அதிலே வர வேண்டிய அந்த 54 கோடி ரூபாய் வரவில்லை. எனவே, 72 கோடி ரூபாய்க்கு அங்கே இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதையெல்லாம் சொல்வது எந்த அரசு, யார் செய்தது, எந்த அதிகாரி என்பதிலேகூட எனக்கு அதிகமான அக்கறை இல்லை. முதல்வருக்கு முன்னாலே இதனைச் சொல்வதன் மூலம் இனிமேல் இழப்பு ஏற்படாமல் தடுக்கப்படும் என்பதும், இழப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் விடுபட மாட்டார்கள் என்பதும்தான் என்னுடைய நோக்கம்.

அடுத்து, ஏன் என்ன காரணத்தால் இவைகளெல்லாம் ஏற் படுகின்றன என்பதைப்பற்றி ஒரு அரை நிமிஷத்திலே சொல்லி விடுகிறேன். இந்தத் துறைக்கு 500 சுரங்கங்கள் இருக்கின்றன. இந்தத் துறைதான் இந்த 500 சுரங்களைப் பார்க்கிறது, சிறு கனிமம், பெரும் கனிமம் போன்றவைகளெல்லாம். பார்ப்பது இதே துறைதான். இப்பொழுது டாமின் மூலம். டாமினும் இந்த அரசாங்கத்தினுடைய ஓர் அங்கம்தானே? இந்த டாமின் மூலம் இப்பொழுது 100 குத்தகைதாரர்கள் வந்தால் அதையும் இந்த இலாக்காதான் பார்க்க வேண்டும். இவ்வளவு பார்த்ததற்குப் பிறகு, இவைகள் எங்கெங்கே பரவிக் கிடக்கின்றன? தமிழ்நாடு முழுவதும் பரவிக்கிடக்கின்றன. தமிழ் நாடு முழுவதும் பரவிக் கிடக்கின்ற கோடிக் கணக்கான ரூபாய் வருவாய் தருகின்ற இந்தத் துறைக்கு 18 மாவட்டங்களிலும் கிளைகள் இருக்கின்றன. இரண்டு மாவட்டங்களிலே கிளைகளே இல்லை. அந்த மாவட்டத்திலே கிளையே இல்லை என்றால், இப்பொழுது என்னுடைய சிதம்பரனார் மாவட்டத்திலே கிளை கிடையாது; திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டத்திலே கூடக் கிளை கிடையாது. கிளை கிடையாது என்பது மட்டுமல்ல; கிளை இருக்கின்ற இடத்திலே என்ன என்பதைப் பற்றி நான் ஒரு சின்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தக் கிளை இருக்கின்ற இடங்களிலேயெல்லாம் மொத்த மாகக் கணக்குப் பார்த்து, சென்னையிலே இருக்கிற தலைமை யகத்தையும் கணக்குப் பார்த்தால், எக்ஸ்பர்ட்ஸ் என்று சொல்லு கின்ற தொழில் நுட்ப வல்லுனர்கள் 350 பேர் மொத்தம் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குத் துணை புரிகின்ற அமைச்சுப் பணியாளர்கள் என்று சொல்கின்ற அசிஸ்டென்ட்ஸ் 60 பேர் இருக்கிறார்கள். இந்த ஒரு துறையிலேதான் நான்கு அதிகாரிகளுக்கு ஒரு அசிஸ்டன்ட். மற்ற எல்லாத் துறைகளிலும்

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 18

ஒரு அதிகாரிக்கு 4 அசிஸ்டன்ட்ஸ் இருப்பார்கள். இந்த ஒரு துறையிலேதான் 4 அதிகாரிகளுக்கு ஒரு அசிஸ்டன்ட் இருக்கிறார். அதனாலே என்ன இழப்பு என்று சொன்னால், சேலத்திலே, மதுரையிலே, திருச்சியிலே, இப்படிப்பட்ட பெரிய இடங்களிலே கூட, இந்தக் கிளை அலுவலகத்திலே ஒரு டைப்பிஸ்ட் கிடையாது. ஒரு டைப்பிஸ்ட் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினாலே குத்தகைதாரரே தன்னுடைய டைப்பிஸ்டை இரவலுக்குக் கொடுக்கிறார். அந்த டைப்பிஸ்ட் இதையும் அடிக்கிறார். உள்ளேயிருக்கின்ற பைலிலே இருப்பதையும் படிக்கிறார். அடிப்பதும், படிப்பதும் ஒரே நேரத்தில் நடக்கிறது. எனவே, இந்தக் குத்தகைதாரரே நிர்வகிக்கிறாரோ என்று சொல்லுகின்ற சூழ்நிலை அங்கே உருவாகிறது என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், இந்தத் தலைமையகத்தை எடுத்துக் கொண்டால், இந்தத் தலைமையகத்திலே வேலை செய்கின்ற முக்கியமான அதிகாரிகள் என்று சொல்லுகின்ற எக்ஸ்பர்ட்ஸ், அவர்கள் 42 பேர். ஆனால், அவர்களுக்குத் துணையாக இருக்கின்றவர்கள், உதவியாளர்களாக இருக்கின்றவர்கள் 32 பேர். இந்த 32 பேரிலே ஏவலர்கள், காவலர்கள் போக அசிஸ்டன்ட்ஸ், ஜூனியர் அசிஸ்டன்ட்ஸ், டைப்பிஸ்ட் போன்றவர்கள் 17 பேரேதான். அதனால் என்ன நடக்கிறது என்றால் 42 பேர் எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் வெளியேயெல்லாம் சென்று, எங்கே எங்கே கனிம வளம் கிடைக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டிய அற்புதமான ஆற்றலையும், திறமையையும் படைத்தவர்கள். 4,500 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு இருக்கின்றவர்கள், கிளார்க்கினுடைய பணியினைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அதிகாரிகளுக்குள்ள சம்பளத்தைக் கொடுத்து ஒரு அசிஸ்டன்ட்டுக்குள்ள வேலையை நாம் வாங்கிக்கொண்டிருக்கிறோம் இந்த சென்னையிலே என்பதற்காக இதை நான் சொல்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இதோடு தொடர்புடைய ஒரு செய்தியை சொல்லிவிட்டு முடிக்கிறேன்.

இங்கே கோயம்புத்தூரிலே—மன்னிக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் என்னிடம் ஆதாரங்கள், சில குறிப்புகள் இருக்கின்றன. அக்கவுண்டென்ட் ஜெனரல் கொடுத்த, நமது Organisation and Management கொடுத்த ரிப்போர்ட், எல்லா ரிப்போர்ட்களையும் நான் கையிலே வைத்திருக்கிறேன். முதல்வரவர்கள் கேட்டார்கள் என்று சொன்னால் நான் கொடுப்பதற்குச் தயாராகவும் இருக்கின்றேன்.

கிருஷ்ணகிரிக்குப் பக்கத்திலே மகாராஜா கடை என்று சொல்லுகின்ற இடத்திலே, தங்கம் கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். தங்கம் கிடைக்குமா என்று பார்க்கும்பொழுது,



1990 ஏப்ரல் 18] [திரு. குமரி அனந்தன்]

87-88-லே முதற்கொண்டு .16.6 வரை தங்கம் கிடைக்கும் என்று ஒரு ரிப்போர்ட். .1, அதாவது பத்தில் ஒரு கிராம் முதற்கொண்டு 6.6 கிராம் வரை தங்கம் கிடைக்கிறது ஒரு டன் மண்ணுக்கு. ஒரு டன் மண்ணை வெட்டி எடுத்தால் பத்தில் ஒன்றிலேயிருந்து 6.6 வரை கிடைக்கிறது என்று 87-88-லே நமக்கு ஒரு கணக்கு. 89-90-லே கணக்கு என்னவென்றால், ஒரு கிராம் முதற்கொண்டு 3.5 வரை கிடைக்கிறது. Ranging from 1 முதல் 3.5. இப்பொழுது என்ன நாம் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், 90-91-லே மாண்புமிகு முதலமைச்சரவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் கொடுத்த இந்த அறிவிப்பிலே என்ன இருக்கிறது என்றால், .1 முதற்கொண்டு .3 வரை. பத்திலே ஒரு கிராமிலிருந்து, பத்திலே 3 கிராம் வரைதான் அங்கே தங்கம் கிடைப்பதற்கு ஒரு டன் மண்ணை வெட்டி எடுத்தால் கிடைப்பதற்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இது உண்மையிலேயே என்ன நிலை என்பது நமக்குத் தெரியவில்லை. அதிகாரிகள் சரியான ஒரு கணக்குக் கொடுத்து இருக்கிறார்களா? நமக்கும் தங்கம் கிடைக்கிறது என்றால் உண்மையிலேயே ஓரளவுக்குக் கிடைத்தால் வெட்டியெடுக்க முடியும் என்பதற்காக சொல்கிறேன். ஒரு துரப்பணக் கருவி அங்கே நிரந்தரமாக இருக்கிறது. ஏழு துரப்பணக்கருவிகள் நமக்கு

13-05 மணி

ஏழு துரப்பணக் கருவிகளிலே ஒன்று சிவகங்கைக்கு உள்ளன. இன்னொன்று நெய்வேலிக்கு போய் இருக்கிறது. போயிருக்கிறது. குன்னூர் மலைப்பகுதிக்கு போய் இருக்கிறது. இன்னொன்று மகாராஜா கடைக்கு போய் இருக்கிறது. ஏழில் இன்னொன்று வேலை செய்கிறது. மூன்று வேலை செய்கிற நான்கு தான் வேலை இல்லாமல் சும்மா நிலையில் இருக்கிறது. ஆனால் ஆய்வு செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது, எனவே, வேலை செய்யாமல் மூன்று சும்மா இருக்கிற நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கிறது என்பதை உங்களுக்குத்

அடுத்து வேறு எதுவும் இல்லை, ஒரு வேண்டுகோள் தான். நீங்கள் கன்சைன்மென்ட் டாக்ஸ் என்பது நமக்கு வரும். அதிலே வெற்றிகரமாக வாதாடி அதை பெற்று விடுவீர்கள். உற்பத்தி ஒரு மாநிலம், ஐயம் இல்லை. இது உற்பத்தியாகிற மாநிலத்திலேயிருந்து வெளியே செய்கிற மாநிலம். இந்த பொருள்கள் போகிறபோது உங்களுக்கு கன்சைன்மெண்ட் டாக்ஸ் ஏராளமான பணம் வரப் போகிறது. என்று வருகிறபோது எக்சைஸ் டியூட்டியை மத்திய அதைப்போல இப்போது அதிகப்படுத்தி இருக்கிறது. டீசல் விலை, பெட்ரோல் அரசாங்கம் ஏர்ப்ரைட், டிரையின் ப்ரைட் எல்லாவற்றையும் ஏற்றி விலை, மூலப்பொருள் வந்தாலும் சரி, வேறு இருக்கிறது. ஆகவே,

எந்தப் பொருள் வந்தாலும் விலை ஏறும். மூலப்பொருள்
களுக்கெல்லாம் விலை ஏறுகிறபோது 'பைனல் புராடக்ட்ஸ்
விலை ஏறும். 'பைனல் புராடக்ட்ஸ்' விலை ஏறுகிறபோது
சேல்ஸ் டாக்ஸ் தொகை அதிகப்படும். எனவே, கன்சைன்மெண்ட்
டாக்ஸ், சேல்ஸ் டாக்ஸ் இவைகள் தொகை எல்லாம் அதிகப்
படுகிறபோது, இந்த தொழிற்சாலைகளை எல்லாம் கொண்டு
வந்து நாம் செல்வத்தை ஈட்டி தமிழ்நாட்டு மக்களுக்கு வளமான
வாழ்வைக் காட்ட வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில், மது
தொழிற்சாலைகளையும் திறக்க வேண்டுமா? அதன்மூலம்
வருகிற வருவாய் நமக்கு தேவை தானா? வேறு இனங்களில்
நாம் கொண்டு வரலாம் அல்லவா! எனவே, தயவுசெய்து
தொழில் என்று வருகிறபோது மலிவு விலை சாராயம் செய்கிற
அந்தத் தொழிலைத் தொழிலாக கருதவே வேண்டாம்.
இத்தனை வருவாய் நமக்கு வரவிருக்கிற காரணத்தால், நீங்கள்
அதைச் செய்ய வேண்டாம் என்று உங்களை கேட்டு, மற்ற
வகைகளில் உங்களுடைய உற்சாகமான ஊக்கமான, ஆற்றல்மிக்க
தலைமை தமிழகத்தில் தொழிலை உற்பத்தி செய்தது, தொழி
லாளர்களை வாழ வைத்தது என்று சொல்லி விளைவுகளை
ங்களுக்குத் தரவேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்,

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு பற்றிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு
வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நாட்டினுடைய பொருளாதாரம் நல்லமுறையில் இருக்க
வேண்டுமென்றால், அங்கே விவசாயம் நன்றாக இருக்கவேண்டும்.
அதோடு தொழில் வளமும் நன்றாக அமைந்தால் தான் நாட்டி
னுடைய பொருளாதாரம் நன்றாக அமையும் என்ற அடிப்படை
யில், இந்த தொழில் மானியமானது முக்கியமான இடத்தை
இன்றைக்கு வகித்துக் கொண்டு வருகிறது. வேலை வாய்ப்பைத்
தேடி கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் இன்றைக்கு நகரங்
களுக்கு வருகிறார்கள் என்று சொன்னால், அங்கே மேலும் பல
தொழிற்சாலைகளை உருவாக்கினால்தான் அந்த மக்களை
கிராமங்களில் தங்க வைக்க முடியும் என்ற அடிப்படையில் தான்
பல்வேறு தொழில்களை உருவாக்குவதற்காக மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள், முதலமைச்சராக இருந்த காலத்தில்
இன்றைக்கு அதற்கு முக்கியத்துவம் அளித்து பல தொழில்களை
உருவாக்குவதற்கு அனுமதியைப் பெற்று அளித்து இருக்கிறார்கள்.
அவர்களுடைய காலத்தில் தான் சிறிய தொழில்களுக்கு, இங்கே
தமிழகத்தில் இருக்கிற பல தொழிற்சாலைகளுக்கு நல்ல
வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்ற முறையில் பல்வேறு
சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டு, அவைகள் எல்லாம் ஊக்கப்



படுத்தப்பட்டிருக்கின்றன என்ற விபரங்களை எல்லாம் பல்வேறு
நிறுவனங்கள் இன்றைக்கு எடுத்துச் சொல்லி இருக்கின்றன.
அதிலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

13-10 மணி

Kothari's Industrial Directory என்ற டைரக்டரி
1986 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லப்
பட்டிருக்கிற கருத்து : "With its broad-based and well-balanced
industrial complexes, Tamil Nadu occupies a prominent place in
the industrial map of India. Large and medium scale units and
technology-oriented small-scale industries have emerged in various
parts of the State. The growth and dispersal of industries all over
the State is largely due to the infrastructure and otner incentives
including financing and training offered by the State. These
incentives have attraced increasing investment by the private
sector and significant progress has been achieved on a wide
range of industries like textiles, metal and mertallurgical
products, chemicals, agricultrual equipments, mechanical,
electronics and engieering goods" என்று சொல்லி
அதனுடைய வளர்ச்சியை சொல்கிறபோது அவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். 1970 ஆம் ஆண்டு பாக்டரிகள்
சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பாக்டரிகள் 6200 தான்
இருந்தன. 1977–ஆம் ஆண்டு 8,000 ஆக உயர்ந்து இருக்கிறது.
அதற்குப் பிறகு 1982–ம் ஆண்டு 11,000 ஆக உயர்ந்து,
இன்றைக்கு நான் அறிந்து இருக்கிறேன், சுமார் 20 ஆயிரத்
திற்கும் மேற்பட்டு இருக்கிற அந்த பேக்டரிகள் எல்லாம்
இன்றைக்கு பதிவு செய்யப்பட்டு வளர்ந்திருக்கிறது என்பதை
நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
அந்த அளவிலே இன்றைக்கு தொழில் வளத்தைப் பெருக்க
வேண்டும் என்று சொன்னால், அங்கே இருக்கின்ற தொழிற்
சாலைகளுக்கு நாம் எந்த அளவிற்குச் சலுகைகளைச் செய்
கிறோமோ, எதையெல்லாம் ஊக்கப்படுத்துகிறோமோ, அதைப்
பொறுத்துத்தான் அமையும். தொழில்கள் வளருவதற்கு மிக
முக்கியமானதாக இருப்பது மின்சாரம். இந்த மின்சாரத்தை
அதிகமான அளவிலே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற முறை
யிலேதான் முந்தைய அரசிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர்.
அவர்கள், அதற்கு அதிகமான அளவிலே முக்கியத்துவம்
வழங்கியதன் காரணமாக அதிலே நாம் கணிசமான முன்னேற்
றத்தை அடைந்திருக்கிறோம், எனக்குக் கொடுக்கப்பட்டு
இருக்கிற ஒரு குறிப்பின்படி இன்றைக்கு இதனுடைய
வளர்ச்சியைப் பொறுத்தவரையில், ஆல் இந்தியா ரேட்டைவிட,
நாம் மிக அதிகமான அளவிலே, இந்த 1987-88 ஆம் ஆண்டு

[திரு. எஸ்.டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 18

வரையிலும், மிக அதிகமான அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி
செய்திருக்கிறோம். அங்கே ஆல் இந்தியா அளவிலே கிராஸ்
பவர் ரேட் 5 சதவீதம் என்று சொன்னால், நம்முடைய தமிழ
கத்தைப் பொறுத்தவரையில் 6 சதவீதமாக அது உயர்ந்திருக்
கிறது. அந்த அளவிலே மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி
செய்து தொழிற்சாலைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்
கிறோம் என்று சொன்னால், தொழில் வளர்ச்சியிலே நாம் ஒரு
தன்னிறைவை அடையவேண்டும் என்பதற்காக இதையெல்லாம்
அன்றைக்கு அரசாங்கம் செய்திருக்கிறது.

சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த
மானியத்திலே சொல்கிற நேரத்தில் பல்வேறு விஷயங்களை
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்குச் சொல்லப்
பட்டது, சுமார் 260 கோடி ரூபாய் அளவிலே புதிய
திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்த இருக்கிறது என்று
சொன்னார்கள். அந்த அளவிலே அவர்கள் 12 தொழிற்சாலை
களினுடைய பட்டியலைக்கூட இந்த அவையிலே அளித்திருக்
கிறார்கள். அவைகளை உருவாக்குவதற்கு புரட்சித் தலைவர்
அரசுதான் காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். அன்றைக்கு அவர்கள் அறிவிப்பிலே
சொன்னார்கள், அன்று பொறுப்புக்கு வந்து 100 நாட்கள்கூட
ஆகவில்லை, 100 நாட்களுக்குள்ளாக 260 கோடி ரூபாய்க்கான
திட்டங்களை அன்று உருவாக்கப்படவில்லை என்பதைத் தெரியப்
படுத்திக்கொண்டு, அதற்காக 2 ஆண்டுக்காலமாக அதனுடைய
தலைவராக இருந்த டிட்கோவினுடைய தலைவரும், தொழில்
அமைச்சருமாக இருந்த ராஜாராம் போன்றவர்களும் எடுத்துக்
கொண்ட பெருமுயற்சியின் காரணமாகத்தான் அந்த அளவிலே
நம்முடைய தமிழகத்திலே தொழில் வளங்கள் உருவாவதற்கு
வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு நாம் பார்ப்பது
எல்லாம் சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில்,
இன்றைக்கு பல திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம்.
இன்றைக்கு இருக்கிற ஆலைகளைப் பொறுத்தவரையில்,
கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு ஆலைகளைத்
துவக்குவதற்காக மத்திய அரசிடம் அனுமதி பெற்றிருக்
கிறோம். ஆனால் இவைகளினுடைய செயல்பாடுகள் எந்த
அளவிற்கு இருந்துகொண்டு வருகின்றன? அரூர் நகரத்திலும்,
அதைப்போல அறந்தாங்கியிலும் கூட்டுறவுத் துறையிலே
சர்க்கரை ஆலையைத் துவக்குவதற்காக ஏற்கனவே புரட்சித்
தலைவர் அரசு அனுமதியைப் பெற்றிருக்கிறது. ஆனால் இன்று
வரையிலும் அவைகள் துவக்கப்படுவதற்கு வேண்டிய அறிகுறிகள்
காணாத நிலையைத்தான் நாம் பார்த்துக் கொண்டு இருக்
கிறோம். அறந்தாங்கியைப் பொறுத்தவரையில் நான் அறிந்
திருப்பது, அங்கே எல்லாம் ஷேர் கேப்பிட்டல்களையும்



1990 ஏப்ரல் 18] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

கூட்டுறவுத்துறை மூலமாக வழங்கியிருக்கிறார்கள். ஆனால்
இதுவரையில் நடவடிக்கை எடுக்காத காரணத்தால். இன்னும்
ஒரு மாதத்திற்குள்ளாக நாம் அதைத் துவக்குவதற்கு நடவடிக்கை
எடுக்கவில்லை என்று சொன்னால், அந்த லைசென்சும் ரத்து
செய்யப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்படும் என்பதையும் நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இருக்கிற சர்க்கரை ஆலைகளைப்
பொறுத்தவரையில், நம்முடைய தமிழகத்திலே முன்பே
மத்தியிலே ஆண்ட ராஜீவ் காந்தி அரசானது, 15 ஆலைகளைத்
துவக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே
மேலும் 4 ஆலைகளுக்கு வேண்டிய உரிமைகளை நாம் பெறு
வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை இந்த அரசு மேலும்
பெற்று, அந்த ஆலைகளை எல்லாம் தமிழகத்திலே உருவாக்கி,
தமிழகத்திலே சர்க்கரை உற்பத்தியை அதிகமான அளவிலே
செய்வதன் மூலமாக இங்கே வருவாய் அதிகமாக வருவதற்கும்,
அதே நேரத்தில் பலருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய
நிலைமையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சர்க்கரை ஆலைகளினுடைய
லாபத்தை வைத்துக் கொண்டு ஏற்கனவே புரட்சித் தலைவர்
அவர்கள் ஒரு விவசாயக் கல்லூரியைத் துவக்குவதற்கு உத்தரவு
களை வழங்கியிருந்தார்கள். ஆனால் நான் அறிந்திருக்கிற
வரையில், அந்த விவசாயக் கல்லூரியைத் துவக்குவதற்கான
நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது என்று
அறிகிறேன். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், அந்தக்
கல்லூரியைத் துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு
எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்குச் சொல்லியிருக்
கிறார்கள், கோவையிலே ஏற்கனவே ஒரு விவசாயக் கல்லூரி இருக்
கிறது. அதைப் பல்கலைக்கழகமாக மாற்ற இருக்கிறோம் என்று
சொல்லியிருக்கிறார்கள். ஒரு புதிய பல்கலைக்கழகம் வருவதிலே
மிக்க மகிழ்ச்சிதான். ஆனால் ஒரே ஒரு கல்லூரியை வைத்துக்
கொண்டு, எப்படி பல்கலைக்கழகத்தை உருவாக்க முடியும்
என்பதை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவிலே
அங்கே மேலும் பல கல்லூரிகளை உருவாக்குவதற்கு நமக்குக்
கிடைத்திருக்கிற இந்த சர்க்கரை ஆலையிலிருந்து கிடைத்
திருக்கிற லாபத்தை வைத்து, அந்தக் கல்லூரிகளை உருவாக்
கினால், பின்னால் பல்கலைக்கழகம் வருவதற்கு ஒரு நல்ல
வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அந்த
அளவிலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 18

13-15 மணி

இன்றைக்கு சர்க்கரை ஆலைகளிலேயிருந்து உப பொருளாகக்
கிடைப்பது மொலாசஸ். இந்த மொலாசசை நாம் பல்வேறு
நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்தலாம், மக்களை மேலும்
மேலும் வறுமைக் கோட்டிலே தள்ளுகிற காரியத்திற்கும் பயன்
படுத்துவதற்குகூட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த
மொலாசசை ஒதுக்குவதிலே இன்றைக்கு எந்த நடைமுறையை
கடைப்பிடிக்கிறோம் என்பதை அரசு தெளிவுபடுத்தவேண்டும்.
ஏனென்று சொன்னால், நான் அறிந்திருக்கின்றவரையிலே
இன்றைக்கு சென்னையிலே இருக்கின்ற ஒரு பிரபலமான அரசியல்
பிரமுகருக்கு 90,000 லிட்டருக்கு மொலாசஸ் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. ஆனால் அவர்களுக்கு என்று தனியாக ஒரு பேக்டரியோ
அல்லது மற்ற வசதிகளோ இல்லாத சூழ்நிலையில் அவர்களுக்
கென்று ஒதுக்கப்பட்டு, அவர்களின் மூலமாக யாரோ சிலர்
லாபம் அடையக் கூடிய முறையில் வழிவகை செய்யப்பட்
டிருக்கிறது. ஆகையால் எந்த அளவிலே இந்த மொலாசசை
எப்படி ஒதுக்குகிறார்கள் என்பதை எல்லாம், அதற்கான குறிப்பு
களை அரசாங்கம் இன்றைக்கு தெளிவுபடுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு புகளூர் காகித
ஆலையைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு வரையில், அது
நஷ்டத்திலே செயல்பட்டு வந்ததாகவும், இன்றைக்கு ரூ. 30
கோடி அளவிலே லாபம் அடைந்திருக்கின்றது என்பதை பார்க்கும்
போது நாம் பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறோம்.
அனால் எந்த அளவிலே அது உருவாக்கப்பட்டது? அந்த புகளூர்
ஆலை உருவாக்கப்படுகின்ற நேரத்திலே சிலர் பல்வேறு குற்றச்
சாட்டுகளை இதே மன்றத்திலே அன்றைக்கு எதிர்க்கட்சியிலே
இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். அதற்காக ரூ. 230 கோடி ஆகுமா?
இதிலே தவறுகள் இருக்கலாம். இவ்வளவு பெரிய தொகை
செலவு ஆகாது என்று சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைக்
கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு கடலூரில் நாம் பேப்பர்
ஆலையைத் துவக்க இருக்கிறோம். அதற்கு ரூ. 800 கோடி
செலவு என்று சொல்கிறோமே, அந்த புகளூர் ஆலையைப்
பொறுத்தவரையில் 1.40 இலட்சம் டன் அதனுடைய உற்பத்தித்
திறன் அன்றைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு
கடலூரில் உற்பத்தி செய்யப்படுகின்ற அந்த நியூஸ்பிரிண்ட் ஆலை
யினுடைய திறனானது இரண்டு இலட்சம் டன் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அந்த அளவைப் பார்ப்போமேயானால்
ரூ. 800 கோடி அளவிலே அதற்கு முதலீடு என்று சொன்னால்
அன்றைக்கு அவர்கள் சொன்ன அதேமாதிரி குற்றச்சாட்டைக்
கூட சொல்கிறேன். ஆகவே எங்களுக்கும் அந்தச் சந்தேகம்



1990 ஏப்ரல் 18] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

வருகின்றது. ஏனென்று சொன்னால் 1.40 இலட்சம் டன்
உற்பத்திக்கு ரூ. 230 கோடி, அதையே தவறு என்று சொல்
கின்றவர்கள் இன்றைக்கு இரண்டு இலட்சம் டன் உற்பத்திக்கு
ரூ. 800 கோடி என்று சொன்னால், டோஃபர்ஸ் போன்று இதிலே
ஏதாவது தவறுகள் இருக்குமோ என்று மக்கள் பேசிக்
கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிலே இதிலே தவறுகள்
இருப்பதாக நான் சொல்லவில்லை. ஏற்கெனவே இதே
மன்றத்தில் ரூ. 230 கோடி அளவிலே பல ஆண்டுகளாக இந்த
ஆலையைத் துவக்குவதிலே பல சிரமங்கள் ஏற்பட்டதன்
காரணமாக அதனுடைய விலை கூடிய நேரத்திலே குற்றச்சாட்டு
களை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்
சொன்னார்கள். இன்றைக்கு இந்த மாபெரும் ஆலையை
உருவாக்குவதற்காக, செய்யப்பட இருக்கின்ற அந்தச் செலவைப்
பொறுத்தவரையில் எங்களுக்கும் சந்தேகம் ஏற்படுகிறது.
அதையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெளிவாக விளக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நரிமணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு
தொழிற்சாலைகளை அந்தப் பகுதியிலே இருக்கின்ற
மக்களுக்காக உருவாக்குவதற்கு அங்கே கிடைக்கின்ற அந்த
எண்ணெயைக் கொண்டு, ஆரம்பிக்கவேண்டுமென்று ஏற்கெனவே
இருந்த அரசு திட்டங்களை வகுத்திருக்கின்றது. அந்த அளவிலே
அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அதை மேலும்
சிறப்பான முறையிலே செய்வதற்கு நம்முடைய மாநில அரசு
முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மிக முக்கியமாக இருப்பது வைரத் தொழிற்
சாலை. நாம் அந்தத் தொழிலை நல்லமுறையில் வளர்ப்பதற்கு
வேண்டிய சாத்தியக்கூறுகள் நம்முடைய மாநிலத்தில் இருக்
கின்றன. எனக்கு முன்னால் பேசிய அருமை சகோதரர் குமரி
அனந்தனும் அதை மிக அழகாக எடுத்துச்சொன்னார்கள்.
சூரத்திலேதான் இன்றைக்கு இந்தியாவிலேயே அதற்கு வேண்டிய
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு புரட்சித் தலைவர்
அரசு இங்கே ஆண்ட நேரத்திலே அங்கே பல வல்லுநர்களை
அனுப்பி அங்கேயிருக்கின்ற அந்தத் தொழிலை கற்றுத் தருவதற்கு
சிலரை இங்கே வரவழைக்கவேண்டுமென்ற வகையில் நடவடிக்கை
எடுத்தார்கள். அந்த இயற்கை வைரத்தை நாம் இங்கே பட்டை
தீட்டுவதற்கு வேண்டிய தொழிற்சாலை மற்றும் தொழில்களை
ஆரம்பிக்க இந்த மாநிலத்திலே மட்டும் அதற்காக ரூ. 300 கோடி
அளவிலே வருமானம் வரக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள்
இருக்கின்றன. அந்த அளவிலே அதை மறுபரிசீலனை செய்ய
வேண்டும். வைரத்தை தீட்டுகின்ற அந்த தொழிலில்
செயற்கை வைரத்தை தீட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை
எடுத்திருக்கிறது. அதில் 5 கோடி ரூபாய் தான் வருமானம்
வரும். ஆனால் இயற்கை வைரத்தை பட்டை தீட்டுவதற்கு

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1990 ஏப்ரல் 18

நடவடிக்கை எடுத்தால் அதன் மூலயாக நமக்கு 300 கோடி ரூபாய் வருவாயும் பெற முடியும். 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

13-20 மணி

இன்றைக்கு காலையிலே கூட பத்திரிகையிலே வந்திருக்கிறது. சேல்ஸ் டேக்ஸ்ஸைப் பொறுத்த வரையில் இன்றைக்கு மிக அதிகமாக உயர்த்தியிருப்பதன் காரணமாக பல்வேறு தொழிற்சாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் அல்லது தொழில் வளமே குன்றி போகக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அரசு சரிபார்த்து செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால் மற்ற மாநிலங்களோடு நாம் போட்டி போடக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதற்கு வழிவகை செய்கிற வகையில் அந்த சேல்ஸ் டாக்ஸ்ஸைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் நம்முடைய மாநிலத்திலே இங்கே இருக்கிற டிட்கோ நிறுவனத்தின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கிற ஒரு ஆலையை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டன. அதற்கு 300 கோடி ரூபாய் அளவிலே செலவு செய்ய வேண்டும் என்று பிராஜக்டுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு அது கிடப்பிலே போடப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அது போன்ற ஆலைகள் அதிகமாக வந்தால் தான் மின்சார உற்பத்தி அதிகமாகி இந்த நாட்டினுடைய தொழில் வளத்தை அதிகம் பெருக்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு மதுராந்தகம் தாலுக்காவானது பின் தங்கிய தாலுக்கா என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கிற தாலுக்காக்களில் 105 தாலுக்காக்களை நம்முடைய தொழில் வளத்திலே பின் தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவித்திருக்கிறோம். அந்த வகையிலே பல்வேறு சலுகைகளை அளித்து அங்கே தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆனால் அங்கே ஏற்கெனவே இருக்கிற ஆலை, மதுராந்தகம் கூட்டுறவு பாலிதின் மென்னிலை கோணி தயாரிக்கிற ஆலையானது இன்றைக்கு மூடுகின்ற நிலைமையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. கூட்டுறவின் மூலமாக அந்த ஆலை இயங்கிக் கொண்டு வந்தாலும் அதனுடைய உற்பத்திப் பொருள்களையெல்லாம் அரசு நிறுவனங்கள் வாங்குவதற்கு நடவடிக்கை



1990 ஏப்ரல் 18] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற தனியார்களோடு போட்டி போடுகின்ற நிலைமையிலே அவர்களுடைய விலைகள் 1 சதவீதம் 2 சதவீதம் அதிகமாக இருக்கலாம். ஆனால் அரசாங்கம் ஏற்கெனவே உத்திரவு போட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனத்தின் உற்பத்தி என்று சொன்னால் 15 சதவீதம் விலை அதிகமாக இருந்தாலும் கூட வாங்க வேண்டும் என்று சொல்லி உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்க நிறுவனங்கள் அதை வாங்குவது கிடையாது. அது ஏனோமோ மறுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அது மூடப்படுகின்ற நிலைமைக்கு வந்து ஏலத்திலே விடுவதற்கு வந்திருக்கிறார்கள். அதற்கு ஹைகோர்ட்டிலே தடை உத்திரவு வாங்கியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற பொது மக்கள் பேசிக் கொள்கிறது ஏலத்திலே கொண்டு வருவதற்கு முன்பு ஷேர் கேப்பிடல் உள்ளவர்களிடம் கருத்துக்களையெல்லாம் கேட்டு ஆய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த ஆலையை தனியாருக்கு விற்கின்ற வகையில் அந்த ஆலையை விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் அரசு நிறுவனங்களான அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்ஸுக்கும் மற்ற நிறுவனங்களுக்கும் அந்த கோணிப் பைகள் தேவைப்படுகின்றன. ஒன்று அதை அரசே எடுத்துச் செய்ய வேண்டும், இல்லையென்று சொன்னால் அங்கே உற்பத்தியாகும் பொருள்களையெல்லாம் அரசு நிறுவனங்கள் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாயனூரில் ஒரு ஆஸ்பெஸ்டாஸ் தொழிற்சாலை. இன்றைக்கு மூடுகின்ற அளவுக்கு இன்றைக்கு லே-ஆப் செய்திருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய பல்வேறு துறைகள் மூலமாக அங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பைப்புகளை வாங்கினாலேயே அந்த நிறுவனம் நல்ல முறையில் நடைபெற முடியும். அதையும் மூடுகின்ற அதை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்த 1986 ஆம் ஆண்டு அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு உத்திரவை போட்டார்கள், குடிநீர் வடிகால் வாரியமும், மற்ற மற்ற அமைப்புகளெல்லாமும் அந்த பைப்புகளை வாங்க வேண்டும் என்று உத்திரவுகளை போட்டார்கள். அந்த அடிப்படையில் தான் அன்றைக்கு எல்லா பைப்புகளையும் அரசு நிறுவனங்கள் வாங்கி அந்த ஆலையானது நல்ல முறையில் செயல்பட்டு 600 தொழிலாளர்களின் குடும்பங்கள் மறு வாழ்வு அடைகின்ற நிலைமை ஏற்பட்டது. இன்றைக்கு அந்த ஆலையை மூடுகின்ற நிலைமை ஏற்பட்டு கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய் அளவிலே அங்கே பொருட்கள் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்த நிறுவனத்தை மீண்டும்

துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு இன்றைக்கு உள்ள நிலைமையிலே தொழிலாளர்
களுக்கும் அரசுக்கும், அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கும்
தொழிற்சாலை அதிபர்களுக்கும் இடையில் நல்ல சுமுகமான
உறவு இருந்தால்தான் நாட்டிலே தொழில் வளம் வளர
முடியும். ஒரே ஒரு சங்கத்தை திணிக்க வேண்டும் என்ற முறை
யிலே — ஆளுகின்ற கட்சியினுடைய சங்கம் தான் அதிலே இருக்க
வேண்டும் என்ற முறையிலே பல்வேறு திணிப்புகள் செய்தால் —
முன்பு தமிழகத்திலே எப்படி தொழில அமைதி கெட்டு தமிழகத்
திற்கு வர வேண்டிய பல்வேறு தொழிற்சாலைகள் எல்லாம் போய்
விட்டதோ அதே போன்ற நிலைமை வரும் என்பதைத் தெரிவித்துக
கொள்கிறேன். வெளிநாட்டிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு
முதலீடுகள் அதிகமாக வரவேண்டும் என்ற முறையிலே பல்வேறு
நடவடிக்கைகளை முன்பு எடுத்திருக்கிறார்கள்.

13-25 மணி

ஆந்திராவினுடைய முதலமைச்சராக இருந்த திரு. என். டி.
ராமாராவ் அவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று வெளிநாடுகளிலே
இருக்கிற இந்தியர்களையெல்லாம் அவர்களுடைய மாநிலத்திலே
முதலீடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதற்காக
கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் பெற்று வந்தார்கள்.
அங்கே தொழிற்சாலையைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்
திருக்கிறார்கள். மஹாராஷ்டிராவிலும் அது நல்ல முறையில்
வளர்ந்து கொண்டு வருகிறது. ஆனால் இங்கு ஏதோ ஒரு காழ்ப்
புணர்ச்சியின் காரணமாக அது மறுக்கப்படுகின்ற அளவிலே அதை
கொச்சைப்படுத்துவதன் காரணமாக இன்றைக்கு வெளிநாட்டிலே
இருக்கின்ற இந்தியர்கள் இங்கே தொழிற்சாலையைத் துவக்கு
வதற்கு அச்சப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதை அரசாங்கம்
போக்குவதற்கு நடவடிக்கை எடுத்து இந்த தொழில் வளமானது
மேலும் நல்ல முறையிலே தமிழகத்திலே வளர்ந்து தமிழகத்தில்
இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற
அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்
பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும் தொழில் துறை
மானியத்தின் மீது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்
களும், தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தொகுத்து
வழங்கி, தமிழகத்திலே மேலும் தொழில் துறையை எப்படி
எல்லாம் வளர்க்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை இந்த
அரசிற்குக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னு
டைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக உரையாற்றத்
தொடங்கிய சுப்பிரமணியன் அவர்களிலிருந்து, நம்முடைய



காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன்
அவர்கள் வரையில் பேசிய அனைவரும் தமிழகத்திலே தொழில்
துறை வளர்ச்சிக்குப் பல ஆக்கப்பூர்வமான கருத்துக்களை
எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நண்பர் உகம்சந்த் அவர்கள்
மாத்திரம் எப்படியாவது ஒரு குறையை இந்த அரசின்மீது
சொல்லவேண்டும் என்று சுற்றிச்சுற்றிப் பார்த்து, அந்த
முயற்சியிலேயே கடைசி வரை நின்று தன்னுடைய உரையை
அவர் நிறைவு செய்து இருக்கிறார். அவர் இந்த அரசைக்
குறைகூற வேண்டும் எப்படியாவது என்பதற்காக எடுத்துக்
கொண்ட முயற்சியை நான் தடுக்கவும் இல்லை, கண்டிக்கவும்
இல்லை, மாறாக அதிலும் ஏதாவது இந்த அரசு தன்னைத்
திருத்திக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் இருக்குமானால்
அதனையும் நான் ஏற்றுக்கொண்டு அதன்படி தொழில் துறையை
வளர்ப்பதற்கு இந்த அரசு பாடுபடும், பணியாற்றும் என்ற
உறுதியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்தத் தொழில் வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை
மிகக் குறைவாக இருக்கிறது என்று நேற்றையதினம் உரை
யாற்றிய நண்பர் பூவராகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.
அவர்கள் இந்த இரண்டு மானியங்களிலே ஒதுக்கப்பட்ட
தொகையை மாத்திரம் தான் கணக்கிட்டு குறிப்பிட்டார்கள்
மானியக் கோரிக்கை எண்.24 தொழில்கள் என்ற தலைப்பிலே
6.53 கோடி ரூபாயும், மானியக்கோரிக்கை எண்.51 தொழில்
வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பில் 22.24
கோடி ரூபாயை மாத்திரம் கணக்கிட்டு 28 கோடி ரூபாய் தான்
என்று வருத்தப்பட்டார்கள். ஆனால் இப்பொழுது விவாதிக்கப்
படாத கோரிக்கை எண். 59 மாநில அரசு வழங்கும் கடன்களும்
முன் பணங்களும் என்ற தலைப்பில் 19 கோடி ரூபாயையும்
சேர்த்தால் 47.77 கோடி ரூபாய் ஆகிறது. அது மாத்திரம்
அல்ல. அரசு உத்திரவாதத்தோடு வெளிச் சந்தையிலே 4.37
கோடி ரூபாய் கடன் பெறுவதற்கும் வழிவகைகள் செய்யப்
பட்டுள்ளன. இதனையும் கூட்டினால் 1990-91 ஆம்
ஆண்டு மொத்த ஒதுக்கீடு 52.14 கோடி ரூபாய்
ஆகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். 1989-90 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்
போது அந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்
பட்ட தொகை 44.29 கோடி ரூபாய்க்கு மாறாக இப்போது
52.14 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதை நான்
எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில அரசு
நேரடியாக தொழில்களிலே மூலதனத்தைப் போடுவதைவிட மிக
அதிக அளவில் தொழில்களை ஊக்குவிப்பதில்தான் அக்கறை
காட்டுகிறது என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு
உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி]

13.30 மணி [1990 ஏப்ரல் 18

எனவே, அரசுத் தரப்பிலே வழங்கப்படுகின்ற ஒதுக்கீடு இந்த
அளவில் இருந்தாலும்கூட ஏனைய நிதி நிறுவனங்கள் மற்றும்
வங்கிகள், அரசு தொழில் நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்
படுகின்ற இந்தத் தொகைகளையும், மூலதனத் தொகைகளையும்
ஈக்குவிட்டி, இவைகளையெல்லாம் கூட்டிப்பார்த்தால் தொழில்
களுக்கான ஒதுக்கீடு நம்முடைய மாநிலத்திலே அதிகமாகவே இருக்
கிறது என்பதை உணரக்கூடும். இந்த அரசினுடைய தொழில்
கொள்கையைப் பற்றி கடந்த ஆண்டு இந்த மானியத்திலே நான்
எடுத்துக்கூறியிருக்கிறேன். இன்றைக்கும் அதை நினைவூட்ட
நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய நண்பர் பொன்னுசாமி அவர்கள் நேற்றைய
தினம் பேசும்போது, தனியார் தொழிலை எல்லாம் நாம்
இன்றைக்கு உருக்குலைக்கிறோம். அவர்களை விரட்டியடிக்
கிறோம், தனியார் தொழில் தொடங்கவே அஞ்சுகிறார்கள்
என்ற கருத்துப்பட சில செய்திகளை இங்கே எடுத்துச்சொன்னார்.
அப்போதே நான் அதற்கு மறுப்பு உரைத்திருக்கிறேன் என்றா
லும்கூட, இந்த அரசைப் பொறுத்தவரையில் 'ஜாயின்ட்
செக்டார்' என்கின்ற அந்த ஒரு நிலையோடு, கடந்த ஆண்டில்
'அசோசியேட் செக்டார்' என்கின்ற இன்னொரு நிலையையும்
உருவாக்கி ஜாயின்ட் செக்டாரிலே அரசினுடைய பங்காக 26
விழுக்காடும், அசோசியேட் செக்டாரிலே 11 விழுக்காடும் என்று
அப்படிப்பட்ட தொழில்களைத் தனியார் துறையோடு சேர்ந்து
கூட்டு முயற்சியாகச் செய்வது என்று அறிவிக்கப்பட்டது.
அந்த விழுக்காடுகள் அதிகமாக உள்ள அரசு பங்கீடுகளைக்கூட
'டிஸ்இன் வெஸ்மென்ட்' என்கின்ற முறையிலே உரிய நேரத்தில்
பெற்று வேறு புதிய தொழில்களுக்கு அந்தத் தொகையை
வழங்குகின்ற இட்டத்தையும் ஏற்கெனவே நாம் அறிவித்திருக்
கின்றோம்.

எனவே, 26 விழுக்காடு என்பது அரசின் பங்கு
சொன்னால், ஏதோ அரசு என்பது எங்கேயோ இருக்கிறது என்று
யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அரசின் பங்காக 26 சதவிகிதம்
என்பது மக்களின் பங்குதான். 26 சதவிகிதம் அரசின் பங்கு.
25 சதவிகிதம் தனியார் துறையிலே அவர்களுடைய பங்கு.
அஃதன்னியில் மீதமுள்ள சதவிகிதம் அத்தனையும் பொது
மக்களுடைய ஷேர். அவர்களுடைய பங்குத் தொகைகள்.
எனவே, பொதுமக்களுடைய பங்குத்தொகை, அரசினுடைய
பங்குத்தொகை இந்த இரண்டும் பொதுமக்களுடைய பங்குத்
தொகைதான். 'அரசு' என்று நாம் தனித்துக் குறிப்பிட்டுச்
சொன்னாலும் கூட, அது மக்களுடைய பங்குத்தொகைதான்.
அப்படிப்பட்ட மக்களின் பங்குத்தொகை அதிகமாக இருக்கின்ற
நிலையில் உரிய பங்குத்தொகைகூட இல்லாமல், அதைவிடக்
குறைவான பங்குத் தொகையை வைத்துக்கொண்டு முழு



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆதிக்கத்தையும் ஒரு தொழிலிலே நடத்தவேண்டும் என்று
எண்ணுகின்ற தனியார்களை இந்த அரசு நிச்சயமாக சகித்துக்
கொள்ளாது. அதனால்தான் கடந்த சில பல ஆண்டுகளாக,
ஒரு நிறுவனம்—அவர்கள் குறிப்பிட்ட அந்த நிறுவனத்தில் தலை
வராகவும் அந்தக் குடும்பத்தவர். அதிலே எம்.டி.யாகவும்
அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவருடைய மகன் என்கின்ற
அளவிலே ஒரு நிலை ஏற்பட்டபோது, அவர்களுக்கு நாங்கள்
எடுத்துக்காட்ட வேண்டிய கடமை எங்களுக்கு உருவானது.

மத்திய அரசு 1976ஆம் ஆண்டிலேயே ஒரு அறிவிப்பைச்
செய்தது. கூட்டுத் துறை நிறுவனங்களில் அரசு சார்பில்
ஒருவரை நியமிக்கவேண்டும் என்ற கருத்தை மத்திய அரசு
76ஆம் ஆண்டு வெளியிட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே
தான் அரசாங்கத்தினுடைய அதிகத் தொகையைப் பயன்படுத்திக்
கொண்டு, அரசுக்கு எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இல்லாத
ஒரு நிலைமை இருக்கக்கூடாது என்று நாங்கள் நடவடிக்கைகளை
இன்றைக்குத் தொடங்கியிருக்கிறோமே அல்லாமல், ஏதோ ஒரு
நிறுவனத்திலே ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையை வைத்து,
எல்லா தனியார் நிறுவனங்களும் அஞ்சத் தேவையில்லை
என்பதையும், ஆனால் இதேமுறை கடைப்பிடிக்கப்படுகிற
தனியார் நிறுவனம் எதுவாக இருந்தாலும் கூட அரசு நட
வடிக்கை எடுக்கத் தயங்காது என்பதையும், இதுதான் தொழில்
துறையிலே அரசாங்கத்தினுடைய திட்டவட்டமான கொள்கை
என்பதையும் நான்தெரிவிக்கப்பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேன்

இங்கே நேற்றைய தினம் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.
ஆட்சிக்கு வந்து 15 மாதம் ஆகிறது. எத்தனை தொழிற்சாலை
களை நீங்கள் கண்டீர்கள் என்று எல்லாம் கேட்டார்கள்.
தொழிற்சாலைகள் என்பது இன்றைக்கு அடிக்கல் நாட்டி
நாளையதினம் உற்பத்தியைத் தொடங்குகின்ற அளவிற்கு மாய,
மந்திர ஜாலங்களால் அமையக் கூடியவைகள் அல்ல. ஒரு
தொழிற்சாலை அமைவது என்றால் அதற்கான ஆய்வுகள்,
அதற்கான ஏற்பாடுகள், முதலீடுகள் இத்தனையும் நடைபெற்று
ஒரு தொழிற்சாலை அமைய வேண்டி இருக்கிறது.

13-35 மணி

அந்த வகையில் நான் கடந்த ஆண்டு அறிவித்து இருக்கிறேன்.
இந்த ஆட்சி தோன்றுவதற்கு முன்பு, முன்பு இருந்த ஆட்சியில்
அறிவிக்கப்பட்டு ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கா
மல் நின்று போன தொழிற்சாலைகளைக்கூட கடந்தகால ஆட்சி
அறிவித்தது என்பதற்காக அவைகளை விட்டுவிடாமல் அந்தத்
தொழிற்சாலைகளை எல்லாம் தொடங்கி அதற்காக 62.3 கோடி
ரூபாய் செலவில் இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு நடை
முறைப்படுத்தியிருக்கிறது. அதனுடைய விவரங்களைச் சொல்ல
வேண்டுமானால் தமிழ்நாடு மக்னீசியம் அண்டு மெரைன்

கெமிக்கல்ஸ், வாலிநோக்கத்தில் 9.60 கோடி ரூபாய் செலவில் டிட்கோ மட்டும் ஈடுபட்டு செய்யக்கூடிய தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலை உப்புக் கழிவு நீரிலிருந்து மக்னீசியம் உலோகம் தயாரிக்கும் தொழிற்சாலை. இந்த உலோகம் அணு மின் உற்பத்திக்குப் பயன்படக்கூடிய ஒன்று ஆகும். இங்கே உற்பத்தி தொடங்கப்பட்டாதகிவிட்டது. ஏற்கெனவே இருந்த அரசு அறிவித்தது, ஆனால் இது நடவடிக்கையும் எடுக்காமல் உறங்கிக் கிடந்த ஒன்று. இப்போது உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, டைட்டான் வாட்சஸ், ஏற்கெனவே கடிகாரம் செய் கின்றஅந்தத் தொழில் மட்டும் ஓசூரில் தொடங்கியது. அதற்குப் கேசஸ் அண்டு பிரிசிலிட்ஸ் என்கின்ற அந்தத் திட்டத்தை ஏறத் தாழ 30 கோடி ரூபாய் செலவில் ஓசூரில் சிப்காட் தொழில் வளாகத்திலே நிறுவப்பட்டு டிட்கோ நிறுவனமும், டாட்டா நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறையில் கடிகாரம் தயாரிக் கின்றது. இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற கடிகாரங்கள்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனை ஆகின்றன என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடிகாரங்களுக்குத் தேவை யான கேசஸ், அதாவது கூடுகளை வெளிநாட்டிலிருந்து இது வரையிலே அங்கே இறக்குமதி செய்து இருந்த நிலையை மாற்றி அவைகளை அங்கேயே தயாரிப்பதற்கான அளவிலே அந்தத் தொழிற்சாலை இப்போது 30 கோடி ரூபாய் அளவிலே விரிவு படுத்தப்பட்டு இருக்கிறது இந்த ஆண்டில்.

சக்தி சோயாஸ் லிமிடெட், கூட்டுத் துறை. டிட்கோவும் சக்தி நிறுவனமும் இணைந்து 22.48 கோடி ரூபாய் மூலதனத்தில் பொள்ளாச்சிக்கு அருகிலே நிறுவப்பட்டுள்ளது. சோயாவிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை இது. தயாரிப்புப் பணியும் தொடங்கி விட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த ஆண்டிலே உற்பத்தியைத் தொடங்க உள்ள தொழில்கள் பற்றிய விவரங்களைத் தர விரும்புகிறேன். யூ.பி பெட்ரோ புராடெக்ட்ஸ் லிமிடெட், 80.65 கோடி ரூபாய் மூல தனத்தில் மணலியில் கூட்டுத் துறையில் தொடங்கப்படும் தொழிற்சாலை ஆகும் அது. கட்டுமானப் பணிகள் எல்லாம் முடிவடையும் தருவாயில் உள்ளன. யந்திரங்கள் பொருத்தப் படுகின்ற பணி இன்னும் 2 மாதத்தில் முடிவுறும். பால்யூல்ஸ் மற்றும் இதர பெட்ரோலியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற் சாலை அது. பிளாஸ்டிக் தொழிற்சாலை போன்றவைகளுக்கும் மற்றும் வேறு சில தொழில்களுக்கும் பால்யூல்ஸ் பயன்படக் கூடிய பொருள் ஆகும்.



அடுத்து, ஐந்தாவதாக தமிழ்நாடு டெலி கம்யூனிகேஷன் லிமிடெட், மத்திய அரசும், மாநில அரசும் கூட்டு முயற்சியில் தொலைபேசிக் கம்பி மற்றும் தொலைபேசிக்கு வேண்டிய சில உபகரணங்கள் உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலை. 23.30 கோடி ரூபாய் செலவில் அரக்கோணத்திலே அமைந்துள்ள தொழிற்சாலை இது. மாநில அரசு 25 சதவீதமும், மத்திய அரசு 26 சதவீதமும் இதிலே பங்கு பெறுகின்றன. 1989ஆம் ஆண்டு மே மாதம் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு' ஜூலை 90க்குள் இயந்திரங்கள் வந்து சேர்ந்து தொழில் தொடங் கும் என்று எதிர்பார்க்கிற அளவுக்கு அந்த வேலைகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

ஆறாவதாக, சங்கம் அலுமினியம் லிமிடெட். தேன்கனிக் கோட்டையில் 10.35 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்சாலை, அலுமினியத் தால் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் இங்கே உற்பத்தி ஆக இருக்கின்றன. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இயந்திரங்கள் செப்டம்பர் மாதம் பொருத்தப்பட்டு டிசம்பர் திங்களிலே உற்பத்தி தொடங்க இருக்கிறது.

ஏழாவதாக, இண்டகிரேட்டடு வாட்டர் புரூப்பிங் லிமிடெட் 4.62 கோடி ரூபாய் செலவில் அலமாதி கிராமத்தில் செங்கை— அண்ணா மாவட்டத்தில் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் எல்லாம் ஆரம்பமாகி விட்டன. இயந் திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு விட்டன. விரைவிலே அந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கும்.

13–40 மணி

எட்டாவதாக, நார்த் ஆர்க்காட் லெதர்ஸ் லிமிடெட், ரூபாய் 1.60 கோடி செலவில் கலனிப்பாக்கத்தில், வாணியம் பாடிக்கு அருகே இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது. கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன, இதுவும் ஒரு கூட்டுத்துறை நிறுவனம் ஆகும்.

அடுத்து, பணிகள் தொடர்ந்து நடைபெறும், இன்னும் முடி வடையாத நிலையிலே இருக்கிற தொழிற்சாலைகள் என்று எடுத்துக் கொண்டால்—9–ஆவதாக "டைனா லேம்ப்ஸ் அன்ட் கிளாஸ் ஒர்க்ஸ்" என்பது கும்மிடிப்பூண்டிக்கு அருகே ரூ 42.70 கோடி செலவில் கூட்டுத் துறையில் டிட்கோவும், டைனாவிஷனும் சேர்ந்து தொடங்கும் தொழிற்சாலை ஆகும். இங்கே மின் விளக்குக்குத் தேவையான உபகரணங்கள் தயாரிக்கிறார்கள். இதற்கு ஐ.டி.பி.ஐ. கடன் வழங்கவும் அனுமதி தரப்பட்டு விட்டது. விரைவில் இந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

10—ஆவதாக ரிலையன்ஸ் செராமிக்ஸ், மதுராந்தகத்தில் ரூ.
20.40 கோடி செலவில் கூட்டுத்துறையில் டிட்கோ, லைட்
ரூ. ஃபிங்ஸ், ரிலையன்ஸ் செராமிக் நிறுவனங்கள் ஆகியவை
இணைந்து மெருகூட்டப்பட்ட தரை மற்றும் சுவர் ஓடுகள்
தயாரிக்கின்ற தொழிற்சாலை. ஐ.டி.பி.ஐ. கடன் இதற்குக்
கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு அது தன்னுடைய உற்பத்தி
யைத் தொடங்க இருக்கிறது.

11—ஆவதாக உஷ்டாகே பயோடெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் என்ற
நிறுவனம் கடலூரில் ரூ. 20 கோடி மூலதனத்தில் செயற்கை
இனிப்பு தயாரிக்கின்ற தொழிற்சாலை கூட்டுத் துறையில்
டிட்கோ நிறுவனமும் கல்கத்தாவைச் சேர்ந்த உஷ்டாகே என்ற
நிறுவனமும் சேர்ந்து நடத்தும் தொழிற்சாலைக்கான கட்டு
மானப் பணிகள் நடைபெறுகின்றன. அண்மையில்தான் நான்
அடிக்கல் நாட்டு விழாவிற்குச் சென்று இருந்தேன்.

கழக அரசு மீண்டும் வந்து அறிவிக்கப்பட்ட பணிகள்,
நடைபெற்றுவருகின்ற தொழிற்சாலைகள் —12—ஆவதாக—பில்
கோ கிளாஸ் கம்பெனி லிமிடெட், புவனகிரியில் ரூ. 17.90
கோடி செலவில் கூட்டுத் துறையில் தொடங்கப்படும் தொழிற்
சாலை. நிலம் கையகப்படுத்தப்பட்டு 27-8-1989 அன்று
அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று பணிகள் நடைபெற்று வரு
கின்றன. இங்கே ஷீட்கிளாஸ்கள் தயாரிக்கப்பட இருக்கின்றன.

பதின்மூன்றாவதாக Dandeck Ag o Chemicals Limi ed
கடலூரிலே ரூ. 5.48 செலவிலே கூட்டுத் துறையில், நிறுவப்
பட உள்ள பூச்சிக்கொல்லி மருந்து, தொழிற்சாலை ஆகும்.
இதுவும் 27-8-1989-லே அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள்
நடைபெற்று வருகின்றன.

14—ஆவதாக, Ste ling Dungston Products கடலூரில் ரூ.
45 கோடி செலவில் கூட்டுத் துறையில் தொடங்கப்படுகின்ற
தொழிற்சாலை ஆகும். டங்ஸ்டன் பௌடர், பாதுகாப்புத்
துறைக்குப் பெரிதும் பயன்படுகின்ற ஒன்று. கொரிய நிறுவனம்
ஒன்றோடு தொழில் நுட்ப ஒப்பந்தத்திற்கான பேச்சுக்கள்
விரைந்து நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்தத் தொழிற்
சாலை தொடங்கப்பட இருக்கின்றது. ரூபாய் 45 கோடி
முதலீட்டில்.

இது தவிர, அண்மையில் மேலும் 3 திட்டங்களுக்கு ஒப்புதல்
வழங்கப்பட்டுள்ளன. பெரிய தொழில் திட்டங்கள்.

அனிலைன் திட்டம்—ரூபாய் 110 கோடி செலவில் ராணிப்
பேட்டையில் கூட்டுத் துறையில் அனிலைன், நைட்ரிக் அமிலம்,
அமோனியம் நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருள்களைத்
தயாரிக்கின்ற தொழிற்சாலை, இந்தத் தொழிற்சாலைக்காக சில
இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 எப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

16—ஆவதாக ''மினரல் செபரேஷன் பிளான்ட்'' என்ற தொழிற்
சாலை ரூபாய் 20 கோடி முதலீட்டில் மத்திய அரசும், மாநில
அரசும் இணைந்து நடத்தும் தொழிற்சாலை. சிதம்பரனார்
மாவட்டம், குதிரைமொழித்தேரியில் அமையும் தொழிற்சாலை
இது. தோரியம், இல்லுமினேட் போன்ற பொருட்கள் இதில்
உற்பத்தியாகும்.

மத்திய அரசின் நிறுவனமான இந்தியன் ரேர் எர்த் - உடன்
இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

17—ஆவதாக டிடானியம்-டை-ஆக்ஸைடு என்ற தொழிற்சாலை,
ரூபாய் 140 கோடி செலவில், கூட்டுத் துறையில், அதே குதிரை
மொழித்தேரியில் தொடங்கப்பட இருக்கிறது.

ஆக, 15 மாத காலத்தில் 15 தொழிற்சாலை வந்ததா என்ற
கேள்விக்கு, அறிவித்து, நடைமுறையிலே இல்லாத தொழிற்
சாலைகளையும், அறிவித்து உடனடியாகத் தொடங்கிய தொழிற்
சாலைகளையும், இந்த ஆண்டு உற்பத்தி தொடங்குகிற
தொழிற்சாலைகளையும், உற்பத்தி அடுத்த ஆண்டு தொடங்கு
வதாக இருந்தாலும் இந்த ஆண்டு கட்டுமானப் பணிகள்,
இயந்திரங்கள் இறக்குமதி செய்கிற பணிகள் இவைகள் எல்லாம்
முடிவுறுகின்ற பணிகளுமாக 17 தொழிற்சாலைகளுக்கான பட்டி
யலைத்தான் இந்த மாமன்றத்திலே உங்கள் முன்னால் நான்
வைத்திருக்கிறேன்.

13—45 மணி

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரமணி
அவர்களும், மற்றவர்களும் மத்திய அரசு சார்பிலே அதனுடைய
அனுமதியைப் பெற்றும், மத்திய அரசு முதலீடு செய்கின்ற
வகையிலும் பல தொழிற்சாலைகளை நாம் தமிழகத்திற்குப்
பெற்றாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திப் பேசியிருக்
கிறார்கள். மத்திய அரசு முதலீடு செய்கின்ற பல தொழிற்
சாலைகள் தமிழகத்திற்குப் பெற்றாகவேண்டுமென்ற கருத்தை
வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அதிலும் இந்த அரசு மெத்தன
மாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர்
அவர்கள் பேசும்போது கூட, எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்
ஒன்று தமிழ்நாட்டில்—குறிப்பாக, நாகையிலே அந்தப் பகுதியிலே
அமைய வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.
நேற்றும், இன்றும் பேசிய கட்சிகளின் தலைவர்களும், கட்சிகளின்
உறுப்பினர்களும் தமிழகத்திலே எங்கெங்கே, இந்த மாநிலம்
முழுவதும் தொழில்கள் பொங்கிப் பெருகவேண்டுமென்ற
சாத்தியக் கூறுகளையெல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள். நாம்
ஒவ்வொரு தொழிலுக்கும் மத்திய அரசினுடைய உதவிகளைப்

பெறவேண்டிய தொழில்களாக இருந்தாலும், அனுமதியைப் பெற வேண்டிய தொழில்களாக இருந்தாலும், அதுகுறித்து கவலைப் படாமலேயோ, அல்லது சோர்வாகவோ, அலட்சியமாகவோ, அக்கறையற்ற தன்மையிலோ இருந்திடவில்லை என்பதை நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமும், பெட்ரோ கெமிக்கல்ஸ் நிறுவனமும் ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கியுள்ள 'நாப்கோ' நிறுவனம், மணலியில் 1356 கோடி ரூபாய் செலவில், பெட்ரோலிய ரசாயனப் பொருட்களைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தக் கருதி, அதற்கான நிலத்தையும் கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாகிவிட்டது. அது குறித்து தொடர்ந்து மத்திய அரசோடு நேரிலும், நாங்கள் கலந்து பேசுகின்றோம், கடிதம் மூலமாகவும் அவர்களுக்கு எழுதுகின்றோம். அண்மையில் கூட, 2-4-1990-ல் இந்தியப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில், இந்த National Aromatics and Petrochemicals Corporation சார்பாக அமைய வேண்டிய தொழிற்சாலையைப் பற்றி எழுதும்போது, "while the feasibility report was submitted in July 1989, the capacity of the project was enhanced to 2 lakhs tonnes of P.P.A. as per Govern ment Policy, and the report was revised with a total investment cost of Rs. 1,356 Crores in September 1989. Environmental clearances both from State and Central Governments have been obtained and the project is pending before the P.I.B. for clearance என்று குறிப்பிட்டு விட்டு, உடனடியாக அதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டு மென்று நான் கேட்டு, "As the project does not depend on the Government of India for financed and as it is, a major venture in our State after more than a decade, I would be grateful, if you could use your good offices for the early clearance of the said project by the P.I.B. and others, without further postponment which would only result in avoidable cost escalation..." என்றும் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்திற்கு, "உடனடியாக அது கவனிக்கப்படும்" என்று பதில் அவர்களிடமிருந்து வந்திருக்கிறது.

அதைப்போல, எரிவாயு பற்றி காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நேற்றைய தினம் நம்முடைய வெள்ளிங்கிரி அவர்களும் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள் யாரும் அதைக் குறிப்பிடத் தவறவில்லை. எரிவாயுவினுடைய பயன்களையும், அதை நாம் பெற எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே பல்வேறு பெட்ரோலிய ரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏதுவாக, தென்னகத்திற்கான எரிவாயு இணைப்பு வேண்டுமென்று, ஏற்கெனவே ராஜீவ் காந்தி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே, அந்தத் துறையினுடைய அமைச்சர் இங்கே ஒரு விழாவிற்கு வந்தபோது, நானும் அதில்



கலந்துகொண்டபோது, அதைக் குறிப்பிட்டு "நல்ல யோசனை, அதைப் பற்றி நாங்கள் பரிசீலிக்கிறோம்" என்று குறிப்பிட்டார்கள். தொடர்ந்து அந்த ஆட்சி மாறி, தேசிய முன்னணி ஆட்சி வந்த பிறகும் கூட, அதை நாங்கள் நினைவுபடுத்தி, திரு. குருபாதசாமி அவர்களை டெல்லியில் சந்தித்துப் பேசிய போதும், பிறகு அவர் சென்னைக்கு வந்தபோது என்னைச் சந்தித்தபோதும் அதை வலியுறுத்தியதன் அடிப்படையில், அவர் 6-4-1990-ல் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், "Please refer to your D.O. letter dated 22-2-1990 regarding the laying of a Southern Gas pipeline from Bombay High. I am glad to inform you that we have decided to constitute an Inter-Ministerial Committee to examine the issues pertaining to the construction of Southern Gas Grid. We are anxious that the available gas is utilised as quickly as possible. This matter would therefore continue to receive our highest priority" என்று-அவர்கள் உடனடியாக பதில்-எழுதியிருக்கிறார்கள். நான், பதில் எழுதியதற்காகப் பாராட்டுகிறேன், உடனடியாக முயற்சிகளைத் தொடர்ந்து செய்து நம்முடைய கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு மத்திய அரசின் அமைச்சர்களும் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

13-50 மணி

சேலம் இரும்பாலை பற்றிக்கூட இங்கே அனைவரும் கேட்டிருக்கிறார்கள். காலையில் நம்முடைய திரு ரமணி அவர்கள் இங்கே பேசினார்கள். திரு. பாண்டியன் அவர்கள் இங்கே பேசினார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசினார்கள். எல்லோருமே பேசியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக இந்த ஆட்சி தொடர்ந்து வாதாடிக் கொண்டு இருக்கிறது. இந்த ஆட்சி இந்தத் திட்டத்திற்காக வாதாடவில்லை என்கிற ஒரு தவறான பிரச்சாரம் சில ஏடுகளில் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சேலத்திலே இரும்பாலை வேண்டும் என்பதற்காக வாதாடி, போராடி, அதிலே வெற்றி பெற்றது அன்றைக்கே 1971-ஆம் ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை யாரும் மறந்திருக்க இயலாது. ஆனால் அன்றைக்கு அனுமதிக்கப்பட்ட அந்த சேலம் இரும்பாலை நாம் நினைத்தவாறு அமையாமல் வேறுமாதிரி அமைந்து விட்டது. எனவேதான் இப்போதுகூட நான் இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. வி. பி. சிங் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறேன் :

"Dear Prime Minister,

On the basis of the representation made by me to the late Thirumathi Indira Gandhi, the Salem Steel Plant was approved in 1970. According in the original detailed project report it envisaged the manufacture of stainless steel, cilicon steel and special steel and

installation of hot rolling and cold rolling facilities. However
only a cold rolling complex for the production of 32,000 tonnes of
stainlees steel sheet we e commissioned in 1981 in the fiist s age
The o iginal concep ion of an integerated steel plant has thus been
grossly dilutea and what has been ins alled in Salem is largely in the
natu e of a Stainless Sieel Rolling Mill . Ou Governm n has been
representing from time to time for the setting up hot rolling faci-
lities to enable the upstream in egration of this plant. We a e
awa e that considerable investment is taking place in North India
in regard to modernisation of steel plant and a case for fur her
investment in the existing facilities in Salem in order to realize the
o iginal conception should not be delayed any further. The
Durgapur Steel Plant has been modified at a conside able cost to
make stainless steel contint ous cast slabs which a e now being
sent all the way to Finland for rolling into hot roll coil. With the
setting up of hot rolling facilities at Salem, there is scope for
considerable saving of foreign exchange. The project will provide
direct employment to 2500 persons and will also generate conside
rable indirect employment in the ancillary and tertia y sectors. I
will be grateful if you can give this your sympathetic consideration
and have the project included in the Eigth Plan. On our pa t we
shall take all steps to meet the additional powe requi ement for
the project once the detailed time-schedule is worked out." என்று
பிரதமருக்கு எழுதிய கடிதத்தை அவ் துறையினுடைய அமைச்
சருக்கு அனுப்பி கலந்து பேசி அந்தத் துறையினுடைய அமைச்சர்
திரு. தினேஷ் கோஸ்வாமி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில்,
"Please refer to your letter of January 22, 1990 in regard to the
establishment of hot rolling faciltIes at Salem Steel Plant. I app e
ciate and share your concern in the matter. The growth of Salem
Steel Plant has been engaging the attention of the Gove nment.
While the work of doubling the capacity of the Plant by installation
of a second Spensione Mill is cu rently in p ogress, the question
of installing hot rolling facilities at Salem as well as the p oposal
to include it in the Eight Plan are also unde the active considera
tion of the Government. We shall keep in mind your concern in
coming to a final decision." என்று அந்தத் துறையினுடைய
அமைச்சர் எழுதியிருக்கிறார். அதைப் போலவே, மணலி உரத்
தொழிற்சாலையினுடைய விரிவாக்கத்திற்காகவும், நான்
மத்திய அரசுக்கு வேளாண்மைத்துறை அமைச்சருக்கு, துணைப்
பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு,
10—4—1990-ல் அவர் எழுதிய பதில் கடிதத்தில்
"Please refer to your letter, dated 22nd February, 1990 regarding
the schemes of Madras Fertiliser Limited. As regards the
expantion of the existing Fertilisers Plant of M.F.L., the Company
was advised to prepare a detailed project report for its revamping



mode nisation and also for its replacement by a new Plant. In
this context a detailed project report for revamping modernisa-
tion of the existing plant of M.F.L. has been received. It contains
two alte natives. While the first alterrative is intended to p olong
the life of the existing plant at an investment of Rs.105 crores
approximately, the secord alternative involving an expenditure of
about Rs.240 cro es will improve the existing capacity and produc-
tion. Both the alterratives a e being examered Devi Lal'-என்று அவர்
கடிதம் எழுதியிருக்கிறார். இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு
தமிழகத்திலே தொழில் வளர இந்த வயதான காலத்தில் நம்
முடைய ராஜேந்திரன் அவர்கள் சொன்னதைப் போல அவரைப்
போல, இளைஞராகவும் இல்லாமலே, முயற்சிகளை மேற்கொண்
டிருக்கிறேன் என்பதை எடுத்துக்காட்டத்தான் மத்திய அரசோடு
தொடர்ந்து நேரிலும், கடிதப் போக்குவரத்து மூலமாகவும்,
மத்திய அரசினுடைய அனுமதியை, இங்கே பெரும் தொழில்
களுக்குக் கிடைக்க வேண்டுமென்றும், மத்திய அரசு மூலதனத்
தோடு இங்கே பல தொழில்கள் உருவாக வேண்டுமென்றும்
நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதைப் போலவே, கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி ஆண்டு
தோறும் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் செய்தித்தாள் மற்றும்
ஒரு இலட்சம் மெட்ரிக் டன் எழுது காகிதமும் செய்கின்ற
திட்டம் ஒன்றை, தென்னாற்காடு மாவட்டத்திலே நிறுவுவதற்
கான ஒரு முயற்சி இருப்பதை நான் கொள்கைக் குறிப்பிலே
குறிப்பிட்டிருக்கிறேன். இப்போதும் அதைப்பற்றி கூறவிரும்பு
கிறேன் நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த் அவர்கள்
சொன்னார்கள், 240 கோடிக்கு அப்போது தொழிற்
சாலை வைத்தபோது அவ்வளவா என்று கேட்டீர்களே,
இப்போது 800 கோடி ருபாயா என்று கேட்டார். இடையிலே
10 ஆண்டுக் காலம் உருண்டோடி விட்டதை மறந்து விடக்
கூடாது. நம்முடைய எம்.எல்.ஏ-க்களுடைய சம்பளமே எந்த
அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால்
பணவீக்கம் எந்த அளவுக்கு நம்மைப் பாதித்து இருக்கிறது.
என்பதை நாம் உணர வேண்டும். (குறுக்கீடு) (சிரிப்பு)

அதை சட்டமன்ற விவாதத்தின்போது, அவை முன்னவருக்கு
விட்டு விடலாம். (சிரிப்பு)

எனவே, 10 மடங்கு, 20 மடங்கு இன்றைக்கு செலவுகள்
மதிப்பீடுகள் உயர்ந்திருக்கிற காரணத்தினாலேதான், அன்றைக்கு
240 அல்லது 250 கோடி ருபாயிலே ஒரு தொழிற்சாலை உரு
வானது என்றால், இன்றைய தினம் 800 கோடி ருபாய்
அதற்குத் தேவைப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை, தென்னாற்
காடு மாவட்டத்திலே, எந்தப் பகுதியிலே, எந்த இடத்திலே

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

என்று இன்னமும் நாம் நிர்ணயிக்கவில்லை. அதற்குரிய ஆய்வுகள்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசோடும் அதற்
கான தொடர்புகளை நாம் மேற்கெண்டிருக்கிறோம். எனவே
ஒரு பெரிய காகிதத் தொழிற்சாலை, தென்னாற்காடு
மாவட்டத்திற்குத் தேவை என்பதையும். அதை விரைந்து முயற்சி
செய்து ஓரிரு ஆண்டுகளிலே, அந்த மாவட்டத்திலே அமைப்
போம் என்பதையும் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன்.

14-00 மணி

சர்க்கரை ஆலைகளைப் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்
முடைய இலக்கியச் செல்வர் அவர்கள் கூட சொன்னார்கள்.
நீங்கள் கூட்டுறவுத் துறை ''கோவாபரேடிவ் செக்டார்'' என்று
வைத்துவிட்ட காரணத்தால், தனியார்கள் வெளி மாநிலங்
களுக்குச் சென்று விடுகிறார்கள் என்று சொன்னார். குறிப்பாக
தமிழ்நாட்டில், போதுமான அளவிற்கு சர்க்கரை ஆலைகள்
வந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன். ஓரிரு ஆலைகள் தனி
யார் ஆலைகள், வெளியே சென்றால்கூட. கவலை இல்லாத
அளவுக்கு, பொதுத் துறையிலும், தனியார் துறையிலும்,
கூட்டுறவுத் துறையிலும். இங்கே சர்க்கரை ஆலைகள்
இருக்கின்றன இப்பொழுதே மொத்தமுள்ள சர்க்கரை ஆலைகள் 29
தனியார் துறையிலே 14 சர்க்கரை ஆலைகள்
கூட்டுறவுத் துறையில் 12 ஆலைகள் இருக்கின்றன
துறையிலே 3 ஆலைகள் இருக்கின்றன. பொதுத்
திட்டத்தில் 9 ஆலைகளில் 5 தனியார் ஏழாவது ஐந்தாண்டுத்
கூட்டுறவு ஆலைகளையும் அமைத்துக் கொள்ள ஆலைகளையும், 4
பட்டு, முடிவும் மேற்கொள்ளப்பட்டது. இந்த 5 தனியார் அனுமதிக்கப்
ஆலைகளில், சக்தி சர்க்கரை ஆலை, சிவகங்கை, தரணி
சர்க்கரை ஆலை, வாசுதேவநல்லூர் இப்போது சொன்னார்
களே—யாரோ ''என்.ஆர்.ஐ.'' பெர்சன்களையெல்லாம்
துரத்துகிறோம் என்று—அந்த பெரியசாமி அவர்கள் நடத்துகின்ற
ஆலைதான் தரணி சர்க்கரை ஆலை. நியாயமாக
நடத்தினால் அதில் தலையிடமாட்டேம். அநியாயமாக நடை
பெற்றால் அங்கே இந்த அரசுத் தலையிட தயங்காது என்பதற்கு
இது ஓர் உதாரணம். பெரியகுளம் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலை,
திருவாரூரான் சர்க்கரை ஆலை, பூண்டி சர்க்கரை ஆலை போன்ற
தனியார் ஆலைகளுக்கு அனுமதிக்கப்பட்டும் அவை இன்னும்
ஆரம்பமாகவில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன். அதுபோல 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்.
சிதம்பரத்தில் சேத்தியா தோப்புக்கு ஒன்று. எம். ஆர். கிருஷ்ண
மூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில் அது
தொடங்கியிருக்கிறது. அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இன்னும்
சில நாட்களில் இதற்கான அடிக்கல் நாட்டுவிழாவை நடத்த
மே 13-ஆம் தேதி அன்று அடிக்கல் நாட்டு விழாவிற்குச் செல்ல



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

விருக்கிறேன் அதற்கான ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டு
அந்த ஆலை தொடங்குகிற நிலைக்கு இன்றைக்கு வந்திருக்கிறது.
செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நவம்பர் 1990-ல்
தொடங்கும். அறந்தாங்கி கூட்டுறவு சர்க்கரை ஆலையைப்
பற்றிக் கேட்டார்கள். அங்கு தண்ணீர்ப் பிரச்சினை பெரும்
பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் அது குறித்த ஆய்வுகள்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், தொடர்ந்து அம்பா
சமுத்திரம், சின்ன சேலம், போளூர், கும்மிடிப்பூண்டி போன்ற
வட்டங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவ மத்திய
அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறது, என்பதையும்
இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார உற்பத்தியைப் பற்றி பலரும் இங்கே
பேசினார்கள். நீண்டநேரம் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்
தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். இந்த ஆண்டு நிச்சய
மாக மின்சாரத் துறை குறித்த நிதிநிலை அறிக்கை அல்லது ஓர்
அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டு விவாதிக்கப்பட
இருப்பதால் அதிலே அப்போது விரிவாகப் பேச முடியும். என்
றாலும் மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி
அவர்கள் அன்றைக்கு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.
நாம் மின்சாரத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை கடந்த ஆண்டு
களை விட மிகக் குறைவானது என்று குறிப்பிட்டார்கள். 1987—
88 ஆம் ஆண்டில் மின்சாரத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 407.63
கோடி என்று இருந்தது. ஆனால் செலவிடப்பட்ட தொகை
ரூ.372.29 கோடிதான். 1988-89 ஆம் ஆண்டில் அப்போது
திட்டத்திலே, இந்த அரசின் அப்போதைய ஆண்டு திட்டமே
1,457 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்புக்
குள்ளே அடங்கியதாக மின்சாரத்திற்கு 502 கோடி என்று
சொல்லப்பட்டது. ஆனால் 1457 என்ற திட்டமே கூட 1202
கோடி ரூபாய்க்கு சுருங்கிவிட்ட காரணத்தால் இந்த 502 கோடி
ரூபாய் மின்சார ஒதுக்கீடு கூட 352.53 கோடி ரூபாய் என்ற அளவு
சுருங்கிவிட்டது. இந்த 352 கோடி ரூபாயோடு ஒப்பிட்டுப் பார்த்
தால் இப்போது நாம் 1990-91 ல் மின்சாரத்திற்கு என 457கோடி
ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது அதிகமானது என்கின்ற உண்மை
தெளிவாகத் தெரியும். அது மாத்திரமல்லாமல், 1990-91-ல்
கூடுதலாக 287 மெகாவாட் உற்பத்தி செய்ய நடவடிக்கைகளை
நாம் எடுத்து வருகின்றோம். கடந்த ஆண்டு, 1989-90 ல்
தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் திட்டங்களின் வாயிலாக 235
மெகாவாட்ஸ், மத்திய அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களின்
வாயிலாக 118 மெகாவாட்ஸ், ஆக மொத்தம் 353 மெகா
வாட்ஸ் உற்பத்தித் திறனை அதிகரித்தும், 1988-89 ஆம்
ஆண்டில் மின் உற்பத்தி மற்றும் இதர நிலையங்களிலிருந்து
பெறப்பட்ட மின்சாரம் எல்லாவற்றையும் சேர்த்து, மொத்தம்
17,585 மில்லியன் யூனிட் தான் வழங்கப்பட்டது. 1989-90-ல்
பல இடையூறுகளுக்கு இடையிலே 18,672 மில்லியன் யூனிட்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

என்ற அளவுக்கு அதனை உயர்த்தினோம். 1990-91 ல் 21,089
மில்லியன் யூனிட் என்ற அளவுக்கு அது எட்டும் என்று
எதிர்பார்க்கின்றோம். 8—ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
ஆண்டு ஒன்றுக்கு சுமார் 300 மெகாவாட்ஸ் கூடுதல் மின் உற்
பத்தித் திறனை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் தொடங்கப்
பட்டுள்ளன.

அவை உறுப்பினர்கள் அனைவருக்கும், ஒன்று நன்றாகத்
தெரியும், வட சென்னை மின் நிலையம் அறிவிக்கப்பட்டு, இடத்
தகராறு காரணமாக அது தொடங்கப்படாமல் இருந்தது. 500
கோடியிலே ஆரம்பிக்கப்பட வேண்டியது அந்தத் திட்டம். அந்த
இடத் தகராறை இந்த அரசு வந்த பிறகுதான் தீர்த்து. இப்
போது 700 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை ஆரம்
பிக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு ஏற்பட்டதும் குடி
யரசுத் தலைவர் அதைத் தொடங்கி வைக்க வந்ததும் உங்கள்
அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அதிலே இப்போது
420 மெகாவாட் மின்திறன் கொண்ட முதல் இரண்டு பிரிவு
களின் பணிகள் வேகமாக நடைபெற இருக்கின்றன. மேலும்
210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது பிரிவை அமைப்
பதற்கு இந்த ஆசியன் வளர்ச்சி வங்கியின் உதவியும் நாடப்
பட்டுள்ளது. இந்த மின்நிலையம் இறுதியாக 2,050 மெகாவாட்
மின் உற்பத்தி செய்யும் திறன் உடையதாக இருக்கும் என்பதை
நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத்
தட்டும் ஒலி).

14-05 மணி

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் டாமினைப்
பற்றியும், கிரானைட்சைப் பற்றியும், அதிலே நடைபெற்ற
தவறுகள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு
விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, சுருக்கமாகத் தான்
சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு.
பி. எச். பாண்டியன் அந்த அதிகாரியை இன்னும் விட்டு வைத்
திருக்கிறீர்களே, ஏன் என்று எல்லாம் கேட்டார்கள். தவறு
எப்படி நடந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்பு
மிகு உறுப்பினர் திரு. வெள்ளிங்கிரி பேசும்போது ஒன்றைச்
சொன்னார்கள். இந்த ஆண்டு நீங்கள் ஈட்டியிருக்கிற லாபம்
உற்பத்தியால் வந்ததல்ல, விலையை உயர்த்தியதால் வந்தது
என்றார்கள், அதிலே ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. ஆம்,
விலையை உயர்த்தினோம். எப்படி? வேண்டுமென்றே விலையைக்
குறைத்து, தனியார் தருகின்ற விலையை விட அரசு நிறுவனம்
பொது நிறுவனம், டாமின் நிறுவனம் விலையைக் குறைத்து
அதன்காரணமாக ஊழல்கள் நடைபெற்ற காரணத்தால்
அதற்கு ஓர் அதிகாரி அன்றைக்குக் காரணமாக இருந்த காரணத்
தினால் பெரும் நஷ்டத்திற்கு இந்த நிறுவனம் உள்ளானது. அந்த
விலைகளை எல்லாம் சரி பார்த்து, கவர்னர் ஆட்சிக் காலத்திலே



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

நடவடிக்கை எடுக்கப்பட்டது. கவர்னர் ஆட்சிக் காலத்திலே
அந்த அதிகாரியினுடைய சுய உருவம் நவம்பர் மாதத்திலே
தான் தெரிந்தது. நவம்பரிலே தெரிந்தவுடன், கவர்னர் ஆட்சி
யிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்ன நடைபெற்றதென்
றால், 1983-84 ஆம் ஆண்டு ஒரு கன மீட்டர் விலை—சாம்பல்
வண்ணப் பாறை, கருப்பு வண்ணப் பாறை என்று இரண்டுவித
மான பாறைகள் அங்கே ஏற்றுமதிக்காக விற்பனை செய்யப்படும்
பாறைகள்—டாமின் விதித்த விலை 277 முதல் 294 வரையிலான
டாலர். தனியார் அதே நேரத்தில் அதே கல்லுக்கு 420 டாலர்.
1984-85 ல் டாமின் 258 முதல் 269 டாலர், தனியார் 475
டாலர், 1985-86-ல் டாமின் 299 டாலர், தனியார் 460 டாலர்.
1986-87-ல் டாமின் 404 முதல் 427 டாலர், தனியார் 475
டாலர். 1987-88-ல் டாமின் 512 முதல் 538 டாலர். தனியார்
575 டாலர். அப்போதுதான் கவர்னருடைய கவனத்திற்கு வந்து,
அந்த அதிகாரி பிடிபடுகிறார். அதுமட்டுமல்ல. டாமின் சார்பாக
ஏற்றுமதி செய்யப்பட்ட சாம்பல் வண்ணப் பாறை மிக நல்ல தரம்
வாய்ந்தது. தனியார் ஏற்றுமதி செய்த சாம்பல் வண்ணப்பாறை
மிகமிகக்குறைந்த தரம் வாய்ந்தவை அவை அதிக விலைக்கு விற்று
டாமின் சார்பாகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டதால், பெரும்
ஊழல் நடைபெற்ற காரணத்தால்தான் பெரும் இழப்புக்கு
இந்த நிறுவனம் ஆளானது. கருப்பு வண்ணப் பாறையை
1986-87-ல்-என்ன பெரிய அநியாயம் நடந்திருக்கிறது என்று
பார்த்தால்-ஒரு கன மீட்டர், டாமின் 714 டாலர், தனியார்
1,500 டாலர். தரக் குறைவான அந்தக் கருப்பு வண்ணப்
பாறையை தனியார் 1,500 டாலருக்கு விற்ற நேரத்தில், நம்
முடைய டாமின் 714 டாலருக்கு விற்றிருக்கிறது, இதன் காரண
மாக ஒரு சுரங்கத்தில் ஏற்பட்ட நஷ்டம் மாத்திரம் 48 இலட்சம்
ரூபாய். 1986-ம் ஆண்டில் திருவக்கரையில் உள்ள சுரங்கப்
பாறைக்கு 1,281 டாலர் கொடுக்க ஜப்பான் நிறுவனம் "ஓரியன்ட்
சான்யோ" முன்வந்தது. ஒரு கன மீட்டருக்கு 1,281 டாலர்
கொடுக்க அந்த நிறுவனம் வந்தது. ஆனால் டாமின்
நிறுவனம் அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று
மறுத்துவிட்டு மிட்சுபிஷி கார்பரேஷனுக்கு ஒரு கன மீட்
டருக்கு 550 டாலர் வீதம் 1982 ஆம் ஆண்டு கொடுத்த அந்த
விலைக்கே ஏற்றுமதி செய்தது. இதனால் அந்த ஒரு சுரங்கத்
திலே மாத்திரம் ஏற்பட்ட நஷ்டம் 41 இலட்சம் ரூபாய். கவர்னர்
ஆட்சியிலே பழைய நிர்வாக இயக்குநரை மாற்றிவிட்டு
பாண்டியன் குறிப்பிட்டாரே, அந்த நிர்வாக இயக்குநர்—அவரை
மாற்றிவிட்டு புது நிர்வாக இயக்குநரைப்போட்ட உடன், நவம்பர்
மாதம் 714 டாலர் என்ற நிலை மாற்றப்பட்டு, டிசம்பர் மாதம்
முதல் 2,050 டாலர் என கன மீட்டருக்கு விற்கப்படுகிற நிலை
உருவானது என்பதையும் நான் ஞாபகப்படுத்த கடமைப்பட்டு
இருக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

14-10 மணி

இதனால், இப்படி இந்த விலை மாற்றங்களின் காரணமாக
டாமினுக்கு ஏகப்பட்ட நஷ்டம். கிட்டத்தட்ட டாமின் வசம்
3,500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இருக்கிறது. அதிலே
2,500 ஏக்கரில் ஏற்பட்ட நஷ்டம் அந்த நேரத்திலே 10 கோடி
ரூபாய், எனவேதான் அந்த அதிகாரி மீது நாம் இன்றைக்கு
நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம்; விசாரணை
முறைப்படி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது; மேலும் நட
வடிக்கை எடுக்க சில ஆதாரங்கள் தேவைப்படுகிற காரணத்தால்
இங்கு மாத்திரம் அல்ல, வெளிநாட்டிலே இருந்தும் கூட ஆதாரங்
கள் தேவைப்படுகின்ற காரணத்தாலே சற்றுக் கால தாமதம்
ஆகிறதேயல்லாமல் நிச்சயம் தவறு செய்தவர்கள் விடுவிக்கப்பட
மாட்டார்கள்; தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதி
யாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
1987-88—ல் இதைப் பார்த்தால் புரியும். 1987—88—ல் விற்
பனை 11.75 கோடி ரூபாய்; மொத்த நஷ்டம் 11 இலட்சம்
ரூபாய். 1988—89—ல் விற்பனை 10.63 கோடி ரூபாய்; லாபம்
2.12 கோடி ரூபாய், புத்தகத்திலே கூட தவறாக 2.1 என்று
போட்டு விட்டார்கள். இப்போது 1989—90—ல் விற்பனை
14.14 கோடி ரூபாய்; லாபம் 5.27 கோடி ரூபாய். இந்த 5.27-ஐ
புத்தகத்திலே 2.12 என்று தவறாக அச்சாகி இருக்கிறது; திருத்திப்
படித்துக்கொள்ள வேண்டுகிறேன். 11 கோடிக்கு விற்பனையான
போது 11 இலட்சம் நஷ்டம். 14 கோடிக்கு விற்பனை ஆகிற
போது இப்போது 5 கோடி ரூபாய் லாபம் என்றால், எவ்வளவு
பெரும் தவறு அதிலே நடைபெற்று இருக்கிறது என்பதை
எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். எனவேதான் இதிலே நடை
பெற்று இருக்கின்ற தவறுகளை விசாரிக்க, நடவடிக்கைகளை
எடுக்க அரசு தயங்காது என்பதை மீண்டும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

சிவகங்கை கிராஃபைட்டைப் பற்றியும் இங்கே பேசி
இருக்கின்றார்கள், அதிலும் இந்த அதிகாரி தான்
இருந்தார். இந்த அதிகாரி இருந்து திட்டப்பட்ட திட்டம்
அது. 1984 ஆம் ஆண்டு 85 சதவீத கரிச் சத்தோடு
கூடிய கிராஃபைட் சுத்திகரிப்பாலை ஒன்றை 3.4 கோடி ரூபாய்
செலவில் அமைக்க முதலிலே திட்டம் தயாரிக்கப்பட்டது. இன்
றைக்கு 96 சதவீத கரிச் சத்தோடு கூடிய கிராஃபைட்டுக்கு
வெளிநாட்டில் நல்ல கிராக்கி இருக்கும் என்ற ஒரு கருத்து அறி
விக்கப்பட்டு, 27 கோடி ரூபாய் திட்டச் செலவில் நூறு சதவீத
ஏற்றுமதி நோக்கோடு தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்
பட்டது. முதலிலே 3.4 கோடி ரூபாய் என்று ஆரம்பித்து,
இது அதிகச் சத்தோடு கூடியது; நூறு சதவீதம் ஏற்றுமதிக்கு
உரியதாக ஆக்கலாம் என்று 27 கோடி ரூபாயில் அது திட்ட
மிடப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி கோரி தமிழக



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசின் திட்ட ஆய்வுக் குழுக் கூட்டத்திலே ஆகஸ்ட்—செப்டம்
பர் மாதங்களில் 1988—லே விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்
திலே தலைமைச் செயலாளர், உலகில் வேறு தொழில் நுட்பம்
உள்ளதா, ஹம்போல் ஹெவி ஆலை நிறுவனத்திடம் இயந்திரங்
கள் மதிப்பீடு முதலிய விவரங்களை எல்லாம் கோரலாம்
என்று அவர் கூறினார். அப்போதைய, நிறுவனத் தலைவர் இந்தத்
தலைவர் அந்த ஆதாரங்கள், தகவல்கள் தன்னிடத்திலே
இல்லை என்று கூறிவிட்டார். பிறகு அவர் மாற்றப்பட்டார்.
கவர்னர் ஆட்சியில் மாற்றப்பட்டார் என்பது நான் முன்பே
கூறியுள்ள செய்தியாகும். அதற்குப் பிறகு நம்முடைய
நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல அங்கே அந்தப்
பாறைகள் மாத்திரம் வெட்டப்படுகின்ற வேலை நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. ஆனால் ஆய்வு அறிக்கை இன்னும் வந்து
சேரவில்லை. அந்த ஆய்வு அறிக்கைக்காக "இந்தியன் பியூரோ
ஆஃப் மைன்ஸ்" பாண்டியன் கிராஃபைட்ஸ் மற்றும் தேசிய
உலோகத் தொழிற்கூடம் இவைகளிடமிருந்து அந்த அறிக்கை
களைப் பெற சில காலம் ஆகும். இப்பொழுது
அந்த அறிக்கையை, விரிவான திட்ட அறிக்கையை
ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் சமர்ப்பிப்பதாக 9-4-1990 அன்று
பெறப்பட்ட கடிதத்திலே உறுதி அளித்து இருக்கிறார்கள், 14
ஆயிரம் டன் கிராஃபைட் கனிமம் அங்கே வெட்டி எடுக்கப்
பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பு ஏறத்தாழ 55
இலட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது.
இதற்கு மேலும் அங்கே கிராஃபைட் எடுத்து வெளியிலே வீணாக
அவைகளைப் போட்டால் அது கெட்டுவிடக் கூடும் என்பதற்காக
அந்த வெட்டுகின்ற பணி நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த ஆய்வு
அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பிறகு நடவடிக்கைகள்
எடுக்கப்படும்; கிராஃபைட் தொழில் அங்கே தொடங்கப்படும்
என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

14—15 மணி

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்திலே சோடா தொழிற்
சாலை தொடங்குவதைப் பற்றி நம்முடைய ராஜேந்திரன் அவர்
கள் இங்கே பேசி இருக்கிறார்கள். நம்முடைய நண்பர் அழகர்சாமி
அவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள், தேர்தல் அறிக்கையிலே
சோடா ஆஷ் ஆக ஆரம்பித்து இப்போது அது குறுகிவிட்டது;
இதுவாவது வருமா என்ற சந்தேகத்தை நம்முடைய ராஜேந்திரன்
அவர்கள் எழுப்பினார்கள் நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். இந்தத் திட்டம், சோடா ஆஷ் திட்டம் என்று
ஆரம்பிக்க வேண்டுமென்று ஆய்வு செய்யப்பட்டபொழுது, 250
கோடி ரூபாய் செலவாகும் என்றெல்லாம் மதிப்பீடு செய்யப்பட்
டது. இந்தத் திட்டத்தை நடத்துவதைப்பற்றி 'டாக்'—அவர்கள்
சொன்னார்களே, ஏன் டாட்டாவை நாடிப் போனீர்கள், 'டாக்'-ஐ
நாடிப்போகக் கூடாதா என்று, தூத்துக்குடி ஆல்கலி அன்ட் கெமி
கல்ஸ் நிறுவனத்திற்குத் தெரிவிக்கப்பட்டபொழுது, அவர்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

சொன்னார்கள், நம்முடைய நாட்டில், அதாவது இந்தியாவில்
தற்போது சோடா ஆஷ் உற்பத்தி மிக அதிகமாக இருக்கிறது;
1989—90 ஆம் ஆண்டிலே மாத்திரம் தேவை 15.40 இலட்சம்
டன், ஆனால் இது இப்பொழுது கிடைப்பது 15.496 இலட்சம் டன்
என்கின்ற அளவிற்குத் தயாரிக்கப்படுகிறது. எனவே, சோடா ஆஷ்
தொழிற்சாலையை ஆரம்பித்தால், அந்த உற்பத்தியை விற்பனை
செய்வதற்குச் சிரமங்கள் ஏற்படும் எனவே சோடா ஆஷ் தொழிற்
சாலைக்குப் பதிலாக வேறு ஆரம்பிக்கலாம், என்று
சொல்லி, கேஸ்ட்டிக் சோடா தொழிற்சாலைத் திட்டத்தை,
அந்த யோசனையை அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கு 60
கோடி ரூபாய் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டது. மேலும்
அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற உப்பைப் பயன்படுத்தி, மரைன்
கெமிக்கல் காம்ப்ளக்ஸ் ஒன்று 14 அல்லது 15 கோடி ரூபாய்
செலவிலே நிறுவுவதற்கும் அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்
காக ஒரு திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு, டாட்டா
கன்சல்டன்சி நிறுவனத்தார் நியமிப்பதற்குக் கூட்டுத்துறை
நிறுவனமான 'டாக்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்
கிறது' 'டாக், நிறுவனம் சோடா ஆஷ் தயாரிக்கும் தொழில்
நுட்பம்தான் அவர்களிடத்திலே உள்ளது. இந்தத் தொழில்
நுட்பத்தைப் பற்றிய திட்டவட்டமான நிலைமைகள் அவர்களிடத்
திலே இல்லாத காரணத்தால் அவர்களே இவர்களுடைய உதவியை
நாடி, டாட்டா கன்சல்டன்சியைப் பயன்படுத்தி அவர்கள்
அதனைக் கோரியிருக்கிறார்கள். வேதாரண்யம் பகுதியிலே
கேஸ்ட்டிக் சோடா ஆலை நிறுவுவதற்குத் தேவைப்படும் 15
மெகாவாட் மின்சாரத்தைக்கூட தமிழ்நாடு மின்சார வாரியம்
தருவதற்குத் தயாராக இருக்கிறது. இவ்வளவு ஏற்பாடுகளும்
நடந்து விட்ட காரணத்தால், இந்த இரண்டு தொழிற்சாலை
களும் நிச்சயமாக வேதாரண்யம் பகுதியிலே வரும் என்ற
உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

என்.ஆர்.ஐ-யைப் பற்றிப் பேசப்பட்டது. நான் முதலிலே
கோடு காட்டினேன். என்.ஆர்.ஐ-யைப் பொறுத்தவரையிலே
இங்கே நம்முடைய நண்பர் பொன்னுசாமி அவர்கள் சொன்
னார்கள். பழனி பெரியசாமிக்குப் பல இடையூறுகளையெல்
லாம் தந்து விட்டோம் என்று. அவர் இங்கே ஒரு ஓட்டல்
கட்டுவதற்குக் கடந்த அரசில், அந்த அரசோடு ஒரு ஒப்பந்
தம் செய்து கொண்டார். அது ஒரு ஜாயிண்ட் செக்டார் என்
றெல்லாம் கூடப் பேசப்பட்டது. "பல்லவா ஓட்டல்" என்றெல்
லாம் பேசப்பட்டது. அதிலே ஒன்றும் தவறு இருப்பதாக
நான் சொல்லமாட்டேன். ஆனால், தவறு என்னவென்றால்,
அவருக்காக ஒரு இடத்தைக் கொடுத்து விட்டு, அந்த இடத்
தினுடைய மதிப்பு ஒரு கோடியே எழுபத்ைந்து லட்சம்
என்று சொன்னார்களே, அதுதான் தவறு. நாற்பது கோடி
ரூபாய் மதிப்புள்ள ஒரு இடத்திற்கு, ஒன்றே முக்கால் கோடி
ரூபாய் என்று மதிப்பிட்டு, அந்த ஒன்றே முக்கால் கோடி



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

ரூபாயைக்கூட அவர் தரவேண்டியதில்லை, அரசு ஒரு பங்கு
தாரராக, அந்த ஒன்றே முக்கால் கோடி ரூபாய் தருகிறது
என்ற காரணத்தினாலேதான், நம்முடைய அரசின் நிலம்
வீணாக யாரிடத்திலோ போய்ச் சேரக் கூடாது என்பதற்காகத்
தான் அதை மீண்டும் அரசே எடுத்துக் கொள்வது என்று
முடிவு செய்தோமே அல்லாமல், தனிப்பட்ட யாரிடத்திலும்
எந்த விரோதமும் கிடையாது. அவர்கள் ஒரு சர்க்கரை ஆலை
யை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நாம் ஒன்றும்
குறுக்கிடவில்லை. இது நியாயமான குறுக்கீடு.
தவறாகக் ஏனென்றால், நாற்பது கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஒரு
நிலத்தை, யாரோ ஒருவருக்குத் தனியாக ஒன்றே முக்கால்
கோடி ரூபாய்க்கு, அதுவும் அரசு ஒரு பங்குதாரராகச்
சேர்த்து, பணத்தையும் பெறாமல் ஒரு நிலைமையை ஏற்படுத்
துவது என்றால், அதை இந்தப் புதிய அரசு ஏற்றுக்கொள்ள முடி
யாது என்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர,
வேறு அல்ல.

அதற்காக, என்.ஆர்.ஐ. மக்கள் யாரும் இங்கே வராமல்
போய் விடவில்லை. நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி
அனந்தன் கூட அதைப்பற்றிப் பேசினார்கள் நம்முடைய
உகம்சந்த் கூட அதைப்பற்றிப் பேசினார்கள். என்.ஆர்.ஐ.
சார்பாகப் பலபேர் தமிழ்நாட்டிலே தொழில் நடத்திக்
கொண்டிருக்கிறார்கள்.

மெட்ராஸ் ஹைட்ராலிக் ஹோஸ் பைப் பிரைவேட்
லிமிடெட், ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய்; மிஸ்டர்
விஸ்வநாத் என்பவர், கென்யா நாட்டுக்காரர், அங்கே இருப்
பவர், அவர் நடத்திக்கொண்டு இருக்கிறார்.

அதைப்போலவே, மீஞ்சூர் ஷெல் கேஸ்ட்டிக் பிரைவேட்
லிமிடெட், நாடிமுத்து அண்ட் எம்.எஸ் துரை, சவுதி அரேபியா
அவர் இங்கே தொழில் நடத்துகிறார்.

14—20 மணி

கிரசண்ட் செராமிக், ஜான் சுந்தரராஜன், யூ.ஏ.ஈ., பிரீஸ்
ஓட்டல் பிரைவேட் லிமிடெட், மெசர்ஸ் ஆர். சிவராமன்
அண்ட் அசோசியேட், ஸ்ரீலங்கா, உமா ஒயர் பிராடக்ட்
பிரைவேட் லிமிடெட், தசரதன், நைஜீரியா, வஸ்திரா
அப்பியரல்ஸ் பிரைவேட் லிமிடெட், நித்தியானந்தம்,
இந்தோனேஷியா, அதைப்போல, யு.எஸ்.ஏ. விலேயிருந்து,
சிங்கப்பூரிலேயிருந்து, கல்ப்—இலேயிருந்து, மலேசியாவிலேயிருந்து
யூ.கே.விலேயிருந்து, பிரான்சிலேயிருந்து, இப்படி 19 பேர் கிட்டத்
தட்ட ஐம்பது கோடி ரூபாய் அளவுக்கான தொழிலைத்
தமிழ்நாட்டிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். என்.ஆர்.ஐ.

[டாக்டர் மு. கருணாநிதி]

[1990 ஏப்ரல் 18

என்றால் நமக்கு ஒன்றும் அலர்ஜி இல்லை. அவர்கள் நடந்து
கொள்கிற விதத்தில் ஏற்படுகிற முரண்பாடுகள். நம்முடைய
அரசுக்கு அல்லது நாட்டிற்கு, நம்முடைய மக்களுக்குத் தீமை
பயக்கிற வகையிலே வருகிற நிலைமைகளைத் தான், அந்த
சூழ்நிலைகளை மூடி மறைக்கின்ற நேரத்திலே அதை வெளிக்
கொணர்ந்து அவைகளை நாம் அடையாளம் காட்ட வேண்டிய
நிலைமைக்கு ஆளாகிறோமே அல்லாமல் வேறல்ல என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மூடப்பட்ட ஆலைகளைப் பற்றிப் பேசப்பட்டது நம்முடைய
ரமணி அவர்கள் காலையில் அதைப் பற்றி விரிவாகப் பேசி
இருக்கிறார். மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கான
முயற்சிகளில் அரசு ஈடுபடும் என்று தேர்தல் நேரத்தில்
அறிவித்ததற்கிணங்க, தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ், அலி
நாசி 10-3-1989-ல் திறக்கப்பட்டது. வாசுதேவா டெக்ஸ்
டைல்ஸ், கோவை-13-3-1989-ல் திறக்கப்பட்டது. ஆர்.எ.வி.
டெக்ஸ்டைல்ஸ், கோவை 12-4-1989-ல் திறக்கப்பட்டது.
பாலாஜி காட்டன் மில்ஸ், சேலம் 21-8-1989-ல் திறக்கப்பட்டது.
ருக்மணி மில்ஸ், சிலைமான் 7-8-1989-ல் திறக்கப்பட்டது.
சற்குணா டெக்ஸ்டைல்ஸ், கோவை 10-7-1989 ல் திறக்கப்
பட்டது. பாலாஜி ஸ்பின்னர்ஸ், கோவை 25-11-1989-ல் திறக்கப்
பட்டது. அமராவதி டையிங் அண்ட் காட்டன் மில்ஸ் 8-11-1989-ல்
திறக்கப்பட்டது. தெய்வசிகாமணி ஸ்பின்னிங் மில்ஸ்-1-1-1990-ல்
திறக்கபட்டது. ஆக மூடப்பட்டிருந்த ஆலைகளில் 9 ஆலைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன. திறக்க உத்தேசித்து, மத்திய அரசோடு
பேச்சுவார்த்தை நடத்தப்படுகிற நிலையில் உள்ள ஆலைகள் 6.
மிகச் சிறியவை என்பதாலும், அவைகளை ஏற்று நடத்தினால்
லாபகரமாக இராது என்பதாலும் விடப்பட்ட ஆலைகள் 7.
இன்னும் எந்த ஒரு முடிவும் எடுக்காமல் ஆய்வில் உள்ள
ஆலைகள் 8. அரசாங்கமே ஏற்று நடத்துவது என்ற முடிவை
அறிவித்து மத்திய அரசுக்கு அன்று எழுதி இதுவரையில்
சரியான பதில் கிடைக்காத காரணத்தால் அண்மையில்
இங்கே வந்த அமைச்சர் யாதவ் அவர்கள் இதைப்பற்றி நான்
கவனிக்கிறேன் என்று சொன்ன உறுதிமொழியின் காரணமாக
நம்முடைய அமைச்சர்கள் அங்கே டெல்லிக்குச் செல்கிறார்கள்.
நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும், தொழி
லாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் டெல்லியில் மத்திய
அரசு அமைச்சர்களைக் கலந்து பேசி நல்ல முடிவோடு
இன்னும் இரண்டொரு நாட்களில் வருவார்கள் என்பதையும்,
இந்த 6 ஆலைகள் வெகுவிரைவில் திறக்கப்படும் என்பதையும்
நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு அவைக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



[டாக்டர் மு. கருணாநிதி]

1990 ஏப்ரல் 18]

ஏதாவது குறை சொல்ல வேண்டும்,
நெய்வேலி ராயல்டி பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டும்,
அப்படியில்லாமல் பேசக்கூடாது என்ற நிலையில் பொன்னுசாமி
அவர்கள் பேசுகிறபோது, அது என்ன 2½ ரூபாய், 5 ரூபாய்
வாங்கி இருக்கக்கூடாதா என்று கேட்டார், நெய்வேலி நிலக்கரி
ராயல்டிக்கு ஒரு அட்டவணை தயாரித்து இருக்கிறார்கள்.
என்னென்ன நிலக்கரிக்கு எவ்வளவு ரூபாய் என்று அட்டவணை
தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அட்டவணையின்படி நெய்
வேலி நிலக்கரி என்பது தரத்தில் சற்றுத் தாழ்ந்த நிலக்கரி
லிக்னைட், எனவே அதற்கு 2½ ரூபாய் ராயல்டி என்று அட்ட
வணை போட்டிருக்கிறார்கள். ஆனால், நடந்தது என்னவென்றால்
முன்பிருந்த அரசு அதனுடைய மத்திய அமைச்சர் வசந்த்
சாத்தே அவர்கள், 1989-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26-ம்
தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் ராயல்டி டன் ஒன்றுக்கு
2½ ரூபாய் வீதம் இனிமேல் வழங்கப்படும் என்றும், 1976-லிருந்து
அதற்கு ஈடாக ஒரு மானியத் தொகை வழங்கப்படும் என்றும்
குறிப்பிட்டு இருந்தார், 1976-லிருந்து தரப்படும் என்று
சொல்லியிருந்தார், நாங்கள், கூடாது, 1956 முதல் 1976
வரையில் அப்போதிருந்த காங்கிரஸ் அரசு எங்களுக்கு லாபத்தில்
பங்கு வேண்டுமென்று கேட்டார்கள். அதனால் அங்கே லாபமே
வரவில்லை. அதனால் பங்கு கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு
1976 வரையில் லாபம் கிடைக்கவில்லை என்று கணக்குக்
காட்டியவர்கள், 1976-க்குப் பிறகு லாபம் வர ஆரம்பித்ததும்,
லாபத்தில் பங்கு என்ற ஒப்பந்தம் முடிந்துவிட்டது-காவிரிப்
பிரச்சினை மாதிரி-அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது. இனி
மேல் ராயல்டி தான் தரப்படும் என்று சொன்னார்கள். அந்தக்
கணக்கு என்ன என்று நாங்கள் கேட்டோம். இடையில், இடைக்
காலத்தில் யாரும் வலியுறுத்தவில்லை. இந்த அரசு வந்த
பிறகு அதை வலியுறுத்திக் கேட்கத் தொடங்கியது. ராஜீவ்
காந்தி காலத்தில் அதைக் கேட்கத் தொடங்கினோம். அப்போது
எங்களுக்குச் சொல்லப்பட்ட பதில் 1976-லிருந்து 1989 வரையில்
வழங்க வேண்டிய உரிமைத் தொகைக்கு ஈடான மானியத்
தொகை ரூ. 19.09 கோடி என்றும், அதிலே தமிழ்நாடு மின்
சார வாரியத்திற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
வழங்கிய மின்சாரத்திற்காக—அதாவது மின்சார வாரியத்திற்கு
வழங்கிய மின்சாரத்திற்காக ரூ. 7.09 கோடி என்றும், அதைக்
கழித்துக்கொண்டு நிகரமாக உங்களுக்குத் தர வேண்டியது 12
கோடி ரூபாய் தான் என்றும் திட்டவட்டமாகச் சொல்லி விட்
டார்கள், 12 கோடி தான் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப்
பிறகு நாம் அவர்களோடு வாதாடி, அதிகாரிகள் மட்டத்தில்

14-25 மணி

டெல்லியில் அண்மையில் பேச்சு நடைபெற்று, அவர்கள் 1956
லிருந்து 1976 வரைக்கும் உள்ள உரிமைத் தொகையான
ரூ. 4.28 கோடி தர சம்மதித்து, 1976-லிருந்து 1986 வரையில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 18

உள்ள ராயல்டி 19 கோடி ரூபாயும் சேர்த்து, மொத்தமாக
ரூ. 23.37 கோடி கொடுக்கிறோம். அதிலே நீங்கள் கா
வேண்டிய 7.09 கோடியைக் கழித்துக் கொண்டு 16.28 கோடி
கொடுக்கிறோம் என்றார்கள். பிறகுதான் இந்த வயதானவன்
டெல்லிக்குச் சென்று நம்முடைய அமைச்சர் ஆரிப்முகமது
அவர்களைச் சந்தித்து அவர்களிடத்திலே நீண்டநேரம் வாதாடி
30 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும்
ஒலி) அந்த 7 கோடியை நீங்களே தள்ளிவிடுங்கள் என்று சொல்லி
அந்த 7 கோடியையும் சேர்த்து, 23 கோடி—அஃதன்னியில்
இதுவரையில் தராததற்கு வட்டியைக் கொடுங்கள் என்று கேட்டு
அவர்கள் வட்டியையும் சேர்த்துக் கொடுத்து, 30 கோடி ரூபாயை
நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். அதற்காகவாவது பொன்னு
சாமி மகிழ்ச்சி அடைந்திருக்கவேண்டும். மகிழ்ச்சி அடையாமல்
ஏன் இன்னும் அதிகம் வாங்கவில்லை என்று கேட்டார். நல்லது
தான். அப்படிக் கேட்பது நல்லது. இப்படி எல்லாம் கேட்டால்தான்
நாங்கள் அங்கே செல்லும் போது இப்படியெல்லாம் கேட்கிறார்கள்
ஆகவே தயவு செய்து கொடுங்கள், இல்லாவிட்டால் உங்கள்
ஆட்சிக்குத்தான் கெட்ட பெயர் வரும் என்று சொல்லி, அவர்
களிடத்திலே கேட்பதற்கு, இங்கே எதிர்க்கட்சிகள் வேகமாகப்
பேசுவதை நான் நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்வேன்
என்பதை மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் சொக்கர் அவர்கள் நேற்றையதினம்
பேசியபோது, டி.ஐ.ஐ.சி பற்றிக் குறிப்பிட்டு, அனுமதி அளிப்
பதற்கும் தொகை வழங்குவதற்கும் உள்ள முரண்பாடுகள் என்று
ஒன்றைக் குறிப்பிட்டார். இது ஓர் ஆண்டு கூட அல்ல. 9 மாத
காலத்திற்கானது. அவர் அதிலே உள்ள ஒரு அடிக்குறிப்பைப்
படித்துவிட்டு, அப்படிச் சொல்லியிருக்கிறார். கடந்த ஆண்டு
அனுமதிக்கப்பட்ட தொகை டி.ஐ.ஐ.சி-யில் 103.97 கோடி ரூபாய்.
வழங்கப்பட்ட தொகை 60.78 கோடி ரூபாய். இதைத்தான்
கவனிக்கவேண்டும். அனுமதிக்கப்பட்டது 103 கோடி. வழங்கப்
பட்டது 60 கோடி, இப்போது அவர்கள் நமக்கு அறிவித்து
விட்டார்கள். நீங்கள் அனுமதிப்பதை அதிகமாகச் சொல்லி,
வழங்குவது குறைவாக இருக்கும்போது, அனுமதிப்பதையும்
அளவோடு அனுமதியுங்கள் என்று அவர்கள் கூறிய பிறகு இந்த
ஆண்டு அனுமதிக்கப்பட்ட தொகை 97.10 கோடி ரூபாயாகவும்,
வழங்கப்பட்ட தொகை 65.07 கோடி ரூபாயாகவும்
அமைந்திருக்கிறது. அதிலே வழங்கப்பட்ட தொகை என்று
எடுத்துக் கொண்டால் கடந்த ஆண்டு 60 கோடி. சொச்சம்,
இந்த ஆண்டு 65 கோடி சொச்சம், அதிகமாகத்தான் வழங்கப்
பட்டு இருக்கிறது. அவர்கள் கூறிய அந்தக் கருத்தை ஏற்றுக்
கொண்டுதான் ஐ.டி.பி.ஐ கருத்துக் கூறும்போது எதைச் சொன்
னார்களோ, அந்த அடிப்படையிலே நாம் இதை இன்றைக்கு
அனுமதித்து வழங்கியிருக்கிறோமே அல்லாமல் வேறு அல்ல.



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

இன்னொன்று சொன்னார்கள். நல்ல உதாரணத்தோடு, Old
wine in new bottle or different bottles என்று சொன்னார்கள்.
மலிவு விலை மது பற்றிப் பேசப்படுகிற நேரத்தில் அவர்கள்
இயினைப் பற்றிப் பேசினார்கள். பேசிவிட்டு அந்த விற்பனை
வரி ஒத்திவைப்பு, சேல்ஸ்டாக்ஸ் deferral என்பதும் Interest
free Sales Tax Loan என்பதும் இரண்டும் ஒன்றுதான். அதனால்
தான் இது ஒரேவிதமான ஒயினை இரண்டு பாட்டில்களில்
மாற்றித் தரப்படுகிறது என்ற விதத்திலே பேசினார்கள். ஆனால்
உண்மை அதுவல்ல. உண்மை என்னவென்றால், வட்டியில்லா
விற்பனை வரிக் கடன் திட்டத்தில் விற்பனை வரியை முறையாகச்
செலுத்திவிட்டு பிறகு ஒரு உச்ச வரம்புக்கு உட்பட்டு அதற்கு
ஈடாக அரசு தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடமிருந்து வட்டி
யில்லாக் கடன் வழங்கும், அதுதான் விற்பனை வரிக் கடன்
திட்டம். விற்பனை வரியைக் கட்டுவதற்கும் வட்டியில்லாக் கடன்
பெறுவதற்கும் சில நேரங்களில் கால இடைவெளி ஏற்பட்டு
தாமதம் ஏற்படுகிற காரணத்தால் அதற்கு நிதி நெருக்கடி
நிறுவனத்திற்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர்க்கும்
பொருட்டுதான் விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டத்தினை
முழுமையாக இந்த அரசு செயல்படுத்தியது. விற்பனை வரியைத்
தள்ளி வைப்பது என்று ஒரு திட்டம். விற்பனை வரிக் கடன்
திட்டம் என்பது ஒன்று. விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம்
என்பது மற்றொன்று. இரண்டும் ஒன்றல்ல. இதைச் செம்மையாகச்
செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவிலே உதவி ஆணையர்,
வணிகவரி அவர்களுக்கு இதனை வழங்க அதிகாரமும் அளிக்கப்
பட இருக்கிறது. இதைச் செயல்படுத்தவதற்கு சட்டத்திருத்தமும்
கொண்டுவர இருக்கிறோம். அதனால் விற்பனை வரி தள்ளி
வைப்புத் திட்டம் உரிய நேரத்தில் விரைவாக மாவட்ட
அளவிலேயே செயல்பட வழிவகை செய்யப்படும். என்றாலும்
கூட, முன்பு இருந்த விற்பனை வரி கடன் திட்டத்தின்
அடிப்படையிலே ஓரிரு ஆண்டுகளாகக் கடன் பெற்று வருகிற
தொழில்கள் தொடர்ந்து விற்பனை வரி கடன் பெறுவதற்கு
நிதிநிலை அறிக்கையிலே 10.5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து
இருக்கிறோம். மேலும் இவர்கள், தங்கள் விருப்பப்படி விற்பனை
வரி தள்ளி வைப்புத் திட்டத்தின் கீழ் தங்களை மாற்றிக்
கொள்ளலாம். ஆப்ஷனல், அல்லது தொடர்ந்து விற்பனை வரி
கடன் திட்டத்தில் கடனைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே
இரண்டு திட்டங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இதைத்
தொடர்ந்து இன்னும் சில செய்திகளை இந்த அவைக்கு நான்
அறிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைக்கு சொக்கர், தேடினார். தேடுகிறேன், தேடுகிறேன்
தேடிக்கொண்டே இருக்கிறேன், காணவில்லை என்றார்கள்.
இந்த விற்பனை வரிச் சலுகைகளை எல்லாம் அறிவித்தீர்கள்,
105 வட்டங்களிலே 30 மிகவும் பின்தங்கிய வட்டங்கள் வரும்
என்றீர்கள், எங்கே தேடுவேன் என்று கேட்டார், நான்,

[டாக்டர் மு. கருணாநிதி]

14.30 மணி [1990 ஏப்ரல் 18

தேடட்டும், ஒருநாள் வரையிலும் தேடட்டும் என்பதற்காகக் காத்திருந்தேன். இன்றைக்கு அது குறித்து சில அறிவிப்புகளைச் சொன்னால்கூட அவை பத்திரிகைகளில் சில நேரங்களில் தவறாக வந்துவிடுகிறது என்பதற்காக அந்த அறிவிப்புகளை அச்சடித்தே வைத்திருக்கிறேன், அது பிறகு வழங்கப்படும்.

இந்த 105 பகுதிகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கிறதே, அதற்கு நாம் நம்முடைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். 'TIIC, சார்பாக ரூ. 6 கோடி வழங்கியிருக்கிறோம். சிப்காட் வாயிலாக ரூ. 2.74 கோடி வழங்கியிருக்கிறோம். தொழில் வணிக இயக்குநரகம் வாயிலாக ரூ.56 இலட்சம். ஆக மொத்தம் ரூ.9.30 கோடி வழங்கியிருக்கிறோம். ஆனால் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 105 இடங்களிலே, 17 மாவட்டத்திலுள்ள 44 வட்டங்கள் மாத்திரமே இந்த மானியத்தைப் பயன்படுத்தி தொழில்கள் நிறுவி உள்ளன. இங்கே 323 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. இங்கே 105 இடங்களில் 44 வட்டங்களில் மாத்திரம் 17 மாவட்டங்களில் 323 நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்கப் பட்டுள்ளன. அவைகளை நேரம் இல்லாவிட்டாலும் சொல்வது பயனுள்ளதாக இருக்கும் என்பதால் சொல்ல விரும்புகிறேன். தொழில் மானியமாக இருப்பதால்.

செங்கை-அண்ணா மாவட்டத்தில் செய்யூர் 1. காஞ்சிபுரம் பயன்பெற்ற தொழில் 1. மதுராந்தகம் 27, பொன்னேரி 22. திருத்தணி 1, கும்மிடிப்பூண்டி 15, அது இந்த 105-ல் வராது. சிதம்பரனார் மாவட்டம் விளாத்திகுளம் 2, கோவை பொள்ளாச்சி 2, அவிநாசி 18, தர்மபுரி தென்கனிக்கோட்டை 4, தர்மபுரி 7, அரூர் 4, கிருஷ்ணகிரியில் 2, பென்னாகரம் 1, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பழனி 28, வாடிப்பட்டி 3, வேடசந்தூர் 3, கன்னியாகுமரியில் தோவாளை 3, மதுரை ஆண்டிப்பட்டி 5, பெரியகுளம் 4, நெல்லை கட்டபொம்மன் நாங்குநேரி 7, ராதாபுரம் 4, தென்காசி 1, நீலகிரியில் கூடலூரில் சில தொழில்கள், அவ்வளவு தான். வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் செய்யாரில் 4, போளூர் 1, பசும்பொன் தேவர் திருமகனார் காரைக்குடி 2, சிவகங்கை 1, தாராபுரம் 7, கோபிச்செட்டிப்பாளையம் 2, பெருந்துறை 6. புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி 3, 1, அறந்தாங்கி 4, ஆவுடையார்கோவில் 6, கந்தர்வகோட்டை திருமயம் 3, இராமநாதபுரத்தில் இராமநாதபுரம் 2, சேலம்- ஆத்தூர்—1, சங்ககிரி-1, தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம், 8, செஞ்சி 1, கள்ளக்குறிச்சி 15, காட்டுமன்னார்கோவில் 3, திண்டிவனம் 10, உளுந்தூர்பேட்டை 7, விழுப்புரம் 1, திருச்சியில் முசிறி 64, பெரம்பலூர் 5, இப்படி 323 தொழில்கள் பயன் பெற்றிருக்கின்றன. 105 இடங்களில் 44 வட்டங்களிலே



1990 ஏப்ரல் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

மாத்திரம் தான் அவர்கள் இந்த உதவியைப் பெற்று தொழில் தொடங்கியிருக்கிறார்கள். அதனால்தான் 105-லேயே 'பேக்வேர்டு, மோஸ்ட் பேக்வேர்ட், என்று பிரித்து, 30 வட்டங்களைத் தனியாக அறிவித்து அவர்களுக்கு மேலும் சில சலுகைகளைச் செய்யலாம் என்ற முயற்சியை இப்போது அரசு மேற்கொண்டிருக்கிறது, அதை அறிவிக்க நான் விரும்பு கிறேன். இதை எப்படி இந்த பின்தங்கிய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்று நீங்கள் நிர்ணயிக்கின்றீர்கள் என்று கேட்டால் பின்தங்கிய பகுதி என்பது தொழிலாளர் களுடைய சராசரி விகிதம், அதிலே மாநில சராசரி விகிதம், 1.26 விழுக்காட்டிற்குக் குறைவாகத் தொழிலாளர்கள் இருக்கின்ற பகுதி. அதே வட்டத்தில் பெரிய தொழில்களோ, நடுத்தரத் தொழில்களோ ரூ. 15 கோடிக்குக் குறைவாக இருக்கவேண்டும். அவைகளை எல்லாம் பி.சி.—பின்தங்கிய பகுதியிலே சேர்க்கின்றோம். இந்த அடிப்படையில 105 இடங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே மீண்டும் எம்.பி.சி. என்று எப்படி நிர்ணயிக்கிறோம் என்றால் அந்த வட்டத்தில் ஆலைத் தொழிலாளர்களாக சராசரி 25 சதவிகிதத்திற்குக் குறைவாக இருக்கவேண்டும். அந்த வட்டத்தில் நடுத்தரத் தொழில்கள் அல்லது எந்தப் பெரிய தொழிலும் இல்லாமல் இருக்கவேண்டும். அந்த அடிப்படையிலே 30 பின்தங்கிய வட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

14.35 மணி

அவைகளுடைய பெயர்களை நான் இங்கே படிக்க விரும்பு கிறேன். செங்கை-அண்ணா மாவட்டத்தில் பள்ளிப்பட்டு. தர்மபுரியில் பென்னாகரம், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் வேடசந்தூர், கொடைக்கானல். காமராசர் மாவட்டத்தில் திருச்சுழி, மதுரையில் உசிலம்பட்டி, திருநெல் வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி, இராதாபுரம் பெரியார் மாவட்டத்தில் கோபிச்செட்டிப்பாளையம்; சேலம் மாவட்டத்தில் ஏற்காடு. தென்னாற்காடு மாவட்டத்தில் காட்டுமன்னார்கோவில், திருக்கோவலூர். தஞ்சாவூர் மாவட்டத்தில்—யாரும் பொறாமைப் படக் கூடாது. அங்கே தொழிலே இல்லாத மாவட்டம்—தஞ்சாவூர் மாவட்டத்தில் பாபநாசம். வலங்கைமான், குடவாசல். பேராவூரணி, நன்னிலம், ஒரத்தநாடு. சீர்காழி, பட்டுக்கோட்டை, திருவாரூர், திருத் துறைப்பூண்டி. (சிரிப்பு), குறுக்கீடு) அவர் கேட்ட அந்த டைப் லைன் வந்தால் அங்கேயெல்லாம் தொழில் வரும்.

திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம், துறையூர் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ஆறகாடு, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செங்கம்,

போளூர், செய்யார், வந்தவாசி, புதுக்கோட்டை மாவட்டத்தில்
ஆவுடையார் கோவில். இவைகளை யன்னியில் மேலும் சில
அறிவிப்புகளை நான் உங்கள் முன்னிலையில் வைக்க
விரும்புகிறேன்.

அகில இந்திய அளவிலே மிகச் சிறப்பான ஊக்கச்
சலுகைத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட வேண்டும்
என்ற நோக்கத்துடன் மேலும் சில சலுகைகளை அளிக்க
முன் வந்துள்ளேன்: கூடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை
சிப்காட் தொழில் வளாகங்களிலும் மேலே கூறிய 30
வட்டங்களிலும் தொடங்கப்படும் தொழில்களுக்கு விற்பனை வரி
விலக்கு மேலே குறிப்பிட்டதைப் போல அதாவது 5 ஆண்டு
களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும். மீதம் உள்ள
75 பின் தங்கிய வட்டங்களிலும் அரசு நிறுவனங்கள் நடத்தக்
கூடிய தொழில் மையங்களிலும் தொடங்கப்படும் தொழில்
களுக்கு விற்பனை வரி தள்ளி வைப்புத்திட்டம் முழுமையாக
மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).
தொழில்களை விரிவு படுத்துவதற்கும் (பகுதி 1) மற்றும் புதிய
தொழில்களை ஏற்படுத்துவதற்கும் (பகுதி 2) விற்பனை வரி
தள்ளி வைப்புத் திட்டம் மாற்றி அமைக்கப்படுகிறது.
தற்போது இந்த இரண்டு திட்டங்களிலும் விற்பனை வரி
தள்ளி வைக்கும் உச்ச வரம்பு ரூ. 3 கோடியாக
இருக்கிறது. புதிதாக தொடங்கப்படும் தொழில்களுக்கு
இனிமேல் 3 கோடி ரூபாய் என்ற உச்ச வரம்பு தளர்த்தப்
பட்டு மூலதனச் செலவு அளவிற்கு உயர்த்தப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன், விரிவு படுத்தக் கூடிய தொழில்
களுக்கு அது மூலதனச் செலவில் 80 சதவீத அளவிற்கு
வழங்கப்படும். இந்த இரண்டு பிரிவு திட்டங்களிலும்
விற்பனை வரி தள்ளி வைப்பு 9 ஆண்டுகள் வரை வழங்கப்படும்
மராட்டியத்தில், குஜராத்தில் இதன் காரணமாக தொழில்
வருவதை எண்ணிப் பார்த்து இங்கே இதை அறிவிக்கிறேன்.

9 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தொழில் நிறுவனங்கள்.
விற்பனை வரி செலுத்தினால் போதுமானது. 9 ஆண்டு
களுக்குப் பிறகு அந்த ஆண்டிற்கான
வரியையும், தள்ளி வைக்கப்பட்ட முதல் விற்பனை
விற்பனை வரியையும் சேர்த்துச் ஆண்டிற்கான
இஃதன்னியில் தற்போது தமிழகத்தில் செலுத்த வேண்டும்.
முன்னோடித் தொழில்களைத் (பையனியர் இண்டஸ்ட்ரீஸ்)
தவிர, இதர தொழில்களுக்கு விற்பனை வரி தள்ளி
வைப்புத் திட்டம் கிடையாது— இதுவரையில் பகுதிகளில்
கிடையாது— இனிமேல் இதரப் பகுதிகளில் உள்ள அனைத்து
தொழில்களுக்கும் விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்ட
விரிவுபடுத்தப்படும். இதர பகுதிகளில் தொழில்களை விவரி



படுத்துவதற்கும் (பகுதி 1) புதிய தொழில்கள் தொடங்கு வதற்கும் (பகுதி 2) இந்தத் திட்டம் பொருந்தும். புதிய தொழில்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைப்பு வழங்கப்பட்டு உச்ச வரம்பு மூலதனச் செலவில் 60 சதவீதம் என்று வழங்கப்படும். ஏற்கெனவே இருக்கும் தொழில்களுக்கு விரிவு படுத்துவதற்கு இந்த உச்ச வரம்பு, மூலதனச் செலவில் 50 சதவீதமாக இருக்கும்.

மேலும் மாநிலத்தில் பெரிய தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் 50 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனச் செலவில் தொடங்கப்படும் தொழில்களுக்கு சிறப்புச் சலுகையாக மாநிலத்தில் எந்தப் பகுதியில் தொடங்கினாலும் 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைப்புத் திட்டம் மூலதனச் செலவு அளவிற்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்பின் மூலம் மாநிலத்தில் பெரிய தொழில்கள் ஏற்பட நல்ல வாய்ப்பு உருவாகும் என்று நான் நம்புகிறேன். எனவே நீங்கள் தந்துள்ள பல்வேறு கருத்துக்களை— எல்லாக் கருத்துக்களுக்கும் விடை அளிக்க, விளக்கம் அளிக்க நேரம் இல்லை என்றாலும் கூட அவைகளையெல்லாம் நெஞ்சிலே பதிய வைத்து ஆவன செய்வேன், அனைவரும் சேர்ந்து தமிழகத்திலே தொழில் வளர்ப்போம், வாரீர் என்று கேட்டு வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று இறைஞ்சி அமருகின்றேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் செய்யப்பட்ட தொழில்களிலே இன்றைக்கு நிறைவேற்றப்படுவதற்கான அறிவிப்புகளில் இரண்டு விடுபட்டிருக்கின்றன, ஒருவேளை விடுபட்டதோ அல்லது திட்டமே இல்லையோ என்று தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறேன். மேலூர் பகுதியில் 15 கோடி ரூபாயில் டைமண்ட் தொழிற்சாலைக்கான திட்டம் இடப்பட்டது. அதே போல பல்சால் குரூப்பும், டிட்கோவும் சேர்ந்து 5 கோடி ரூபாயில் தண்ணீர்க் கசிவை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு தொழில் திட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இரண்டும் விடுபட்டிருக்கின்றன. எனவே கடந்த கால ஆட்சியிலே செய்யப்பட்டிருந்த அந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படுமா என்பதோடு, திருச்சி பகுதியிலே இருக்கின்ற செயற்கை வைரக் கல் தயாரிக்கின்ற அந்தத் தொழில் இன்றைக்கு நெருக்கடிக்கு ஆளாகி 20 நாட்களாக அவர்களுக்கு மூலப்பொருள் கிடைக்காத நிலை இருக்கிறது. நாம் உருவாக்கியிருக்கின்ற கார்ப்பரேஷன் இந்த நெருக்கடிக்குச் காரணமாக இருப்பதாக அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் சொல்கிறார்கள். எனவே அவையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

14-40 மணி [1990 ஏப்ரல் 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது கருத்தில் வைக்கப்படும்.

திருமதி. ஏ எஸ் பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே எல்லாம்
கூட ஏதோ நிலக்கோட்டைக்கு விவசாயத்தைச் சார்ந்த
தொழில் ஆரம்பிக்கப்படும் என்று அதிலே இருக்கிறது.
நானும் ஏதாவது வரும், வரும் என்று இவ்வளவு நேரம்
காத்துக்கொண்டிருந்தும் பயன் எதுவும் இல்லை நிலக்
கோட்டை மிகவும் பின் தங்கிய பகுதி. ஏற்கனவே முந்தைய
அரசு அறிவித்த ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே அதாவது
திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒரு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ்
போடுவதாகச் சொல்லி....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன வேண்டும் என்று
கேளுங்கள். விரிவுரையிலேயே எங்களுக்கு என்ன கேட்கிறீர்கள்
என்று விளங்காமல் போகிறது. (சிரிப்பு)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: அதாவது விவசாயத்
தொழில் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது என்ன
தொழில்? லெமன் கிராஸை நிலத்திலே உற்பத்தி பண்ணி
அந்தப் புல்லிலிருந்து ஏதோ தைலம் தயாரித்து அதை ஃபாரினுக்கு
எல்லாம் அனுப்புவதாக ஒரு திட்டம் கிண்டியிலே இருக்கிறதே
அது செய்யப்படுமா? சோயாபீன்ஸிலிருந்து எண்ணெய் தயாரிக்க
வேண்டிய திட்டம் அதையாவது செய்வார்களா? ஒன்றுமே
இல்லாமல் சும்மா ஸீரோ மாதிரி விட்டுவிட்டீர்களே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,
பெருந் ''தொழில்கள்'' கொள்கை விளக்கக் குறிப்பில் 3-ஆம்
பக்கத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பரை அடிப்
படையாகக் கொண்ட பெருந் தொழிற்சாலை ஒன்றையும்,
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள நிலக்
கோட்டையில் விவசாயத்தினைச் சார்ந்த தொழிற் பிரிவு
ஒன்றையும் அரசு அமைக்கும் என்று இருக்கிறது. அதை
அம்மையார் படிக்கவில்லை என்று கருதுகிறேன். அங்கே எதை
மூலப்பொருளாகக் கொண்ட தொழில் ஆரம்பிக்கலாம் என்பதை
'அக்கா சொன்னால், தம்பி கேட்கத் தயாராக இருக்கிறேன்.
(சிரிப்பு)



1990 ஏப்ரல் 18]

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே
நேற்றைய தினம் மத்தியத் தொழில் வள அமைச்சர் அவர்கள்
பாராளுமன்றத்திலே ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள்.
நலிந்த தொழிற்சாலைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்து
நடத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி
மாநில அரசினுடைய கருத்து என்ன என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,
அது மத்திய அரசால் இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள்.
மாநில அரசு முன் வந்தால் அதைத் தடுப்பதாக அவர்கள்
இல்லை.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, நமது
மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த பேக்வேர்டு ஏரியாஸ்ஸுக்கு
கேபிடல் சப்ஸிடி திட்டத்தை அறிவித்தார்கள். அதிலே சின்ன
விளக்கம் கேட்க விரும்புகிறேன். அதாவது ப்ராஸஸிங்
இண்டஸ்ட்ரிக்கும், மேன்யூஃபேக்சரிங் இண்டஸ்ட்ரிக்கும் ஒரு
டிஃபரன்ஸ் உண்டுபண்ணி அந்த கேபிடல் சப்ஸிடி மேன்யூஃபேக்ச்
சரிங் இண்டஸ்ட்ரிக்குதான் உண்டு, ப்ராஸஸிங் இண்டஸ்ட்ரிக்கு
கிடையாது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி நம்முடைய
முதல்வர் கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,
இது எனக்குப் புதிய தகவலாக இருக்கிறது. அதைப்பற்றி
விசாரித்து அவருக்கு விவரம் தருகிறேன்.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலப்
பொருட்களுடைய திடீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக இயங்கிக்
கொண்டிருக்கின்ற பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே
திடீரென்று மூடப்படக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன.
பல்வேறு மூலப் பொருள்கள் வடநாட்டிலிருந்து, பல்வேறு
மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.
ஆகவே தனியாக நம்முடைய மாநில அரசு மூலப் பொருட்கள்
ஒழுங்காக தமிழகத்திற்கு வந்து சேர்கிறதா என்பதைக் கவனித்து,
அந்த மூலப் பொருட்கள் முழுவதும் தொழிற்சாலைகளை
சென்றடைகின்ற வண்ணம் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்யுமா
என்று கேட்க விரும்புகிறேன். காரணம், பிக் அயர்னுடைய
தட்டுப்பாட்டின் காரணமாக கோவையிலே நூற்றுக்கும் மேற்
பட்ட ஃபவுண்டரிகள் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. அதைப்
போல பல மூலப் பொருட்கள் தட்டுப்பாடு திடீரென்று
ஏற்படுகிறது. ஆகவே அதைப் போக்குவதற்கு ஒரு நல்ல
மானிடரிங் ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பிக் அயர்னுக்காக சட்டமன்ற உறுப்பினர் ரமணியும் வாதித்து விட்டார். மோகனும் வாதித்து விட்டார். போதும்.

திரு. எம். முகமது சித்திக் : தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியிலே ஏற்படுத்த இருக்கின்ற சிப்காட் நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துவிட்டதா? அதற்கான திட்டப் பணிகள் எப்போது துவங்கப்படும் என முதல்வர் அவர்களிட மிருந்து அறிய விரும்புகிறேன்.

14-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த மூன்று வளாகங் களுக்கும் மத்திய அரசினுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, என்னுடைய அந்த உரையின்போது கூட, சாத்தான்குளத் தினுடைய பின்தங்கிய நிலையைச் சொன்னேன். நேற்று நமது மாண்புமிகு டாக்டர் பொன்முடி அவர்கள் கூட்டிய அந்தக் குடிநீர்த் திட்டக் கூட்டத்திலே கூட, 'ஒன்றுமே கிடையாது, நீங்கள் ஏதாவது கொடுத்தால் தான் உண்டு குடிப்பதற்கு' என்று சொன்னேன். அதைப்போலே தயவு செய்து மிகப் பின்தங்கிய பகுதி, நீங்கள் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கவலைப்பட வேண்டாம்; சாத்தான், குளத்தில் விழமாட்டான். (சிரிப்பு).

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய வட்டமாக அறிவித்திருந்த அவினாசி இப்போது கொஞ்சம் வளர்ச்சியடைந்து, அந்தப் பட்டியலிலிருந்து போய்விட்டது. ஆனால் பல்லடம் தாலுக்கா இருக்கிறதே, அதிலே முக்கியமான பகுதி, நம் பாலசுப்பிரமணியம், எம்.எல்.ஏ., இருக்கக்கூடிய பகுதி கூட இருக்கிறது. அதைப்பற்றி ஒன்றும் வரவில்லை. நான் முக்கியமாகக் கேட்கக்கூடியது அந்த மூடப் பட்ட பஞ்சாலைகளைப் பற்றிச் சொன்னதிலே, அதைப்பற்றி ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை நடக்கிறது என்று சொன்னார். அதை வரவேற்கிறேன். புதுக்கோட்டையில் இருக்கும்படியான காவேரி மில்லும், தமன சமுத்திரத்திலே இருக்கக்கூடிய மில்லும், மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு மேலாகவே மூடிக் கிடக்கின்றன. அந்தத் தொழிலாளிகள் இப்போது ரொம்பக் கஷ்டத்திற்கு ஆளாகி



அவர்கள் போராட்டம் எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி இந்தப் பட்டியலிலும் வரவில்லை. ஒன்றுமே சொல்லப்படாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் திறக்கப்படவே முடியாது என்று சொன்ன பட்டியலில் அந்த மில் இல்லை. ஆய்வு நடத்தப்படுகின்ற பட்டியலில் அந்த மில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

திருவாளர்கள் கே. ரமணி, ஆர். சிங்காரம், எஸ். டி. உகம்சந்த் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசிற்கு வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் எம். அண்ணாமலை, கே. ரவி அருணன், எஸ். டி. உகம்சந்த் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி; "மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 22,23,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசிற்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை (19–4–1990) வியாழக்கிழமை காலை 9-00 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர், பேரவை 14.48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.
–எதுவுமில்லை–

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

106. பெருந்தொழில்கள் பற்றிய செயல் திட்ட ஆய்வுரை, 1990-91 (ஆங்கிலம்).

107. பெருந்தொழில்கள் பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 1990-91 (தமிழ்).

600 009
144369
D
Y2¹¹,31¹¹90
NA9:2.9.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Ma[illegible], Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyder[illegible].
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly R[illegible] and printed by the Director of Stationery and [illegible]ing Madras.